நற்சாந்துபட்டி

அருள்மிகு சிவகாமி

அம்பிகை சமேத சிதம்பரேசுவரர்

திருக்கோயில்

# குடமுழுக்கு விழா மலர் - 1991



www.npnagarathar.com

மகிழ்ச்சிக்கு ஒரு வீடு

மதுரை வங்கி துணையோடு



உங்களுக்கென்றே ஒரு வீடு - அது உங்கள் நீண்ட காலக் கனவு

அதை நனவாக்கித் தருகிறது

மதுரை வங்கியின்

## "மகிழ் மனைத் திட்டம்"

★ வீடு கட்டவும், மனை, கட்டிய வீடு, தள வீடு (FLATS) வாங்கவும் ரூ. 3 லட்சம் வரை கடன் உதவி.

★ சம்பளத்தோடு இணைந்த ரெக்கரிங் டெபாசிட் திட்டத்தில் சேர்ந்த 13 ஆவது மாதத்தில் கடன் பெறும் வாய்ப்பு

★ 15 ஆண்டுகளில் சுலபத் தவணைகளில் திருப்பிக்கட்டும் வசதி

★ அரசு ஊழியர்கள், பொதுத்துறை ஊழியர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பெற்ற கல்வி மற்றும் இதர நிறுவனங்களில் பணி புரிபவர்களுக்கு இத்திட்டம் பெறற்கரிய நல்வாய்ப்பாகும்.

★ குறைந்த வட்டியில் கடனுதவி

★ கடனுக்குக் கட்டும் தவணைத் தொகைக்கும் வட்டிக்கும் வருமான வரிச்சலுகை உண்டு.

# மதுரை வங்கி லிமிடெட்

758, அண்ணா சாலை, சென்னை-600 002.

சுப. சபாபதி

சேர்மன்.

www.npnagarathar.com

உ

சிவமயம்

ஸ்ரீசிவகாமி அம்பாள் ஸமேத

சிதம்பரேஸ்வரர் துணை

நற்சாந்துபட்டி

# அருள்தரும் சிவகாமி அம்பாள் உடனாய அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு விழாச் சிறப்பு மலர்

பிரமோ தூத ஆண்டு தைத்திங்கள் 22-ம் நாள்

(4-2-1991)

மலர்க்குழு

நற்சாந்துபட்டி நகரத்தார்

www.npnagarathar.com

## திருக்குட நன்னீராட்டு குழுத்தலைவர்
குமட பெரி. அழகப்பச் செட்டியார் அவர்கள்

## மலர்க்குழு தலைவர்
பழ. சி. ராம. சிவனடியான் செட்டியார் அவர்கள்

## செயலாளர்
அ. முத்துராமன் செட்டியார் அவர்கள்

## பதிப்பாசிரியர்
எல். சோமு அவர்கள்

## மலர் வெளியிட்டவர்
மணிவாசகர் பதிப்பகம் டாக்டர். ச. மெய்யப்பன் அவர்கள்

இம்மலரினை நெருங்கிய நட்பினால் "மணிவாசகர் பதிப்பகம்' கடியாபட்டி டாக்டர். ச. மெய்யப்பன் அவர்கள் அன்புடன் அச்சிட்டுத் தந்திருக்கிறார்கள்

www.npnagarathar.com

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| மலர் மலர்ந்தது | |
| திருமயம் தொகுதி | |
| பங்கு மார்க்கெட் | |
| மக்கள் நலவாழ்வில் மருத்துவ விஞ்ஞானத் தொழில் நுட்ப மறுமலர்ச்சியின் பங்கு | |
| சிவஞான போதம் | 1 |
| வளமான வாழ்விற்குப் பிரார்த்தனைகள் | 4 |
| சிவ வழிபாட்டின் சிறப்பு | 7 |
| சிவனுக்கு அணிகலன் | 13 |
| திருவள்ளுவருக்கும் பாடம் சொன்ன சிகப்பி ஆச்சி | 16 |
| திருப்பணிகளுக்கு என் தொண்டு | 19 |
| சிவகாமி அம்பிகை மணிமாலை | 21 |
| திருப்பணி வாழ்க | 24 |
| நற்சாந்துபட்டி நகரத்தார் சங்கம் | 25 |
| மீண்டும் பிறந்திடுக கவியரசே | 28 |
| சீர்கூட்டும் சிவகாமி | 29 |
| நகரின் பெருமை | 30 |
| நான் பார்த்த கோவை நம்மவர்க்கு ஏற்றகோவை | 31 |
| தாயகத்தின் பெருமை | 36 |
| செட்டி நாட்டின் பெருமை | 36 |
| ஊர்ப் பெருமை | 37 |
| நச்சாந்துபட்டி நல்லகுப்பன் செட்டி | |
| பழநியாண்டவர் திருக்கோயில் வரலாறு | 38 |
| அருள் காட்டும் பெருமாளே | 41 |
| குடமுழுக்கு | 42 |
| நல்லோர் நவின்றவை | 43 |
| நச்சாந்துபட்டி வீரராகவப் பெருமாள் கோவில் | 44 |
| உண்மை உயர்வளிக்கும் | 46 |


www.npnagarathar.com

ஆற்றல் மிகுந்தவர்கள் அடக்கம் நிறைந்தவர்கள் 48
பிணி தீர்க்கும் பணிக்கூடம் 49
நச்சாந்துப்பட்டியில் நற்சான்று கல்விப்பணி 53
குடமுழுக்கு வரலாறு 56
பூச்சொரிதல் 60
வேல் உண்டு வினை இல்லை 64
தமிழ் வளர்த்த நகரத்தார் பெருமக்கள் 66
நகரக்கோவில் இறைவன் இறைவியர் 77
யாழ் நூல் அரங்கேற்றம் 79
மகேஸ்வரர் பூஜை 81
நற்சாந்துபட்டி ''ஸ்ரீ சண்முகவிலாச கலாசாலை'' 83
செட்டிநாட்டுத் திருமணப் பாடல்கள் 85
நற்சாந்துபட்டி கிளை நூலகம் 89
கோவில் வரலாறு 90
சிவகாமி அம்பிகை 108 போற்றி 93
நகரத்தார் காவடி வரலாறு 96
குறிக்கோள் வேண்டும் 98
ஸ்ரீ அழகி அப்பத்தாள் படைப்பு 100
பேரையூர் திருத்தலமும் பொய்யாத விநாயகர் திருப்பணியும் 101
ஸ்ரீ அழகி அப்பத்தாள் வழிபாட்டு பாடல்கள் 103
வள்ளலாரும் நகரத்தார் பங்கும் 104
இயற்பகையார் நகரத்தார் ஆவாரா 120
மலையக்கோவில் 126
நல்லி அப்பத்தாள் கோவில் 129
கருணைமிகு சேவாத்தாள் 130
மலையக்கோவில் மாண்பு 133
இராமர் பட்டாபிஷேகம் 136
நற்சாந்துப்பட்டி புள்ளி விவரங்கள் 138
நன்றியுரை


www.npnagarathar.com

# பதிப்புரை

நகரத்தார் பெருமக்கள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் திருக்கோயில்கள் எழுப்புவதையும் அறக்கட்டளைகளின் மூலம் தர்மங்கள் செய்வதையும் தலையாய கடமையாகக் கொண்டு இருப்பவர்கள். அது தவிர செட்டிநாட்டில் தாங்கள் வசிக்கும் ஊர்களில் சிறப்பாக திருக்கோயில்கள் எழுப்பி அதனை நல்ல முறையில் நிர்வகித்து வருகிறார்கள். அத்திருக்கோயில்களுக்கு உரிய நேரத்தில் மீண்டும் மீண்டும் கும்பாபிஷேகம் செய்துபார்த்து மகிழ்கிறார்கள்.

நற்சாந்து பட்டியில் இன்று நடைபெறும் கும்பாபிஷேகம் மூன்றாவது கும்பாபிஷேகம் ஆகும். இதனை முன்னிட்டு கோயிலில் பல திருப்பணிகளும் சிறப்புற நடைபெற்று இருக்கிறது. அதற்கு பலரும் முன்வந்து பகுதி பகுதியாக நன்கொடை அளித்து இருக்கிறார்கள். அது இவ்வூர் பெருமக்களின் தாராள, தர்மசிந்தனையை மெய்ப்பிக்கிறது. இதுதவிர நற்சாந்து பட்டியில் வாழ்கிற ஒவ்வொரு புள்ளியும் இப்புனித காரியத்தில் பங்குகொண்டு கோவில் வாரியாக பெருந்தொகை கொடுத்து இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக்கும்பாபிஷேகம் பல சிறப்புகளைப் பெற்றிருக்கிறது. அதற்குக் காரணம் திரு. கும.பெரி. அழகப்ப செட்டியார் அவர்கள் இக்கும்பாபிஷேகக் குழுத்தலைவராக அமைந்து இருப்பதே. அவர்கள், அனைவருடனும் அன்பாகப் பழகுவார்கள். பொறுமையாக இருப்பார்கள். எல்லோரது கருத்துகளையும் கேட்டு அதன்படி முடிவுக்கு வருவார்கள். இது போல் அனைத்து குழு தலைவர்களும் அக்குழுவினைச் சார்ந்தவர்களும் முறையோடு காரியங்களை உன்னதமாகச் செயலாற்றி இருக்கிறார்கள்.

யாகசாலைக் குழுவின் தலைவர் திரு. ந.மெ. நல்லகருப்பன் செட்டியார் அவர்களும் எல்லோரிடத்திலும் தனித்தனியாக உரிமையுடன் பழகி, அனைவரின் உள்ளத்திலும் இடம்பெற்று இருப்பவர்கள். பொதுக் காரியங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு சிறப்பாகச் செயலாற்றும் திறமை பெற்றவர்கள்.

இந்த நற்பணியில் திரு.பெரி.அழ. அவர்களுடன் திரு.பெ.ராம.ராம.சித.இராமன் செட்டியார் அவர்களும் நடப்பு காரியக்காரர் திரு. பெ.ப.ராம. பழ. சிங்காரம் செட்டியார் அவர்களும் துணை நின்று சிறப்பித்து இருக்கிறார்கள்.

திரு. பெரி. அழ. அவர்களின் சகோதரர்கள் திரு.மெய்யப்பன் அவர்களும் எல்லா காரியங்களுக்கும் மிக உதவியாக இருந்து இருக்கிறார்கள். திருக்குள சீரமைப்பு வேலையில் முன்நின்று திறம்பட உழைத்து இருக்கும் திரு.ஆ.பெரி. ஆண்டியப்ப செட்டியார் அவர்களையும் பாராட்டுவது நம் கடமையாகும்.

N. சுந்தரமூர்த்தி ஸ்தபதியார் கோபுரங்களில் சிதைந்தவற்றை சரிசெய்து, வர்ணம் தீட்டி, அழகுற பணிகளை முடித்திருக்கிறார்கள். புதிதாக கோயிலின் வெளிப்புறம் அமைத்திருக்கும் விநாயக, பாலதண்டாயுதபாணி கோயில்களிலும் தன் நயம்படதிறனை மெய்ப்பித்து இருக்கிறார்கள். அதுபோல் திருக்கோயில் சிப்பந்திகள், திரு. பெருமாள் ஆகியோரின் பணிகள் சிறப்பு மிக்கவை. நமது ஆலய மஹா கும்பாபிஷேகத்துக்கு, அறநிலையத்துறை சிவா ஆகம பரிக்ஷாதிகாரி க. சுந்தரக்குருக்கள் சர்வ சாதகமாக பொறுப்பினை ஏற்றுள்ளார்கள். அவர்களும் திருவையாறு அருகே உள்ள வரகூர் கிராமத்தைச்சேர்ந்தவர்கள் - 4.2.72ல், நமது கோயிலில் நடைபெற்ற இரண்டாவது கும்பாபிஷேகத்திற்கும் இவர்களே சர்வ சாதகமாக இருந்து நடத்தி தந்துள்ளார்கள். இதுதவிர தஞ்சை மாவட்டத்தில் இவர்கள் முன்னின்று பல கும்பாபிஷேகங்களை நடத்திச் சிறப்பித்திருக்கிறார்கள்.

நம்மூர் வீரராகப் பெருமாள் கோவிலுக்கும் 03.02.91-ம் தேதி கும்பாபிஷேகம் வைத்து இருக்கிறார்கள்.

www.npnagarathar.com

அக்கோயிலின் உரிமையாளர்கள் குடும்பத்தைச் சார்ந்த அனைவரும் மிகக்குறுகிய காலத்தில் உன்னத முறையில் தெளிவாக சீர்பணிகளைச் செய்து இருக்கிறார்கள். அக்குடும்பத்தைச் சார்ந்த திரு அ.மு. அண்ணாமலை செட்டியார் அவர்களும், திரு வீமு. வீர. முத்துகருப்பன் செட்டியார் அவர்களும், திரு. வீமு. சுப. நாச்சியப்ப செட்டியார் அவர்களும் முன்நின்று நல்லவிதமாக எல்லாக் காரியங்களையும் செய்து இருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றி சொல்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

*சிறப்பு மலர்:*

இம்மலர் குழுவின் தலைவர் திரு பழ. சி. ராம. சிவனடியான் செட்டியார் அவர்களும் இக்காரியத்தைத் தொடங்கியது முதல் வேறு எந்த சிந்தனையும் இல்லாது இரவுபகல் பாராது, கருமமே கண்ணாயிருந்து, கடுமையாக உழைத்து இதனை சிறப்பித்து இருக்கிறார்கள்.

இம்மலர்குழுவின் செயலாளர் திரு அ.முத்துராமன் அவர்களும இம்மலர் சென்னை வேலைகளின் பூரணப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டும், தனி ஒரு நபராக பல விளம்பரங்களை சேகரித்தது பெருமையை தரத்தக்கது. அவர்கள் பணி வளர்க!

நற்சாந்து பட்டியை சேர்ந்தவர்கள் தமிழகத்தில் எல்லாப்பகுதிகளிலும் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் நமது ஊருக்கு துணை நிற்பதில் பெரும் ஆர்வம் காட்டி அவர்களுடைய அன்பர்கள், அவர்களின் தொழிலில் தொடர்பு உள்ளவர்கள். வெளியூர்களில் வசிக்கும் நகரத்தார்கள். அனைவரையும் தொடர்பு கொண்டு வியக்கத்தக்க வகையில் பணியாற்றி இருக்கிறார்கள். அதுபோல் திரு சிவ அவர்களும் பல அறிக்கைகளின் மூலம் அனைவரையும் ஒன்று திரட்டி காரியத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி இருக்கிறார்கள். திரு. சிவ அவர்களும் விளம்பரங்கள் வாங்குவதில் தனக்குத் தெரிந்த யாரையும் விட்டுவைக்கவில்லை.

இம்மலரின் அச்சுச்செலவு முழுவதையும் நமது நண்பர் டாக்டர் ச. மெய்யப்பன் ஏற்றுக் கொண்டது சிறப்புகளின் சிகரமாய்த் திகழ்கிறது. அவர் தன் உள்ளத்தில் ஏற்படும் ஒருதுளி அன்பைக் கூட பெரும்பணியாக நிறைவேற்றி அனைவரையும் திகைக்க வைப்பார்கள். சமீபகாலமாக திரு மெய்யப்பன் அவர்கள் பல பயனுள்ள நன்கொடைகளை ஈந்து சிறப்புமிக்க நன்கொடையாளர் வரிசைக்கு உயர்ந்து விட்டார்கள்.

நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க எனது பல நண்பர்களும் தனது சிரமம் பாராது கட்டுரைகள் அனுப்பித் தந்து இருக்கிறார்கள்.

என் மதிப்புக்கும், மரியாதைக்கும் உரிய சன்மார்க்க சங்கத்தின் சிகரம் குங்கிலியம் பழ. சண்முகனார் அவர்கள் (ச.மெய்யப்பன் அவர்களின் தந்தையார்) சன்மார்க்கத்திற்கும், நகரத்தார்களுக்கும் உள்ள தொடர்பினைக் குறித்து ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை தந்து இருக்கிறார்கள். அதுபோல், தமிழ் அறிஞர்களின் முன்நிற்கும் தமிழண்ணல் அவர்களும் சொற்பொழிவில் சிகரமாகத் திகழும் திரு முரு.பழ. ரெத்தினம் செட்டியார் அவர்களும் திரு சுகிசிவம் அவர்களும் நாட்டுப்பாடல்களில் சிறப்புமிக்க திரு மெ. சுந்தரம் அவர்களும் ஆழ்ந்த அறிவுடைய திரு மு.வை. அரவிந்தன் அவர்களும், மரபுக் கவிஞர் திரு தங்கமணியாபிள்ளை அவர்களும் நல்ல கட்டுரைகளை அனுப்பித்தந்து இம்மலரினை சிறப்பித்து இருக்கிறார்கள்.

இம்மலரின் சிறப்புகளில் ஒன்று இம்மலரின் கட்டுரையாளர்களில் பெரும்பகுதி நற்சாந்து பட்டியைச் சேர்ந்த பெருமக்களே. அவர்களுக்கு என் நன்றி.

மணிவாசகர் பதிப்பகத்தினை சார்ந்த திரு குருமூர்த்தி அவர்களும், இன்முகத்துடன், நாங்கள் ஆர்வத்துடன் கொண்டு வந்து குவித்தவைகள் அனைத்தையும் மலரும் மலராக உருவாக்கித் தந்தார்கள். அதுபோல் பதிப்பகத்தை சார்ந்த திரு முத்துராமன் அவர்களும், எழுத்தினை எண்ணி சரிபார்க்கும் நா அவர்களும், சிதம்பரம் மணிவாசகர் பதிப்பகத்தை சார்ந்தவர்களும் இம்மலர் வெளிவர பெரும் உதவியாக இருந்தார்கள். சிதம்பர அச்சக வேலையை திரு டாக்டர் மெ.

www.npnagarathar.com

அவர்கள் மேற்பார்த்தது இங்கு குறிப்பிடத் தக்கது.

இந்த நற்பணி சிறக்க நகரத்தார்களின் நண்பர் திருச்சி சுவாமிகளின் சிஷ்யர் கைலாஷ் அச்சகத்தின் உரிமையாளர் திரு மையூரப்பிரியா அவர்களும், பயபக்தியுடன் உரிய நேரத்தில் மலர் வெளிவர உதவியாக இருந்தார்கள். இம்மலர் எக்காலத்தும் நற்சாந்துபட்டியின் சிறப்புகளையும், இங்கு வாழ் நகரத்தார்களின் திருப்பணிச் செய்திகளையும் தெரிவிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்திலே தயாரிக்கப்பட்டுள்ளது.

இம்மலரினால் சேரும் நிதியில் திருக்குளப்பணிக்குக்கொடுத்தது போக நீதியை திருமண மண்டபத்திற்காக உபயோகப் படுத்த இருக்கிறோம். நிதியினை தந்து எங்களை ஊக்குவித்த அனைத்து பெருமக்களுக்கும் எம் நன்றி உரித்தாகுக.

நானும் “சிவ” அவர்களும் கோவையில் நகரத்தார் சங்கம் கட்டும் பணியில் வெற்றி யுடன் இணைந்து செயலாற்றினோம். மீண்டும் இணைந்து செயலாற்ற ஒரு வாய்ப்பு கிடைத்த மைக்கு பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பணி சிறக்க அருள்முகத்துடன் பேரருள் புரிந்த சிவகாம சுந்தரி, சிதம்பரேஸ்வரர் பாத கமலங்கள் பணிகின்றேன்.

24.01.1991
நற்சாந்துப்பட்டி.

L. சோமு,
பதிப்பாசிரியர்.

www.npnagarathar.com



உ

## காமாட்சியம்மன்

காஞ்சிபுரம்

முத்துமணி மாலையுடன் முக்திதரும் கைகளில்
முக்கனிக் கரும்பு வில்லும்
சித்தத்தில் என்றுமே சக்தியாய் விளங்கிடும்
தேவியவள் அருள் மாட்சியே
செந்தமிழ் பாடிடும் சிந்தையில் வாழ்ந்திடும்
தேவியுமை காமாட்சியே.

www.npnagarathar.com



www.npnagarathar.com

(10)

உ

ஸ்ரீ சந்திரமௌளீஸ்வராய நம: போன்: 2315

அருளாசியுரை

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

# ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம், காஞ்சீபுரம்.

தலைமை ஆபீஸ்: நெ. 1, சாலை தெரு,
பெரிய காஞ்சீபுரம் - 613 502.

தேதி: 21—1—91

செட்டிநாட்டிலுள்ள திருமலை சமுத்ரம் என்னும் நற்சாந்துபட்டியில் வஸிக்கும் தனவைச்யர்களாகிய நகரத்தார் அங்கு கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீ சிவகாமியம்பாள் சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரஸ்வாமிக்கும் பரிவார தேவதைகளுக்கும் ஜீர்ணோத்தார பூர்வகம் அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகத்தை நடத்தி வைக்க முன்வந்திருப்பதை அறிந்து ஸந்தோஷிக்கிறோம்.

பக்தர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டும், தர்சித்தும் ஸ்ரீ சிதம்பரேச்வர பெருமானின் அருளால் எல்லாமங்களங்களையும் அடைவார்களாக.

நாராயணஸ்ம்ருதி

www.npnagarathar.com

" தேஹ புஷ்டியை மட்டுமின்றி ஞான வைராக்யங்களையும் அநுக்ரஹிக்கும் அன்னத்தையும் ஸாக்ஷாத் அம்பாளிடமிருந்து ஆசார்யாள் யாசித்ததைச் சொல்லி உங்கள் எல்லோருக்காகவும் பிரார்த்திக்கிறேன்.



" அன்னபூர்ணே ! ஸதாபூர்ணே சங்கரபராண வல்லபே !
ஞான வைராக்ய ஸித்த்யர்த்தம் பிக்ஷாம் தேஹிச பார்வதி !!

www.npnagarathar.com

உ

முருகா

" வேலை வணங்குவதே வேலை "

கிருபானந்தவாரி,
107, சிங்கண்ண செட்டித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.

துதி

நேரிசை வெண்பா

பார்புகழ் நற்சாந்து பட்டி சிவகாமி
சேர்வண் சிதம்பர தேவனே-ஆர்வமுடன்
போற்றுவார் இன்பம் பொருந்துவார் புன்பிறவி
மாற்றுவார் வாழ்வார் மகிழ்ந்து.

அன்பன்
கிருபானந்தவாரி

www.npnagarathar.com

உ

சிவமயம்.



*Dr. M.A.M. Ramaswamy, B.A., D.Litt*

CHETTINAD HOUSE,
RAJAH ANNAMALAIPURAM,
MADRAS-600 028.

29-1-1991.

நச்சாந்துபட்டியில் நாளது பிரமோதூத ஆண்டு தைத் திங்கள் 22ஆம் நாள் (4-2-1991) திங்கள் கிழமை அன்று ஸ்ரீசிவகாமியம்மாள் உடனாய் சிதம்பரேஸ்வரர் திருக்கோவிலுக்கு குடமுழுக்கு விழா நடக்கவிருப்பது குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். அவ்வூர் வாழ் நகரத்தார்களின் முயற்சியால் கோவில் புதுப்பிக்கப்பட்டு குடமுழுக்கு நடப்பதுடன், கோவிலின் சிறப்புக்களை யாவரும் அறிய சிறப்பு மலர் ஒன்றினையும் வெளியிடுவது பாராட்டத்தக்க செயலாகும்.

விழா சிறப்புடன் நடைபெற்று, மலர் வெளியிட்டுவிழாவும் சிறப்பாக நடந்தேற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

விழாக்குழுவினருக்கு என் அன்பு கலந்த நல்வாழ்த்துக்கள்.

அன்புடன்,

(மு.அ.மு. இராமசாமி.)

www.npnagarathar.com

Justice
**AR. LAKSHMANAN**

"SWARNA"
48, Third Main Road,
Gandhi Nagar, Adyar,
Madras-600 020.

Phone : 41 25 67
41 82 78

26.1.91

நகரத்தார்கள் ஆலயங்களுக்கு திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்வதில் தொன்று தொட்டு முதலிடம் வகித்து வருகிறார்கள். தாங்கள் வசிக்கும் ஊர்களிலும், தமிழகத்திலும், வட இந்தியாவிலும், மலேயா, பர்மா, இலங்கை போன்ற மேலை நாடுகளிலும் ஆலயத் திருப்பணி செய்து குடமுழுக்கு விழாவும் சிறப்புறச் செய்திருக்கிறார்கள். செய்து வருகிறார்கள்.

நகரத்தார்கள் வாழும் ஊர்களில் ஒன்றான நச்சாந்துபட்டியில் அருள்மிகு சிவகாமி அம்பிகை சமேத சிதம்பரஸ்வரர் திருக்கோயிலுக்கு நகரத்தார்கள் நாளது பிரமோதூத ஆண்டு தைத் திங்கள் 22ம் நாள் குடமுழுக்கு விழா நடத்த இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். விழாவை ஒட்டி மலர் ஒன்றும் வெளியிட இருப்பது அறிந்து மேலும் மகிழ்ச்சியடைகிறேன்.

கும்பாபிஷேக கமிட்டி தலைவர், மலர்க்குழு தலைவர், பதிப்பாசிரியர் மற்றும் குடமுழுக்கு விழா கமிட்டி உறுப்பினர்கள், மலர்க்குழு உறுப்பினர்கள் செய்த சேவை போற்றுதற்குரியது.

குடமுழுக்கு விழாவும், மலர் வெளியீட்டு விழாவும் சிறப்புற நடைபெற வாழ்த்துகிறேன்.

(கையொப்பம்)

நீதிபதி
உயர்நீதி மன்றம்,
சென்னை

www.npnagarathar.com

15



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சிவகாமியம்பாள் சமேத சிதம்பரேசுவரர் துணை

# ந ற் சா ந் து ப ட் டி

## ஸ்ரீ சிவகாமியம்பாள் சமேத சிதம்பரேசுவரர் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்

அருள் பெருகும் சிவகாமிஅனை, சிதம்பரேசுவரர்சீர்,
பொருள் பெருகு நற்சாந்துப் பொன்னகரத்தார் கோயில்,
தெருள் பெருகு கும்பாபிஷேக நலம் கண்டுய்வான்,
வருகஎன உலகினரை மகிழ்ந்தழைக்கும் பத்திரிகை.

ஸ்ரீ சித்திவிநாயகர் துதி

உலகுயர் செல்வம் எல்லாம் ஒரிடத்து அடைந்தோம் என்று
வலமுற வாழ்வோர் எல்லாம் மகிழுநற் சாந்துபட்டித்
தலமிசைக் கோயில் கொண்டு தன் அடைந்தார்க்கு இன்பப்
பலனருள் அமலன், சித்திவிநாயகன் பதங்கள் போற்றி.

www.npnagarathar.com

## ஸ்ரீ சுப்பிரமணியர் துதி

திருவளர் குறமானோடு தெய்வ குஞ்சரமும், பக்கல்
மருவ, நன்மயில் மீதேறி, மதி நலம் பெருகும் அன்பர்
உருவளர் அகமேபோல, ஓங்குநற் சாந்துபட்டிக்
குருவளர் கோயில் மேய குமரன்தாள் சென்னிசேர்ப்பாம்.

## ஸ்ரீ சிதம்பரேசுவரர் துதி

சீர்பூத்த நற்சாந்துத் திருநகரில் தனவணிகர் சிறப்பச்செய்த
ஏர்பூத்த திருக்கோயிலில் காதல் மலிதர வந்திருந்து வாழும்
தேர்பூத்த தில்லைநகர்ச் சிவகாமி மகிழ்கூரும் சிதம்பரேசர்
நார்பூத்த திருவடிகள் நலம்பூத் த பேரன்பால் நயந்து வாழ்வாம்.

## ஸ்ரீ சிவகாமியம்பாள் துதி

மேயபல் உலகம் எல்லாம் வேண்டுவ அளிக்கும் தெய்வத்
தாயென மறைகள் போற்றத் தண் அருள் வடிவு கொண்டு
நாயகனுடன், நற்சாந்து நகரத்தார் கோயில் மேய
ஆய் அருள் சிவகாமித்தாய் அடி, முடிக்கொண்டு வாழ்வாம்.

## ஸ்ரீ சண்டீசர் துதி

விண்ணவரேனும் சிவபிரான் பக்தி மேவிலார் ஆயின் நல்வினையும்
திண்ணிய பாவம் எனப்படும் என்று சிறுவிதி தெரிப்ப, அன்பினரேல்
மண்ணவரேனும் வெய்ய பாதகமும் மறுவில் நல்வினை எனப்படு மென்று
அண்ணல் அம்புவியில் தெரித்த சண்டீசர் அடிமலர் முடிமிசைப் புனைவாம்

www.npnagarathar.com

## வாழ்த்து

வாழ்க அந்தணர்: வானவர், ஆனினம்:
வீழ்க தண்புனல்: வேந்தனும் ஓங்குக!
ஆழ்க தீயதெல்லாம்: அரன் நாமமே:
சூழ்க வையக மும்துயர் தீர்கவே.

நற்சாந்து பட்டிமிக நல்லவர்கள் வாழுமூர்
பொற்புடைய நகரத்தார் புகழ்விளக்கும் புனிதஊர்
கற்பவர்கள் மிகுந்தஊர் கல்வியினில் கரைகண்ட
விற்பனரை எந்நாளும் வியந்தேத்தும் பேரூரே.

மெய்யன்பர்களே:

திருமலைசமுத்திரம் என்னும் நற்சாந்துபட்டியில் கோயில் கொண்டிருக்கும் சிவகாமி அம்பிகையுடனாய சிதம்பரேசுவர சுவாமிக்கும் பரிவார தேவதைகளுக்கும், நிகழும் பிரமோதூத ஆண்டு தைத்திங்கள் 22 - ஆம் நாள் (4-2-1991) திங்கள்கிழமை கிருஷ்ணபட்சம் சஷ்டி திதியும் ஹஸ்த நட்சத்திரமும் சித்தயோகமும் நிஷ்பஞ்சகமும் லெக்ஷிமி யோகமும் கூடிய சுப தினத்தில் காலை மணி 9-30 க்கு மேல் 10-15 மணி அளவில் மீன லக்கினத்தில் நடைபெறும் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிடேகத்திற்கு வந்து, கண்டு, களித்து, வணங்கி பேரானந்தப் பெருவாழ்வு பெறுமாறு வேண்டுகிறோம்.

### நிகழ்ச்சி விபரம்

பிரமோதூத ஸ்ரீதைமீ 19ஆம் தேதி 1 - 2 - 91 வெள்ளிக்கிழமை காலை மணி 5 to 6 - 15 அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, கணபதி ஹோமம்.

அன்று மாலை 5.45 to 6-30 கடஸ்தாபனம், யாக பூஜை ஆரம்பம்

20 தேதி 2 - 2 - 91 காலை - மாலை யாக பூஜை

21 தேதி 3 - 2 - 91 காலை - மாலை யாக பூஜை

22 தேதி 4 - 2 - 91 காலை யாக பூஜை

22 தேதி 4 - 2 - 91 திங்கட்கிழமை காலை மணி 9-30 to 10-15 மணிக்குள் மீன லெக்கனத்தில் ஜீர்ணோத் தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷகம்

அன்று இரவு பஞ்சமுர்த்தி திருவுலா

மல்குக வேதவேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக வரங்களின்பம்
நல்குக வுயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவமோங்கிப்
புல்குக வுலகமெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க

ஸ்ரீ சிவகாமியம்பாள் சமேத சிதம்பரேசுவரர் திருவடி வாழ்க!

பிரமோதூத கார்த்திகை 27 இங்ஙனம்

நற்சாந்துபட்டி தனவைசியர்களாகிய நற்சாந்துபட்டி நகரத்தார்.

www.npnagarathar.com

உ

சிவமயம்

நற்சாந்துபட்டி

## அருள்மிகு சிவகாமி அம்பிகை சமேத சிதம்பரேஸ்வரர் திருக்கோயில்

## குடமுழுக்கு விழா

3.2.91 ஞாயிற்றுக் கிழமை

மாலை 7 மணி — "நீதிமன்றம்"
கவிஞர்களே பாத்திரங்களாக வேடமிட்டு நடிக்கும் புதுமையான நிகழ்ச்சி!

இரவு. 9.30 மணி — மதுரை பேராசிரியை டாக்டர் விஜயலெட்சுமி நவநீதகிருஷ்ணன் வழங்கும்.
"கிராமீயக் கலை நிகழ்ச்சி"

பிரமோதூத ஆண்டு தைத் திங்கள் 22 ஆம் நாள் (4.2.91) திங்கட்கிழமை

### சிறப்பு நிகழ்ச்சிகள்

இரவு 7 மணி : வழக்காடு மன்றம்

வழக்கு : இராமாயணத்தில் விதியைச் சிதைத்த வேதமுனி குற்றவாளி!

நீதிபதி : நாவுக்கரசர். டாக்டர் சோ. சத்திய சீலன். M.A., Ph.D.

வழக்குத் தொடுப்பவர் : செந்தமிழ்த் திலகம் டாக்டர்.கி.சேகர் M.A.,Ph.D.,

வழக்கு மறுப்பவர் : நகைச்சுவை அரசு. டாக்டர் அ. அறிவொளி M.A., Ph.D.,

இரவு 9 மணி : பக்தி இன்னிசை
"இளைய இசைமணி", "தருமபுர ஆதீன இசைப் புலவர்"
டாக்டர். சீர்காழி. G. சிவசிதம்பரம் M.D., குழுவினர்.
(பத்ம ஸ்ரீ. டாக்டர். சீர்காழி. எஸ் . கோவிந்தராஜன் அவர்கள் குமாரர்)

நள்ளிரவு 3 மணி ; பஞ்சமூர்த்திகள் திரு உலா

**அனைவரும் வருக! இறையருள் பெறுக!**

அன்புடன் அழைப்பது,

நற்சாந்துபட்டி இளைய நகரத்தார்

www.npnagarathar.com

# மலர் வெளியீட்டு விழா

**தை மாதம் 22-ஆம் தேதி (4-2-91) திங்கட்கிழமை**

| | | |
|---|---|---|
| நேரம் | : | காலை 11 மணி |
| தலைமை | : | உயர்திரு. **AR. லெட்சுமணன்** அவர்கள்<br>(சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி) |
| வரவேற்புரை | : | உயர்திரு. **பழ. சி ராம. சிவண்டியான் செட்டியார்** அவர்கள்<br>(மலர்குழு தலைவர்) |
| அறிமுகவுரை | : | உயர்திரு. **L. சோமு** அவர்கள்<br>(பதிப்பாசிரியர்) |
| மலர் வெளியிடுபவர் | : | உயர்திரு டாக்டர் ச.மெய்யப்பன் அவர்கள்<br>(மணிவாசகர் நூலகம்) |
| முதல் மலரினை பெற்று சிறப்பிப்பவர் | : | **உயர்திரு S. P. சபாபதி அவர்கள்**<br>(தலைவர், மதுரை வங்கி சென்னை) |
| பாராட்டுரை | : | திரு. ஓஷியானிக் **மெய்யப்பன்** அவர்கள்<br>திரு, பழ. **கருப்பையா** அவர்கள்<br>திரு. பழ. **சண்முகனார்** அவர்கள்<br>திரு. **வி. என். சிதம்பரம்** அவர்கள்<br>திருமதி. டாக்டர் **சிவகாமசுந்தரி** அவர்கள் |
| நன்றியுரை | : | திருக்குட நன்னீராட்டு விழா குழுவின் சார்பாக<br>திரு. **கும. பெரி. அழகப்ப செட்டியார்** அவர்கள்<br>(தலைவர் திருக்குட நன்னீராட்டு விழாக்குழு)<br><br>மலர்குழுவின் சார்பாக<br>திரு **அ. முத்துராமன்** அவர்கள்<br>(செயலாளர் - மலர்குழு) |
| விழா நிகழ்ச்சி தொகுப்பு | : | திரு. **அரங்க கலியமூர்த்தி** அவர்கள் |

www.npnagarathar.com

# சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்னாடை போர்த்தி சிறப்பிப்பவர்கள்

திரு. ந. மெ. நல்லகருப்பன் செட்டியார்,

திரு. பெ. ராம. ராம. சித. இராமன் செட்டியார்,

திரு. சித. குப்பான் செட்டியார்,

திரு. பெரி. பெ. இராமனாதன் செட்டியார்,

திரு. வீ. அ. மு. அண்ணாமலை செட்டியார்,

திரு. மெ. ப. ராம. பழ. இராமனாதன் செட்டியார்,

திரு. பழ. சி. ராம. ராமனாதன் செட்டியார்

www.npnagarathar.com

# கும்பாபிஷேக பொதுக்குழு அங்கத்தினர்கள்

1. தலைவர்:- கும.பெரி. அழகப்ப செட்டியார்
2. செயலாளர்:- வீ.அமு. அண்ணாமலை செட்டியார்
3. பொருளாளர்:- பெ.ராம.ராம.சித. இராமன் செட்டியார்
4. உப தலைவர்:- ந.மு.அந. முத்தளகப்ப செட்டியார்
5. துணை செயலாளர்:- சித. குப்பான் செட்டியார்
6. அங்கத்தினர்கள்:- பழ. சுந்தரேசன் செட்டியார்
   கும.பழ. குமரப்ப செட்டியார்
   சித.சா. சாத்தப்ப செட்டியார்
   ஆ.பெரி. ஆண்டியப்ப செட்டியார்
   லெ.பெரி. லெட்சுமணன்
   பழ. இராமநாதன்
   சுப. முத்துக்கருப்பன்
   நா. சிவனடியான்
   பெரி. ராமசாமி

### பரம்பரை அறங்காவலர்கள்

1. வீ.அமு. அண்ணாமலை செட்டியார்
2. பழ. இராமநாதன் செட்டியார் (நடப்பு காரியக்காரர்)
3. சுப. முத்துக்கருப்பன் செட்டியார்
4. நா. சிவனடியான் செட்டியார்
5. பெரி. ராமசாமி செட்டியார்

### நகரத்தார் சங்க அங்கத்தினர்கள்

1. திரு. சித. குப்பான் செட்டியார் — தலைவர்
2. திரு. மு. சம்பந்தம் — செயலாளர்
3. பழ. இராமநாதன் — பொருளாளர்

### உறுப்பினர்கள்

4. ஆ.முரு. சுப்பையா செட்டியார்
5. பழ. சுந்தரேசன் செட்டியார்
6. ஆ.மெ. ஆண்டியப்ப செட்டியார்
7. பழ. முத்து செட்டியார்
8. அமு. சிதம்பரம் செட்டியார்
9. குழ.சுப. கருப்பஞ் செட்டியார்
10. சித.வீர. சிங்காரம் செட்டியார்

www.npnagarathar.com

## கும்பாபிஷேக பணிகளை செய்வதற்கு ஏற்படுத்திய கமிட்டி மெம்பர்கள் விவரம்

### யாகசாலை

1. ந.மெ. நல்லகருப்பஞ் செட்டியார் தலைவர்
2. பள.சி.ராம. ராமநாதன் செட்டியார்
3. பழ. முத்து. ரைஸ்மில்,
4. பெரி. ராமசாமி,
5. பெரி. மெய்யப்பன்,
6. பெ.ராம.லெ.ராம. கருப்பையா,
7. பெரி.பெ.மாணிக்கம் செட்டியார்
8. அமு. சிதம்பரம் செட்டியார்,
9. மெ.மு. சிதம்பரம்
10. ராம. ராமநாதன்
11. மு. கணபதி
12. ந.குமு. ராமு

### மருந்து சாத்துகிறது

1. ராம. குமரப்பன் தலைவர்
2. வீ.அமு. அண்ணாமலை செட்டியார்
3. பெ.வ.ராம. குமரப்பன்
4. மு. அண்ணாமலை
5. அரு. நாகராஜன்
6. சிவ. சிவசாமி
7. கு.ராம.கும. ராமநாதன்

### ஊரணி கோவில் மராமத்து

1. பெரி. ஆண்டியப்பன், தலைவர்
2. வீர. சிங்காரம்
3. வீர.மு.சுப. முத்து
4. ஆமெ. ஆண்டியப்பன்
5. ந.மு.அமு.கும. ராமநாதன்
6. மு. சுப்பிரமணியன்

### பாதுகாப்பு

1. பெரி.பெ. ராமநாதன் தலைவர்
2. கரு. சொக்கலிங்கம்
3. சி.வெ.லெ.சுப. ஷண்முகம்
4. சி. லெட்சுமணன்
5. மு.அ.வீர. சிங்காரம்
6. அள.கு.ராம. முருகப்ப செட்டியார்
7. பழ. இராமநாதன், பாபநாசம்
8. லெ.பெரி. சிதம்பரம்

www.npnagarathar.com

மகாபிஷேகம்

1. மு. கிருஷணப்பன், தலைவர்
2. நா. சிவனடியான்
3. வீர முத்துக்கருப்பன்
4. அழ. பெரியகருப்பன்
5. பழ.சி.ராம. பழனியப்பன்
6. பெ.ராம.லெ.ராம. கணபதி
7. சி.வெ.லெ.சுப. சிதம்பரம்
8. ராம. காசிவிஸ்வநாதன்
9. சித. நடராஜன்

பிராமண போஜனம்

1. பெரி. லெட்சுமணன் தலைவர்
2. மு.மெ. முத்துராமன்
3. வ.கு.பள. திருநாவுக்கரசு
4. சுப. வள்ளியப்பன்
5. V. சுப்பிரமணியன்
6. சி. ஆண்டியப்பன்
7. சுப. முத்துக்கருப்பன்
8. பழ. சிவசாமி
9. ராம. சிங்கார வடிவேல்

இளைஞர் குழு

சாமி எழுந்தருளல் செய்தல், கலை நிகழ்ச்சி

1. முரு.நா. முத்துராமன், தலைவர்
2. மு. சம்பந்தம்
3. பெரி. ராமசாமி
4. சி. பழனியப்பன்
5. அ முத்துராமன்
6. மு. காடப்பன்
7. மு. அண்ணாமலை
8. அ சுப்பையா
9. பெரி. ராசேந்திரன்

www.npnagarathar.com

# கும்பாபிஷேக மலர்க் குழு உறுப்பினர்கள்

கும. பெரி. சாத்தப்பன்

KM.KM. சுப்ரமணியம்

PL. மீனாட்சி சுந்தரம்

RM. வள்ளியப்பன்

A. அண்ணாமலை

RM. சிவசாமி

PR. கற்பக கணபதி

K. சொக்கலிங்கம்

பெரி. ஆ. நாகராஜன்

K.M.N. மெய்யப்பன்

A. முருகப்பன்

K.M. காசி

K.M. சின்னையா

K.R. வீரப்பன்

MR. அண்ணாமலை

ஆ.பெரி. லட்சுமணன்

N. ராஜேந்திரன்

L. தியாகராசன்

SP. தெய்வானை சுந்தரம்

S. லெட்சுமணன்

N. லெட்சுமணன்

M. குமரப்பன்

V. இராமநாதன்

P.R. செல்வராஜ்

PR. நாச்சியப்பன்

PL. சிதம்பரம்

PR. இராமனாதன்

K. சிதம்பரம்

V. இராமனாதன்

கும. திருப்பதி

RM. இராஜேந்திரன்

பெ.ராம.ராம. சம்பந்தம்

A. காசி

K.R. சிதம்பரம்

SP. வைரவன்

M. இராமய்யா செட்டியார்

வெ.ஆ. பழனியப்பன்

PL. ராமசாமி

சித.கு. குப்பன்

சி.வெ.லெ.சுப. லெட்சுமணன்

SP. இராமநாதன்

KM.C. ராமநாதன்

N. காசி



# குமபெரி. அழகப்ப செட்டியார்

தலைவர், திருக்குட நன்னீராட்டு

பூவினிய முகமும் பொருளினிய செயலும்
நாவினிய சொல்லும் நயம்பட உழைக்கும் திறனும்
நற்குட நீர் சொரிய நலம் பல பெற்ற பேறு
நற்சாந்து புகழ் சேர்க்கும்

www.npnagarathar.com





உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
ஸ்ரீ சிவகாமியம்பாள் சமேத சிதம்பரேசுவரர் துணை



# ந ற் சா ந் து ப ட் டி

ஸ்ரீ சிவகாமியம்பாள் சமேத சிதம்பரேசுவரர் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்.

அருள் பெருகும் சிவகாமிஅனே, சிதம்பரேசுவரர்சீர், பொருள் பெருகு நற்சாந்துப் பொன்னகரத்தார் கோயில்,

தெருள் பெருகு கும்பாபிஷேக நலம் கண்டுய்வான், வருகஎன உலகினரை மகிழ்ந்தழைக்கும் பத்திரிகை.

### ஸ்ரீ சித்திவிநாயகர் துதி

உலகுயர் செல்வம் எல்லாம் ஒரிடத்து அடைந்தேம் என்று
வலமுற வாழ்வோர் எல்லாம் மகிழுநற் சாந்துபட்டித்
தலமிசைக் கோயில் கொண்டு தன் அடைந்தார்கட்கு இன்பப்
பலனருள் அமலன், சித்திவிநாயகன் பதங்கள் போற்றி.

### ஸ்ரீ சுப்பிரமணியர் துதி

திருவளர் குறமானோடு தெய்வ குஞ்சரமும், பக்கல்
மருவ, நன்மயில் மீதேறி, மதி நலம் பெருகும் அன்பர்
உருவளர் அகமேபோல, ஓங்குநற் சாந்துபட்டிக்
குருவளர் கோயில் மேய குமரன்தாள் சென்னிசேர்ப்பாம்.

### ஸ்ரீ சிதம்பரேசுவரர் துதி

சீர்பூத்த நற்சாந்துத் திருநகரில் தனவணிகர் சிறப்பச்செய்த
ஏர்பூத்த திருக்கோயிலில் காதல் மகிழ்தர வந்திருந்து வாழும்
தேர்பூத்த தில்லைநகர்ச் சிவகாமி மகிழ்கூரும் சிதம்பரேசர்
தார்பூத்த திருவடிகள் நலம்பூத்த போன்பால் நயந்து வாழ்வாம்.

### ஸ்ரீ சிவகாமியம்பாள் துதி

மேயபல் உலகம் எல்லாம் வேண்டுவ அளிக்கும் தெய்வத்
தாயென மறைகள் போற்றத் தன் அருள் வடிவு கொண்டு
நாயகனுடன், நற்சாந்து நகரத்தார் கோயில் மேய
ஆய் அருள் சிவகாமித்தாய் அடி, முடிக்கொண்டு வாழ்வாம்.

### ஸ்ரீ சண்டேசர் துதி

விண்ணவரேனும் சிவபிரான் பக்தி மேவிலார் ஆயின் நல்வினையும்
திண்ணிய பாவம் எனப்படும் என்று சிறுவிதி தெரிப்ப, அன்பினரேல்
மண்ணவரேனும் வெய்ய பாதகமும் மறுவில் நல்வினை எனப்படு
மென்ற
அண்ணல் அம்புவியில் தெரித்த சண்டேசர் அடிமலர் முடிமிசைப்
புனைவாம்

### வாழ்த்து

வாழ்க அந்தணர் : வானவர், ஆனினம் :
வீழ்க தண்புனல் : வேந்தனும் ஓங்குக !
ஆழ்க தீயதெல்லாம் : அரன் நாமமே :
சூழ்க வையக மும்துயர் தீர்கவே.

நற்சாந்து பட்டிமிக நல்லவர்கள் வாழுமூர்
பொற்புடைய நகரத்தார் புகழ்விளக்கும் புனிதரூர்
கற்பவர்கள் மிகுந்தவூர் கல்வியினில் கரைகண்ட
விற்பனரை எந்நாளும் வியந்தேத்தும் பேரூரே.

மெய்யன்பர்களே !

திருமலைசமுத்திரம் என்னும் நற்சாந்துபட்டியில் கோயில் கொண்டிருக்கும் சிவகாமி அம்பிகையுடனுறை சிதம்பரேசுவர சுவாமிக்கும், பரிவார தேவதைகளுக்கும், நிகழும் பிரமோதூத ஆண்டு **தைத்திங்கள் 22-ஆம் நாள் (4—2—1991)** திங்கள்கிழமை கிருஷ்ணபட்சம் சஷ்டி திதியும் ஹஸ்த நக்ஷத்திரமும் சித்தயோகமும் நிஷ்பஞ்சகமும் லெக்ஷிமி யோகமும் கூடிய சுப தினத்தில் காலை மணி 9-30 க்கு மேல் 10-15 மணி அளவில் மீன லக்கினத்தில் நடைபெறும் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிடேகத்திற்கு வந்து, கண்டு, களித்து, வணங்கி பேரானந்தப் பெருவாழ்வு பெறுமாறு வேண்டுகிறோம்.

### நிகழ்ச்சி விபரம்

| | |
|---|---|
| பிரமோதூத வருடம் தை 19வ 1—2—91 வெள்ளிக்கிழமை காலை மணி 5 to 6-15 | அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, கணபதி ஹோமம். |
| அன்று மாலை 5-45 to 6-30 | வாஸ்துசாந்தி, யாக பூஜை ஆரம்பம் |
| 20வ.திங்கள் 2—2—91 காலை-மாலை | யாக பூஜை |
| 21வ.திங்கள் 3—2—91 காலை-மாலை | யாக பூஜை |
| 22வ.திங்கள் 4—2—91 காலை | யாக பூஜை |
| 22வ.திங்கள் 4—2—91 திங்கட்கிழமை காலை மணி 9-30 to 10-15 மணிக்குள் மீன லெக்கனத்தில் | ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன **மகா கும்பாபிஷேகம்** |
| அன்று இரவு | **பஞ்சமூர்த்தி திருவுலா** |

மல்குக வேதவேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக அறங்களின்பம்
நல்குக வுயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவமோங்கிப்
புல்குக வுலகமெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க

**ஸ்ரீ சிவகாமியம்பாள சமேத சிதம்பரேசுவரர் திருவடி வாழ்க !**

பிரமோதூத கார்த்திகை 27
நற்சாந்துபட்டி.

இங்ஙனம்
தனவைசியர்களாகிய நற்சாந்துபட்டி நகரத்தார்.

www.npnagarathar.com

# மலர்க் குழு தலைவர்



பழ.சி.ராம.சிவனடியான் செட்டியார்



திருமதி. விசாலாட்சி ஆச்சி

"வியப்புறு செயலை செய்தார்
வெற்றியை நல்லோர்க்கு ஈந்தார்
சிறபபுறு மனித சக்தி
திறம்பட திரட்டும் திறமை
எழுந்தது இளைஞர் நெஞ்சம்
பிறந்தது புதிய வசந்தம்"

"மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார் கண் துஞ்சார்;
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் -செவ்வி
அருமையும் பாரார்; அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணா யினார்"

www.npnagarathar.com

# மலர்க் குழு



L. சோமு, பதிப்பாசிரியர்

"மதிநிறை, இனியநல் மனம் உடையார்;
பதிப்பாசிரியாய் பலர்புகழ் தொண்டு செய்தார்;
எச்சபையிலும் ஏற்றமுடன் முன் நிற்பார்;
கண்ணதாசன் புகழ்பரப்பும் நற்கவிஞர் இவரே!"



அ. முத்துராமன்

செயலாளர், உறுப்பினர்: இளைஞர் குழு

"மலருக்குத் தன்னை ஈந்தார்;
அழகப்பரின் ஆர்வத்துக்கு உருத்தந்தார்;
செயலுக்கு முன்நின்று உழைத்தார்;
திறமையினை மெய்ப்பித்தாரே!"

www.npnagarathar.com

# கும்பாபிஷேகக் குழு



நா.மு.அ.ந.முத்தளகப்ப செட்டியார்
உப தலைவர்.



வீ.அ.மு.அண்ணாமலை செட்டியார்
செயலாளர், அறங்காவலர்
(மருந்து தயாரித்து சாத்தும் குழு)



சித. குப்பான் செட்டியார்
துணைச் செயலாளர்
(நகரத்தார் சங்கத்தலைவர்
மலர்க்குழு உறுப்பினர்)



பெ.ராம.ராம.சித.ராமன் செட்டியார்
பொருளாளர்.

www.npnagarathar.com

# கும்பாபிஷேக பொதுக்குழு அங்கத்தினர்கள்
# திருக்கோவில் அறங்காவலர்கள்

வீ.அ.மு. அண்ணாமலை
பரம்பரை அறங்காவலர்
மருந்து சாத்தும் குழு உறுப்பினர்



பழ. இராமனாதன்.
பரம்பரை அறங்காவலர்,
நடப்பு காரியக்காரர்
நகரத்தார் சங்க பொருளாளர்



சுப. முத்துக்கருப்பன்
பரம்பரை அறங்காவலர்
உறுப்பினர்: பிராமணாள் போஜனம்
மலர்க் குழு உறுப்பினர்



நா. சிவனடியான்
பரம்பரை அறங்காவலர்
சுப்பிரமணியர் கோபுரம் புதுப்பித்தல்
உறுப்பினர்: மஹாபிஷேக கமிட்டி



பெரி. ராமசாமி,
பரம்பரை அறங்காவலர்,
உறுப்பினர்: யாகசாலைக் கமிட்டி
இளைஞர் குழு

www.npnagarathar.com



பழ.சுந்தரேசன் செட்டியார்



கும.பழ.குமரப்ப செட்டியார்



சித.சா.சாத்தப்ப செட்டியார்



லெ.பெரி. லெட்சுமணன்
தலைவர்: பிராமண போஜனம்

www.npnagarathar.com

# நகரத்தார் சங்க அங்கத்தினர்கள்



ஆ.மெ.ஆண்டியப்ப
செட்டியார்
மராமத்து குழு



ஆ.முரு.சுப்பையா செட்டியார்
உறுப்பினர்: மலர்க் குழு
ஊரணிக் கோவில் மராமத்துக் கமிட்டி



**பழ. முத்து செட்டியார்**
யாகசாலைக் குழு



**அ.மு.சிதம்பரம் செட்டியார்**
உறுப்பினர்: யாகசாலை கமிட்டி

www.npnagarathar.com

# உபயதாரர்கள் (நன்கொடை விவரம்)



பிள்ளையார் கோபுரம் புதுப்பித்தல்
பெ.ராம.லெ.ராம. அழகப்பன்



சுவாமி கோபுரம் புதுப்பித்தல்
மு. கிருஷ்ணப்பன்,
தலைவர், மஹாபிஷேக கமிட்டி



அம்பாள் கோபுரம் புதுப்பித்தல்
பெரி.அழ. ருக்மணி ஆச்சி நினைவாக
பெரி.அழ. பெரியகருப்பன் செட்டியார்
உறுப்பினர்: மஹாபிஷேக கமிட்டி

குடவரை பிள்ளையார் கோவில் உபயம்
சா.வீர.அ.சுப.அண்ணாமலை செட்டியார்

www.npnagarathar.com



சோமஸ் கந்தர் கோபுரம் புதுப்பித்தல்
சித. கணேஷா

சுப்பிரமணியர் கோபுரம் புதுப்பித்தல்
நா. சிவனடியான்



குடவரை
பால சுப்பிரமணியர் கோவில் உபயம்
மஹாலட்சுமி கோவில் புதுப்பித்தல்

கி. ரகுபதி சுப்பிரமணியன்
B.E., (Hons) M.Sc (Canada)

பைரவர் கோபுரம் புதுப்பித்தல்
வீர.மு. குடும்பத்தார்கள்

www.npnagarathar.com

பள்ளியறை கோபுரம் புதுப்பித்தல்



பெரி.பெ.
ராமனாதன்
செட்டியார்



பெரி.பெ.
மாணிக்கம்
செட்டியார்



பெரி.பெ.
ராஜேந்திரன்



பெரி.பெ.
முத்தையா

யாகசாலைக் குழு



சுவாமி இராஜகோபுரம் புதுப்பித்தல்
அள.கு.ராம.முருகப்ப செட்டியார்
உறுப்பினர்: பாதுகாப்பு கமிட்டி,
மலர்க் குழு

அம்பாள் ராஜகோபுரம் புதுப்பித்தல்
கண. சிதம்பரம்



லெ.பெரி. குடும்பத்தினர்
சுவாமி சன்னதி
சாலாஹாரம் புதுப்பித்தல்

www.npnagarathar.com



சண்டிகேஸ்வரர் கோபுரம்
வீர அண்ணாமலை செட்டியார்



அம்பாள் சன்னதி
சாலாஹாரம் புதுப்பித்தல்
கு.ராம.கும.ராமனாதன் செட்டியார்



நடராசர் விமானம் புதுப்பித்தல்
ந.மெ. மகள் உமையாள் ஆச்சி
நினைவாக ந.மெ. குடும்பத்தார்கள்



சுவாமி சன்னதி ரிஜபாரூடர் புதுப்பித்தல்
மெ.ப.ராம.பழ.பழனியப்ப செட்டியார்
நினைவாக பழ. ராமனாதன்

www.npnagarathar.com



அம்மன் சன்னதி கெஜலெஷ்மி புதுப்பித்தல்
பழ.இராமனாதன் மகள் சாத்தம்மை



மு. அண்ணாமலை
உறுப்பினர்: மலர்க் குழு
மருந்து தயாரித்து சாத்துதல்
(& மருந்து தயாரித்து சாத்தும் குழு)



அரு.மு. நாகராசன்
உறுப்பினர்: மலர்க் குழு
மருந்து தயாரித்து சாத்துதல்
(& மருந்து தயாரித்து சாத்தும் குழு)



## மணி மண்டபம்

கி. முத்துராமன்
முத்துக்குமார் & கோ, புதுக்கோட்டை

www.npnagarathar.com

உள்மதில் சுவரும் சித்திரங்களும் புதுப்பித்தல்



லெ.அரு. லெட்சுமணன்
உறுப்பினர்: மலர்க் குழு

வெளிமதில் சுவரும் சித்திரங்களும் புதுப்பித்தல்

லெ. மெய்யப்பன் A.M.N; AC.H



சுவாமி மூலஸ்தான சுவர் கிரானைட் கற்கள் பதித்தல்



ந.மு.அ.மு.கும. இராமனாதன்
உறுப்பினர்: மராமத்து & மலர்க் குழு

## அம்மன் மூலஸ்தான சுவர் கிரானைட் கற்கள் பதித்தல்



மெ.கா.மு. முத்துராமன் செட்டியார்
குருசாமி நினைவாக
மு. மெய்யப்பன் சகோதரர்கள்

## சுப்பிரமணியர் மூலஸ்தான சுவர் மார்பிள் கற்கள் பதித்தல்



பழ.பெரி. பழனியப்பன்

## கொடிமரம் முன் நியான்சன் விளக்கு



கி. சாத்தம்மை கிருஷ்ணப்பன்

www.npnagarathar.com



சுவாமி சன்னதி ராஜ கோபுரம் மேல்
சோடியம் விளக்கு

மு.கும. மகள் அலமேலு ஆச்சி நினைவாக
மு.கும.மு. குடும்பத்தார் உபயம்

மைக்குடன் ஆம்பிளிபையர் செட் உபயம்
ந.மு.அ.ந.மு. மங்கையாச்சி





வாகனங்கள் புதுப்பித்தல்
வெ.வ.ரெ.ரெங்கனாதன் செட்டியார்

www.npnagarathar.com

# யாகசாலைக் குழு



ந.மெ.நல்லகருப்பன் செட்டியார்
தலைவர்,



பழ.சி.ராம.ராமனாதன் செட்டியார்
உறுப்பினர்: மலர்க் குழு



பெரி. மெய்யப்பன்
உறுப்பினர்: மலர்க் குழு



பெ.று.லெ.று.கருப்பையா
செட்டியார்

www.npnagarathar.com



மெ.மு. சிதம்பரம்
உறுப்பினர்: மலர்க் குழு



ராம. ராமனாதன் B.E.,



ந.கும. ராமனாதன்



மு. கணபதி

www.npnagarathar.com

# மருந்து தயாரித்து சாத்துதல்



ராம. குமரப்பன் தலைவர்



பெ.வ. ராம குமரப்பன்



S. சிவசாமி
உறுப்பினர்: மலர்க் குழு

www.npnagarathar.com

# ஊரணிக் கோவில் மராமத்துக் குழு



ஆ.பெரி. ஆண்டியப்பன்
தலைவர் & பொதுக் குழு உறுப்பினர்



சித.பெரி.வீர.சிங்காரம் செட்டியார்



N. சுப்பு

வீர.மு.சுப. முத்து

# பாதுகாப்பு கமிட்டி



பெரி.பெ.இராமனாதன் செட்டியார்
தலைவர்



கரு. சொக்கலிங்கம்



சி.வெ.லெ.சுப.சண்முகம் செட்டியார்



சி. லெட்சுமணன்

www.npnagarathar.com



வீர. சிங்காரம் செட்டியார்

இராம.முருகப்ப் செட்டியார்



பழ. இராமனாதன்
உறுப்பினர்: மலர்க் குழு



பெரி. சிதம்பரம்

www.npnagarathar.com

# மஹா அபிஷேக கமிட்டி

மு. கிருஷ்ணப்பன்

அழ. பெரிய கருப்பன்

நா. சிவனடியான்

பழ.சி.ராம.பழனியப்ப செட்டியார்
உறுப்பினர்: மலர்க் குழு



வீ.மு.வீர.முத்துக்கருப்பன் செட்டியார்



பெ.ராம.லெ.ராம.கணபதி செட்டியார்



சி.வெ.லெ.சுப.சிதம்பரம் செட்டியார்
உறுப்பினர்: மலர்க் குழு

www.npnagarathar.com

# பிராமணாள் போஜனக் கமிட்டி

பெரி. லெட்சுமணன் தலைவர்



வ.கு.பழ. திருநாவுக்கரசு
உறுப்பினர்: மலர்க் குழு



சுப. வள்ளியப்பன்



V. சுப்பிரமணியன்



சி. ஆண்டியப்பன்

www.npnagarathar.com



மு.மெ. முத்துராமன்
உறுப்பினர்: மலர்க் குழு



பழ. சிவசாமி



ராம. சிங்காரவடிவேலு

www.npnagarathar.com

# இளைஞர் குழு



ந.முத்துராமன்
தலைவர்



மு. சம்பந்தம்
நகரத்தார் சங்க செயலாளர்
உறுப்பினர்: மலர்க் குழு



சி. பழனியப்பன்



மு. காடப்பன்



மு. அண்ணாமலை
உறுப்பினர்: மலர்க் குழு

பெரி ராமசாமி

பெரி. ராசேந்திரன்

அ. முத்துராமன்

அ. சுப்பையா

www.npnagarathar.com



கௌரவ ஆலோசகர் சித்தாந்த
வித்தகர் தமிழ்க் கடல்
மலேசியத் தமிழறிஞர்
முரு.பழ. இரத்தினம் செட்டியார்



டாக்டர் எஸ். மெய்யப்பன்

பதிப்பாளும் செம்மலான் பல்கலைதேர் வள்ளலான்
பல்லோர் நண்பன்
மதிப்பாளும் நிறுவனத்தான் வளர்தமிழின்
கரையணையான் மடிமை யில்லான்
குதித்தாளும் பெருமான்தன் குனித்தவடி
மனத்தகத்தான் குறிக்கோள் மிக்கான்
உதித்தாளும் ஞாயிறுபோல் ஒளிசிறந்து மெய்யப்பன்
உயர்ந்து வாழி!

www.npnagarathar.com

# கும்பாபிஷேக மலர்க் குழு உறுப்பினர்கள்



கும. பெரி. சாத்தப்பன்



கும.கும. சுப்ரமணியம்



பழ. மீனாட்சி சுந்தரம்



ராம. வள்ளியப்பன்



அ. அண்ணாமலை



ராம. சிவசாமி



**PR.** கற்பக கணபதி



க. சொக்கலிங்கம்



பெரி. ஆ. நாகராஜன்

www.npnagarathar.com



K.M.N. மெய்யப்பன்



அ முருகப்பன்



K.M. காசி



K.M. சின்னையா



K.R. வீரப்பன்



MR. அண்ணாமலை



ஆ.பெரி. லட்சுமணன்



N. ராஜேந்திரன்



லெ. தியாகராசன்

www.npnagarathar.com



SP. தெய்வானை சுந்தரம்



M. குமரப்பன்



V. இராமநாதன்



P.R. செல்வராஜ்



PR. நாச்சியப்பன்



பழ. சிதம்பரம்



PR. இராமனாதன்



K. சிதம்பரம்



V. இராமனாதன்

www.npnagarathar.com



குமஃ. திருப்பதி



ராம. இராஜேந்திரன்



பெ.ராம.ராம. சம்பந்தம்



அ. காசி



K.R. சிதம்பரம்



SP. வைரவன்



M. இராமய்யா செட்டியார்



வெ.ஆ. பழனியப்பன்



பழ. இராமசாமி



SP. இராமநாதன்



சி.வெ.லெ.சுப. லெட்சுமணன்



S. லெட்சுமணன்



N. லெட்சுமணன்



சித.கு. குப்பான்



KM.C. ராமநாதன்



N. காசி

www.npnagarathar.com

# மலர் மலர்ந்தது

**மலர்க்குழுத் தலைவர் - பழ. சி. ராம. சிவனடியான் செட்டியார்**

நற்சாந்துபட்டி நகரச் சிவன் கோவிலுக்கு மூன்றாவது அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் நடத்த நகரத்தார் பெருமக்கள் கூடி 13.10.90-ம் தேதி முடிவு செய்தார்கள். நற்சாந்துபட்டியிலுள்ள ஐந்து கோவில் நகரத்தார்களும் சம ஈவாக தொகை எடுப்பதென்றும் அதைக் கும்பாபிஷேக செலவுக்கு வைத்துக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பெற்றது. அது தவிர திருக் கோயிலில் கோபுரம் புதுப்பித்தல், மன்றம் மராத்துச் செலவுகளுக்கு தனிப்பட்டவர் களிடம் நன்கொடையாகப் பெறுவது எனவும் முடிவு செய்யப்பெற்றது. அவைகள் இரண்டும் நாம் எண்ணியபடி சிறப்பாக நடந்தேறியது. மேற் கொண்டு திருக்குளமும் நீண்ட நாட்களாகக் கீழ்கரை சீணித்திருந்ததைச் சீர் செய்ய தொகைகள் தேவைப்பட்டது. அத்தேவையைப் பூர்த்தி செய்ய ஒரு மலர் வெளியிடுவதெனவும், அதைக் கொண்டு அப்பணியை நிறைவேற்றவும் எண்ணிய கும்பாபிஷேக குழுத் தலைவர் திரு.பெரி.அழ. அவர்கள் தன் கருத்தை திரு. அ. முத்துராமன் அவர்களிடம் சொல்ல அதற்குத் திரு. முத்துராமன் அவர்களும் அதை நல்லவிதமாகச் செய்வோம் என்று அதற்குத் தகுந்த ஒத்துழைப்புகள் தருவதாகவும் ஒப்புதல் தெரிவித்தார்கள். அதன்பின் கும்பாபிஷேக குழுவின் ஒத்துழைப்புகள் தருவதாகவும் ஒப்புதல் தெரிவித்தார்கள். அதன்பின் கும்பாபிஷேகக் குழுவின் உபதலைவர் திரு. என். முத்துராமன் அவர்கள் என்னைக் கோவையில் சந்தித்து அதற்குத் தலைவராகத் தாங்கள் இருந்து மேற்படி பணியை நிறைவேற்றித் தரவேண்டுமென்று சொன்னதும் நான் எனது நண்பர் திரு. எல். சோமு அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டதும், நேரில் உடனடியாக வந்து நல்லவிதமாகச் செய்வோமெனச் சொன்ன ஊக்கத்தைக் கொண்டு இந்த நற்பணி தொடங்கப்பெற்றது.

பின்னர்த் தமிழ்நாட்டு ஊர்களிலுள்ள நற்சாந்துப்பட்டி நகரத்தார்களை எல்லாம் மலர்க்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்து முதல் கூட்டம் 4.11.90-ம் தேதி மிகச் சிறப்பாக நடந்தது. அதில் கலந்துகொண்ட நம்மவர்கள் காட்டிய உற்சாகமும் ஆர்வமும் பெரிய ஊக்கத்தைத் தந்தது. அவரவர்களே தனது பகுதியில் தனது பொறுப்பில் விளம்பரங்களை வாங்கி அனுப்புவதாகச் சொன்னார்கள். அவைகள் சுமார் 400 விளம்பரங்களுக்குக் குறையாமல் வருமெனத் தெரிந்த பின்பு திருக்குளப் பணியுடன், திருமண மண்டபமும் கட்டலாம் என்று முடிவு செய்யப் பெற்றது. அதன்படி அனைவருக்கும் விளம்பர பாரங்கள் விநியோகிக்கப்பட்டன. மறுபடி 9.12.90-ம் தேதி மலர்க்குழுக் கூட்டம் நடந்து, அதில் எல்லாப் பகுதியிலிருந்தும் உறுப்பினர்கள் வந்திருந்தார்கள். எல்லாப் பகுதியினரும் இப்பணியில் காட்டிய ஆர்வமும், உழைப்பும் என்றும் போற்றக்கூடியது.

ஆரம்பகாலம் முதல் இந்த மலர் வெளியிடுவதற்கு டாக்டர் திரு. ச. மெய்யப்பன் அவர்கள் ஊக்கமும் உற்சாகமும் தந்துவந்தார்கள். அத்துடன் இல்லாது தனது பொறுப்பிலேயே இந்த மலர் அச்சிடுவதற்கு ஆகக்கூடிய அனைத்துச் செலவுகளையும், தான் ஒப்புக்கொள்வதாக திரு.பெரி.அள. அவர் களிடம் ஒப்புதல் கொடுத்தும் இந்தப் பணியை வெற்றிகரமாக முடிக்க அவர்களும், அவர்களது திருக்குமாரன் சோமுவும், அவர்களுடைய மணிவாசகப் பதிப்பகத்தைச் சார்ந்த திரு. குருமூர்த்தி, திரு. நாராயணன், திரு. முத்துராமன் ஆகியோர்களும் கடுமையாக ஆக்கப் பணிகளுக்கு வேண்டிய உதவி களெல்லாம் செய்ததை என்றும் மறக்க முடியாது. இப்பணி வெற்றி பெற அவரவர்கள் பகுதியில் ஒருவருக்கொருவர் தமக்கு வேண்டிய அன்பர்களிடமெல்லாம் போட்டி போட்டுக் கொண்டு நிறைய விளம்பரங்கள் சேர்த்துத் தந்துள்ளார்கள். அதன் விபரங்கள் ஊர் வாரியாகக் கீழே குறிப்பிட்டிருக்கிறேன். (முழுப்பக்க அளவில்).

www.npnagarathar.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கோயமுத்தூர் | 211 | பாபநாசம் | 4 | மாயவரம் | 6 |
| சென்னை | 100 | ஈரோடு | 27 | விழுப்புரம் | 11 |
| திருச்சி | 45 | பெங்களூர் | 11 | காரைக்குடி | 6 |
| வேலூர் | 30 | லால்குடி | 8 | சேலம் | 9 |
| மதுரை | 35 | ஆம்பூர் | 5 | திருநெல்வேலி | 10 |
| புதுக்கோட்டை | 40 | குண்டூர் | 8 | சிவகாசி | 5 |
| கும்பகோணம் | 20 | பாண்டிச்சேரி | 3 | நெய்வேலி | 7 |
| தஞ்சாவூர் | 5 | நற்சாந்துபட்டி | 14 | விருத்தாசலம் | 3 |
| திருப்பூர் | 41 | உடுமலை | 14 | கடலூர் | 2 |
| பல்லடம் | 6 | சிதம்பரம் | 8 | ஆம்பூர் | 2 |
| | | பட்டுக்கோட்டை | 2 | | |
| | | | | Total | 701 |

இவர்களுடைய பணி சிறக்க என்றும் இவர்களுடைய உழைப்பு நிலைத்து நிற்கத் தீர்மானித்தபடி கல்யாண மண்டபத்திற்கும் 4.1.91-ம் தேதி தச்சு செய்து வேலைகளும் தொடங்கியிருக்கிறோம். விரைவில் வேலைகளும் நல்லவிதமாக முடிந்துவிடும். அம்மண்டபமும் இப்பகுதியில் பொது ஜன உபயோகத்திற்கு மிகவும் பயனுள்ளதாகத் திகழும். பதிப்பாசிரியர் திரு.எல்.சோமு அவர்களும் பலரிடம் தொடர்பு கொண்டு அருமையாகக் கட்டுரைகளை எல்லாம் சேகரித்துத் தந்திருக்கிறார்கள். அதுபோல் செயலாளரும், எனது மாப்பிள்ளையுமான திரு. ஏ. முத்துராமன் அவர்களும் தனது செயல் திறனை மெய்ப்பித்திருக்கிறார்கள். எல்லாப் பகுதிகளிலிருந்து விளம்பரங்களைச் சேகரித்துத் தந்த நற்சாந்துபட்டி நகரத்தார்களுக்கும் இந்த நற்பணிக்கு உதவிய அவர்களுடைய அன்பர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இப்பணிக்குக் கும்பாபிஷேக குழுத் தலைவர் அழ. அவர்களுக்கும், அக்குழுவிற்கும் பெருந்துணையாக நின்ற ஊர் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் 4.11.90 முதல் இந்த மலர் வெளிவரும்வரை என் சிவா கார்ப்பரேஷன் மேனேஜர் நற்சாந்துபட்டி சொ. வயிரவனும், சொக்கநாதபுரம் திரு. எஸ். சொக்கலிங்கமும் முழு ஒத்துழைப்புத் தந்தது பாராட்டுதலுக் குரியது. அத்துடன் கல்யாண மண்டபத்திற்கு அறைகள், தளம், எலக்ட்ரிக் முதலிய தனித் தனியாகவுள்ள அயிட்டங்களை நம்மூர் தொழில் செய்யும் நகரத்தார்களும், வேலையிலிருக்கும் நகரத்தார்களும், நல்ல மனது படைத்தவர்களும் செய்து தருவதாக மனமுவந்து சொல்லியிருப்பதாலும் சிலர் கட்டிட சாமான்களை அசல் விலைக்கே நற்சாந்துபட்டியில் டெலிவரி தருவதாகச் சொல்லி இருப்பதாலும், சிலர் மனமுவந்து ஒத்துழைப்பைத் தருவதாகச் சொல்லியிருப் பதாலும், கல்யாண மண்டபம் வெகுவிரைவில் நல்ல முறையில் அருள்மிகு சிவகாமி அம்மாள் சிதம்பரீஸ்வரர் கருணையால் நிறைவுபெறு மென உறுதியாக நம்புகிறேன்.

www.npnagarathar.com

# திருமயம் தொகுதி

(எல். சோமு)

நமது தொகுதி குறித்து சில செய்திகளை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கம். வேறு அரசியல் கவர்ச்சிகளால் இக்கட்டுரை எழுத முற்படவில்லை.

தமிழகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் நான் போய் வந்திருக்கிறேன். அங்கு ஏற்பட்டிருக்கும் வளர்ச்சிகளையும், முன்னேற்றங்களையும் நன்கு தெரிந்து கொள்ளும் வாய்ப்பினையும் பெற்றவன். அது தவிர சவுத் இந்தியாவின் மான்செஸ்டர் என விளங்கும் கோவையில் வசித்து வருபவன். அதன் வளரச்சிகளையும் கண்டு பெருமைப் படுபவன்.

அரசு பின்தங்கிய பகுதிகளை அதன் வளர்ச்சி கருதி பின்தங்கிய பகுதியாக (குறிப்பிட்ட பகுதிகளை) அறிவிப்பதை தனது கொள்கையாகக் கொண்டிருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு அவினாசி தாலுக்கா பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பெற்றது. அதன்பிறகு அத்தொகுதியில் எங்கு பார்த்தாலும் புதுப்பது தொழிற்சாலைகள் ஏற்பட்டன. அது தவிர தொழில் அதிபர்கள் போட்டி போட்டுக் கொண்டு அப்பகுதியில் இடங்களை வாங்கினார்கள். முன்பு ஏக்கர் ஒன்று 500 ரூபாயாக இருந்த பூமியின் விலை அதிகபட்சமாக ஏக்கர் ஒரு லட்சம் ரூபாய் வரை விற்றது. இப்பகுதியில் வேலை இல்லா திண்டாட்டம் மாறி வேலைக்கு ஆள் தேடும் நிலை ஏற்பட்டது.

பின்னர் அப்பகுதி பின்தங்கிய பகுதியிலிருந்து மாற்றப்பெற்று, பொள்ளாச்சி பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பெற்றது. அதேபோல் அப்பகுதியும் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது. பின்னர் அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் முயற்சியில் பல்லடம் பகுதி பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப் பெற்றது. அது அரசினால் பெரிய விளம்பரங்களும் கொடுத்து எல்லோராலும் கவனிக்கத்தக்க தகுதியைப் பெற்றிருக்கிறது.

நமது திருமயம் தொகுதி பல ஆண்டுகளுக்கு முன்னரே பின்தங்கிய தொகுதியாக அறிவிக்கப்பெற்றிருந்தும் எந்தத் துறையிலும் வளர்ச்சி அடையாதது மிகவும் வருந்தத்தக்க செய்தி. புதுக்கோட்டை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் மிகக் குறைவான நிலையில் சுமார் 371 தான் இருக்கிறது. அதில் திருமயம் தொகுதியில் சுமார் 40 சிறு தொழிற்சாலைகள் தான் இருக்கிறது. இந்த நிலை ஏன்? மக்களின் முயற்சிகள் இல்லையா அல்லது அரசின் கவனத்தை ஈர்ப்பதற்கு தகுதியான ஆட்கள் இல்லையா அல்லது தொழிலாளிகளின் ஒத்துழைப்புகள் கிடைப்பதில் சிரமங்கள் இருக்கிறதென தொழில் அதிபர்கள் கருதுகிறார்களா என்பதை பற்றியெல்லாம் சிந்திக்கும்போது அனைத்து வசதிகளும் இருந்தும் ஒரு சாபக்கேடே இத்தொகுதி வளர்ச்சி பெறவில்லை. அரசும் இத்தொகுதியை சரியாகக் கவனிப்பதில்லை. சமீபத்தில் புதுக்கோட்டைக்கு வர இருக்கும் 80 கோடி மூலதனத்தை கொண்டு, டிஸால்விங் பல்ப் மற்றும் விஸ்கோஸ் ஸ்டேபிள் பைபர் தொழிற்சாலை ஒன்று டிட்கோ ஆதரவில் அமைக்கப்பட்டு வருகிறது. சிப்காட் (SIPCOT) ஆதரவில் 293 லட்சம் முதலீட்டில் ஆரம்பிக்க இருக்கும் ஹார்டு போர்டு (Hard Board) தொழிற்சாலையும் 200 டன் உற்பத்தி யாகியிருக்கும் வனஸ்பதி தொழிற்சாலையும் இப்பகுதிக்கு வந்ததாகத் தெரியவில்லை. அதுபோல் பெரிய அணைக்கட்டுத் திட்டங்களும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மறு மலர்ச்சிக்கான திட்டங்கள் ஏதும் இல்லை.

நூல் மில்களுக்கு ஏற்பட்டிருக்கும் பெரிய கிராக்கியை கொண்டு சமீபத்தில் மூடிக்கிடந்த

www.npnagarathar.com

நமன சமுத்திரம் மில்லையும் கோவை நண்பர் இராமகிருஷ்ண மிஷன் குருப் காரர்கள் திறந்திருக்கிறார்கள். இந்நிலையில் மக்கள் தமது முயற்சிகளில் எந்த அளவு முயற்சிகள் எடுத்துக்கொள்ளலாம் என்பது பற்றி சற்று சிந்திப்போம்.

கோவையில் மோட்டார் உற்பத்தி, கிரைண்டர், பவுண்டரி, கோழி வளர்ப்பு, பட்டுப் பூச்சி வளர்ப்பு, பிளாஸ்டிக் சம்பந்தப் பட்ட தொழில்கள் அனைத்தும் குடிசைத் தொழிலாகவே இப்பகுதி கிராமங்களில் ஒவ்வொரு தோட்டங்களிலும், சிறிய கூடங்களிலும் மிக சகஜமாக உற்பத்தி செய்கிறார்கள்.

இங்கு திருப்பூர், சோமனூர், பல்லடம் ஆகிய பகுதிகள் மிக உன்னத முறையில் வளர்ந்திருக்கிறது. ஏற்கெனவே இப்பகுதிகள் நம் திருமயம் தொகுதி போல் விவசாயத்தில் வானம் பார்த்த பூமியாகவே இருந்து வந்தது. அவைகளை நம்பி இருப்பதில் எந்தவித பிரயோஜனமும் இல்லை என்று உணர்ந்த மக்கள் வீட்டுக்கு வீடு, தோட்டத்திற்குத் தோட்டம் விசைத்தறிகளும், பட்டுப்பூச்சி வளர்ப்பும், கோழி வளர்ப்பும் ஆரம்பித்து தன்நிறைவைப் பெற்றிருக்கிறார்கள். நமது செட்டிநாட்டில் மாடு கட்டும் கட்டுத்துறை போன்றும், தூசி படிந்திருக்கிற இரண்டாம் கட்டுக்கள் போன்றும், கேள்வி கேட்பாரற்று கிடக்கும் வீடுகள் போன்றும் இப்பகுதியில் இருந்தால் நிறைய சிறு சிறு தொழில்களாக ஆரம்பித்திருப்பார்கள் அல்லது பவர்லூம் போட்டிருப்பார்கள். இப்பகுதியில் தற்சமயம் வேலை ஆட்களுக்கு முன் பணம் கொடுத்து தான் புதிதாக ஆட்கள் நியமிக்கக் கூடிய நிலையில் இருக்கிறது.

வேலைக்கு போகிறவர்கள் குறைந்த பட்சம் மாதம் ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாயிலிருந்து ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் வரை ஊதியம் பெறுகிறார்கள். முதலீடு செய்பவர்கள் மூவாயிரத்திலிருந்து பதினைந்தாயிரம் ரூபாய் வரை பயன் பெறுகிறார்கள்.

திருப்பூர் பனியன் உற்பத்தியில் ஆயிரம் கோடி ரூபாய் ஏற்றுமதியை நோக்கி வீர நடை போட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு முறை மதிப்பிற்குரிய பொள்ளாச்சி டாக்டர் என். மகாலிங்கம் அவர்கள் ஈாயவரம் வந்திருந்தார்கள். அவர்கள் செட்டி நாட்டிலுள்ள வீடுகளைப்பற்றி சொல்லும் போது இந்தப் பெரிய வீடுகளையே முதலீடாகக் கொண்டு அரசு, வங்கிகளின் உதவிகளைப் பெற்று இப்பகுதி மக்கள் சிறு சிறு தொழில்களாக ஆரம்பித்து மகிழ்ச்சியாக வாழலாம் என ஆதங்கப்பட்டார்கள். இக் கருத்தையே கோவை நகரத்தார் சங்கத்திலும் குறிப்பிட்டார்கள்.

நம் பகுதியில் நிறைய கருங்கற்கள் இருக்கிறது. அவைகளைக் கொண்டு இன்னும் விரிவாக பல தொழில்கள் செய்யலாம். அதே போல் நம் பகுதிக்கு அருகாமையில் புதுக்கோட்டை, திருச்சி, மதுரை போன்ற பெரிய ஊர்கள் இருப்பதால் மூலப்பொருள்கள் வாங்குவதற்கும், உற்பத்திகளை விற்பனை செய்வதற்கும் எந்தவித சிரமங்களும் இருக்காது.

நமது தொகுதி பின்தங்கிய தொகுதியாக இருப்பதால் அரசினால், புதிதாக ஆரம்பிக்கும் தொழில்களுக்கு கீழே விவரிக்கப்பட்ட சலுகைகள் கிடைக்கின்றன.

அரசு ஆணை எண் : 51 நாள் : 27.1.88

தமிழகத்தில் மத்திய அரசின் மானியம் பெறாத கூடுதல் பின்தங்கிய தாலுகாக்களில் துவங்கப்படும் சிறு தொழில்களுக்குத் திட்டத்தின் மதிப்பில் 15% மாநில அரசின் மானியத்தொகையாக வழங்க அரசு வழி செய்துள்ளது.

அரசு ஆணை எண் : 306 நாள் : 22.5.89

பின்தங்கிய தாலுகாக்களில் துவங்கப்படும் நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு முதலீட்டுத் தொகையில் 10% அல்லது ரூ 15 இலட்சம் இதில் எது குறைவோ அதை மாநில அரசின் மானியமாக வழங்க அரசால் வழி செய்யப்பட்டுள்ளது. சிப்காட் போன்ற தொழில் வளாகங்களில் ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கும் இது பொருந்தும்.

அரசு ஆணை எண் : 307 நாள் 22.5.89

www.npnagarathar.com

தொழிற்சாலைகளுக்கென உயர்/குறைந்த அழுத்த மின் உபயோகிப்பாளர்கள் புதிய ஜெனரேட்டர் வாங்குவதற்காக அதன் மதிப்பில் 15% அரசின் மானியமாக வழங்கப்படும்.

*அரசு ஆணை எண்: 423 நாள் : 7.7.89*

பின்தங்கிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப் படும் தொழிற்சாலைகளுக்கு மின் கட்டணங்களில் சலுகை அளிக்கப்படுகிறது. விற்பனை வரியைக் கடனாகக் கருதி அதற்கு வட்டி சேர்க்காமல் தொழில் துவங்குபவரை அதன் மூலம் ஊக்கப்படுத்தப்படுகிறது.

*அரசு ஆணை எண் : 563 நாள் : 11.8.89*

திட்டம் துவங்குவதற்கு முன்பு சம்பந்தப் பட்ட மாவட்ட தொழில் மையத்திடம் மனு செய்து முதல் ஐந்து ஆண்டுகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை, துவங்கிய ஆறாவது ஆண்டில் இருந்து பத்தாவது ஆண்டு வரை செலுத்துவதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது.

*அரசு ஆணை எண் : 1196 நாள் : 16.11.88*

அரசால் குறிப்பிடப்பட்ட தொழிற் சாலைப்பகுதிகளில் ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டிற்குக் குறைவாகத் துவங்கப்படும் தொழில் முதலீட்டாளர்கள் பல்வேறு நிறுவனங்களின் முன் ஒப்புதல் பெறாமல் மாவட்டத் தொழில் மையத்திடம் இருந்து பச்சை அட்டை பெற்றுத் தொழில் துவங்கலாம்.

*அரசு ஆணை எண் : 500 நாள் : 14.5.90*

புதுக்கோட்டை. சிப்காட் தொழில் வளாகத்தில் ஆரம்பிக்கப்படும் புதிய தொழிற்சாலைகளுக்கு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு விற்பனை வதி நிலுவையில் இருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது.

இவ்வளவு சலுகைகள் திருமயம் தாலுக்காவிற்கு அறிவிக்கப்பட்டும் தொழில் முதலீட்டாளர்கள் புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்க முன்வர வில்லை. இந்நிலையை மாற்றித் திருமயம் தாலுக்காவை தொழில் முன்னணி தாலுக்காவாக மாற்ற முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

நம் தொகுதிக்கு அரசின் சலுகைகளும் கிடைக்கிறது. தொழில்கள் ஆரம்பிக்க இடமும், வீடு வசதிகளும் இருக்கிறது. நிறைய படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் பல தொழில்களிலும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அது தவிர, அரசு சம்பந்தப்பட்ட நிர்வாகங்களிலும், வங்கி சம்பந்தப்பட்ட நிர்வாகங்களிலும் இருந்து வருகிறார்கள். அவர்களின் உதவிகளையெல்லாம் கொண்டு முதலில் எந்தவித ரிஸ்க்கும் எடுத்துக் கொள்ளாமல் மற்ற மாவட்டங்களில் சீராக நடந்து வரும் தொழில்களை தேர்வு செய்து அவைகளை இங்கு துவக்கலாம்.

இப்பகுதியில் மழை இல்லை. கனிப்பொருள்களும் இல்லை. அரசும் பெரிய தொழில்களை ஆரம்பிக்கவில்லை. இந்நிலையில் நம் முயற்சியில் அரசினால் அறிவிக்கப்பட்ட சலுகைகளைக் கொண்டு ஊக்கமுடன் சிறு தொழில்களை துவக்கலாம். திருக்குடந்தை நன்னீராட்டு மலர்க்குழுத் தலைவர் திரு சிவ. அவர்களும் ஒரு பையனை தன்னிடம் பயிற்சிக்கு அனுப்பினால் இரண்டு, மூன்று ஆண்டில் அந்தப் பையனை ஒரு கடைக்கு முதலாளியாக ஆக்கி விடுவதாக உறுதியுடன் சொல்கிறார்கள். திரு. சிவ. சொல்வது போல் நம் தொகுதி குறித்து எனக்கு ஒரு ஆசை இருக்கிறது.

நான் கோவை நகரத்தார் சங்கத்திற்கு செயலாளராகவும், தலைவராகவும் இருந்து பெரும் பணிகள் செய்திருக்கிறேன். அதே போல் மாவட்ட பான் புரோக்கிங் அசோசியேஷன் தலைவராக இருந்த போது சிக்கித் தவித்த பறவைகளெல்லாம் சிறகொடிந்து போகாமல் தப்பிப் பறந்த கதைகளும் உண்டு. கவியரசர் கண்ணதாசன் புகழ் பரப்பும் கழகங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பெரும் பணிகள் பல ஆற்றி வருகிறேன். சன்மார்க்க சங்க மாவட்டத் தலைவராக இருந்து அன்பே வடிவாகக் கொண்ட அருட்பிரகாச வள்ளலாரின் கொள்கைகளை பரப்பி வருகிறேன். வடலூரில் கோவை மாவட்ட சன்மார்க்க சங்கத்தின் தங்கும் விடுதியாக கருணை இல்லத்தை பெரிய

www.npnagarathar.com

அளவில் உருவாக்கியதுடன் அதன் அறக்கட்டளையின் ஆயுட்தலைவராக இருந்து வருகிறேன். நான் கோவை வர்த்தக சபையின் உபதலைவராக இருந்த போது தான் அனைவராலும் வியக்கத்தக்க பொன்விழா நடந்தது. பல திருக்குட நன்னீராட்டுகளிலும் கலந்து செயலாற்றும் பேரினைப் பெற்றிருக்கிறேன். கம்பன் கழக இணைச் செயலாளராகவும் மற்றும் கோவையிலுள்ள கழகங்களுடனும் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கிறேன். எனது சோமு பதிப்பகம் பயன் பெறத்தக்க பல சிறிய நூல்களை வெளியிட்டு வருகிறது. இத்தனை சிறப்புப் பணிகளை செய்திருக்கும் நான் நமது ஊரில் எம்.ஏ.எம். அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட ஐயப்பன் கோவிலை கட்டுவதும், இப்பகுதியில் வீடுகள் தோறும் சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கு வேண்டிய உதவிகளை செய்வதையும் முக்கிய இலட்சியமாகக் கொண்டிருக்கிறேன். மற்ற தொகுதிகள் போல் நம் தொகுதியும் தன்நிறைவு பெற வேண்டும். அதற்கு ஸ்ரீசிவகாமி அம்பாள் உடனாகிய சிதம்பரேஸ்வரர் உறுதுணை இருக்கப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

---


குடமுழுக்கு விழாமலர் சிறப்புற வாழ்த்துகிறேன்

அடுத்தவர்களுக்கு உதவி செய்யுங்கள். உதவி செய்வதால் நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.
இதனால் நம் உடம்பில் வியாதி ஏற்படுவதில்லை.:- கலிபோர்னியாவிஞ்ஞானி
ஒவ்வொரு மனிதனும் ஆழ்நிலை தியானம் அவசியம் கற்றுக் கொள்ளவேண்டும்.
கற்றுக்கொண்டால் வாழ்க்கையில்
பிரச்சினைகளே ஏற்படாது

வேலைவாய்ப்பு

வேலை கிடைக்கவில்லையா, வருமானம் போதவில்லையா? நீங்கள் நிச்சயம் ஒரு தொழிலை ஆரம்பித்து நிர்வாக இயக்குனர் ஆகி மாதம் ரூ 1000 to 3000/= வரை சம்பாதிப்பதற்கு வழிவகை சொல்லி ஆரம்பித்துக் கொடுக்கப்படும் விபரங்களுக்குக் கீழ்க்கண்ட முகவரிக்கு ரூ 30/= மணியார்டர் அல்லது டிராப்ட் அனுப்பி வைக்கவும்.

**M. Raman**
Social Worker
9, Market Farm 4th Lane,
Avoor Muthiah Street,
New Washermenpet,
Madras - 600 081.

# பங்கு மார்க்கெட்
# நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்

A. முத்துராமன் B.Sc., (Ag)

கடந்த ஐந்து ஆண்டு காலமாக குறிப்பாக சென்ற ஆண்டு முழுவதும் , பங்குச் சந்தையில் முதலீடு செய்வோரின் தொகை மிக வேகமாய் அதிகரித்துள்ளது. நிறுவனங்களைப் பற்றியோ, அவற்றின் பொருளாதார நிலை பற்றியோ, அவைகளின் நடவடிக்கைகள் பற்றியோ அதிகம் தெரியாதவர்கள் கூட, பங்குச் சந்தையில் ஈடுபாடு காட்டத் தொடங்கியுள்ளார்கள். காரணம், குறைந்த காலத்தில் அதிகமான இலாபம் பெற முடியுமென்ற நோக்கம்.

ஒரு நாட்டின் பொருளாதார நிலை முன்னேற்றத்திற்குத் தொழில் துறை முன்னேற்றம் அவசியமானவற்றுள் ஒன்று. தொழில்துறை சிறக்கப் பொருள் முதலீடு தேவை.

ஒரு தொழிலைத் தொடங்கும் போது அதற்குத் தேவையான பொருள் முதலீட்டை ஒருவர் தம் சேமிப்பிலிருந்தோ அல்லது வேறு சிலரைப் பங்குதாரர்களாகக் கொண்டோ பெறலாம். பெரிய நிறுவனங்கள் தொடங்க பொருள் முதலீடு அதிக அளவில் தேவைப் படும். அப்போது அந்த நிறுவனங்கள் அரசாங்க அனுமதியுடன் தேவையான பொருளை உற்பத்தி செய்வதற்கான முதலீட்டைப் பொது மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். இந்நிறுவனங்களில் முதலீடு செய்ய விரும்பும் எவரும் முதலீடு விகிதத்தில் பங்கு (share) பெற முடியும். பங்குகளின் பயன் யாது?

இவ்வாறு பெறப்படும் பங்குகளின் மூலம் இரண்டு வழிகளில் பயன் பெறலாம். ஒன்று, இந்தப் பங்குகளின் மீது நிறுவனத்தின் லாபம் முதலீட்டு விகிதத்தில் பங்குத் தொகையாக (Dividend) பங்குதாரர்களுக்கு (Share Holders) அளிக்கப்படும். மேலும் இந்தப் பங்குகளின் மதிப்பு பங்கு மார்க்கெட் (Share Market) நிலவரப்படி கூடவோ குறையவோ செய்யும். இந்த நிலவரப்படி பங்குதாரர்கள் பங்குகளை விலை குறைந்த போதும், விலை கூடும் போதும் வாங்கி விற்று இலாபம் பெறலாம்.

**பங்குகளை எவ்வாறு பெறலாம்?**

பங்குகளை இரண்டு விதங்களில் பெறலாம். புதிய நிறுவனங்கள் தொடங்கப்படும் போது அல்லது ஏற்கனவே இயங்கும் நிறுவனங்களுக்கு அதிக முதலீடு தேவைப்படும் போது, தினசரிகளில் விளம்பரம் செய்யப்படும். அப்பொழுது பொதுமக்கள் பங்கு விண்ணப்பத்துப் படிவங்களை அந்த நிறுவனங்களிலிருந்து நேரடியாகவோ அதற்கென நியமிக்கப்படும் வங்கிகள் மூலமாகவோ அல்லது பங்கு மார்க்கெட் தரகர்கள் (Share Brokers) மூலமாகவோ பெறலாம். இந்தப் படிவங்களில் தேவைப்படும் பங்குகளின் எண்ணிக்கையையும் மற்றத் தேவையான விவரங்களையும் பூர்த்தி செய்து அதற்கான தொகைக்கு காசோலையும் இணைத்து அனுப்ப வேண்டும். நிறுவனங்கள் தேவைக்கு அதிகமாக விண்ணப்பங்கள் பெற்றால் குலுக்கல் முறையில் பங்குகளை அளிக்கும். விண்ணப்பம் செய்த மூன்று மாதங்களில் பங்குகளையோ அல்லது பங்குகள் பெறத் தவறினால் விண்ணப்பத் தொகையைக் காசோலையாகவோ பெறலாம். இதைத் தவிர பங்குகளை பங்கு மார்க்கெட்டிலிருந்தும் வாங்கலாம். மேலும் பங்குகளை அவற்றின் பங்கு மார்க்கெட் நிர்ணயிக்கும் விலையில் பங்கு மார்க்கெட்டிலிருந்து வாங்கலாம். இவ்வாறு வாங்கப் பங்கு மார்க்கெட் தரகர்களின் உதவி தேவை. பங்குகளை வாங்குவது எப்படி?

www.npnagarathar.com

பங்குகளை வாங்க முடிவு செய்யும் முன் அந்த நிறுவனத்தின் செயல்திறன், பொருளாதார நிதி நிலைமை, சொத்துவிபரம், அந்த நிறுவனத் தயாரிப்புகளின் மார்க்கெட், நிர்வாகக் குழுவின் திறன் இவற்றை ஆராய வேண்டும். புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கும் நிறுவனங்களில் முதல் ஓரிரண்டு ஆண்டுகள் பொருள் இழப்பு வரலாம். ஆனால் தொடர்ந்து வந்து கொண்டிருந்தால் அவற்றை வாங்குவதில் லாபம் இல்லை. நிறுவனங்களின் நிதி நிலைமை பற்றித் தெரிவிக்கும் நிதி அறிக்கைகளைப் (Balance Sheets) படிக்கவும், அவற்றைப் புரிந்து கொள்ளவும் வேண்டியது பங்குச் சந்தையில் முதலீடு செய்பவர்களுக்கு இன்றியமையாதது ஆகும்.

ஒரு நிறுவனத்தின் (Balance Sheet) நிதி அறிக்கையில் கீழ்க்கண்டவை காணப்படும்.

- நிறுவன நடத்துனர்களின் அறிக்கை Directors Report
- கணக்காய்வாளர்களின் அறிக்கை Auditors Report
- சொத்துக்களும் கடன்களும் Assets & Liabilities
- லாப நஷ்டக் கணக்கு Profit & Loss A/c
- குறிப்புகள் Notes.

ஒரு நிறுவனத்தின் பங்குகளை வாங்கும் முன்னர் மேற்கூறிய அறிக்கைகளைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். சொத்துக்கள் கடன்கள் பற்றிய அறிக்கையில் அந்த நிறுவனம் ஏதாவது நஷ்டம் அடைந்திருக்கின்றதா, அந்த நஷ்டம் அந்த நிறுவனத்தின் முதலீட்டுடன் ஒப்பிடும் பொழுது எந்த அளவில் இருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும். கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும் பொழுது இந்த ஆண்டில் நிறுவனம் எப்படிச் செயல்பட்டிருக்கின்றது என்பதையும், பங்குதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இருப்புத் தொகை (General Reserves) எந்த நிலையில் இருக்கின்றது என்பதையும் பார்க்க வேண்டும்.

சில நிறுவனங்கள் ஆண்டுக்கு ஆண்டு தேய்மான விகிதத்தை (Percentage of Depreciation) மாற்றிக் கொண்டே இருக்கும். எனவே தேய்மானம் மற்றும் வரிக்கு முந்திய நிலையில் உள்ள லாபம் என்ன என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

சில நேரங்களில் பின் குறிப்புகள் Note என்ற பெயரில் வெளிப்படும் உண்மைகள் மற்ற அறிக்கைகளைக் காட்டிலும் முக்கியமானவையாக இருக்கும். அவற்றில் நிறுவனத்தைப் பாதிக்கக் கூடிய அறிக்கைகள் இருக்கின்றனவா என்பதையும் பார்க்கவேண்டும்.

நிதி அறிக்கைகள் கடந்த கால நிலையைத் தெரிவிப்பது ஆகும். ஆனால் ஒரு பங்கை வாங்கும் பொழுது அந்த நிறுவனத்தின் வருங்கால நிலை (Future) மிக இன்றியமையாததாகும். அவற்றைச் செய்திகள் மூலம் மட்டுமே அறிந்து கொள்ள இயலும்.

இவை தவிர பங்குச் சந்தையில் விலைகளின் ஏற்ற இறக்கம் பல காரணங்களால் நிகழும்:

- பருவ மழை நிலை
- அரசாங்கத்தின் கொள்கைகள் அறிவிப்புகள்
- அண்டை நாடுகளுடனான போர் அல்லது சமாதானம்
- உலக அரங்கிலுள்ள நெருக்கடிகளும் அதனால் நம் நாட்டுக்கு ஏற்படும் விளைவுகளும்.

இவற்றைக் கவனித்துப் பங்கு முதலீடு செய்யும் பொழுது அது முதலீடு ஆகின்றது. இல்லாவிடில் அது தெரியாத ஒரு விளையாட்டில் ஈடுபடுவது போலாகின்றது.

இது ஒரு சுட்டிக் காட்டும் கட்டுரையே தவிர விளக்கமான ஒன்றன்று.

www.npnagarathar.com

# மக்கள் நலவாழ்வில் மருத்துவ விஞ்ஞானத் தொழில் நுட்ப மறுமலர்ச்சியின் பங்கு

டாக்டர் M. அண்ணாமலை, B.Sc., M.D., D.M.R.D., D.M.R.T.,

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழி. வந்தபின் நோய்க்கு மருத்துவம் செய்வதைவிட வருமுன் காப்பதே மேலாம். ஆயினும் மனித வாழ்க்கையில் எண்ணற்ற நோய்களைக் காண்கிறோம். ஆதலால் இந்நோய்களை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து அதற்குரிய சிகிச்சை செய்வது மக்கள் நலவாழ்வுக்கு இன்றியமையாதது.

கடந்த பத்து வருடங்களில் மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சியிலும் அவை சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப ஆய்வுகளிலும் மிக மகத்தான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதனால் மிகவும் முக்கியமான (Equipments) உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவைகள் மக்களுக்கு வியாதிகளைக் கண்டுபிடிக்க உபயோகப்படுத்தப்படுகின்றன. இந்த உபகரணங்களில் (Equipments) கீழ்க்கண்ட முக்கியமானவற்றைப் பற்றி ஒரு சில வரிகள் தெரிந்து கொள்வோம்.

1. எக்ஸ்ரே எகியுப்மெண்ட் 2. அல்ட்ரா சவுண்ட் 3. C.T. ஸ்கான் 4. M.R.I ஆகிய நான்கும் மூலாதாரமானவை.

**எக்ஸ்ரே (Xray)**

1897-ல் ஸர் வில்லியம் ரோன்ட்ஜன் எக்ஸ்ரே கண்டு பிடித்தவுடன் மருத்துவத் துறையில் எக்ஸ்ரே பயன் படுத்தப்பட்டு வந்துள்ளது. ஆயினும் கடந்த 10 வருடங்களில் இத்துறையில் மிக மகத்தான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதில் கம்ப்யூடரின் பங்கும் உள்ளது. இவற்றை உபயோகித்து இருதய வியாதிகளையும் மூளையில் ஏற்படும் வியாதிகளையும் கண்டுபிடித்துவிடலாம்.

மாரடைப்பு நோய் என்பது நம் எல்லாருக்கும் பரிச்சயமான வியாதி. இந்த வியாதி ஏற்படும் மக்களில் 100 க்கு 70 பேர் தான் காப்பாற்றப்படுகின்றனர். ஆதலால் இந்நோய் வருமுன் காப்பது சாலச் சிறந்தது. அதற்கும் உணவுக் கட்டுப்பாடு மிகவும் முக்கியம். கொழுப்புச்சத்து உள்ள உணவுகளை அகற்றி வாழ்க்கையில் பரபரப்பு (Tension) இல்லாமல் பார்த்துக் கொண்டால் இந்நோயைத் தவிர்க்க முடியும்.

இலேசாக மார்புவலியோ அல்லது சிறிது நடந்தபின் நெஞ்சில் ஏற்படும் வலியோ இந்நோய்க்கு ஆரம்பமாக இருக்க முடியும். இவ்வியாதி இருதயத்துக்கு ஓடும் இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளினால் வருகிறது. இவ்வகை அடைப்புகள் Atheromatous Plaqueu எனப்படும். இரத்த உறைவுகளாலும் (Blood Clots) ஏற்படலாம். இப்போது கிடைக்கும் Modern Xray Equipments மூலம் இவற்றை துல்லியமாகக் கண்டுபிடித்துவிடலாம். இவை CATH Lab O.S.A. எனப்படும் எக்ஸ்ரே உபகரணங்கள் ஆகும்.

மேற்குறிப்பிட்ட Equipments இன் உதவியுடன் இருதயத்துக்குச் செல்லும் இரத்தக் குழாய்களுக்குள் மருந்து செலுத்தி அவற்றைப் படம் பிடித்து அடைப்புகளை நிர்ணயித்து சிகிச்சை செய்துவிடலாம். இவ்விதச் சிகிச்சைகள் ANGIOPLASTY, CORONARY BY PASS SURGERY எனப்படும். இவற்றால் வாழ்க்கையின் முழுப்பகுதியும் மனிதனுக்குக் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

www.npnagarathar.com

# அல்ட்ரா சவுண்ட் (ULTRA SOUND)

1950-ல் கண்டு பிடிக்கப்பட்டு 1960-ல் இருந்து மருத்துவத் துறையில் உபயோகப்படுத்தப் பட்டு வந்தாலும் கடந்த 10 வருடங்களில் இத்துறையில் மிகவும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

B MODE ஸ்கான் என்பது கண்டுபிடிக்கப் பட்டு இருதயத்துறை, பிள்ளைப் பேறு மருத்துவம், பொது மருத்துவம் ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படுகிறது. இதில் ஒலிக்கதிர்களை உடம்பில் செலுத்தி அதில் இருந்து எதிர் நோக்கிவரும் பிம்பங்களைப் படம் பிடித்து வியாதிகளைக் கண்டு பிடிக்கிறோம்.

இதனால் உடம்புக்கு எந்த விதமான தீங்கும் இல்லை. அத்துடன் இதை 'ஏழைகளின் ஸ்கேன்" (Poor Man's Scan) என்றும் சொல்கிறோம். ஏனெனில் இதற்கு ஆகும் சிலவு மிகவும் குறைவுதான்.

இதனால் பிள்ளைப்பேறு மருத்துவத் துறையில் முக்கியமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த ULTRA SOUND Equipmentஐ பிள்ளைப் பேறு மருத்துவரின் மூன்றாவது "கை" என்று சொல்கிறோம். ("3rd Hand of Obstetrician")

இதனால் கர்ப்பம் ஏற்பட்டுள்ளதா என்று நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். பின்னர் கரு வளர்ச்சியில் ஏற்படும் முன்னேற்றங்களை அவ்வப்போது தெரிந்து கொள்ளலாம். அத்துடன் என்ன குழந்தை என்றும் தெரிந்து கொள்ள முடியும்.

வயிற்றுக்குள் உள்ள கட்டியான உறுப்பு களில் (SOLIDORGANS) ஏற்படும் வியாதிகளை சுலபமாய்க் கண்டு பிடிக்க முடியும். முக்கியமாக கல்லீரல், மண்ணீரல், பித்தப்பை, கருப்பை, சிறுநீரகம் போன்ற உறுப்புகளில் ஏற்படும் நோய்களைச் சுலபமாய்க் கண்டு கொள்ளலாம். முக்கியமாகக் கல்லீரலில் ஏற்படும் கட்டிகளையும் பித்தப்பையில் உண்டாகும் கற்களையும் நொடியில் பார்த்து விடலாம்.

அடுத்து CT-SCANஎனப்படும் உபகரணம். இதில் நுண்ணிய X-RAY கதிர்களை உடம்பில் செலுத்தி கம்ப்யூடர் மூலம் அனலைஸ் செய்து படம் பிடித்து வியாதிகளைக் கண்டு பிடிக்கலாம்.

இம்முறையில் தலைக்குள் மூளையில் ஏற்படும் வியாதிகளையும் வெகு விரைவில் கண்டு பிடிக்கலாம். இதனால் நரம்பு அறுவை சிகிச்சையில் மிகுந்த முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது.

WHOLE BODY SCAN என்னும் உபகரணத் தின் உதவியால் வயிற்றில் உள்ள எல்லா உறுப்புகளிலும் ஏற்படும் வியாதிகளைத் துல்லியமாய்க் கண்டு பிடிக்கலாம்.

## MAGNETIC RESONANCE IMAGING

கடைசியாக MRI எனப்படும் உபகரணம். இதில் காந்த சக்தியை உபயோகப் படுத்திப் பிம்பங்களைப் படம் பிடித்து உடம்பின் கூறுகள் ஆராயப் படுகிறது. இதன் விலை சுமார் 3 கோடி ரூபாய்கள்.

இதனால் உடம்பில் உள்ள எந்தப் பாகத்தில் இருக்கும் வியாதிகளையும் மிகவும் ஆரம்பத்திலேயே கண்டு பிடிக்க முடியும். முக்கியமாக மூளை, முதுகுத்தண்டு, எலும்புகள், வயிறு, மார்பு போன்ற பகுதிகளில் உபயோகப் படுத்தப்படுகிறது.

மருத்துவ விஞ்ஞான உபகரணங்கள் இன்னும் பல இருப்பினும் நாம் முக்கியமான மேற்கண்ட 4 உபகரணங்களைப் பற்றி ஆராய்ந்தோம். மேற் சொல்லப்பட்ட X-RAY, ULTRA SOUND, CT SCAN, MRI ஆகிய உபகரணங்களின் உதவியால் உடம்பில் பல பாகங்களில் ஏற்படும் வியாதிகளை ஆரம்பத்திலேயே கண்டு பிடித்து அதனால் குணப்படுத்தச் சாத்தியமாகிறது. இவைகளைக் கண்டுபிடித்து மக்களுக்கு அர்ப்பணித்த விஞ்ஞானிகளுக்கும் தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும் நன்றி செலுத்துவோமாக.

www.npnagarathar.com

# சிவஞான போதம்

### கடவுள் வாழ்த்து

### விநாயக வணக்கம்

கல்லால் நிழன்மலை வில்லார் அருளிய
பொல்லா ரிணைமலர் நல்லார் புனைவரே

### அவையடக்கம்

### நேரிசை வெண்பா

தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை உடைமை
எமையிகழார்—தம்மை உணரார் உணரார்
உடங்கியைந்து தம்மில் புணராமை கேளாம் புறன்.

### பொதுவதிகாரம்

பிரமாணவியல்

### முதற் சூத்திரம்

பதி உண்மை

அவன் அவள் அதுஎனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே
ஒடுங்கிமலத் துளதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர்

### இரண்டாஞ் சூத்திரம்

பாச உண்மை

அவையே தானே யாயிரு வினையிற் போக்கு வரவு
புரிய ஆணையின் நீக்க மின்றி நிற்கு மன்றே.

### மூன்றாஞ் சூத்திரம்

பசு உண்மை

உளதில தென்றலின் எனதுட லென்றலின் ஐம்புலன் ஒடுக்கம்
அறிதலின் கண்படில் உண்டிவினை இன்மையின்
உணர்த்த உணர்தலின் மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

www.npnagarathar.com

## இலக்கணவியல்

### நான்காஞ் சூத்திரம்

பசு இலக்கணம்

அந்தக் கரணம் அவற்றினொன்றன்று அவை
சந்தித்தது ஆன்மாச் சகசமலத் துணராது
அமைச்சர சேய்ப்பநின்று அஞ்சவத் தைத்தே.

### ஐந்தாஞ் சூத்திரம்

பாச இலக்கணம்

விளம்பிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு
அளந்தறிந் தறியா ஆங்கவை போலத்
தாந்தம் உணர்வின் தமியருள் காந்தங் கண்ட பசாசத் தவையே.

### ஆறாஞ் சூத்திரம்

பதி இலக்கணம்

உணருரு வசத்தெனின் உணரா தின்மையின் இருதிறன் அல்லது
சிவசத் தாமென இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே.

## உண்மையதிகாரம்

## சாதனவியல்

### ஏழாஞ் சூத்திரம்

அதிகாரியின் இயல்பு

யாவையுஞ் சூனியம் சத்தெதிர் ஆகலின் சத்தே அறியாது
அசத்திலது அறியாது இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா.

### எட்டாஞ் சூத்திரம்

சாதன இயல்பு

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே.

### ஒன்பதாஞ் சூத்திரம்

சாதிக்கும் முறைமை

ஊனக்கண் பாசம் உணராப் பதியை ஞானக் கண்ணினிற்
சிந்தை நாடி உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழ லாம்பதி விதி எண்ணுமஞ் செழுத்தே.



www.npnagarathar.com

பயனியல்

### பத்தாஞ் சூத்திரம்

பாசநீக்கம்

அவனே தானே ஆகிய அந்நெறி ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே.

### பதினொன்றாஞ் சூத்திரம்

சிவப்பேறு

காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போல் காண உள்ளத்தைக்
கண்டு காட்டலின் அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

### பன்னிரண்டாஞ் சூத்திரம்

ஞானிகளின் இயல்பு

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா அம்மலங் கழீஇ
அன்பரொடு மரீஇ மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.

திருச்சிற்றம்பலம்

### இந்நூல் கேட்டற்குரியார் இவரென்பது

சிவமென்னும் அந்ததர சிந்தைநேர் நோக்கப்
பவமின்றாம் கண்வா சகத்தின்—சிவமுண்டாம்
ஒன்று மிரண்டு மலத்தார்க்கிங் கொண்குருவால்
இன்றிந்நூல் மும்மை மலர்க்கு.

### சிறப்புப்பாயிரம்

எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழவியல்பாய்
நந்தி உரைத்தருளும் ஞானநூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாமுணர
ஏதுதிருட் டாந்தத்தால் இன்று.

சிவஞான மாதவன் சேவடி வாழ்க



www.npnagarathar.com

# வளமான வாழ்விற்குப் பிரார்த்தனைகள்

பி.ஆர். இராமநாதன், எம்.காம்.டி.எப்.எம்.

இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் கஷ்டமில்லாமலும், இன்பத்துடனும் வாழ ஆசைப்படுகிறான். ஆனால், ஆசைப்பட்டவாறே நடக்கிறதாயென்றால், இல்லை. துன்பங்களும் தொல்லைகளும் சூழ்ந்துகொண்டு மனிதனை அல்லற்பட வைக்கின்றன. இவைகளிலிருந்து மீள ஒரே எளிய வழி இறைவனைப் பிரார்த்திப்பதுதான்.

இந்தப் பண நெருக்கடியிலிருந்து, மனக்கஷ்டத்திலிருந்து, உடல்நலத் தொல்லையிலிருந்து எப்படி மீளப் போகிறோம் என்று பல சந்தர்ப்பங்களில் நாம் திகைக்கிறோம். அப்போது நம்மை யறியாமலேயே நாம் இறைவனைப் பிரார்த்திக்கிறோம். மனச்சுமை குறைகிறது, எண்ணச்சிறகுகள் விரிகின்றன, செயல்வடிவம் பெற்றுத்துன்பத்திலிருந்து இன்பத்திற்கான வழிபிறக்கிறது.

பிரார்த்தனை நம் கலங்கிய மனத்தைத் தெளிவுபடுத்தி, புத்துணர்ச்சி அளிக்கிறது. பிரார்த்தனைக்கு உள்ள சக்தி மிகவும் பெரியது. நாம் மனமுருகி இறைவனிடம் பிரார்த்திக்கும் போது பல அதிசயங்கள் அங்கே நிகழ்கின்றன. துன்பச் சூழ்நிலையைக் கடந்துவரும் மன உறுதியைப் பெறுகிறோம்.

ஸ்ரீஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள் கூறுகிறார்:- ''கஷ்டங்கள் வரும்போது அழுது பலன் இல்லை. நம் அறிவை உபயோகிப்பதில் தைரியமும் சக்தியும் பரீட்சிக்கப்படுகின்றன. உண்மையில் இடையூறுகள் தாம் வாழ்க்கையில் சுவையூட்டுபவை. நம்மிடம் உள்ள மிக நல்ல குணங்களை வெளியில் கொண்டுவர இவை நமக்குச் சவால் விடுகின்றன. இறைவன் நமக்கு ஞானத்தை அளித்துள்ளார். அதன் உதவியால் இடையூறுகளை வெல்ல வேண்டும்''.

பிரார்த்தனை என்றால் என்ன? நமது ஆசைகளை, வேண்டுகோள்களை, வலிமை நிறைந்த எண்ணங்களை இறைவனிடம் மனமுருகி கண்ணீர்மல்க ஆத்மார்த்தமாகச்சமர்ப்பிப்பதேயாகும். அதேசமயம் பிரார்த்தனை நியாயமானதாகவும், ஏனைய உயிர்களுக்குத் துன்பம் தராததாகவும் இருத்தல் அவசியம்.

பிரார்த்தனையின் போது, அகந்தை, பொறாமை, வெறுப்பு, சுயநலம் போன்ற தீய எண்ணங்கள் இல்லை. மாறாக, அன்பு, கருணை, சாந்தம், போன்ற இனிய எண்ணங்களினால் மனம் நிறைக்கப்படுகிறது.



www.npnagarathar.com

'இறையருளாகிய காற்று இடையறாது வீசிக்கொண்டிருக்கிறது. உன் மனமென்னும் பாய்மரத்தை விரித்துவிடு. சேரவேண்டிய இடத்தை விரைவில் எளிதில் சென்றடைவாய்' என ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் பிரார்த்தனை பற்றிக் கூறுகிறார்.

கூட்டங்கள் தொடங்குமுன் பிரார்த்தனை செய்யப்படுகிறது. காரை முதலில் ஸ்டார்ட் செய்யும்போது அதனை ஓட்டுபவர் பிரார்த்திக்கிறார். கட்டிடங்கள் கட்டப்படுவதற்கு முன் பூமி பூஜை செய்யப்பட்டு பிரார்த்திக்கப் படுகிறது. வயலில் நாற்று நடும்போது பிரார்த்திக்கிறார்கள். இவ்வாறு நம் ஒவ்வொரு செயலிலும், இப்பிர பஞ்சத்தைப் படைத்த மூலத்தை, ஆதிமூலத்தைப் பிரார்த்தனை செய் கிறோம். இறைவன் நமக்கு அளித்த ஒவ்வொரு பொருளையும் அவனாகவே பாவிக்கிறோம். அவன் உதவிசெய்வான் என்று நம்பிப் பிரார்த்திக்கிறோம். அந்த நம்பிக்கை, பிரார்த்தனை நமக்கு நல்லபயனை அளிக்கிறது.

டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி என்ற சிந்தனாவாதி எழுதுகிறார்," எந்த எண்ணமும் திரும்பத்திரும்பக் கூறப்படும்போது ஆழ்மனத்தில் அணையா லட்சியமாக அது மாறிவிடு கிறது. திரும்பத் திரும்பச் சொல்லும் சொல் ஆழ்மனத்தில் வலுப் பெறுகிறது. வலுப்பெற, வலுப்பெற அது தானே இயக்கம் பெறுகிறது. நமது வேண்டு கோள்கள் புற உருவத்தில் நடைபெற உலகில் நிகழும் அதிசயம் தோன்று கிறது".

பிரார்த்தனையின் வலிமையை ஒவ்வொருவரும் தன் வாழ்நாளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் உணர்ந் திருக்க முடியும். மருத்துவர்களால் கைவிடப்பட்ட நோயாளிகள் பிரார்த் தனை மூலம் அதிசயிக்கத்தக்க வகையில் குணமடைந்திருக்கிறார்கள். தோல்வி களில் துவண்டவர்கள், பிரார்த்தனை மூலம் அந்த தோல்வியைத் தோற்கச் செய்திருக்கிறார்கள்.

மறைந்த தமிழக முதல்வர் திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் உடல்நலம் குன்றியிருந்த போது, தமிழக மக்கள் பலரும், ஏன் கடவுள் நம்பிக்கையில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தவர் களும் இறைவனிடம் பிரார்த்தனை செய்தனர். பிரார்த்தனையின் வலிமை யாலும், மருத்துவ விஞ்ஞான அதிசயத் தாலும், அவரும் உடல்நலம்பெற்று அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்து ஓராண்டுக்குமேல் ஆட்சியிலிருந்து பின் மறைந்தார்.

வலிமையான எண்ணங்கள் கொண்டு பிரார்த்தனையின் மூலம் இறைவனைச் சிந்திக்கும் போது, நாமும் வலிமை நிறைந்தவர்களாகிறோம். 'பிரார்த்தனை மூலம் எல்லா ஜீவன் களும் பரமனுடன் இணையமுடியும். கடவுளிடம் நாம் உள்ளத் துடிப்போடு பிரார்த்தனை செய்யவேண்டும். நம் பிரார்த்தனைகள் உண்மையாகவே நம்மனத்திலிருந்து வருவதாக இருந்தால்



www.npnagarathar.com

கடவுள் நிச்சயமாக அதற்குச் செவி சாய்க்கிறார்' என்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்கிறார்.

பிரார்த்தனை மூலம் உள்ளமுருகி இறைவனை வேண்டுவோம். வளம்பல பெற்று உயர்வடைவோமாக!

அப்பா நான் வேண்டுதல் கேட்டு
அருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான்
அன்பு செயல் வேண்டும்

-வள்ளலார்

---

# நகரத்தார் வாழ்த்து

(சிந்தனைக்கவிஞர் பெரி. சிவனடியான் எம்.ஏ)

இளையாற்றக் குடிக்கோயில் ஏழுபிரி வுடையவர்கள்
ஏந்தியொரு மரவை கொள்ள
இணையான பிரிவுடைய மாற்றூரார் ரோஜாப்பூ
எழில்மாலை கொண்டு வரவே

இணையாத பிள்ளையார் பட்டிதனை எடுத்தாள்வோர்
இங்கிதமாய்ச் சங்கொ லிக்க
இரணியூர் நகரத்தார் ஆட்கொண்ட நா தரின்
இனியஅருள் பாடி நிற்க

வளையாத உறுதியுடை வயிரவன் கோயிலார்,
வளர்இலுப்பைக் குடிக்கோயிலார்,
வாழ்சூரைக் குடியார்கள், வளர்வேலங்குடியார்கள்,
வாழ்த்துமடல் கொண்டுவர வே

களைமுகத் தோடுநேமங்கோயில் நகரத்தார்
கைகூப்பி வரவேற்கவே
கனிவான மணிவிழா மணமக்கள் வாழ்கவெனக்
கலந்தொன்றாய் வாழ்த்து கின்றோம்.



www.npnagarathar.com

73

# சிவ வழிபாட்டின் சிறப்பு

சி.சு. கண்ணாயிரம்
கோவை

உலகிலுள்ள இறை வழிபாடுகளில் மிகவும் தொன்மையானது சிவ வழி பாடாகும். பிரபஞ்சத்தில் யாராலும் படைக்கப்படாதவையும், என்றும் அழியாதவையுமான பொருள்கள் மூன்று. அவை, இறைவன், உயிர்கள், பாசம் என்பன. இறைவன் ஒருவன். சொரூப நிலையில் வடிவமில்லாதவன்; எங்கும் நிறைந்தவன், பேரறிவும் வரம்பிலாற்றலும் உள்ளவன். அருளே வடிவமாகக் கொள்பவன். நெருப்பில் சூடு போன்று அருள் அவன் இயல்பாக உள்ளது.

உயிர்கள் எண்ணற்றவை; சிற்றறி வுள்ளன; அனாதியே பாசத்தால் பற்றப்பட்டு அறியாமையிருளில் மூழ்கிக் கிடப்பன. இறைவன் அருளால் பாசம் நீங்கி ஞானம் பெற்று அவனை அடைந்து பேரின்பம் நுகருதற்கு உரியன.

பாசம், சடப்பொருள் ஒன்றாக நின்று எண்ணற்ற உயிர்களைச் செம்பிற்களிம்பு போல அனாதியாக எண்ணற்ற உயிர்களைப் பற்றி நின்று அவற்றின் அறிவை மறைத்து, அவை இறைவனை அறிந்து அடையமுடியாமற் செய்வது. இதை ஆணவமலம் என்று கூறுவர்.

இறைவன் தன் இயல்பான பேரருளினால் உயிர்கள், தங்களைப் பற்றியுள்ள பாசத்தினின்றும் விடுதலை பெற்று ஞானமடைந்து தன்னை அறிந்து அடைந்துய்ய வேண்டும் என்று விரும்புகின்றான். அதற்காக உயிர் களுக்கு மாயா மலத்தைக் கூட்டு விக்கின்றான். இது மற்றோர் அழுக்கு. ஆனால் ஆணவமலத்தை நீக்கிக் கொள்ள உயிர்களுக்கு உதவுகின்றது.

மாயை, முப்பத்தாறு தத்துவங்களாக விரிகின்றது. இவற்றுள் இருபத்து நான்கு தத்துவங்களை ஆன்ம தத்துவங்கள் என்றும், ஏழு தத்துவங்களை வித்தியா தத்துவங்கள் என்றும் கூறுவர். இவற்றின் தொகுப்பு அசுத்தமாயை என வழங்கும். மீதமுள்ள ஐந்து தத்துவங்களும் சிவ தத்துவங்கள் எனப் பெயர்பெற்று சுத்தமாயை என்னும் தொகுப்பில் அடங்குவன.

இவை அனைத்துக்கும் அப்பாற் பட்டுள்ள இறைவன், உயிர்கள் தன்னை அறிந்து அடைந்துய்ய வேண்டும் என்ற பேரருளால் தன் நிலையினின்றும் கீழிறங்கிவந்து சுத்தமாயையில் நின்று தொழில்புரிகின்றான். உயிர்கள் தங்கு வதற்காக உடல்களையும் அவ்வுடல்கள்



www.npnagarathar.com

இயங்க அவற்றுக்கு அறிகருவிகளான மனம் முதலிய அந்தக் கரணங்களையும், அவ்வுயிர்கள் வாழ்வதற்காக உலகம் முதலியவை கொண்ட புவனங்களையும் தானே 'நான்முகனாக நின்று படைக் கின்றான். இவ்வரிய உண்மையை;

“ புவம்வளி கனல்புனல் புவிகலை
யுரைமறை திரிகுண மமர்நெறி
திவமலி தருசுரர் முதலியர்திகழ்தரு
முயிரவை யவைதம
பவமலி தொழிலது நினைவொடு
பதுமநன் மலரது மருவிய
சிவனது சிவபுர நினைபவர்
செழுநில னினிலை பெறுவரே.

பண் - நட்டபாடை - திருச்சிவபுரம் (1)

எனவரும் ஞானசம்பந்தப் பெருமான் அமுத வாக்கால் அறியலாம்.

இனி, அவ்வாறு உயிர்களுக்காகப் படைக்கப்பட்ட தனு கரண புவன போகங்களை அவ்வுயிர்களுக்குத்தேவைப் படுங்காலம் வரையிலும் பாதுகாக்க வேண்டியதும் இறைவன் தொழிலாகும். அத்தொழிலை அவன் சுத்தமாயையில் நின்று கொண்டே திருமால் வடிவில் தொடர்ந்து புரிகின்றான்.

இச்செய்தியை

“ மலைபல வளர்தரு புவியிடை
மறைதரு வழிமலி மனிதர்கள்
நிலைமலி சுரர்முத லுலகுகள்நிலை
பெறு வகைநினை வொடுமிகும்
அலைகட னடுவறி துயிலம ரரியுரு
வியல்பர னுறைபதி
சிலைமலி மதிள்சிவ புரநினை
பவர்திரு மகளொடு திகழ்வரே
— (2)

எனவரும் அடுத்த திருப்பாட்டால் அறியலாம்.

இனி, அத்தனுகரணபுவன போகங் கள் உயிர்களுக்குத் தேவைப்பட்ட காலம் முடிந்ததும், இறைவனே சுத்தமாயையில் உருத்திர மூர்த்தியாக நின்று அவை அனைத்தையும் அழிக் கின்றான். இதை;

“ பழுதில கடல்புடை தழுவிய
படிமுத லியவுல குகண்மலி
குழுவிய சுரர்பிறர் மனிதர்கள்
குலமலி தருமுயி ரவையவை
முழுவது மழிவகை நினைவொடு
முதலுரு வியல்பர னுறைபதி
செழுமணி யணிசிவ புரநகர்
தொழுமவர் புகழ்மிகு முலகிலே
— (3)

எனவரும் அப்பதிகத்தின் அடுத்த பாடலில் காணலாம். படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் களும் சடப்பொருள்களாகிய தனு கரண புவனபோகங்கள் மாட்டு நிகழ்வன. அடுத்துள்ள மறைத்தல் தொழிலும் அருளல் தொழிலும் உயிர் கள் மாட்டு நிகழ்வன. இவற்றையும் இறைவனே சுத்தமாயையில் முறையே மகேசுவரனாகவும் சதாசிவ மூர்த்தி யாகவும் இருந்து புரிகின்றான்.

ஆகவே, நாதம், விந்து என்னும் சுத்தமாயையில் உள்ள இருதத்துவங் களையும் இயக்கி இறைவன் ஒருவனே சிவபெருமானாகவும் தன்னில் பிரிவில்லா



www.npnagarathar.com

துள்ள சக்தியாகவும், சதாசிவமாகவும், மகேசுரராகவும், உருத்திரனாகவும், திருமாலாகவும், நான்முகனாகவும் நின்று திருவைந் தொழில்களையும் புரிகின்றான். இதை நம் ஞானசாத்திரம்:

"சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழு மீச
னுவந்தரு ளுருத்தி ரன்றான் மாலய னொன்றி னொன்றாய்ப்
பவந்தரு மருவ நாலிங் குருவநா லுபய மொன்றா
நவந்தரு பேத மேக நாதனே நடிப்ப னென்பர்

(சிவஞானசித்தியார் - சுபக்கம் - சூத்திரம் 2 - பாடல் 74)

என்று விரித்தோதுதல் காண்க.

சுத்த மாயையில் இறைவன் இவ்விதம் திருவைந் தொழில் நடத்தும் மூர்த்தி பேதங்களைச் சம்புபட்சம் என்பர்.

இனி, இறைவனை நோக்கிமாபெரும் தவத்தைத் தொடர்ந்து புரிந்துகொண்டு ஆணவமலத்தின் பிணிப்பைத் தளர்த்திக் கொண்டே முத்தியைநோக்கி முன்னேறும் எண்ணற்ற உயிர்களில் பக்குவம் வாய்ந்த உயிர்களுக்கு இறைவன் மேல் உலகங்கள் திருமால், நான்முகன், இந்திரன் போன்ற பதங்களை அளிக்கின்றான். இவர்களைக் காரண தேவர்கள் என்பர். அப்பதங்களைப் பெற்றோர் தங்களுக்குக் கீழுள்ள அசுத்தமாயையில் பல புவனங்களில் தொழில் புரியும் திருமால், நான்முகன் இந்திரன் போன்றோர்களை இயக்குவார்கள். இத்தொழில்களைப் புரிவதால் அவர்கள் ஆணவமலத்தின் பிணிப்பு மேலும் மேலும் நீங்கி முத்தியை நோக்கி முன்னேறுகின்றனர். இவர்கள் யாவரும் உயிர் வருக்கங்களே ஆதலின் இவர்களை அணுபட்சம் என்பர். கீழுள்ள தேவதைகளை ஆட்டுவிப்பதால் இவர்களை நம் மாணிக்கவாசகப் பெருமான் 'ஆட்டுத்தேவர்' என்று குறித்தருளுகின்றார்.

ஆட்டுத் தேவர்தம் விதியொழித் தன்பால்
ஐயனே என்றுன் அருள்வழி இருப்பேன்;
நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே
நாத னேஉனைப் பிரிவுரு அருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர்தம் தேவர் பிரானே
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

என்பது அப்பாடல்.

(திருவாசகம் செத்திலாப்பத்து 5)

இத்திருப்பாடலில் "சேட்டைத்தேவர்" என்பவர் காரண தேவர்களால் தொழில் படுத்தப்படும் திருமால், நான்முகன், இந்திரன் போன்றோர். இவர்களையே நாம் புராணங்கள் முதலியவற்றால் அறிகின்றோம். "சேட்டைத் தேவர்தம் தேவர்" என்பவர் "காரண தேவர்கள்". "தேவர் பிரானே" என்பது முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை. இந்தச் சேட்டைத் தேவர்களையே திருஞானசம்பந்த சுவாமிகள் தம் தேவாரப் பதிகங்கள் ஒவ்வொன்றிலும் 9 ஆம் பாடல்களில் குறிப்பிடுகின்றார்.



www.npnagarathar.com

எனவே முழுமுதற்கடவுளான இறைவன் ஒருவனே. அவன் வழிபாடே முத்தியைக் கொடுக்க வல்லது. ஏனைய தெய்வ வழிபாடுகளால் கிடைக்கும் உலகியல் பயன்களையும் சுவர்க்கம் முதலிய இன்பங்களையும் அவ்வழிபாடு, தரும் என்பதும் தேற்றம். இக் 'கடவுளையே சைவ சமயத்தினர் '**சிவபெருமான்**'' என்கின்றனர்.

உயிர்கள் தன்னை எளிதில் அணுகி வழிபட்டு உய்யவேண்டும் என்ற பேரருளினால் வடிவமில்லாத இறைவன் அறுபத்து நான்கு வடிவங்களைத் தாங்கியுள்ளான். இவைதவிர வேறு வடிவங்களில் உயிர்கள் வழிபட்டாலும் அவ்வடிவங்களில் நின்றும் அருள்பாலிக்கின்றான். இவை அனைத்திலும் வழிபாட்டுக்கு மிகவும் எளியதாகவும் வசதியாகவும் உள்ள வடிவம் **சிவலிங்க மூர்த்தமாகும்.** சிவாலயங்கள் அனைத்திலும் கருவறையில் வைத்து வழிபடப்படுவதும், வீடுகள்தோறும் அன்பர்கள் தினமும் ஆன்மார்த்த வழிபாட்டில் பூசிப்பதும் சிவலிங்கவடிவமே.

திருக்கோயில் கருவறையிலுள்ள சிவலிங்கத்தின் அடிப்பாகம் சதுரமான நான்கு பக்கங்களைக் கொண்டிருக்கும். இது மண்ணில் புதைந்திருப்பதால் நம் கண்ணுக்குத் தெரியாது. இது மண் தத்துவத்தின் அதிபதியும் நான்கு முகங்களையுடையவனுமாகிய நான்முகனைக் குறிக்கும். இதைப் பிரம்மபாகம் என்பர். அடுத்து ஆவுடையாருக்குள் நுழைந்துள்ள பகுதி எட்டுப் பக்கங்களைக் கொண்டுள்ளது. அது 'வானம்' 'முதல் 'சர்வபூததமனி' வரையுமுள்ள எட்டுச் சக்திகளையும் அவற்றை மூடியுள்ள ஆவுடையார் ''மனோன்மணி'' யையும் குறிக்கும். இவ்வொன்பது சக்திகளும் இணைந்தது அம்பிகையாகிய **சக்தியின் பாகமாகும்.** சிவலிங்கத்தில் ஆவுடையார் கூடும் மேற்பகுதியில் திருமுழுக்காட்டும் தண்ணீர் தேங்கி வடபுறம் உள்ள கோமுகம் வழியாக வெளியேறும்பகுதி நீரின் அதிதேவதையாகிய **திருமாலைக் குறிக்கும் பாகமாம்.** எனவே சிவலிங்க வழிபாடு திருமால் வழிபாட்டின் பலனையும் தரும் என்பதும், திருமால் வழிபாடு சிவவழிபாட்டின் பலனைத் தரும் என்பதையும் நாம் நன்கு அறிதல் வேண்டும்.

சிவலிங்க வடிவத்தில் ஆவுடையாருக்கு மேல் நம் கண்ணுக்குத் தெரிவது நெருப்பின் அதிதேவதையான **உருத்திரனின் பாகம்.** இது சுடர் விட்டு மேல் நோக்கி எரியும் நெருப்பின் வடிவில் இருப்பதை அறிதல்வேண்டும். மலர், தளிர் போன்றவற்றைச் சாத்தி வழிபட வசதியாக இருப்பதற்காக இதன் உச்சி நெருப்பின் சுடர் போன்று குவிந்திராமல் மழுக்கி விடப்பட்டுள்ளது. அதன் உச்சியில் எப்பொழுதும் காத்திருப்பதால் அது வாயுவின் அதிதேவதையான **மகேசுர பாகமாகும்.** இவை அனைத்துக்கும் இடங்கொடுப்பது ஆகாயமாகலின் அப்பகுதி ஆகாயத்தின் அதிதேவதையான **சதாசிவ மூர்த்தியின் பாகமாகும்.**

இனி, இறைவன்பஞ்ச பூதங்களையும், ஞாயிறு, திங்கள், ஆன்மா ஆகியவற்றையும் தனக்கு உடம்பாகக் கொண்டுள்ளான் என்று கூறி இவற்றை இறைவனின்



www.npnagarathar.com

77

'அட்ட மூர்த்தங்கள்'' என்று நம் ஞான 'நூல்கள் கூறுகின்றன. எனவே இவை எட்டிலும் சிவபெருமானை வழிபடலாம். பஞ்ச பூதங்களில் இறைவனை வழிபடு வதை மேலே சிவலிங்க தத்துவத்தை விரித்துக் கூறியதில் கண்டோம். சூரிய சந்திரமூர்த்தங்கள் திருக்கோயில்களில் முறையே தென்கிழக்கு மூலையிலும் வடகிழக்கு மூலையிலும் நிறுவப்பட்டு வழிபாடு பெறுவதைக் காணலாம். ஆன்மார்த்த பூசையில் வழிபடுபவர் தம் இதய பீடத்தில் தம் ஆன்மாவையே சிவலிங்க வடிவத்தில் நிறுவி அந்தர்யாக பூசை புரிவதைக் காணலாம்.

இனி, இறைவன் எங்கும் நிறைந் துள்ளான். அன்பர்கள், அறுபத்து நான்கு சிவமூர்த்தங்களைத் தவிரத் தாங்கள் விரும்பும் ஏனைய மூர்த்தங் களில் ஏனைய பெயர்களைச் சூட்டி வழிபட்டாலும் அம்மூர்த்தங்களில் சிவ பெருமானே எழுந்தருளி அவ்வழிபாடு களை ஏற்றுக் கொள்வான் அல்லனோ? எனவே சேட்டைத் தேவர்களாகிய திருமால் முதலியோரையும், சிறு தெய்வங்களையும்; இவ்வுலகில் பிறந்து வாழ்ந்து இறந்துபோனவர்களையும் நாம் அவரவர் வடிவங்களில் வழிபட்டா லும் அதைச் சிவவழிபாடாகக் கொள்ள வேண்டுமன்றோ? அதனாலன்றோ:

'' விரிவிலா அறிவினார்கள் வேறொரு
சமயம் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும்
எம்பிராற் கேற்ற தாகும்''

அரசுகள் தேவாரம் -
திருநேரிசை.
திருப்பெருவேளூர் - (9)

என்றும்,

'' யாதொரு தெய்வங் கொண்டீ
ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம்
வருவர்...''

சிவஞான சித்தியார்
சுபக்கம் - சூத்-2-பாடல் 25

என்றும்,

'வேறு படுஞ் சமயமெல்லாம் புகுந்து
பார்க்கின்
விளங்கு பரம் பொருளே! நின்
விளையாட் டல்லான்
மாறுபடுங் கருத்தில்லை; முடிவின்
மோன
வாரிதியின் நதித்திரள்போல்
வயங்கிற் றம்மா!''

தாயுமான சுவாமிகள்
கல்லாலின் - (25)

என்றும் ஆன்றோர்கள் கூறியுள்ளனரே என்று வினவினால், ஆம்! அவை யனைத்தும் சிவவழிபாடுகளே. ஆனால் அவற்றில் ஒன்றும் சிவபெருமானை நேரில் வணங்கும் பயனை நல்கா என்பதை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குவாம்.

மின்விளக்குகள் "0'' வால்ட் முதல் 2000 வால்ட் வரை ஆற்றலுள்ள பல விளக்குகள் உள்ளன. அவையனைத் திலும் புகுந்து வெளிச்சம் தருவது மின் ஆற்றல் ஒன்றே. ஆனால் '0' வால்ட் விளக்கில் நாம் 2000 வால்ட் விளக்கில் கிடைக்கும் வெளிச்சத்தைப் பெற இயலாது. நாம் அதனுள் 2000 வால்ட் மின் ஆற்றலை வலிந்து புகுத்தினால்



www.npnagarathar.com

அவ்வாற்றலைத் தாங்காது "0" வால்ட் விளக்கே வெடித்துவிடும். அவ்வாறே ஆன்ம கோடிகளான சிறுதெய்வங்கள் முதல் அணுபட்சத் தேவதைகள் வரையும் உள்ள தெய்வங்களை, வழிபட்டால் அவ்வத் தெய்வங்களின் ஆற்றலுக்குத் தக்கவாறே சிவபெருமான் அவற்றுள் நின்று அருள்புரிவான். எனவே அவற்றை நீக்கிநேரே சிவபெருமானைச் சிவமூர்த்தங்களில் வழிபடுவதே சாலச் சிறந்ததாகும்.

இவ்வளவு சிறந்த சிவவழிபாடு "பரார்த்தம்; "ஆன்மார்த்தம்" என இரு வகைப்படும். திருக் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவது" "பரார்த்த வழிபாடு" இதை இன்றைய வாழ்க்கைமுறையில் நாம் நாள்தோறும் செய்ய இயலாது. வாரம் ஒரு நாளிலும் சிறப்பு நாட்களிலும் சென்று கண்டிப்பாக வழிபடல் வேண்டும். சிவ பெருமானை நம் உள்ளத்திலும் இல்லத்திலும் அமைத்து நாள்தோறும் வழிபடுவது ஆன்மார்த்த வழிபாடு. இதை நாம் அனைவரும் நாள்தோறும் செய்துய்வோமாக.

---

## சாமியைக் கும்பிடு கண்ணே!

**பேராசிரியர் சுப. கதிரேசன், எம்.ஏ.**

ஆறு மனமவன் வீடு - நல்
அன்பு விளக்கினால் தேடு
நீறு தினம்பூசும் மேனி - அவன்
ஏறி வருகிற தோணி.

பிறந்தவர்க் காறடி அந்தம் - அதன்
பின்பு இறைவனே சொந்தம்
மறவா தவனைநீ ஏத்து - இனி
மண்ணில் உனக்கிலைக் கூத்து.

ஆவியில் லாவுடல் கூடு - பழி
ஆண்டவன் மேலே நீ போடு
நாவினால் 'ஓம்' எனச் சொல்லு - உன்
நாத்தப் பிறப்பினைக் கொல்லு.

இருபதி லேவரும் சேட்டை - வய
தறுபதி லேசுடும் கூட்டை
உருகி அழுதென்ன லாபம் - வா
உடனே சிதம்பரம் போவம்.

காயத்தைத் திண்டித்தி உண்ணும் - உன்
காசு பணமென்ன பண்ணும்
சாயம் வெளுத்திடும் முன்னே - குரு
சாமியைக் கும்பிடு கண்ணே!



www.npnagarathar.com

# சிவனுக்கு அணிகலன்

வ. சுப்ரமணியன்

## இயற்கை வழிபாடு

உலகளவில் தெய்வ நம்பிக்கை வழிபாடு, பூசை எல்லாம் அன்பு அடிப்படையிலும், அச்ச அடிப்படையிலும் எங்கும் தானே தோன்றித் தழைத்துள்ளன. அன்பு காட்டுபவனுக்கு நன்றி காட்டுவதும், அச்சம் ஊட்டுவனவற்றிற்கு அடிபணிவதும் மனிதச் செயல். நிலம், நீர், தீ, காற்று, விண் என்ற ஐம்பூதங்களும் மனிதனுக்கு நன்மையும், தீமையும் செய்வனவாய்த் திகழ்கின்றன. நன்மை செய்த ஒருவர் மீது அன்புகாட்டினால் அவர் மேலும் நன்மை செய்வார் அன்றோ? தீமை செய்த ஒருவர் முன் பணிந்து போற்றினால் அவர் தீமை செய்யாது இருப்பார் அன்றோ? விளைவு ஐம்பூத வழிபாடாயிற்று என்பர்.

## நாக வழிபாடு

இயற்கை வழிபாட்டின் அடிப்படை அன்பும், அச்சமும். இதனைப்போலவே நாக வழிபாட்டின் அடிப்படைகள்: அச்சமும், அன்புமே. நாக வழிபாட்டால் நன்மைகள் விளையும்; தீயன விலகும்; நல்லன நிகழும் எனும் நம்பிக்கை நம் நாட்டில் ஆதியிலிருந்து இருக்கிறது. நாகர்கோவிலில் தனிகோவில் வழிபாடு நடக்கிறது. பிள்ளையாரோடு சேர்ந்து நாக வழிபாடு நடக்கிறது. அரசு வேம்பு மரத்தடி வழிபாடாகவும் நடக்கிறது.

## சிவனுக்கு அணிகலன்

சிவனுக்கு அணிகலன் பாம்பு; முருகனுக்கு அடியுறை பாம்பு; மாரியம்மனுக்குச் சின்னம் பாம்பு; அய்யனார் (சாத்தா) உடன் தொடர்பு உடையது பாம்பு; திருமாலுக்கு உறையுள் பாம்பு.

## உழவனின் தோழன்

வயல்களில் பயிர்களை நாசம் செய்யும் எலிகளைப் பாம்பு பிடித்துத் தின்று விடுவதால் பயிர் உயிர் தப்பும். எனவே பாம்பை "உழவனின் தோழன்" என்பர். தமிழகத்தில் 'எங்கே பாம்புப் புற்று உள்ளதோ அங்கே கிணறு வெட்டு' எனும் பழமொழி உண்டு. பாம்புப் புற்று உள்ள இடத்தில் கிணறு வெட்டினால் நீர் மேலேயே நிரம்ப இருக்கும். உழவுக்கும் தொழிலுக்கும் அது பயன்படும் எனும் நம்பிக்கை நம் நாட்டில் உண்டு. 'நீர் நிலை காப்பாளர்' எனும் நம்பிக்கை அதனால் தான் எழுந்திருக்கலாம் என ஆய்வாளர் கருதுகின்றனர்.



www.npnagarathar.com

80

**நாகபஞ்சமியும், நம்பிக்கையும்**

பாம்பு வழிபாட்டு விழா நாக பஞ்சமி ஆகும். நாக பஞ்சமி சூலைத் திங்களில் (ஆனி, ஆடி) பெரும்பாலும் நிகழும். இதற்கொரு கதை வழங்கி வருகின்றது: நாகபஞ்சமி அன்று ஒருவன் ஏர் உழுதான். வயலின் ஓரிடத்தில் பெண்நாகப் பாம்பின் புற்று ஒன்று இருந்தது. வளையில் பாம்புடன் அதன் குட்டிகளும் இருந்தன. அவன் ஏர் உழும்போது குட்டிகள் வெளியே உலவிக் கொண்டிருந்தன. அதனால் ஏர்க்கால் பட்டுவிட்டது. வெளியில் சென்றிருந்த பாம்பு திரும்பி வந்து நிலை அறிந்து கோபம் கொண்டு அவனைத் தீண்டியது. அவன் மகள் பக்கத்து ஊரில் இருப்பது அறிந்து அங்கு சென்றது. பாம்பு வரவு அறியாமல் அந்தப் பெண் தூபதீப நைவேத்தியங்களுடன் நாகபூசை செய்து கொண்டிருந்தாள். கடிக்க வந்த பாம்பு அமைதியாயிற்று. அவள் வைத்திருந்த பாலைப் பருகிற்று. அவளது தந்தையை உயிர்ப்பிக்க 'அமுதம்' கொடுத்து அகன்றது. இந்தக் கதை மூலம் தீமை செய்தோர் குடும்பத்தைச் சேர்ந்த யாரேனும் ஒருவர் தம்மை வணங்கி வழிபடினும் அவர்தம் குறை நீக்கி, குடும்பம் செழிக்க வழி செயும் - எனும் நம்பிக்கை நம் மக்களிடம் நிலவி வருகிறது.

**சனிபகவானின் மறுவடிவம்**

'ஆடிப்பட்டம் தேடி விதை' என்பது பழமொழி. ஏறத்தாழ ஆனி, ஆடியிலேயே, தமிழக ஆறுகளில் தண்ணீர் வரும்; நீர் நிலைகள் நிறையும். நன்செய், புன்செய்ப் பயிர்ப் பணிகள் தொடங்கப்படும். இக்காலத்தில் நாகர் வழிபாடு நடப்பது, பயிர் வளத்தோடு தொடர்புபடுத்த வைக்கிறது. வயலில் புதிதாக ஏர்கட்டும்போது வயலுக் குரியார் வயலின் சனி மூலையில் பூசை செய்வர். பழம், பூ, பொரி வைத்து ஊதுவத்தி காட்டி, கற்பூரம் ஏற்றி வழிபடுவர். இவ்வழிபாட்டின் அடிப் படை "விளைச்சல் நன்கு இவ்வாண்டு இருக்க வேண்டும்" என்பதாகும். சனி மூலை சனிபகவானுக்கு உரியது. பாம்பு சனிபகவானின் மறுவடிவாகும். எனவே சனிமூலை வழிபாடு ஒருவகையில் பாம்பு வழிபாடு என்பர்!

**களக்காட்டு அரசன்**

களக்காடு என்ற நகரைத் தலை நகராகக் கொண்ட வேந்தன் ஒருவன் தொழு நோயால் துன்பப்பட்டான். அவன் ஆவணித் திங்கள் ஞாயிற்றுக் கிழமை அன்று நாகர் கோவிலுக்குச் சென்று ஐந்தலை நாகத்தின் முன் தவம் இருந்தான். அதன் பயனாக அவனைப் பற்றியிருந்த தொழுநோய் அகன்றது. அதற்குப் பயனாக நாகர் கோவிலைப் புதுப்பித்துக் காட்டினான். ஆவணித் திங்கள் ஞாயிற்றுக் கிழமை தோறும் தன் துணைவி, குழந்தைகளுடன் மன்னன் கோவிலுக்கு வருவான். அபிடேக ஆராதனை செய்து வணங்கிச் சென்றான். அந்த மன்னன் பெயர் வேணாட்டை ஆண்ட பூதல வீர திரு வீர உதய மார்த்தாண்ட வர்மன் என்பர்! அண்மை ஆராய்ச்சியாளர் நல்ல பாம்பின் நஞ்சு, தொழுநோயைத் தீர்க்க வல்லது என்பதைக் கண்டறிந்து உள்ளனர்.



www.npnagarathar.com

**நினைத்தது நிறைவேறும்**

நாகராசாவைத் தொடர்ந்து வழி படுவோர் நினைத்தது நிறைவேறும். நோய்வாய்ப்பட்டோர் நாகர் வழி பாட்டின் மூலம் நோய் நீங்கப்பெறுவர். குறிப்பாகத் தோல் நோய்கள், தொடர் வழிபாட்டின் வழி அகன்றது விடும். குழந்தைப்பேறு இல்லாதோர் நாகவழி பாட்டால் மக்கட்பேறு பெறுவர் என்ப தெலாம் நம்மிடையே நிலவி வரும் நம்பிக்கைகள்!

**புற்று வழிபாடு**

கறையான் என்ற எறும்பு வகை உயிரினம் ஆங்காங்கே தம் உறை யுளாகப் புற்றைக் கட்டுவது வழக்கம். புற்றுக் கறையானைத் தின்பதிற்கும், கறையானைத் தின்ன வரும் எலிகளைத் தின்பதிற்காகவும் பாம்பு அங்கே செல்லும். சில இடங்களில் கோவில் களுக்கு உள்ளேயும், கோயில் சுவர்களை ஒட்டியும் புற்றுக்கள் அமைந்துள்ளன. இப்புற்றுக்களை நாகர்களின் உறைவிட மாக மக்கள் வழிபடுவர். செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் மக்கள் அதிகம் சென்று வழிபடுவர். அப்போது மக்கள் புற்றுக்களில் பால் வார்ப்பர்; புற்றிற்கு மஞ்சள், குங்குமம் இட்டு, பூவைத்து வழிபடுவர்; தேங்காய் உடைப்பர்; கற்பூரம் ஏற்றுவர்.

**குழந்தைப் பேறு:** செல்வங்களுள் சிறந்த செல்வம் குழந்தைச் செல்வம், குழந்தை இல்லாப் பெண்டிர் நாகத்தைக் கல்லுருவில் செய்து, ஆறு திங்கள் தண்ணீரிலும், ஆறு திங்கள் நெய்யிலும் வைத்த பிறகு, விசேட பூசை செய்து அரச மரத்தடியில் பிரதிட்டை செய்ய குழந்தைப் பேறு கிடைக்கும் எனும் நம்பிக்கை நம் மிடையே நிலவி வருகின்றது.

அதைப்போன்று, நற்சாந்துப்பட்டிக்கு அருகில் இருக்கும் பேரையூர் நாகநாத சுவாமிக்கு நாகபிரதிஷ்டை செய்து வைத்தால், நாகதோஷம் நீங்கப்பெற்று குழந்தைப் பேறு கிடைக்கும். அதைப் பலர் மெய்ப்பித்திருக்கிறார்கள்.

**மாணிக்கக்கல்:** பிறரைக் கடிக்காமல் நூற்றாண்டு வரை வாழும் பாம்பினிடம் ஒளிபடைத்த மாணிக்கக் கல் இருக்கும். இரவில் இரை தேடும்போது ஒளி படைத்த அக்கல்லை பாம்பு வெளியே உமிழ்ந்து அது வெளிச்சத்தில் இரை தேடுமாம். குமரி மாவட்டம் பகவதி அம்மன் மூக்குத்தி மாணிக்கக் கல் பதிக்கப் பெற்றது என மக்கள் நம்புவர்.

**சுகம் தரும் புற்றுமண்**

பாம்புப்புற்று வழிபாட்டிடங்களில் பாம்புப் புற்று மண்ணைப் பிரசாதமாக எடுத்து வாயில் இட்டு, நெற்றியில் அணிந்து கொண்டால் பற்றியிருக்கும் நோயனைத்தும் பறந்துவிடும். அறிவியல் ஆய்வாளர் கண்டுபிடிப்பில் புற்றில் நாகம் வந்து செல்லும் போது அதன் நஞ்சும், எச்சமும் அம்மண்ணோடு கலந்து இருப்பதால், அதற்கு நோய் நீக்கும் குணமுண்டு என்கின்றனர். நம் தெய்வ நம்பிக்கை எவ்வளவு தூரம் அறிவியல் கண்டு பிடிப்போடு ஒத்து நிற்கின்றது! நம்பிக்கை என்றும் நலமே தரும்!

---



www.npnagarathar.com

# திருவள்ளுவருக்கும் பாடம் சொன்ன சிகப்பி ஆச்சி

பேராசிரியர்
டாக்டர் தமிழண்ணல்

தெற்கேயிருந்து வள்ளுவப் பெருந்தகை காவிரிப்பூம் பட்டினத்திற்கு ஒருமுறை வந்திருந்தார். அவர் மக்களைக் கண்டும் கேட்டும் அனுபவம் பெற்று, நூல் எழுதும் நோக்கத்துடன் நாடெங்கும் சுற்றுச்செலவு மேற் கொண்டிருந்தார். இப்போது, சோழநாட்டில் பல சிற்றூர்களுக் கெல்லாம் போய்விட்டு, அறம் கூறும் அவையம் விளங்கிய உறையூருக்குச் சென்றார். அங்கே முகவரி கேட்டுக் கொண்டு, காவிரிப்பூம் பட்டினத்தில் ஒரு நகரத்தார் வீட்டுக்கு அவர் சென்றார். அங்கே அவரைப் பார்த்ததும், முன்பே செய்தி அறிந்திருந்த காடப்பர் அவரை எதிர்கொண்டு, வரவேற்று வீட்டினுள் அழைத்துச்சென்றார். அவ்வீட்டில் செய்யம்மை எனப்படும் சிகப்பிஆச்சி தம் மக்களுடன் வள்ளுவரை வரவேற்றார்கள். பட்டினத்தில் உள்ள மட்டும் பட்டினத்தார் வீட்டில்தான் அவருக்கு விருந்து நடந்தது.

ஒருநாள் வள்ளுவர் உணவுண்டபின் சற்றே முகப்புத் திண்ணையில் ஓய்வு கொண்டிருந்தார். உள்ளே வளவில் ஆச்சி தம் கடைசிக் குழந்தையைத் தாலாட்டிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் பாடிய தாலாட்டுப் பாட்டு தென்றலிசைபோலச் செவிகளில் பாய்ந்து கொண்டிருந்தது.

பரட்டைப் புளியமரம்
 பந்தடிக்கும் நந்தவனம்
நந்தவனம் கண்திறந்து
 நாலுவகைப் பூவெடுத்து
பூவெடுத்துப் பூசைசெய்யும்
 புண்ணியவா(ர்) பேரேனோ!
மலரெடுத்துப் பூசைசெய்யும்
 மகராசர் பேரேனோ!
அரும்பெடுத்துப் பூசைசெய்யும்
 அருச்சுனவா பேரேனோ!

இந்தப் பாடலடிகளில் பொதிந்துள்ள பொருளும் இனியஇசையும் அழகிய குரலும் வள்ளுவரை ஈர்த்தன. அவர் தம்மை மறந்து, அந்தத் தாலாட்டைக் கேட்கலானார்.

பரட்டைப் புளியமரமாம். புளியமரம் தலையை விரித்துக்கொண்டு கண்ணுக்கெதிரே நிற்பதுபோல் தோன்றியது. புளியமரத்தின் படர்ந்து விரிந்த கிளைகளும், அவற்றில் அடர்ந்து துளிர்த்த தழைகளுமாக அவை ஒரு 'பரட்டை'த் தன்மையையே நினைவூட்டு கின்றன·



www.npnagarathar.com

அன்று பெண்கள்தான் பந்தடிப்பார்கள். கைகளில் பூப்பந்துகளை வைத்துக்கொண்டு, நந்தவனத்தைச் சுற்றிச் சுற்றி வந்து பந்தடிக்கும் காட்சி, மிக இனிதாக இருக்கும்.

'நந்தவனம் கண்திறந்து'—அயர்ந்து, அதிசயித்துப் போனார் வள்ளுவர். நந்தவனத்தில் பூக்கள் மலர்வதை, '**கண் திறந்து**' என்று கூறியது, எவ்வளவு சிறந்த சொல்லாட்சி. மலர் மலர்வது, கண்திறப்பதைப் போலுளதாம். ஒருவன் உறங்கி விழிப்பதைக் கண்மலர்ந்தான் என்று கூறுகிறோம் அல்லவா? அதனால் ''நந்தவனம் கண்திறந்து, அங்ஙனம் கண் மலர்ந்த—பூப் பூத்த நந்த வனத்திலே. நாலுவகைப் பூஎடுத்ததாகப் பாடுகிறார் ஆச்சி அவர்கள்.

பூ எடுத்து, மலர் எடுத்து, அரும்பு எடுத்து—'பூப் பறித்து' என்பது எவ்வளவு மோசமான சொல்! தலைமுடியைப் பறிக்கலாம்—அது ஆழமாக வேரூன்றி இருக்கும். ஒருவரது காசுப்பையை வலிந்து, இழுத்துப் பறிப்பார்கள். ஆனால் பூப் பறிப்பதாகச் சொல்வது, நாகரிகமான சொல்லாட்சி அன்று. இடுக்கியையோ, இரும்பையோ வைத்து அழுத்திப் பிடுங்குவதைத்தான் பறிப்பதாகக் கூறவேண்டும். 'பூ எடுத்தல் —பூ மிகமென்மையானது; தொட்டதும் வந்துவிடும். அதனால் பூ 'எடுத்தால்' போதுமானது. எவ்வளவு நாகரிகமான, பொருத்தமான, நுட்பமான சொல்லாட்சி! வள்ளுவருக்குத் தம் தாயாரும் தம் துணைவியாரும் நினைவுக்குவந்தார்கள். இவர்கள் எல்லாம் வாய்மொழியாகப் பாடுவதில் எவ்வளவு வல்லமையுடையவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு மகனாகப் பிறந்ததனால்தான் தம் போன்றவர்களிடம் ஓரளவு சரக்கு இருக்கிறதென அவர் மகிழ்ந்து சொண்டார். அவருக்கு மேலும் ஆச்சி பாடும் தாலாட்டைக் கேட்க ஆர்வமாக இருந்தது. காதைத் தீட்டிக்கொண்டு கூர்மையாகக் கேட்டார்.

ஆராரோ ஆரிரரே ஆராரோ ஆரிரரோ என்று நீண்ட ஆலாபனத்துடன் தாலாட்டுத் தொடர்ந்தது.

வாழை இலைபரப்பி
 வந்தாரைக் கையமர்த்தி
வருந்தி விருந்துவைக்கும்
 மகராசர் பேரனோ
தென்னை இலைபரப்பிச்
 சென்றாரைக் கையமர்த்தி
தேடி விருந்துவைக்கும்
 திசைக்கருணர் பேரனோ!*

*தமிழண்ணல், தாலாட்டுத் தொகுப்பு செல்விபதிப்பகம், காரைக்குடி-1.1956.

வந்த விருந்தைக் கையசைத்து அழைத்து விருந்துவைப்பவர்கள் இந்த நகரத்தார். 'வாழை இலைபரப்பி அதிலே விருந்திடுவதில் இவர்கட்குக் கூடுதல் பிரியம். தஞ்சாவூர் தாட்டிலையை அன்றுமுதல், இன்றுவரை மிக விரும்புவார்கள். என்ன இடர்ப்பாடானாலும் தளரமாட்டார்கள். இளையான்குடி மாறர், பிற்காலத்தில் இவர்கள் குடியிலே பிறந்தாரென்றால் அதற்கு இப் பண்பாடே காரணமாகும். விதைநெல்லையும் இட்டு விருந்திடுவதுபோல்,



www.npnagarathar.com

84

வந்த விருந்தினர்க்கு எந்தக் குறையும் வைக்காமல் 'வருந்தி'—மிகப் பாடுபட்டு, கருத்தாக, கவனமாக விருந்துவைப்பார் களாம்! தம்வீட்டைக் கடந்து போகின்ற வர்களையும், தாமாக அழைத்துவந்து, தேடி விருந்துவைப்பார்களாம். அவர் களாக வந்தாலும் சரி, தாமாக அழைத்துவரினும் சரி, அத்தகைய இரு வகையார்க்கும் நல்லபடியாக விருந்து வைப்பவர்கள் என்பது புலப்படுகிறது. 'திசைக் கருணர்' என்று, திசை தோறும் தேடி விருந்துவைப்பவருக்குப் புதுப் பெயர் சூட்டுகிறார் ஆச்சி.

அன்று முழுவதும் இந்தத் தாலாட்டு வள்ளுவர் மனத்திலே கிடந்து ஊறிப் பதப்பட்டு, நல்ல இலக்கிய வடிவம் பெற்றுக் குறளாக மறுநாள் வெளிப் போந்தது.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து
பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு (86)

என்று, சென்றாரைக் கையமர்த்தி, வந்தாரைக் கையமர்த்தி சென்ற தொடர்களை நினைவில் வைத்து, சிற்சில மாற்றங்களுடன் இலக்கியக் குறளாக அது உருவானது. சிகப்பி என்பது செய்யாள் –சிவந்த நிறமுடை யவள், இலக்குமி என்றே பெயரே யாகும். சிகப்பி ஆச்சியை மறவாமல், வள்ளுவர் பிறிதொரு குறளில் 'அகன் அமர்ந்து செய்யாள் உறையும்' (இலக்குமி தங்குவாள்), விருந்தோம்பு வான் வீட்டில் என எழுதினார்.

வள்ளுவர் இத்தகைய நாட்டுப்புறத் தாலாட்டுகளைக் கேட்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் அங்கிருந்து சென்றார். அவர் 'விருந்து' என்ற அதிகாரத்தை நகரத்தார் விருந்துப் பண்பாட்டைப் பார்த்து எழுதினாரா? அல்லது குறள் கூறும் விருந்துப் பண் பாடு, இன்றளவும் நகரத்தார்களிடம் உளதா? இவ் வினாக்கள் வேண்டு மேல், மேன்மேலும் ஆராயப்படலாம். ஆனால், சிகப்பி ஆச்சிபோலும் திறமை மிக்கோரின் வழி வழி வந்ததாலேயே திருவள்ளுவர் போலும் பாவலர்கள் இங்கு தோன்றி வந்துள்ளனர்.

இந்தக் கதை உண்மைதானா என்று நீங்கள் ஐயப்படலாம். வாய்மொழிப் பாடல்கள் ஒருவர் எழுதி, ஒருவர் படித்து வருவன அல்ல. அவை ஒருவர் பாடி, கேட்டவரும் பாடி இவ்வாறே பரம்பரை, பரம்பரையாகச் செவி வழியே தொடர்புற்று வருபவை. அதனால் அவை காலத்தால் முற்பட் டவை; எழுத்து மொழி இலக்கியத்திற்கு முன்தோன்றி அந்த வரிவடிவிற்கு வழி காட்டியவை. எனவே எந்த ஒரு வரி வடிவ இலக்கியத்திற்கும் முந்தையது வாய் மொழி வடிவமே என்பது மேலை நாட்டாரும் ஆராய்ந்து கண்ட முடிவு. அதன்படி நோக்கினால் திருவள்ளு வருக்கு, சிகப்பி ஆச்சி போன்ற ஒருவரால்தான் மனத்தூண்டல் கிடைத் திருக்க வேண்டும் என்பது மிகையான கூற்று அன்று.



www.npnagarathar.com

# திருப்பணிகளுக்கு என் தொண்டு

பெரி. மெய்யப்பன்

பொதுவாகத் திருப்பணி செய்வதற்குப் பொறுமையும், அனைவரையும் அனுசரித்துப் போகும் தன்மையும், நிதி நிலைமையைச் சரிக்கட்ட விடாமுயற்சியும் தேவை. எந்தக் காரணம் கொண்டும் வேலையை நிறுத்தி வைக்காது தொடர்ந்து செய்து வர வேண்டும். நடுவில் நிறுத்தினால் மறுபடி ஆரம்பிப்பது சிரமம். கோவில் திருப்பணி என்பது மிகவும் சிரமமானது மட்டுமல்ல; அதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். என்னுடைய முன்னோர்கள் செய்த புண்ணியம் தான் என்னை இந்த ஆன்மீகத் துறையில் ஈடுபடுத்தியுள்ளது. இத்துறையில் வழிகாட்டியாக இருந்து என்னை ஊக்குவித்து ஈடுபடச் செய்தது மதுரை மீனாட்சி அம்மன் கோவில் முன்னாள் தக்காரும் எனது சம்பந்தியுமான திரு V.N. சிதம்பரம் செட்டியார் அவர்கள் ஆகும். அவர்களை முன்னோடியாகக் கொண்டு தான் நான் செயல்பட ஆரம்பித்தேன். திரு. V.N.C.T. அவர்களின் நல்முயற்சியால் தான் வேலூரில் பிரசித்தி பெற்ற "ஓடைப் பிள்ளையார் கோவில்" என்கிற சொர்ணமுகீஸ்வரர், முத்து மாரி அம்மன், ஐயப்பன் கோவில்களுக்குத் தக்காராக நியமிக்கப்பட்டு 3½ ஆண்டு காலம் பணி புரிந்தேன்.

திரு. கிருபானந்தவாரியார் அவர்களைத் தலைவராகக் கொண்டும், ஒரு திருப்பணிக் கமிட்டியும் அதன் பிறகு மூன்று கமிட்டிகள் ஏற்பட்டும் அந்த ஆலயத் திருப்பணி பல ஆண்டுகள் நிறைவு பெறாமல் இருந்து வந்தது. 1985ல் அந்த ஆலயத் திருப்பணிக் கமிட்டித் தலைவராக நான் பொறுப்பேற்று பல வித சோதனைகள், சிரமங்கள் ஏற்பட்டு மிகுந்த பிரயாசையுடன் அந்தத் திருப்பணியை முடித்து திரு V.N.C.T, திரு. மயிலை குருஜி சுவாமிகள் முன்னிலையில் 3.7.87ம் தேதி அன்று கும்பாபிஷேகம் மிகச் சிறப்புடன் அனைவரும் பாராட்டும் முறையில் நடைபெற்றது. என் வாழ்நாளில் நான் மறக்க முடியாத ஒரு மிகப் பெரிய சாதனையாக அதைக் கருதுகிறேன். திரு. வைத்தியநாதசுவாமி, திரு. சௌந்தர்ராஜன், திரு. பிரகாசம் போன்ற நெருங்கிய நண்பர்களின் பேராதரவும் எனக்குக் கிடைத்தது. சமீபத்தில் அதைச் சேர்ந்த முத்துமாரி அம்மன் ஐயப்பன் ஆலயம் அஸ்திவாரத்திலிருந்து முழுமையாகத் திருப்பணி செய்து ஸ்ரீ சாஸ்தா பக்த சபையின் ஆதரவுடன் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இதுபோல் ஐந்து ஆலயங்களின் திருப்பணியிலும், ஏழு



www.npnagarathar.com

கும்பாபிஷேகங்களிலும் முழுமையாகப் பங்கேற்றிருக்கிறேன். மேலும் பல ஆலயங்களின் திருப்பணியில் முக்கிய பங்கேற்று என்னுடைய கடமையைச் செய்து வருகிறேன்.

டாக்டர் குமரகுரு என்பவரின் முயற்சியால் கட்டப்பட்டுள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்திற்கு நிர்வாகக் குழுத் தலைவராகவும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ ஆலகண்டேஸ்வரர் ஆலயத்தின் ஆலோசனைக் குழுவிலும் செவ்வனே பணியாற்றி வருகிறேன். ஆலயத் திருப் பணிகளில் என்னுடன் பல ஸ்தபதிகள் பணியாற்றி இருக்கிறார்கள். என்றாலும் எனக்கு உறுதுணையாக இருந்து சொன்ன வேலையைச் சொன்னபடி குறிப்பிட்ட நேரத்தில் செய்துகொடுத்து சிறப்பித்துக் கொடுப்பவர் ஸ்தபதிசுந்தர மூர்த்தி என்பவர் குறிப்பிடத்தக்கவர். அதனால் தான் அவரை நம் நச்சாந்து பட்டி நகர சிவன் கோவில் திருப்பணி யில் முழுநம்பிக்கையோடு ஈடுபடுத்தி னேன். எனது சகோதரர் திரு. பெரி. அழகப்ப செட்டியார் அவர்கள் சிவன் கோவில் திருப்பணி கும்பாபிஷேகக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்று மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருவது எனக்குப் பெருமையாக இருப்ப துடன் நான் முன்பு எழுதியுள்ளபடி எங்களுடைய முன்னோர்கள் செய்த புண்ணியம் தான் எங்களுக்கு இத்தகைய சிறப்புக்கள் கிடைத்து வருகின்றன என்று முழு மனதுடன் நம்புகிறேன். அவர்கள் இந்த அளவு ஆர்வத்துடனும் பக்திச் சிரத்தையுடனும் பொறுப்பு மிக்க நகரத் தார்களின் உறுதுணையுடன் சிரத்தை யாகப் பணியாற்றி வருவது போற்றுதற் குரியதாகும்.

ஆலயத் திருப்பணிகள் செய்யும் பொழுது நமக்கு நிம்மதியும், திருப்தியும் ஏற்படுவதுடன், நம் எண்ணம் திசை மாறாமல் ஆன்மீகத்தில், பக்தி வழியால் ஒரு மனப்படுகிறது. நாம் பிறந்ததும், வளர்ந்ததும், நம்மைக் காப்பதும் காப் பாற்றப் போவதும் இறைவன். அந்த இறைவனுக்கு இத்தகைய தொண்டுகள் மூலம் நற்பணி செய்வது நம் அனை வரின் கடமையாகும். நச்சாந்துப்பட்டி நகரத்தார் ஒன்று சேர்ந்து போட்டி யிட்டுக் கொண்டு, மிகுந்த ஆர்வத்துட னும் பிரயாசையுடனும் சுமார் 80 ஆண்டு நிறைந்த பழமையான நகர சிவன் கோவில் திருப்பணியை முடித்துக் கும்பாபிஷேகம் சிறப்பாகச் செய்வது போற்றுதற்குரிய சீரிய உதாரணமாகும். மலர்க் குழு தலைவர் திரு.பழ.சி. ராம சிவனடியான் செட்டியார் அவர்களின் பேரார்வமும் போற்றுதற்குரியதாகும். அவர்கள் எண்ணப்படி ஒரு கல்யாண மண்டபம் கட்டப் பெறுமானால் நம்ம வர்க்கு அது பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. என்னைப்பற்றி எழுதியது தற்பெருமைக்கோ அல்லது வேறு எந்தக் காரணத்தை முன் னிட்டோ அல்ல. நம்மவர்களின் திருப் பணி ஆர்வத்தைத் தூண்டிவிடவேண்டும். இந்தக் கட்டுரை தூண்டுகோலாக அமைய வேண்டும் என்பதே என் எண்ணம். தொன்றுதொட்டு நம் முன் னோர்கள் செய்து, பயனடைந்து வள முடன் வாழ்ந்ததற்கு ஆலயத் திருப்பணி களே காரணம். அந்தப் பணியை நாமும் தொடருவோம். பயனடைவோம். நம்மவர்களின் திருப்பணிகள் தொடரட் டும்; தெய்வீகம் வளரட்டும்.


www.npnagarathar.com

# சிவகாமி அம்பிகை மணி மாலை

குமட. திருப்பதி, M.A. B.Ed.

(நச்சாந்துப்பட்டி சிதம்பரேசுரர் உடனாய சிவகாமி அம்மன் திருக்கோயிலில் எழுந்தருளி அருள்பாலித்துவரும் சிவகாமி அம்மன் மேல் பாடப்பட்ட பாடல்கள்)

1. நற்சான்றோர் ஏத்துபுகழ் நற்சாந்து பட்டி உறை
நகரத்தார் சேர்ந்து இன்று,
நல்லதொரு தைத்திங்கள் இருபத்தி ரண்டுதனில்
நல்லருளை நாடி நின்று,
சுற்றியுள்ள ஊர்மக்கள் சூழ்ந்துநின்று போற்றிடவே
கும்பாபி டேகம்செயக் கண்டு,
இத்தருணம் நீவந்து, இன்பமுகிலே! எங்களுக்கு
இன்னருளைப் பொழிக நன்று.

2. ஊர்மக்கள் சேர்ந்திங்கு தாயிடத்தில் முறையிட்டோம்
உன்சேய்கள் நாங்கள் இலையோ?
பார்முழுதும் உனது அருள் பரவிடினும் எமக்கிங்கே
பாலூட்டும் தாய்நீயே இலையோ?
சேய்களாற்றும் திருப்பணியை சிரமீதில் கொண்டருளி
சேர்த்தணைப்பாய் அன்புத் தாயே!
சால்புடைய திருமலை சமுத்திரம் கோயில்கொண்ட
தாயே! சிவகாமி உமையே!

3. சுந்தரத்தின் நாயகியாய் சோதிச்சுடர் வீசிவரும்
சோதனைகள் நீக்கி வைப்பாய்;
பந்தத்தில் உழன்றுமிகு பாவங்களைச் செய்துநிற்கும்
பாவிகளைக் காத்து நிற்பாய்;
அந்தமிலள் ஆதியிலள்என ஆயிரங்களான வேதம்
அடிபணியும் அன்பு மகளே!
எந்தன்ஊர் கோயில்கொண்டு எமக்கெலாம் அருள்புரியும்
இணையிலாத் தெய்வ மகளே!



www.npnagarathar.com

4. அந்தகர்எம் கண்களிலே அருளொளியை ஏற்றிவைத்து
காரிருளைக் களைந்து நிற்பாய்;
அங்கமெலாம் திரியாக்கி அன்பென்னும் நெய்யூற்றி
அருள்விளக்கை ஏற்றி வைப்போம்;
பங்கமிலா அருள்தந்து பார்வையிலே கருணையுடன்
பாவங்களை நீக்கி நிற்பாய்;
சந்ததமும் உந்தனையே சரணமெனப் புகுந்தோம்நாம்
சனங்களெமைக் காக்க வருவாய்!

5. சிதம்பரர் மனமகிழ சிரிப்புடன் நின்றிருக்கும்
சிவகாமிச் செல்வ மகளே!
பரம்பொருள் உனையன்றிப் பாரினிலே எமக்கிங்கு
பக்கதுணை யாரும் உண்டோ?
வரம்தரும் நேரமிது வந்திடுக விரைந்திங்கே
வருவதிலே என்ன தடையோ?
தனம்மிகும் நகரத்தார் தந்தகொடை எல்லாமே
தாயுனது திருப்பணிக்குடை மையிலையோ!

6. மங்கலங்கள் பொங்கிவரும் மங்கையிவள் புன்னகையில்
மயங்கிவிடும் எங்கள் மனமே!
கங்கையென ஓடிவரும் கருணைநதி மூழ்கிவிடின்
கரைந்து விடும்பாவ வினையே!
என்னகுறை ஆயிடினும் சந்நிதியில் சொன்னகுறை
தீர்ந்துவிடும் அந்த நொடியே!
நன்னகராம் பூம்புகாரில் வாழ்ந்திருந்த நகரத்தார்
நற்குலம் விளங்க வந்தமகளே!

7. தங்கமம்மா நின்மேனி; தனிவயிரம் இருகைகள்
அங்கமெலாம் பொங்கும் அழகோ!
கண்களிலே அன்புஒளி; கால்களிலே சந்தஒலி;
கன்னல்மொழி உந்தன் மொழியோ!
அந்தகனின் சிந்தையிலே அருவியென கவிதைநதி
பொங்குவதும் உந்தன் அருளோ!
சிந்தையிலே குன்றியொரு மந்தையென வாழ்ந்தஎனை
சந்தக்கவி பாடவைத்த பொருளே!



www.npnagarathar.com

8. கற்கண்டுபோல் சொற்கொண்டு கவிஞரெலாம் பாடுகின்ற
கனிவுநிறை கருணை மகளே!
கற்றறியா ஏழையினேன் பாடுகின்ற பாடலையும்
கால்மலரில் அணிந்து மகிழ்வாய்!
பொற்புடைய கற்புத்தாய் மீனாட்சி தேவியொடு
குமரப்பன் பெற்ற மகனை
நற்றமிழில் நாளுமொரு நல்லகவி பாடவைத்த
நலமேவும் செல்வ மகளே!

---

# என்ன இல்லை நம்மிடம்! ஏன் தான் தாமதம்? முன்னேற்றம்

**சி. வெ. லெ. சித. சுப்பிரமணியம்**

அன்பும் பண்பும் இல்லையா நம்மிடம் – நல்ல
ஆற்றலும் போற்றலும் இல்லையா நம்மிடம்!
இளமையும் வலிமையும் இல்லையா நம்மிடம் – நல்ல
ஈகையும் ஈதலும் இல்லையா நம்மிடம்!
உண்மையும் தன்மையும் இல்லையா நம்மிடம் – நல்ல
ஊக்கமும் ஆக்கமும் இல்லையா நம்மிடம்!
எளிமையும் இனிமையும் இல்லையா நம்மிடம் – நல்ல
ஏற்றமும் மாற்றமும் இல்லையா நம்மிடம்!
ஐக்கியமானோர் இல்லையா நம்மிடம் – நல்ல
ஒற்றுமை உணர்வு இல்லையா நம்மிடம்!
ஓரின உணர்வு இல்லையா நம்மிடம் – நல்ல
ஔவையின் பழமொழி இல்லையா நம்மிடம்!

என்னதான் இல்லை நம்மிடம் – இங்கு
எல்லாம் உண்டே நம்மிடம் – பின்னே
முன்னேற்றம் ஏன் தான் தாமதம்?



www.npnagarathar.com

# திருப்பணி வாழ்க!

வி.என். சிதம்பரம்

"சுவையான உணவு படைக்க அன்புள்ள தாய் வேண்டும். ஒழுக்கமுள்ள நடத்தைக்கு நல்ல நண்பர்கள் இருக்க வேண்டும். நல்ல அறிவுரைவழங்க சிறந்த ஆசான் வேண்டும். இனிமையான இல்வாழ்க்கைக்கு இங்கிதமான மனைவி வேண்டும். தூயசிந்தனை பிறக்கத்தெய்வ பக்தி வேண்டும்" என்று உபநிடதங்கள் குறிப்பிடுகின்றன. இந்தத் தெய்வ பக்தியில் சிறந்தவர்கள் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள். பெருஞ் செல்வத்தைத் துய்க்கும் பொழுதே 'பேரின்ப நாட்டத்தால் திருப்பணியும் செய்யக்கூடிய பக்குவம் நகரத்தார் களுக்கு உண்டு.

"கோயிலுக்குக் கூரையில்லையா? கூப்பிடு செட்டியாரை" என்று ஒரு பழமொழி உண்டு. அவர் வந்தால் கூரையில்லாத கோயிலுக்கு மேல் விதானம் அமைத்துக் கோபுரத்தையும் கட்டிவிடுவார். செலவுசெய்யும் பலபேர் ஊருக்குச் சேவை செய்வதில்லை. சிக்கனமாய் இருக்கும் செட்டியார் சிவன் கோயில் கட்டிவிடுவார். இத்தகைய நகரத்தார்கள் வளர்ந்துள்ள நற்சாந்து பட்டியில் சிவகாமியம்மை உடனாகிய சிதம்பரேசர் திருக்கோயிலில் நகரத்தார் களின்முயற்சியால் திருப்பணி நிறைவேறிச் குடநீராட்டு விழா நிகழ்வது கண்டு பெருமகிழ்ச்சியடைந்து இந்தத் திருப்பணிக்குக்காரணமாகஇருக்கும்சான் றோர்களை என் மனமொழிமெய்களால் வணங்கி வாழ்த்துகிறேன்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற முதுமொழிக்கு இணங்கப் பெட்டியடி வைத்த ஊர்களில் எல்லாம் பிறவாயாக்கைப் பெரியோனா கிய இறைவனுக்குஆலயம்கட்டியவர்களா கிய நகரத்தார்கள், அன்னதானம் செய்வ தோடு ஞான தானமும் செய்ய வல்ல வர்கள். நற்சாந்துபட்டிக் குடநீராட்டு விழாவையொட்டி, உயர்ந்த கருத்துக் களை விளக்கும் அறிஞர் பெருமக்களின் கட்டுரைகள் அடங்கிய மலர் உருவாகி மணம் வீசுகிறது. இந்தமலர், படிப்ப வர்க்கு ஞானம் தரும் பைந்தமிழ் மலராக விளங்க வாழ்த்துகிறேன்.

நிலத்தில் விதையாகப் போடும்நெல் சிறிய அளவே இருந்தாலும், அறுவடை செய்வது அதைவிடப் பலமடங்கு அதிகமாக இருக்கிறது. இதுபோல, ஆண்டவன் திருப்பணியில் நாம் கொடுப் பது சிறிதளவாக இருந்தாலும், அது பெரிய அளவில் நம்மிடமே திரும்பி வந்து சேர்கிறது. இந்தமுறையில் நகரத் தார்கள் செய்த தருமம் இன்றுவரை நம்மைக்காப்பாற்றிவருகிறது. இறைவன் ஆலயத் திருப்பணிக்கு வாரி வழங்கிய பெருமக்களுக்கும், குடநீராட்டுவிழாக் குழுவினருக்கும், மலர் மலரக் காரணமானசான்றோர்களுக்கும் எல்லா நன்மைகளையும் தர, என்னைப்பணி கொண்ட அன்னை மீனாட்சியின் திருவடிகளை வணங்கி வாழ்த்துகிறேன்.



www.npnagarathar.com

# நற்சாந்துப்பட்டி நகரத்தார் சங்கம்

**மு.மெ. முத்துராமன் செட்டியார்.**



நம் முன்னோர்களால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட ஸ்தாவர சொத்துக்களின் வருமானங்களையும் உபயமாகக் கொடுக்கப்பட்ட துகைகளையும் வைத்து நற்சாந்துப்பட்டி அருள்மிகு ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சிவகாமி அம்மன் ஆலயம் பராமரிக்கப்படவும், ஊரில் நல்ல காரியங்கள் பல செய்யவும், நன்கொடையாக வந்த சொத்துக்களை முறைப்படி நிர்வகிக்கவும், நகரத்தார்கள் ஒன்றுகூடி பேசிமுடிவு செய்து கொண்டபடி நற்சாந்துப்பட்டி நகரத்தார் சங்கம் என்னும் இச்சங்கமானது புதுக்கோட்டை மாவட்டப்பதிவாளரிடம் 10.3.1981ல் 17/1981ஆம் நம்பராக சங்கங்கள் பதிவு சட்டப்பிரகாரம் பதிவு செய்யப்பெற்று 22.3.1981ஆம்தேதியன்று கோலாகலமாக ஸ்தாபிதம் செய்யப் பெற்றது.

நற்சாந்துப்பட்டியில் உள்ள இலுப்பைக்குடி கோயில் (1) வயிரவன்கோயில் (2) இளையாற்றங்குடி கோயில் (3) பிள்ளையார்பட்டி கோயில் (4) மாத்தூர் கோயில் (5) ஆக இந்த ஐந்து கோயில் பிரிவுகளைச் சேர்ந்த திருமணமான ஆண்கள்யாவரும் உறுப்பினர்கள் ஆவார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் மகாசபைக் கூட்டம் கூடி மார்ச் மாதம் வரை உரிய கணக்குகளைப் பரிசீலனை செய்தும் கோயிலுக்கு இருவர் வீதம் பத்து உரிய நிர்வாகசபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, தமிழ் ஆண்டு வைகாசி மாதம் முதல் ஒரு ஆண்டு காலத்துக்குப் பதவி வகிப்பார்கள்.

ஸ்தாபித ஆண்டான 1981ஆம் ஆண்டுக்கு:

1. ஸ்ரீ.மு.மெ.முத்துராமன் செட்டியார் — தலைவர்
2. ஸ்ரீ.ராம.ராமனாதன் செட்டியார் — உபதலைவர்
3. ஸ்ரீ. கும.பழ.குமரப்ப செட்டியார் — செயலாளர்
4. ஸ்ரீ.சித.குப்பான் செட்டியார் — உதவிச் செயலாளர்
5. ஸ்ரீ.வீ.அ.மு.அண்ணாமலைசெட்டியார் — பொருளாளர்



www.npnagarathar.com

6. ஸ்ரீ.வெ.லெ.ரெங்கநாதன்செட்டியார்— உறுப்பினர்
7. ஸ்ரீ.ஆ.மெ.ஆண்டியப்ப செட்டியார் — உறுப்பினர்
8. ஸ்ரீ.கு.ம.வெ.குமரப்ப செட்டியார் — உறுப்பினர்
9. ஸ்ரீ.லெ.அரு.அருணாசலம்செட்டியார்— உறுப்பினர்
10. ஸ்ரீ.சுப.பழநியப்ப செட்டியார் — உறுப்பினர்

ஆகியவர்கள் நிர்வாக சபை உறுப்பினர்களாக நகரத்தார்களால் நியமனம் செய்யப்பெற்று நிர்வகித்தார்கள்.

இச்சங்கத்துக்குச் சொந்தமான ஸ்தாவர சொத்துக்களிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டும் நகரத்தார்களின் நன்கொடைகளைக் கொண்டும் நற்சாந்துப்பட்டி அருள்மிகு ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சிவகாமிஅம்மன் கோயிலில் நித்தியப்படி பூஜை படித்தர செலவுகள் அனைத்தும் செய்யப்பட்டு வருகிறது.

சங்கத்துக்குச் சொந்தமான உற்சவ விக்கிரகங்கள் எட்டையும் தொல் பொருள் ஆய்வுத்துறையிடம் தொல் பொருள் சட்டப்படி 1.8.81ஆம் ஆண்டு பதிவு செய்யப்பெற்று இருக்கிறது.

நமது சங்கத்தையும் இந்திய வருமானவரிச்சட்டம் 12எண் பிரகாரம் 9.8.82இல் மதுரை வருமானவரி கமிஷனரிடம் பதிவு செய்யப்பெற்று இருக்கிறது.

ஸ்ரீ சு.ப.லெட்சுமணன் செட்டியார் தலைமையிலான ஆண்டுக் காலத்தில் அருள்மிகு.ஸ்ரீ.சிதம்பரேஸ்வரர் சிவகாமி அம்மன் கோவிலில் 13.6.83இல் ஜென்ம நட்சத்திர அர்ச்சனை ஒன்றுக்கு ரூ.101 வீதம் ஆரம்பிக்கப் பெற்று சீரிய முறையில் நடந்து கொண்டு வருகிறது.

ஸ்ரீ. கும.மாணிக்கம் செட்டியார் தலைமையிலான ஆண்டுக்காலத்தில் பழைய போஸ்டாபீஸ் இடத்தில் கடைகள் நான்கும் சங்கத்தின் வருமானத்தையும் நகரத்தார்களின் நன்கொடைகளைக் கொண்டும் 8.3.86இல் சுமார் ரூ.87,000/ - சிலவில் கட்டப் பெற்று வாடகைக்கு விடப்பெற்று இருக்கிறது.

ஸ்ரீ.மு.மெ. முத்துராமன் செட்டியார் தலைமையிலான ஆண்டுக்காலத்தில் சுமார் 50 ஆண்டுக்கால இடைவெளிக்குப்பிறகு மிகுந்த பிரயாசையுடன் பழனியாண்டவர் மகேஸ்வர பூஜையும் 8.8.86இல் மிகுந்த பொருட் செலவில் நடைபெற்றது. அதன் தொடர்பாக ஸ்ரீ.வீ.அமு. அண்ணாமலை செட்டியார் தலைமையிலான ஆண்டுக் காலத்தில் சுமார் ரூ.50,000/ - சிலவில் 14.11.87இல் சின்ன ஊரணியில் மேற்கு கரையில் கடைகள் 6ம் கட்டப்பெற்று வாடகைக்கு விடப்பெற்றுஇருக்கின்றன.

15.5.90 முதல் 14.5.91 வரை உள்ள நடப்பு ஆண்டுக்காலத்துக்கு

1. ஸ்ரீ.சித.குப்பான் செட்டியார் — தலைவர்
2. ஸ்ரீ.சித.பழ.முத்துச் செட்டியார் — உபதலைவர்



www.npnagarathar.com

3. ஸ்ரீ.மு.சம்மந்தம் செட்டியார் — செயலாளர்
4. ஸ்ரீ.அ.மு.சிதம்பரம் செட்டியார் — உபசெயலாளர்
5. ஸ்ரீ.பழ.ராமநாதன் செட்டியார் — பொருளாளர்
6. ஸ்ரீ.ஆ.முரு.சுப்பையா செட்டியார் — உறுப்பினர்
7. ஸ்ரீ.வீ.சிங்காரம் செட்டியார் — உறுப்பினர்
8. ஸ்ரீ.பழ.சுந்தரேசன் செட்டியார் — உறுப்பினர்
9. ஸ்ரீ.வீ.ர,அண்ணாமலைசெட்டியார் — உறுப்பினர்
10. ஸ்ரீ.ஆ.மெ.ஆண்டியப்பசெட்டியார் — உறுப்பினர்

ஆகியவர்கள் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பெற்று தற்பொழுது சங்கத்தை நிர்வகித்து வருகின்றார்கள்.

இந்த ஆண்டு காலத்தில் ஏராளமான பொருட்செலவில் நகரத்தார்களின் நன்கொடைகளைக் கொண்டு அருள்மிகு ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சிவகாமி அம்மன் கோயிலில் பலதரப்பட்ட திருப்பணிகள் சீரிய முறையில் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

இக்கோயிலில் மகா கும்பாபிஷேகமும் 19 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு வரும் 4.2.1991 காலை 9.30முதல் 10.15 மணி அளவில் நடைபெற இருக்கிறது. ஸ்ரீ பெரி. அழகப்பசெட்டியாரும் மிகுந்த ஊக்கத்துடன் தலைமை தாங்கி நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

நடப்பு ஆண்டு அறங்காவலரான ஸ்ரீ.பழ. ராமனாதன் செட்டியாரும் சிறப்புடன் செயல்பட்டு வருகிறார்கள். இக்கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஸ்ரீ.பழ.சி.ராம.சிவனடியான் செட்டியார் தலைமையில் மலர் வெளியிட்டு அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு சின்ன ஊரணியில் பழுதடைந்து இருக்கும் கீழ் கரையைச்செப்பனிட்டும், மீதமிருக்கும் துகையிலும் நகரத்தார்களின் நன்கொடைகளைக் கொண்டும் சிவன் கோவிலுக்கு எதிரில் உள்ள இடத்தில் கல்யாண மண்டபம் கட்டுவதாக முடிவு செய்து அதன் வேலைகளும் கடும் உழைப்புடனும் உற்சாகத்துடனும் நடந்துகொண்டு வருகின்றன.

இப்பணிகளும் நமது சங்கத்தின் முக்கிய கொள்கையான இறைவன் அறப்பணியும், சீரிய முறையிலும் சிறப்பாகவும், தொடர்ந்து செவ்வனே நடைபெற்று வர எல்லாம் வல்ல ஸ்ரீ கற்பக விநாயகர் திருவருளால் அருள்மிகு ஸ்ரீ, சிதம்பரேஸ்வரர் சிவகாமி அம்மன் அருள் புரிவாராக!

வாழ்க சங்கம்! வளர்க பல்லாண்டு!



www.npnagarathar.com

# மீண்டும் பிறந்திடுக கவியரசே

குமட திருப்பதி, M.A.,B.ED,

(கவியரசு கண்ணதாசன் பற்றிய கவிதை)

---

கீதையின் வழியிலே கீதங்கள் பொழிந்தே
கீர்த்தி மிகுதமிழ் மகனே!
வேதமாம் உந்தன் நாதத்தை ஏன்
பாதியிலே நிறுத்தி விட்டாய்!
வேதத்தைப் படைத்த அந்த வானோர்கள்
அதனினும் சுவைமிக்க உந்தன்
நாதத்தின் நடை கற்கவே நாதனே
உனை அழைத்துக் கொண்டார்!

சிந்தனையின் சிகரத்தில் சந்தக் கவியெழுதும்
உந்தன் சுந்தரக் கரங்களெங்கே?
நிந்தனைகள் மொழிந்தாலும் வந்தனைகள் கூறி
வரவேற்கும் உன் சந்திர வதனமெங்கே?
இந்திரனின் அவையில் செந்தமிழின் சுவைஉரைக்க
உய்ந்ததோ சுந்தர வதனம்;
மந்திரக் கவிஞன் கம்பனைத் தழுவி மகிழ
உயர்ந்ததோ சுந்தரக் கரங்கள்;

கவியரசாய் புவியாண்டது போதும் என்றெண்ணி
விண்ணரசாள வேண்டி விரைந்தனையோ?
தெவிட்டாத 'தேன்தமிழும்' மறந்தனையோ? தேவனாம்
கண்ணனை நாடிப் பறந்தனையோ?
புவியை இன்று மறந்தாலும் தமிழ்க்
கவிதை தன்னை வாழ்விக்க
புவியில் புதிதாய் மீண்டும் பிறந்திடுக!
பூ தலம் புகழும் கவியரசே!

---



www.npnagarathar.com

# சீர் கூட்டும் சிவகாமி

இராம. குப்பான் செட்டி MA., MA., MA., M.Ed.

அரும்புகிற புன்னகையும் அருள்காட்டும்
அஞ்சனமும் உலவுகிற திருமுகமே!

கரும்புநிகர் சுவையதனைக் கைதொழுவார்
கண்டிடவே கருணைமிகு பேரழகே!

பெரும்புகழே மண்டிட்ட சிவகாமி
பெண்ணரசி பேர்பெற்ற திருத்தலமே!

வரும்பக்தர் குறைதீர்த்து வரமதனை
வழங்குகிற வற்றாத ஜீவநதியே!

மங்கலமாய்த் திகழ்தற்கு மட்டின்றி
மகத்துவமே புரிகின்ற இறையவளே!

தங்கநிகர் கரத்தாலே அபயமதை
தந்திட்ட தவமான பெருங்கடலே!

பொங்குகிற பக்தியிலே பூரிக்கும்
பக்தர்க்கு புரிந்திட்டாய் அற்புதமே!

தங்குகிற இடமாக தக்காரை
தான்பெற்ற தண்ணளி இமக்கொடியே!

சீர்கூட்டும் சிவகாமி சிந்தைநிறை
சிதம்பரனார் சிறந்திட்ட பேரூரில்

ஊர்மக்கள் இன்றைக்கு உள்ளத்தில்
உற்சாகம் தான்கண்டு மகிழ்ந்திருக்க

கார்கூந்தல் மீனாட்சி கண்கண்ட
கடவுளென தானின்று கண்டுகொள்ள

பார்போற்றும் குடமுழுக்கு பார்த்திட்ட
பக்தர்க்கு பரமபதம் நிச்சயமே!



www.npnagarathar.com

# நகரின் பெருமை

பெ.ராம.ராம. சம்மந்தம்

நச்சாந்துப்பட்டி என்று ஒரு நகரம்
நற்பணி செய்வதிலே அது ஒரு சிகரம்
ஆனைமுகன் கோவில் அனைவரையும் ஈர்க்கும்
ஆலையங்கள் பல நகரின் பெருமை சேர்க்கும்.

திருவிழா எடுக்கும் அது பெருவிழாவாக இருக்கும்
மறுவிலா மாலைகட்டி மங்கைதனை வரவேற்கும்
தேரோடும் ஊரிலே தெய்வ மணம் தெரியும்
பார்புகழும் கோட்டூர் அம்மன் புகழ் பாடும்.

காவடிகள் ஆடிவர கந்தன் புகழ் பாடியே
சேவடிகள் சரணமென மலைக்கோவில் சேர்க்கும்
ஆறுதலை காட்டி நமக்கு ஆறுதல் கூறும்
ஆறுமுகன் வேலுக்கும் ஒரு பூசை கொடுக்கும்.

சபரிமலை வாசனுக்கு ஒருமாத விரதமிருக்கும்
பக்தர்களின் பா இனிக்கும் ஊரே நெய் மணக்கும்
திருப்படி பதினெட்டு பலன் இங்கே கிட்டும்
மறுபடி மறுபடி இருமுடி இங்கே கட்டும்.

சிதம்பரம் உடனிருக்கும் சீதேவி பொன் மணியே
சீரான வாழ்வு தரும் சிவகாமி அம்மையே
அற்புதங்கள் செய்யும் அழகான உமையவளே
பொற்பாதங்கள் வணங்குகிறோம் புனிதத்தாயே.

பாமாலை பாடினால் அது பூ மாலையாகும்
பூமாலை போட்டால் அது பொன் மாலையாகும்
சிரம் தாழ்த்தி கரம் கூப்பும் எங்களுக்கு
வரம் வேண்டும் அருள் தரவேண்டும் தாயே.

நல்லா இருப்பதற்கும் நகரம் சிறப்பதற்கும்
நாடறிய குடமுழுக்கு நல் முறையில் செய்திட்டோம்
எல்லோரும் இங்கு இன்பமுடன் வாழ
நல்லாதரவு தந்து எங்களைக் காத்திடுவாய் அம்மா.



www.npnagarathar.com

97

# நான் பார்த்த கோவை நம்மவர்க்கு ஏற்ற கோவை

S.V. சிவனடியான்

மண்ணில் நல்ல வண்ணம்
வாழலாம், வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு
யாதும் ஓர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறுங்
கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும்
பெருந்தகை இருந்ததே.

– திருஞான சம்மந்தர்

1929ஆம் வருடம் என் தகப்பனார் திரு சிவகாமி செட்டியார் அவர்களுடன் கோவ்வ வந்தேன். அப்பொழுது எங்கள் வீட்டிலிருந்து அயல்நாடு செல்கிறவர்கள் செய்யும் சடங்கு மாதிரி துணிப் பொட்டலம் கட்டி சாமி அறையில் வைத்துக் கும்பிட்டு எல்லோரிடமும் முறையாகச் சொல்லிக்கொண்டு சிவன் கோவில், பிள்ளையார் கோவில் வந்து சுவாமி தரிசனம் செய்து திருச்சி வரை பஸ்ஸில் வந்து அங்கிருந்து ரயிலில் புறப்பட்டு மறுநாள் காலை கோவை வந்தோம். எங்கள் கடைக்கட்டிடம் கோவை ராஜவீதியில் 1924 – ல் கட்டப் பட்ட பின்பு நான் 1929 – ல் கோவை வந்து சேர்ந்தேன். எங்கள் கடை ராம. பழ.சி. விலாசத்தில் பொதுக்குடும்பக் கடையாக எங்கள் பாட்டனார் சாலத்தில் 1885 க்கு முன் வைக்கப்பட்டு நடந்து வந்தது. செவ்லூர் சொக்கலிங்கம் செட்டியார் மேலாளராக இருந்து நடத்தி வந்தார்கள். எங்கள் தகப்பனார் கோவை மாவட்டத்தில் பல்லடம், அவினாசி, சூலூர், குன்னத்தூர் ஆகிய ஐந்து ஊர்களில் வட்டி லேவாதேவிக்கடை வைத்திருந்தார்கள். எல்லாம் வெண்ணலையில் கொடுத்து வாங்குவது. எல்லா ஊரிலும் கடை வைத்தமூன்று நான்கு வருடங்களில் சொந்தத்தில் கடைக்கு வீடு வாங்கி இருக்கிறார்கள். ஆனால் அயல்நாட்டுக் கடை மாதிரி 1960-ம் வருடம்வரை ஆண்கள் மட்டுமே தனிமையில் வட்டிக் கடைகளை நடத்தியிருக்கிறார்கள். பெண்கள் நச்சாந்துப்பட்டியிலேயே இருந்திருக்கிறார்கள். சிலகோவில் விசேடங்களுக்கு மட்டும் குடும்பம் கோவைக்கு வருவதும் சிலநாள் தங்கிச் செல்வதுமாக இருந்திருக்கிறார்கள். தற்சமயம் எல்லார் குடும்பமும் கோவையிலேயே இருந்து வருவது பெரிய மாற்றம். நச்சாந்துப்பட்டிக்கு விசேடங்களுக்கு பட்டும் சில தினங்கள் சென்று வருவார்கள்.

ராஜவீதியிலுள்ள வீராசாமி முதலியார் செகண்டரி பள்ளியில் நான் 3ஆவது வகுப்பில் சேர்ந்து 5ஆவது வரை



www.npnagarathar.com

98

படித்து 6 ஆவது வகுப்புக்கு முனிசிபல் ஹைஸ்கூலில் சேர்ந்து 1939ஆம் வருடம் SSLC வரை படித்து 1940, 1941ல் அரசினர் கலைக்கல்லூரியில் படித்து, கோவையில் அதற்குமேல் பட்டப் படிப்பு அந்தக்காலத்தில் இல்லாததால் 1942, 1943ல் சென்னையில் லயோலா கல்லூரியில் B.A. படித்தேன். அது சமயம் கோவையில் இண்டர் மீடியட் வரை தான் இருந்தது 1943க்குப்பின் கோவையில் மளமளவெனப் பல கலைக் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரி, மூன்று பொறியியல் கல்லூரிகள்வரை ஏற்பட்டு தற்சமயம் ஸ்ரீ அவனாசிலிங்கம் (தன் னாட்சிமுறை) பல்கலைக்கழகம், பாரதி யார் பல்கலைக் கழகம், தமிழ்நாடு G.D நாயுடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகியவைகள் ஏற்பட்டு, கல்வியில் சென்னை மாநிலத்தில் சென்னைக்கு அடுத்தபடியான இடத்தைக் கோவை நகரம் பெற்றிருப்பது பிரமிக்கத்தக்க கல்விமுன்னேற்றம். பாரஸ்ட் காலேஜ் ஆரம்பமுதலே இருக்கிறது' 1929-ல் இருந்த மக்கட்தொகை 1990-ல் 20 மடங்காக உயர்ந்திருக்கிறது.

1932 வரை கோவைக்கு Generator மூலம் மின்சாரம்பொது இடங்களுக்கும், வீதிவிளக்குகளுக்கும் சில வீடுகளுக்கு மட்டும் வின்சென்ட் என்கிற தனியார் நிறுவனம் மூலம் கிடைத்து வந்தது. எங்கள் வீட்டில் 1934 வரை உபயோகித்தது மண்ணெண்ணை விளக்குகள்தான். நகராட்சியாக இருந்த கோவை, மாநகராட்சியாக மாறி யுள்ளது. எங்கள் வீடு கோவையில் நடு பாகத்தில் இருக்கிறது. சுமார் ஒரு கிலோமீட்டர் தூரம் வரைதான் வீடுகள் இருக்கின்றன. இப்பொழுது நாலுபுறமும் 25 கிலோமீட்டர் வரை நகரம் விரிந்து பரவியுள்ளது. மாட மாளிகைகள், கூடகோபுரங்கள் ஏற் பட்டுள்ளன.

கோவையில் 1929-ல் 4. நச்சாந்து பட்டி கடைகள் 1) ராம.பழ.சி 2) கும. ராம 3) குழ.கும 4) ந.க.சுப' ஆகியவை களும், 6 தேவகோட்டைக் கடைகளும் மட்டுமே இருந்து லேவாதேவி தொழில் செய்து வந்தார்கள். அதன் மூலம் பேரூரில் ஒரு விடுதி நடத்தி பேரூர் கோவிலில் நடக்கும்.

(1) ஆவணி சதுர்த்தி

(2) மார்கழி ஆருத்திரா தரிசனம்

(3) பங்குனி உத்திரதரிசனம்

மூன்றையும் வெகு சிறப்பாக நடத்தி வந்தார்கள். அப்பொழுது 2செட்டியார் நூல் ஆலையும், 2 நாயக்கர் நூல் ஆலையும் இருந்தன. தற்சமயம் செட்டி யார் நூல் ஆலைகள் புதிதாக ஏற்பட்ட 2 இருக்கின்றன. பழைய ஆலைகள் 2 ம் NTCக்கு மாறியுள்ளன. தற்சமயம் NTC ஆலைகள் சுமார் 5ம் நாயுடுமார் ஆலைகள் 60க்கு மேலும் மற்றவர்கள் ஆலைகள் சுமார் 10ம் தற்சமயம் இருக்கின்றன.

1943க்குப்பின் செட்டியார்கள் பல ஊர்களிலும் இருந்து வந்து காகித வியா பாரம், மருந்து வியாபாரம், பைப் வியாபாரம், இரும்பு வியாபாரம், சினிமாத்தொழில், தொழிற்சாலைகள் என சுமார் 150க்கு மேற்பட்ட வியா பாரங்கள் செய்கிறார்கள். நச்சாந்து



www.npnagarathar.com

பட்டி நகரத்தார்கள் தமிழ்நாட்டில் அதிகமானஅளவு வியாபாரம், தொழில் செய்பவர்கள் கோவையில் தான் அதிகம். அதாவது 36 பேர் செய்கிறார்கள். சென்னை மாநிலத்தில் பல ஊர்களிலும், நச்சாந்துப்பட்டி நகரத்தார் சுமார் 140 பேர் தொழில் வியாபாரம் செய்கிறார்கள். 200பேர் டாக்டர், எஞ்சினியர், ஆடிட்டர் முதலிய வேலைகளும், பேங்குகளிலும், தனியார் நிறுவனங்களிலும் இருக்கிறார்கள். மலாயாவிலும் வெளிநாட்டிலும் சுமார் 25 பேர் நல்ல நிலையில் இருக்கிறார்கள். இந்த மலரின் பதிப்பாசிரியர் L. சோமு அவர்கள் சொல்வதுபோல் அதிகமான அளவு நகரத்தார்கள் தொழில், வியாபாரத்திற்கு வரவர நமது ஊர் நகரத்தார்களுக்கு நல்ல மதிப்பும், பெருமையும் கிடைக்கும். சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியும்.

சமீபத்தில் கோவையில் பேங்க் ஆப் மதுரை விட்சேர்மன் உயர்திரு S.சபாபதி அவர்களுக்கு வலையப்பட்டி நாகப்ப செட்டியார் அவர்கள் ஒரு Gettogether Function வைத்து ஒரு நல்ல விருந்து கொடுத்தபோது சேர்மன் அவர்கள் அங்கு வந்திருந்த கோவை பிரபல மார்வாரி வியாபாரியிடம்—உங்கள் ஊர்க் காரர்கள் எப்படி கோவை வருகிறார்கள், எப்படி கோவையில் இருக்கிறார்கள் என்று கேட்டபோது வடநாட்டிலிருந்து கோவைக்கு சராசரி தினம் ஒரு குடும்பம் வருவதாகவும், அவர்கள் வரும்பொழுது ரொம்ப சாதாரணமாக வருவதாகவும், வந்து இரண்டொரு வருடத்தில் பல லட்ச ரூபாய்க்கு அதிபதி ஆகிவிடுவதாகவும் சென்ற வருடம் வடநாட்டில் ஒரு ஊரிலிருந்து சுமார் 247 குடும்பம் ஒன்றாகவே கோவை வந்து தற்சமயம் அனைவரும் நல்லநிலையில் இருப்பதாகவும் சொந்தத் தொழில் செய்து வருவதாகவும் சொன்னார்கள்.

அது சமயம் நான் சேர்மனிடம் நமது சமூக இளைஞர்கள் கோவையில் வந்தஅளவு ரொம்ப நல்ல முன்னேற்றம் அடைந்திருப்பதாகவும், என்னிடம், வேலைக்கு வந்தவர்கள் 5 வருடம் முறையாக வியாபாரம் கற்க வந்த நினைப்புடன் இருந்தவர்கள் (21பேர்) சொந்தத்தில் பேப்பர் கடையே கோவையிலும் மற்ற ஊர்களிலும் வைத்து நல்லநிலையில் இருப்பதாகவும், இந்த வருடம் இரண்டுபேர் கோவையிலேயே சாதாரண சொற்ப முதலீட்டில் பேப்பர்கடை வைத்து நாலாறு மாதத்திற்குள் நன்கு முன்னேறியிருப்பதாகவும், கோவையில் தற்சமயம் மருந்துக்கடை, டயர்கடை, சைக்கிள் கடை, பைப் கடை முதலிய பல கடை வைத்திருப்பவர்களும் சாதாரணமாக 25 வருடங்களுக்குமுன் சுமார் 400/- சம்பளத்தில் வந்து வியாபாரம் கற்று இன்று சாதாரணமாக 10 லட்சத்திலிருந்து 2 கோடிக்குமேல் சம்பாதித்து, சமூகத்துக்கு நல்ல உதவி செய்து வருகிறார்கள் என்றும், ஆகையால் பேங்க் ஆப் மதுரா லிமிடெட்டில், செட்டியார் பையன்கள் கோவையில் வியாபாரம் செய்பவர்களுக்கு ரூ.50,000/- வரை



www.npnagarathar.com

அதிகசிரமமில்லாமல் முறைப்படி கடன் கொடுங்கள்; அதற்கு தாங்கள்—கோவை நகரத்தார்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறோமென்றும், அதற்காக அடுத்த முறை கோவைக்குச் சேர்மன் வரும் சமயம் நகரத்தார் சங்கத்தில் இளைஞர்கள், மற்றவர்களைக் கூடச் செய்து அவருடைய மேலான யோசனைகளைக் கூற வேண்டு மென்றும் சொல்லி மேற்படியார்கள் மேற்படியார்களின் ரீஜனல் மானேஜர் அவர்களுக்கு அது போல் ஏற்பாடு செய்யச் சொன்னார்கள். எங்கள் தகப்பனார் அவர்கள் நடத்திவந்த லேவாதேவிக்கடையுடன் 1955 ஆம் வருடம் ஹரிஹரன் & கோ என்ற விலாசத்தில் பேப்பர் வியாபாரத்தில் என் தகப்பனாரவர்களின் ஆசியுடன் வியாபாரம் செய்து 1982 ஆம் வருடம் வெள்ளி விழா கொண்டாடி தாங்கள் போட்ட மலரில் நான் என் 35 வருட வியாபார அனுபவத்தில் கண்டுபிடித்த நாணயம் என்பதற்கு உரிய விளக்கத்தையும் சொன்னேன். அதாவது,

"நாணயம் என்பது வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுப்பதல்ல; திருப்பிக் கொடுக்கும் சக்தி தன்னிடம் இருக்கிறது என்பதைக் காட்டுவதுதான். (அதுதான் லிமிடெட் கம்பெனி) மேலும், சாதாரண நிலவரத்தில் எதிர் பாராதவிதமாக வியாபார மந்தம் ஏற்பட்டபொழுதும், கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத பட்சத்தில் கடன் வாங்கியவரிடம் தானே சென்று விபரத்தை ஒளிவுமறைவின்றிச் வசால்லி தான் எப்படித் திருப்பிக் கொடுக்கலாம் என்பதைச் சொல்வதே நாணயம். அதிலும் ஒரு டயத்தைச் சொல்லிஅந்த டயத்தில் மறுபடி நேரில் சொல்லி உண்மையான நிலவரத்தைத் தான் இருக்கும் கால வரை சொல்லி வருவதே நாணயம்" அப்படி எண்ணம் உள்ளவர்கள் ஆண்டவன் கிருபையால் நாணயத்தைக் காப்பாற்றி விடுகிறார்கள். இது தான் உண்மையான நாணயம் எந்த ஒரு நபரும் ஒரே தொழிலைத் தொடர்ச்சியாகச் செய்து வருபவர்கள் நல்ல முன்னேற்றம் அடைந்து நல்ல நிலையில் இருக்கிறார்கள் என்பதை இளைஞர்கள் மனதில் நன்கு பதிய வைத்துக் கொள்ள வேண்டும். டாக்டர், எஞ்சினியர், ஆடிட்டர் போன்ற தொழிலுக்கு வருபவர்கள் சுமார் 7 வருடங்கள் பெருஞ்செலவு செய்து படித்து அதற்குப்பின் தொழில் செய்து முன்னேறுகிறார்கள் என்பதை நன்கு மனதில் படிய வைத்து 10 வது வரை படித்து வேலையில் சேர்ந்தாலும் சுமார் 7 வருடத்திற்குச் சம்பளத்தைப் பாராமலும், நேரத்தைப் பாராமலும் வியாபாரத்தைப் பழகினால் 7 வருடத்தில் எந்த ஒரு நபரும் முதலாளி ஆகலாம்.

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்" என்பது வள்ளுவர் வாக்கு. முயன்று தொடர்ந்தால் முடியாதென்பது உலகில் கிடையாது. இல்லாமை என்பதும் இயலாமை என்பதும் முயற்சி அற்றவர்களுக்குத்தான். அது மட்டு மல்ல; நாணயத்தை அடிப்படையாகக் கொண்டவர்களுக்குத் தொழில்



www.npnagarathar.com

செய்யப் பணமும் சுலபமாகக் கிடைக்கும்.

ஆகையால் கோவைக்கு நகரத்தார் இளைஞர்கள் அதிகமான அளவில் வர வேணுமென்பதை வற்புறுத்திச் சொல்கிறேன். கோவை நகரத்தார் சங்கம் எல்லாவிதமான யோசனைகள் ஒத்தாசைகளைச் செய்யும்.

கோவை நகரம் வருவாயை ஈட்டவும் வளமாக வாழவும், வசதியாக, இருக்கவும், வந்தவர்களை அரவணைக்கவும், நல்லமனதுடன் வாரிவழங்கவும் ஏற்ற ஊராக இருப்பதால் நகரத்தார் பெருமக்கள் அதிகமான அளவில் வர வேணுமெனக் கேட்டுக் கொள்கிறேன். வாழ்க நகரத்தார் சமூகம் வாழ்கவே!

---

இத்தகைய துயர்நீக்கித் கிருதயுகந்
தனையுலகி லிசைக்க வல்ல
புத்தமுதாம் ஹிந்துமதப் பெருமைதனைப்
பாரறியப் புகட்டும் வண்ணம்,
தத்துபுகழ் வளப்பாண்டி நாட்டினிற்கா
ரைக்குடியூர் தனிலே சால
உத்தமராந் தனவணிகர் குலத்துதித்த
இளைஞர்பலர், ஊக்கம் மிக்கார்,

உண்மையே தாரகமென் றுணர்ந்திட்டார்,
அன்பொன்றே யுறுதி யென்பார்,
வண்மையே குலதர்ம மெனக் கொண்டார்,
தொண் டொன்றே வழியாகக் கண்டார்,
ஒண்மையுயர் கடவுளிடத் தன்புடையார்,
அவ்வன்பின் ஊற்றத் தாலே
திண்மையுறும் ஹிந்துமத அபிமான
சங்கமொன்று சேர்த்திட்டரே

பல நூல்கள் பதிப்பித்தும், பலபெரியோர் பிர
சங்கம் பண்ணுவித்தும்
நலமுடைய கலாசாலை புத்தகசாலை பலவும்
நாட்டியுந்தங்
குலமுயர நகருயர நாடுயர வுழைக்கின்றார்,
கோடிமேன்மை
நிலவுறஇச் சங்கத்தார் பல்லூழி வாழ்ந்தொளிர்க
நிலத்தின் மீதே!

—பாரதியார்



www.npnagarathar.com

# தாயகத்தின் பெருமை

வீ. அமு. அண.

இமயமகள் ஓர்எல்லை, எழில்சிறக்கும் குமரிமகள் ஓர்எல்லை
இடைப்பட்ட செல்வமெல்லாம் அவள்பெற்ற பிள்ளை
ஞானமும் கல்வியும் அவள் நல்ஒளிசேர் இருகண்கள்
மானமே உயர், அந்த மரகதத் தாய்பெயர் பாரதத்தாய்
அத்தாய்க்கு இணையானாள், ஆற்றலுக்கு முதலானாள்
அழகுமணிச் சிலையானாள், அன்பே உருவானாள்
தென்றல் தவழ்ந்துவரத் திருநாட்டில் ஆட்சிசெய்யும்
திருவுடையாள் தமிழரசி திருப்பாதம் போற்றிடுவோம்.

# செட்டி நாட்டின் பெருமை

வட்டித் தொழில்முதலாய் வகைவகையாய்த் தொழில்புரியும்
செட்டியார் சீமைஇது, சீர்பெருக்கும் சீமைஇது.
கட்டிச் சமத்திகளாம் கனசமத்து ஆச்சிமார்
பெட்டி முடைவதிலும் பெருமை கொலுவிருக்கும்.
பால், வெள்ளைப் பணியாரப் படையெடுப்பால்
விருந்தோம்பும் ஆற்றலுக்கு வெற்றிமுடி காத்திருக்கும்
எதிலும் திருத்தம், இதயமதில் நல்அறமே
குடியிருக்கும் கோலோச்சும் குடிப்பிறந்தார் சீமைஇது!



www.npnagarathar.com

## ஊர்ப் பெருமை

சந்தனமும் சவ்வாதும் சரிநிகராய்த் தானெடுத்து
பன்னீரைத் தெளித்து, பக்குவமாய் அதைக்குழைத்து
நலம்காக்கும் இறைவனுக்கு நாள்தோறும் பூசுவதால்
நற்சாந்துப் பட்டிஎனும் நற்பெயரைப் பெற்றதம்மா!
பொற்சாந்து பூசிப் புகழ்சேர்ப்பார் மனைதோறும்
பொருளிருக்கும், அருளிருக்கும் புன்னகையும் உடனிருக்கும்
கற்கண்டுப் பேச்சிருக்கும் கடமை மனமிருக்கும்
கவிதைபோல் சிறப்புடையார் காலமெல்லாம்வாழ்ந்திடுக.

---

''வீட்டினிற் செட்டாக வாழ்ந்திடுவார் - ஏதும்
வீணின்றி மிக்கக் கணக்கிடுவார்''

—சுவாமி சுந்தானந்த பாரதியார் - தனவணிகர் கும்மியில்

### வட்டகை பிரிவு

குன்றக்குடிமலை செட்டிநாட்டுக்கு நடுவில் அமைந்திருக்கிறது. எனவே அதற்குக் கிழக்கே, மேற்கே, தெற்கே உள்ள ஊர்கள் முறையே கீழவட்டகை, மேலவட்டகை, தெற்கு வட்டகை என்னும் பெயர்களால் வழங்குகின்றன.

"வெள்ளாறது வடக்காமேற் குப்பிரான் மலையாந்
தெள்ளார் புனல்வைகை தெற்காகும்—ஒள்ளிய நீ
ரெட்டிக் கடற் கிழக்கா மிஃதன்றோ நாட்டரசன் சேர்
செட்டிநாட் டெல்லையெனச் செப்பு"

—பாடுவார் முத்தப்பச் செட்டியார்.



www.npnagarathar.com

# நற்சாந்துப்பட்டி நல்லகுப்பன் செட்டி பழநியாண்டவர் திருக்கோவில் வரலாறு

வீர. அண்ணாமலை

தொன்று தொட்டு பலதலைமுறைகளாக வயிரவன் கோவில் பெரிய வகுப்பைச் சேர்ந்த முன்னோர்கள் ஆடி மாதம் கால்நடையாக பழநி சென்று சுவாமி தரிசனம் செய்து வந்து, இங்கு சிறப்பாக அன்னதானம் செய்து வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

ஐந்து தலைமுறைக்கு முன் எங்கள் குடும்பத்தில் இருந்து பெரியவர் ஒருவர், தனக்கு வயதாகிவிட்ட காரணத்தால் பழநி வந்து பழநியாண்டவரைத் தரிசிக்க முடியவில்லை என்று மனம் வருந்தினார். ஆண்டவரிடம் தனது குறையினை முறையிட்டார். ஒளவைக்குக் கனி தந்த எம்பெருமான் முருகன், பெரியவரின் கனவில் தோன்றி ''என்னை நினைத்து, நீ இருக்கும் இடத்தில் வேல் ஊன்றி அன்னதானப் பூசையினைச் செய்து வா. அதனை நான் அன்போடு ஏற்றுக் கொள்கிறேன்'' என்று ஆணையிட்டார். அவரது ஆணையினை சிரம் மேற் கொண்ட எங்கள் பங்காளிகள் அனைவரும் ஒன்று கூடி, எங்கள் பங்காளி திரு. சுப்பன் செட்டியார் வீட்டுப்பட்டக சாலையில் வேல் ஊன்றி, விநாயகப் பானையை எல்லோரும் தொட்டுக் கொடுத்து, பொங்கலிட்டு, வேலுக்கு அலங்காரம் செய்து, ஆண்டி அழைத்து, அன்னம் படைத்து மகிழ்ந்தோம். அதன் பிறகு உள்ளூர் உறவினர், ஏழை எளியவர்களும் அன்னதானமும் செய்து வந்தோம்.

தனிப்பட்டவர் வீட்டில் இல்லாது, தனிப்பட்ட இடத்தில் கோவில் கட்டி வேலைப் பிரதிஷ்டை செய்து அன்னதானம் செய்தால் நன்றாக இருக்கும்என, எங்கள் பங்காளிகள் அனைவரும் எண்ணினார்கள். அவர்கள் எல்லோரும் கூடிப் பேசி, கோவில் கட்டுவதற்காகத் தெற்கு ஊரணிக் கரையில் ஓர் இடத்தைக்கிரயம் செய்து வாங்கினார்கள். கோயில் திருப்பணி வேலை, எங்கள் பங்காளிகள், பெண்களின் ஒத்துழைப்புடன் 14-9-78இல் தொடங்கியது. எல்லா வேலைகளும் சிறப்புடன் செய்து முடிக்கப்பெற்றன. மூலவராக வேலை பிரதிஷ்டை செய்து வலப்புறத்தில் பாலவிநாயகரையும், இடப்புறத்தில் பால சுப்பிரமணியரையும் கோவில் நுழைவாயிலில் இடும்பன் வேலையும் பிரதிஷ்டை செய்து உள்ளோம்.



www.npnagarathar.com

சித்தார்த்தி ஆண்டு வைகாசி திங்கள் 31-ஆம் நாள் [4—6—79] அன்று அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகமும், ஆடித்திங்கள் 13 - ஆம் நாள் [29-7-79] மண்டலாபிஷேகமும் மிகச் சிறப்புடன் நடைபெற்றன. ஆடிமாத வழக்கம் போல் அன்னதானம் செய்யப்பட்டது. அன்றிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் ஆடித்திங்களில் அன்னதானம் செய்யப் பட்டு வருகின்றது.

மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆடிமாதம் கார்த்திகை அன்று அன்னதானம் சீரும் சிறப்புமாக, இறைவன் அருளோடு, நடைபெற்று வருகின்றது. கோவில் நிர்வாகப் பொறுப்பு ஆண்டிற்கு ஒரு முறை வாரி சுப்படி அளிக்கப்பட்டு வருகின்றது. பிள்ளையார் சதுர்த்தி அன்று, நிர்வாகப் பொறுப்பு மாற்றி அளிக்கப்படும்.

கோவிலுக்கென்று தனியாக ஒரு பண்டாரம் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் காலை, மாலை ஆகிய இரண்டு நேரங் களிலும் பூசைவைத்து, நல்ல முறையில் கோவிலைப் பராமரித்து வருகின்றார். சித்திரை வருடப் பிறப்பு சிறப்புடன் நடைபெற்று வருகின்றது.

முருகப் பெருமானுக்கு உரிய விஷேடங்களாகிய வைகாசி விசாகம், சூரசம்ஹாரம், ஆடிக் கார்த்திகை, தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்திரம் போன்றவைகளும், நவராத்திரி, சிவன் ராத்திரி, தீபாவளி போன்ற பண்டிகை களும் பங்காளிகள் அனைவருடைய ஒத்துழைப்புடனும், ஆண்டவனின் அளவற்ற அருளோடும், சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இதே போன்று மாதக் கார்த்திகையும், மார்கழி திருப் பள்ளி எழுச்சியும் மிகவும் சிறப்புடன் இக் கோயிலில் நடைபெற்று வருகின்றன. பங்காளிகளின் முழு ஒத்துழைப்போடு, கார்த்திகை சோம வாரமும், சங்காபிஷேகமும் சிறப்பாக நடை பெற்று வருகின்றன.

தைப் பொங்கலுக்கு, பங்காளிகள் அனைவரும் ஒன்று கூடி திரு. சுப்பன் செட்டியார் வீட்டில் இருந்து பொங்கல் பானை எடுத்து வந்து, ஆண்டவன் கோவிலில் பொங்கல் வைத்து, ஆண்ட வனுக்குப் படைத்து, பிரசாதம் பங்காளிகள் அனைவருக்கும் வழங்கப் படும். அதன் பிறகே பங்காளிகளின் வீடுகளில் பொங்கல் வைப்பது வழக்கம். நம் சமூகத்தில் விசேடமாகக் கொண் டாடப்படும் பிள்ளையார் நோன்பும், ஆண்டவர் கோவிலில் வெகு விமரிசை யாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதில் மற்ற நகரத்தார்களும் கலந்து கொண்டு சிறப்பிப்பர்.

கடந்த 12 வருடங்களாக தொடர்ந்து இக் கோவிலில் இருந்து காவடி கட்டி பக்தர்களுடன் பாத யாத்திரையாகப் பழநி சென்று காவடி, செலுத்தி வருகின்றோம். ஒவ்வோர் ஆண்டும் தைப்பூசத்திற்கு 6 நாட்கள் முன்னதாக இக்கோவிலில்அன்னதானம் செய்து காவடி கட்டி கூட வரும் பக்தர் களோடு காவடி மாலை 6 மணி அளவில் புறப்படும். பூசத்திற்கு முதல் நாள் மதி யம் பழநிஇடும்பன் குளத்தை அடைந்து



www.npnagarathar.com

அங்கு நீராடி, இரவு பழநி மலை அடிவாரத்தில் அன்னதானம் செய்யப்படும். பூசத்தன்று தங்கி இருக்கும் இடத்தில் அன்னதானம் செயல்படும். மகத்தன்று மலைமேல் காவடி செலுத்தப்படும். ஏழு தினங்கள் கழித்து, காவடி திரும்பி வரும் சமயத்தில் வாத்தியார் ஊரணிக் கரையில் மேள தாளத்துடன் காவடியை வரவேற்று, ஊர்வலமாகப் பழநி ஆண்டவர் கோவில் சென்று, தீப ஆராதனை பார்த்து பின்னர் காவடி பிரிக்கப்படும்.

வந்திருக்கும் பக்தர்களுக்கு பிரசாதம் அளிக்கப்படும். ஒவ்வோர் ஆண்டும் பாதயாத்திரை தொடர்ந்து பெரும் சிறப்புடன் இங்கு நடை பெற்று வருகின்றது.

வினை தீர்க்கும் வேலவனாம் முருகப் பெருமான் தன்னை நாடி வரும் பக்தர் களுக்கு வற்றாத நலத்தையும் வளமான வாழ்வையும் வரமாகத் தந்து நிற்பான் என்பது இக்கோவிலில் தொடர்ந்து நிகழ்ந்து வரும் உண்மையாகும்.

---

## பஞ்சபூதத்தலச் சிறப்புகள்

1. காஞ்சிபுரம், திருவாரூர் – பிருதிவித்தலம் – மண்
2. திருவானைக்கா – அப்புத்தலம் – நீர்
3. திருவண்ணாமலை – தேயுத்தலம் – நெருப்பு
4. திருக்காளத்தி – வாயுத்தலம் – காற்று
5. சிதம்பரம் – ஆகாசத்தலம் – விண்

## பஞ்ச சபைகள்

1. திருவாலங்காடு — இரத்தினசபை
2. சிதம்பரம் — கனகசபை(பொன்)
3. மதுரை — ராஜதசபை (வெள்ளி)
4. திருநெல்வேலி —தாமிரசபை
5. திருக்குற்றாலம் — சித்திரசபை



www.npnagarathar.com

# அருள்காட்டு பெருமானே

மு.சம்மந்தம் B.Sc; M.Ed;

ஆடுகின்ற கோலமதை அழகு மிகு
தில்லையிலே தாங்குகிற இறையவனே!

பாடுகின்ற புலவரது பட்டறிவில்
சிறக்கின்ற பழகுசுவை பழந்தமிழே!

நாடுகின்ற என்னுள்ளம் நற்கோவில்
எனக் கொண்ட நந்தா விளக்கொளியே!

வாடுகின்ற மக்களது வாட்ட மதை
நீக்குகிற நீலகண்டப் பேருருவே!

உமையவளை இடப்புறத்தில் உவப்போடு
கொண்டிட்ட உற்சாகப் பேரூழியே!

எமை இன்பக் கரைசேர்க்க இமைப் போதும்
தவறாது அருள்கின்ற அன்போடமே!

சுமையான புவிவாழ்வை சுகமாக
மாற்றுகிற சுகந்தத்து சுகவாரியே!

அமைகின்ற இடங்களிலே அற்புதங்கள்
விளைவிக்கும் ஆனந்தத் திருவிளக்கே!

இடமிருக்கும் இதயத்தில் இனிதாகக்
குடியேறி இருக்கின்ற என் ஐயனே!

வடமிழுத்து அசைகின்ற வனப்பான
தேராக வந்தென்னைக் காப்பவனே!

குடமுழுக்கு நன்னாளில் குவலயத்தோர்
எல்லோரும் கும்பிட்டு மகிழ்ந்தாரே!

புடமிட்ட தங்கமென புவிக்குலத்தார்
தனைமாற்றி அருள்காட்டு பெருமானே!



www.npnagarathar.com

# குடமுழுக்கு

மு. தங்கமணியன்

குலக்கோயிற் குடமுழுக்கே கோலிக்கோலிக் கூப்பின்கை
துலக்குறும் வாழ்வே தொலையாத் திரு

அன்பீர்!
வாழ்வித்து
வாழ்வோங்கு வளமோங்கு
வழி
ஓங்கு ஒளி படை வண்ணக்
கற்
கோயில்
திருமலை சமுத்திரம் என்னக்
கணிப்பிலுறு
நற்சாந்துப்பட்டி நன்நகர்க்
கனகமணி
வணிகர்குல மக்கள்குடி கண்டிட்ட
ஒப்பில்
அருள்மிகு சிவகாமி சிதம்பரேசுவரர்
செப்பருஞ் சிந்தனை செழி
வந்தனை பொலி செந்தமிழ்த்
திருக்கோயில்!

அன்று கொண்ட குடமுழுக்கே இன்றும்
கொளும்!!
அருளாளர்வாழ்த்த அன்பாளர்
ஏத்த
கூப்புகரம் சிரமேற் கூப்பு
சேவாதளம் செந்தமிழே
கூவ-
சிறக்க பேறுபெறும்
பேறு
பெறுக நன்றே! பெருக வழி வழி
நீடே!!
வாழிய!!சிவமயம்!!வாழ்க!
சிவநேசச்செல்வர்கள்!!
வாழ்க!
தமிழ் கூறும் நல்லுலகம்
தழைத்து!!



www.npnagarathar.com

# நல்லோர் நவின்றவை

மு.முத்துமீனா B.A.,

"முதலில் கீழ்ப் படிவதற்குக் கற்றுக்கொள்ளுங்கள். அதன் பிறகு கட்டளை இடும் தகுதி தானாக வந்து சேரும்"

— சுவாமி விவேகானந்தர்.

"உலகத்தில் ஆசையைப் போன்ற நெருப்பில்லை. வெறுப்பைப் போன்ற பகையில்லை. மயக்கம் போன்ற வலையில்லை.
"காமத்தைப் போன்ற புயல் இல்லை"

— புத்தர்.

"சுமை கனமாக இருக்கிறதே என்று கவலைப்படாதீர்கள்.
முதுகு வலுவாக இல்லையே என்று வருத்தப்படுங்கள்"

| அபிரகாம் லிங்கன்.

"எதிலும் தோல்வி காணாதவன் வாழ்வில் முன்னேறமுடியாது"

— சபர் ஜன்

"மூன்றுமணிநேரம் முன் கூட்டியே சென்றாலும் செல்லலாம்.
ஆனால் ஒரு நிமிடம் கூடப் பின் தங்கி விடக் கூடாது"

— ஷேக்ஸ்பியர்.

"வெற்றி எண்ணத்தைப் பொறுத்தே அமைகிறது."

— நெப்போலியன்

"முட்டாளான நண்பனைப் பெற்றிருப்பதை விட கெட்டிக்கார எதிரியைப் பெறுதல் நல்லது"

— ஒரு அரேபியப் பழமொழி

"இந்த உலகம் மாயை நிறைந்தது. வாழும் காலம் குறைவு.
எனவே முடிந்தவரை பிறருக்கு நன்மை செய்யுங்கள்"

— மகாவீரர்.

"சில நாட்கள் மகிழ்வுடன் இருக்க ஒரு மனைவியை அடை;
ஆனால் ஆயுள் முழுக்க மகிழ்ச்சியாக இருக்க ஒருதோட்டத்தை உருவாக்கிக் கொள்."

— ஒரு ஆங்கிலப்பழமொழி

சந்தோஷம் என்பது — தனக்கென்று ஒன்று;
நேசிப்பதற்கு ஒருவர்;
நாளைய நம்பிக்கையில் வாழ்வதற்கு
ஒரு பிடிப்பு"



www.npnagarathar.com

# நற்சாந்துப்பட்டி வீரராகவப் பெருமாள் கோவில்

வீ.மு.வீ. வீரப்பசெட்டியார் மரபினர்

எனது உடன்பிறவா சகோதரரும் அன்பே உருவாய் அமைந்தவரும் இம் மலர் குழுவின் பதிப்பாசிரியரும், எல்லோராலும் L. சோமுவென்று இனிமையாக அழைக்கப் படுபவருமான பெ.ராம. ராம. லெ. சோமசுந்தரம் அவர்கள் இம்மலருக்கு பெருமாள் கோவிலைப் பற்றி ஒரு கட்டுரை எழுதித் தர வேண்டுகோள் விடுத்தார்கள். அதற்கிணங்க நான் அறிந்தவற்றை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டு, கட்டுரையைத் துவக்குகின்றேன்.

பெருமாள் கோவிலைப் பற்றி எழுதும் பொழுது ஊரைப் பற்றி நினைக்கையில், முடிகொண்ட மன்ன ரெல்லாம் முடிந்து முழுகிபோனார். குடி கண்ட ஆட்சியிலே குழப்பம் ஒடுங்கக் காணோம். பொடியுண்டு அழிந்திடாமல் புலனும் முழுதும் காக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

ஆம். முடிகொண்ட மன்னர்களின் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து குடி கண்ட ஆட்சியிலே குலவி மகிழ்ந்து வரும் நமக்கு முற்கால மன்னர்களின் ஆட்சியையும், தமிழனின் வீரத்திற்கு எடுத்துக் காட்டாக, பாழடைந்தும், பாழ் அடையாமலும் நம் கண்முன்னே காட்சி தரும் கோட்டைகளிலே, நமக்கு அண்மையிலே உள்ள திருமயம் கோட்டையும் ஒன்று.

அக்கோட்டை கட்ட தேவைப்பட்ட சாந்து (மணல்)க்கு நற்சாந்துகிடைக்கப் பெற்ற எங்கள் ஊருக்கு, அதிலிருந்து, நற்சாந்துப் பட்டி என்று வழங்கி வருவதாக பலபெரியோர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

திருமலை சமுத்திரம் என்கிற நற்சாந்துப் பட்டியில் நகரப் பெருமக்கள் குடியேறிய காலத்தில், சின்ன ஊரணி பிள்ளையார் என்று சொல்லக் கூடிய (தற்காலம் சித்தி-விநாயகர்), மட்டுமே இருந்தது. கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாமென்று சொல்லும் முதுமொழிக் கிணங்க, நான்கு குடும்பத்தார்கள் சிவனுக்கு ஆலயம் கட்ட எண்ணி, 1903ல், 12—2—1903இல் ஆலயம் கட்ட கவுல் மூலம் இடமும் பெற்று, சிறு ஆலயம் அமைத்து, பின்பு பெரிதாக கட்டயெண்ணி நகரத்தார் பெருமக்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள் (1906ல்).

இப்பகுதியிலே அக்காலத்தில் கோட்டூர், லம்பலக்குடி, பூலாம்பட்டி, நற்சாந்துப் பட்டி முதலிய ஊர்களில்



www.npnagarathar.com

வசித்து வந்த விஷ்ணு மதத்தினரும் இன்னும் பல பெரியவர்களும் சொன்ன வேண்டுகோளுக்கிணங்கி 1—9—1900ல் கிரையம் பெற்று. தண்ணீர் வசதிக்காக ஊரணியும் வெட்டி, பிள்ளையார் கோவில் கட்ட நினைத்த இடத்தில் எங்கள் முப்பாட்டனர் வீ.மு. வீ. வீரப்ப செட்டியாரால், ஸ்ரீவீரராகவப்பெருமாள் என்ற பெயர் கொண்ட பெருமாள் கோவிலும் கட்டி முடித்து, பராபவ வருஷம் ஆனிமாதம் 25 ஆம் தேதி (8—7—1906ல்) ஆதி வாரம் திருவோணம் நட்சத்திரத்தில் பகல் 12½ நாழிகைக்கு மேல் 15 நாழிகைக்குள், நாழிகை அளவில் கும்பாபிஷேகம் செய்து வைத்து, அன்று முதல் எங்கள் சக்திக்கிணங்க ஸ்ரீவீராகவப் பெருமாளுக்கு பூஜை வகையரா நடத்தி வழிபாடு செய்து கொண்டிருக்கின்றோம்.

அண்மையில் நம் சிவன் கோவில் குடமுழுக்கு நன்னீராட்டு விழாவுடன் வீ. மு. வீ. வீரப்ப செட்டியாரின் சந்ததியார்களால் இணைந்து, ஸ்ரீவீரராகவப் பெருமாளுக்கும் திருக்குட நன்னீராட்டு விழா நடத்த இருக்கின்றோம். அதற்கு இறைவன் அருளும், மக்களின் ஆசியும் கிடைக்க வேண்டுகிறோம்.

---

## அட்டவீரட்டத்தலங்கள்

1. திருவிற்குடி வீரட்டம்
2. திருவதிகை வீரட்டம்
3. திருப்பறியலூர் வீரட்டம்
4. திருக்கண்டியூர் வீரட்டம்
5. திருக்குறுக்கை வீரட்டம்
6. திருவழுவூர் வீரட்டம்
7. திக்கடவூர் வீரட்டம்
8. திருக்கோவலூர் வீரட்டம்

---



www.npnagarathar.com

# உண்மை உயர்வளிக்கும்

கொப்பனாபட்டி - S.குமரப்பன்

உண்மை உயர்வளிக்கும் — நாளை
ஊரும் உன்னை கௌரவிக்கும்
பொறுமை சுகமளிக்கும் - அதுவே
பெருமை தேடித் தந்திடும்.

வறுமை வாழ்க்கையைக் கற்று தரும்
தனிமை ஞானத்தைப் பெற்று தரும்
வலிமை மனதில் இளமையை கூட்டித் தரும்
புலமை எண்ணத்தில் எழுந்து வரும்.

மைவிழிப் பார்வை மயக்கம் தரலாம்
வாய்வழி சென்ற சரக்கு சதிராடலாம்
பொய்மொழி பேச்சு உன்னை ஏமாற்றலாம்
தவவழி சென்றல் இவையாவும் தவிர்க்கலாம்.

அன்பு வழியே சிறந்ததெனக் கொண்டாடு
அதன்வழியே அனைவரையும் அழைத்திடு
தான்யாரென அறிந்தபின் உலகைப் பார்த்திடு
நீயே உயர்ந்து நிற்கும் நிலை கண்டிடு.

கால்களுக்கடியில் ஆயிரம் பொற்காசுகள்
குனிந்தெடுக்க முதுகு வளைவதில்லை
அதனையெடுத்துத்தர ஆள்தேடும் நாம்
சோம்பல் சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி தாம்.

மண்ணில் ஈரம் இருந்தால் பயிர்விளையும்
நெஞ்சில் ஈரம் இருந்தால் அன்பு விளையும்
கண்ணில் ஒளி இருந்தால் காட்சி தெரியும்
உன்னில் நீ இருந்தால் இன்பம் விளையும்.

ஆன்மீகம் ஏற்றுக்கொண்ட மனதில்
ஆழ்கடல் அமைதி - நெஞ்சுக்கு நிம்மதி
ஆன்மீகம் நம்மனதிற்குக் கடிவாளம்
ஆனந்த அலையின் ஆரவாரப்பூபாளம்.



www.npnagarathar.com

சிவனையும் சக்தியையும் அறிந்து கொண்டால்
இயற்கையை அறிந்தவனாவாய்
உன்னையும் உன்மனதையும் அறிந்து கொண்டால்
வாழ்க்கையை உணர்ந்தவனாவாய்.

மனதை அடக்க நினைத்தவர் வென்றதில்லை
மனதை அறிய நினைத்தவர் தோற்றதில்லை
கனவை நனவாகக் கருதியவர் களம் சென்றதில்லை
நனவை கனவாக மாற்றியவர் வளம் பெற்றதில்லை.

– இந்த –

உண்மை உயர்வளிக்கும் – நாளை
ஊரும் உன்னை கௌரவிக்கும்
பொறுமை சுகமளிக்கும் – அதுவே
பெருமை தேடித்தந்திடும்.

---

## பஞ்ச பூதத்தலங்கள்

1. சிதம்பரம் — வானம்
2. திருவண்ணாமலை — நெருப்பு
3. திருவானைக்கா — நீர்
4. திருக்காளத்தி — காற்று
5. காஞ்சி + ஆரூர் — நிலம்

## சப்தஸ்தானதலங்கள்

(i) திருவையாறு
(ii) திருப்பழனம்
(iii) திருச்சோற்றுத்துறை
(iv) திருவேதிக்குடி
(v) திருக்கண்டியூர்
(vi) திருப்பூந்துருத்தி
(vii) திருநெய்த்தானம்



www.npnagarathar.com

# ஆற்றல் மிகுந்தவர்கள் அடக்கம் நிறைந்தவர்கள்

**கவியரசு கண்ணதாசன்**

வண்ணக்கலை வளர்த்தோம்; வரலாறே நாம் சமைத்தோம்:
எண்ணத் தொலையாத எத்தனையோ கோவில்களைக்
கண்ணில் இருத்தி, கலையோடு காத்து வந்தோம்
காசி நகரத்துக் கடவுளரைப் பேசவைத்தால்
காவிரிப்பூம் பட்டினத்தார் கலையுணர்ச்சி தோன்ற வரும்!
மாசற்ற பொன்னும் மணிவயிரம் இரத்தினமும்
தூ சென்று எண்ணித் தூக்கிக் கொடுத்து வந்தோம்
பண்டைத் தமிழ்மரபைப் பண்போடு காத்து வந்தோம்
அண்டை நிலங்களில் நம் ஆண்டவனை ஊன்றிவைத்தோம்
காசிவிசாலாட்சி கவிமதுரை மீனாட்சி
கட்டியுள்ள ஆடைகளும் கழுத்திலுள்ள பொன்னகையும்
சுற்றியுள்ள மண்டபமும் தூக்கிவரும் வாகனமும்
முற்றும் அழியாத மொட்டைக் கோபுரத்தழகும்
அண்ணாமலையின் அமர்ந்திருக்கும் பேரழகும்
ஆக்கிக் கொடுத்தவர்கள் அமர்ந்திருந்து காத்தவர்கள்
நாட்டுக் கோட்டை வளர்த்த நகரத்தார் அல்லேமோ!
ஆனாலும் நம்மவர்கள் அடக்கத்தால் இன்று வரை
தாமாகத் தம்மைத் தலை தூக்கிக் கொண்டதில்லை.



www.npnagarathar.com

# பிணி தீர்க்கும் பணிக்கூடம்

**(நற்சாந்துப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தின் தோற்றமும் வளர்ச்சியும்)**

பெரி. இராமநாதன்

"உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான் என்ற
அப்பால் நாற்கூற்றே மருந்து"

**நோயற்ற வாழ்வு**

இவ்வுலகில் மனிதராய்ப் பிறந்த அனைவரும் நோய்ற்றோராய் வாழ விழைதல் இயல்பு. அதனாலன்றோ "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்னும் பழமொழியும் எழுந்தது. திருமூலரும் "உயிரை வளர்க்கும் உபாயம் அறிந்து உடலை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே" என்று கூறிப்போந்தார். உடல் நலம் காக்கும் மருத்துவம் உள்ள நலங்காக்கும் கல்வியோடு சேர்த்து வைத்து எண்ணத் தக்கது.

**மருத்துவமனை அமைக்கும் திட்டம்**

தமிழக அரசால் 'ஒன்றியத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம்' என்ற திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. அது போழ்து, திருமயம் ஒன்றியத்திலும் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்கும் வாய்ப்புக் கிட்டியது. திருமயம் ஒன்றியத்தில் உள்ள முப்பத்து மூன்று கிராமப் பஞ்சாயத்துக்களில், இந்த சுகாதார நிலையத்தினை எங்கு அமைப்பது என்பதில் மிகக் கடுமையான போட்டி நிலவியது. ஏறத்தாழ அனைத்து ஊராட்சி மன்றத் தலைவர்களும், தங்கள் ஊரிலேயே மருத்துவமனையினை ஆரம்பிக்க வேண்டும் என வற்புறுத்தினர். இதன் காரணமாக, மருத்துவமனை அமைக்கும் இடத்தை ஊராட்சி ஒன்றியக் கூட்டத்தில் ஓட்டெடுப்பு மூலம் முடிவு செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. அன்று நற்சாந்துபட்டி ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த நான், திருமயம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிமன்றங்களில் தலைவர்களாக இருந்த எனதுநண்பர்கள் அனைவரின் முழு ஆதரவைத் திரட்டியும், ஒன்றியப் பெருந்தலைவராக இருந்த குழிபிறை திரு. பெரி. சின்ன கருப்பஞ் செட்டியாரின் முழுமையான ஒத்துழைப்புடனும், மருத்துவமனையினை நற்சாந்துப்பட்டியில் துவக்குவது என்ற தீர்மானத்தினை ஒன்றியக் கூட்டத்தில் கொண்டு வந்தேன். பெரும்பான்மையான ஊராட்சிமன்றத் தலைவர்களின் ஒப்புதலோடு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**மருத்துவமனை துவங்க ஆணை பெறல்**

நிறை வேற்றப்பட்ட தீர்மானம்



www.npnagarathar.com

தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டது. அரசின் நடைமுறைச்சிக்கல்களால்,மருத் துவமனை ஆரம்பிப்பது ஓர் ஆண்டுக் காலம் தடைப்பட்டது. அது சமயம் தமிழக அரசியல் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த மாண்பு மிகு வெ. இராமையா அவர்களை நான் சந் தித்து, மருத்துவமனையினை விரைவில் இங்கு துவக்க உதவும்படி கேட்டுக் கொண்டேன். அவர்களும் அப்போதைய சுகாதார அமைச்சர் மாண்புமிகு. ஜோதி வெங்கடாசலம் அவர்களிடம் பேசி, மருத்துவமனை துவங்குவதற்கான பூர்வாங்க அனுமதியினை வாங்கித் தந் தார்கள். அமைச்சர் மாண்புமிகு வெ. இராமையா அவர்களுக்கு எனது நன்றி என்றும் உரித்தாகி நிற்கும்.

**மருத்துவமனையின் துவக்கம்**

இவ்வூரில் மருத்துவமனை இயங்கு வதற்குப் பெரிய வீடு ஒன்று வாடகைக்கு வேண்டும் என்றபொழுது, எனதுதந்தை யார் திரு. பெரி. பெ. பெரி.பெரிய கருப் பஞ் செட்டியார் அவர்கள் மனமுவந்து அவர்களின் கட்டடத்தைத் தந்து உதவி னார்கள். கட்டடம் கிடைத்ததும் தமிழக அரசு மருத்துவர் ஒருவரை நியமித்து உத்தரவு பிறப்பித்தது. ஆனால் அவர் இங்கு வரவில்லை. நான் அம்மருத்து வரின் ஊருக்குச் சென்று அவரை இங்கு பணியாற்ற வருமாறு அழைத்தேன். கிராமத்தில் பணியாற்ற தான் விரும்ப வில்லை எனக்கூறி அவர் வர மறுத்தார். அதே போன்று மேலும் இரு மருத்துவர் களும் இங்கு பணியாற்ற வர மறுத்த னர். நான்காவதாக திரு. ஜெயராஜ் என்பவர் நமது ஊருக்குவந்து மருத்துவ மனையினைத் துவக்கி, மருத்துவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். 1969 ஆம் ஆண்டு பிப்ரவரித்திங்கள் பத்தாம் நாள் இம்மருத்துவமனை தனது பணி யினைத் துவங்கியது. எனது கடுமை. யான முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றியினை எண்ணி அன்று அக மகிழ்ந்தேன். மருத்துவமனை துவக்கத் தில் ஒரு மருத்துவ அதிகாரியினையும் (M.B.B.S. டாக்டர்) அவரது தலைமை யின் கீழ் ஏழு அலுவலர்களையும் கொண்டு இயங்கியது. பின்னர் ஓராண டிற்குள் மருத்துவமனைக்கு ஊர்தியும், குளிர்சாதனப்பெட்டியும், வேறு தள வாடச் சாமான்களும் வந்து சேர்ந்தன.

**புதிய கட்டடம்**

நான் மாவட்ட சுகாதார அதிகாரி யைச் சந்தித்தபோது, மருத்துவமனை கட்டுவதற்குரிய இடத்தினை அன்பளிப் பாகக் கொடுத்தால், சொந்தக் கட்ட டம் கட்ட சிபாரிசு செய்வதாகக் கூறி னார்கள். நான் மீண்டும் முயற்சியினை மேற் கொண்டேன். நற்சாந்துப் பட்டி வயிரவன் கோவில் கழனிவாசலுடை யார் பங்காளிகளுக்குச் சொந்தமான இடத்தை அன்பளிப்பாக கிரயப் பத்தி ரம் செய்து வாங்கிக் கொடுத்தேன். அந்த இடமே இப்போது மருத்துவ மனையாக உருவெடுத்து உள்ளது. அந்த இடத்தை அன்பளிப்பாகத் தந்த வயிரவன் கோவில் கழனி வாசலுடை யார் பங்காளிகளுக்கு, இப்பகுதிவாழ் மக்களின் நன்றி என்றும் உரித்தாகும். இடம் கிடைத்ததும் மாவட்ட சுகாதார



www.npnagarathar.com

அதிகாரியின் சிபாரிசின் விளைவாக நற்சாந்துப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்டுவதற் கானஅரசின் உத்தரவு பிறந்தது. ஆனால் கட்டடம் கட்டுவதற்குப் பொதுமக்கள் பங்காக ரூபாய் பத்தாயிரம் கட்ட வேண்டும் என்ற விதியும் அரசின் உத்த ரவில் இருந்தது. பலரிடமும் இவ்வுத்தர வினைக் காட்டி நன்கொடைத் தொகை பற்றிப் பேசினோம். அப்போது நற்சாந் துப்பட்டி வள்ளல் திரு. கு. ராம. குமரப்பச் செட்டியார் அவர்கள் தாமாக முன்வந்து, மனமுவந்து, தனி ஒருவராக, ரூபாய் பத்தாயிரத்தையும் கட்டி உதவி னார்கள். அறப்பணிச் செம்மலாம் அவரது அரிய தொண்டினையும், உதவி யினையும் என்றும் மறவோம். அவர் களின் கைம்மாறு கருதாக் கொடை யுள்ளத்தின் விளைவாக இவ்வூர் மருத்து வமனைக்குச் சொந்தக்கட்டடம் கட்டும் பணி இனிதாகத் தொடங்கியது.

### குடும்ப நலக் கட்டடம்

இக்கட்டடம் கட்டி முடிவடைவதற் குள் அந்த இடத்தில் மத்திய அரசின் நிதி உதவியுடன் குடும்ப நலக்கட்டடம் கட்டப்பட்டு 1972 ஆம் வருடம் ஏப்ரல் திங்கள் இருபத்தி ஐந்தாம்நாள் திறந்து வைக்கப்பட்டது. குடும்ப நலத்திட்டத் திற்கென தனியாக ஒரு மருத்துவர் நியமிக்கப்பட்டார்.

### திறப்பு விழா

பொது மருத்துவமனைக் கட்டடமும், அலுவலர் குடியிருப்புக் கட்டடமும் முழுமையாகக் கட்டப்பட்டு, 1974 ஆம் வருடம் அக்டோபர்த்திங்கள் இருபதாம் நாள், அன்றைய சுகாதார அமைச்சர் மாண்புமிகு. பேராசிரியர். க. அன்பழகன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. புதுக்கட்டடத் திறப்பு விழாவன்று, கட்டட நன்கொடையாளர் திரு. கு. ராம. கும. குமரப்ப செட்டியார் அவர் கள் பொன்னாடை போர்த்தி கௌர விக்கப்பட்டார்கள். அன்றிலிருந்து இம் மருத்துவமனை முழுவசதிகளுடன் கூடிய மருத்துவமனையாக இயங்கி வருகிறது.

### துணை மருத்துவ இல்லங்கள்

1982 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதி முதல் இந்த மருத்துவமனைக்கு 1. இராங்கியம் 2. கோட்டூர் 3. விரை யாச்சிலை 4. நெய்வாசல் 5. கோனா பட்டு 6. ஊனையூர் ஆகிய இடங்களில் உப மருத்துவ இல்லங்கள் (sub-centres) ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் ஓராண் டில் மேலும் பத்து இடங்களில் உப மருத்துவ இல்லங்கள் துவக்கப்பட்டன.

### சித்த மருத்துவம்

தற்போது இம்மருத்துவ மனையி லேயே சித்த வைத்தியத்திற்கென தனிப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. முழுத் தகுதி பெற்ற மருத்துவர் ஒருவரும், ஊழியர்களும் அதில் பணிபுரிந்து வரு கின்றனர். இலவசமாக சித்தமருந்து களும் கொடுக்கப்பட்டு வருகின்றன.

### இன்றைய நிலை

தற்சமயம் இம்மருத்துவமனையில் மருத்துவ அதிகாரி (M.B.B.S.) ஒருவரும், பெண் மருத்துவர் (M.B.B.S.) ஒருவரும், சித்த மருத்துவர் ஒருவரும் பணிபுரி



www.npnagarathar.com

118

கிறார்கள். மற்றும் சுகாதார அதிகாரிகளும், மலேரியா தடுப்பு, தட்டம்மை ஒழிப்பு அதிகாரிகளும் பிறஊழியர்களும் பணிபுரிந்து வருகின்றனர். பல்வேறு மருத்துவர்கள்தங்கள் பணியினை இங்கு செவ்வனே ஆற்றிச் சென்றனர். ஆனால், செவ்வனே ஆற்றிச்சென்றனர்.கடந்தஏழு ஆண்டுகளாக இம் மருத்துவமனையில் மருத்துவ அதிகாரியாகப்பணியாற்றிவரும் திரு. வெ. இராமமூர்த்தி அவர்களின் அயராத உழைப்பாலும், நிர்வாகத் திறனாலும் இந்த மருத்துவமனை பல நிலைகளில் வளர்ச்சிபெற்று வருகிறது. இந்த மருத்துவமனையில் இதுவரை இரண்டாயிரத்து முந்நூறு சுகப்பிரசவங்கள் ஆகி இருக்கின்றன. கர்ப்பிணிப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் முறையாக தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. விஷக்கடிகளுக்கான மருந்துகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. ஆண்களுக்கான குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சையும், பெண்களுக்கான கருத்தடை அறுவைச் சிகிச்சையும், இங்கு செய்யப்பட்டு வருகின்றன. பெண்களுக்கான தற்காலிக கருத்தடை சாதனங்களான லூப், காப்பர்-டி முதலியன பொருத்தப்படவும் வசதிகள் இங்கு உண்டு. கருத்தடை மாத்திரைகளும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் வாழ்கின்ற அனைத்து மக்களும் சிறந்த பயன்பெறும் வகையில் இம்மருத்துவமனை செயல்பட்டு வருகின்றது. திருமயம் ஒன்றியத்திலேயே அதிக ஊழியர்களையும், ஊர்திகளையும், பிறவசதிகளையும் கொண்ட மிகப்பெரிய ஆரம்பசுகாதார நிலையமாகவும் இது திகழ்கின்றது. தமிழகத்தில் உள்ள மிகச் சிறந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் இம்மருத்துவமனையும் ஒன்று என்ற நற்பெயரினை மருத்துவத்துறையின் உயர் அதிகாரிகளிடமிருந்து பெற்று பெருமையுடன் விளங்கி வருகிறது.

---

## மெ.க. குடும்பத்தாரின் அன்னச்சாத்திச் சிறப்பைக் கூறும் பாடல்

"கி. வா. ஜ'

தேசு வடிவன் சிவபெருமான்
திகழும் அண்ணா மலைப்பதியில்
வீசும் புகழோ டன்னமிடும்
வியனார் மெ. க. சந்திரச்சீர்
ஆசை யுடனே சொல்லுவதற்
காரம் பித்து விரிவாகப்
பேசின் அதற்கோர் எல்லையுண்டோ
பெருமை சொல்லச் சொல விரியும்



www.npnagarathar.com



மருத்துவ மனையின் அழகுருத் தோற்றம்



சிறப்பு மிகு கல்விக்கூடம்

நற்சாந்துபட்டி இராமனாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளி

www.npnagarathar.com

# நற்சாந்துப்பட்டியில் நற்சான்று கல்விப்பணி

அரங்க. கலியமூர்த்தி, எம்.ஏ.பி.,எட்.,

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை".

மலர்தலை உலகில் செறிந்துறையும் மன்பதைக்கு ஆங்காங்கே குறை நிகழ்தல் இயல்பு. அக்குறை உணர்ந்து களைதல் ஒப்புரவாளரின் பெற்றி என்பார் வள்ளுவர். ஒப்புரவாளரின் செல்வத் திற்கு நீர் நிறைந்த ஊருணி, ஊர் நடுவண் பழுத்த பழுமரம்,பிணி அகற்றும் மருந்துமரம் இவற்றை உவமையாகக் கூறிப் போந்தார் செந்நாப்புலவர். அவர் கூற்றுக்குப் பொருளாகும் செல் வந்தராய் நற்சாந்துப்பட்டியில் வாழ்ந்த திரு. கு. இராம.கும. குமரப்பச் செட்டியார் அவர்கள், தம் அருமைத் தந்தையார் திரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் நிலையான அறவினை ஒன்றைச் செய்ய வேண்டு மென்று நெடு நாட்களாக எண்ணி வந்ததைச் செயலாக்குவது குறித்து சிந்தித்த வண்ணம் இருந்தார்கள்.

பின்னர் திரு. குமரப்ப செட்டியார் அவர்கள், நற்சாந்துப்பட்டியில் அப்பகுதி யினர் பயன்பெறும் வகையில் பள்ளிக் கூடம் கட்டுவது தம் தந்தையின் கனவை நனவாக்குவதாக அமையும் என்ற முடிவுக்கு வந்தார்கள். முதன்முதலில் நிதி வைப்பீடாக ரூ. 15,000/- தந்து கல்வித் துறையின் இசைவு ஆணை யினைப் பெற்றார்கள். 11—6—1954 அன்று புதுக்கோட்டைத் துணை ஆட்சி யாளர் திரு. எஸ். பி. சீனிவாசன் எம். ஏ. ஐ. ஏ. எஸ். அவர்கள் திறந்து வைக்க இராமநாதன் செட்டியார் நடுநிலைப்பள்ளியாக மலர்ந்தது. அப் போது பள்ளியில் 6 ஆசிரியர்களும், 119 மாணவர்களும் இருந்தனர். பள் ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்ந்த தாளாளர் திரு. கு. ராம. கும. குமரப்ப செட்டியார் அவர்கள் எண்ணங் கொண்டு ரூ. 40,000/- மதிப்புள்ள நிலத்தை அறக்கட்டளையாக வழங்கி யும் ரூ. 15,000/- நிதி வைப்பீடாக ஏற்படுத்தியும் 1956ஆம் ஆண்டு 9ஆம் வகுப்பு தொடங்கப்பட்டது. தொடர்ந்து அடுத்தடுத்து உயர் வகுப்புகள் தொடங்கப்பெற்று 1958-59ஆம் ஆண்டு முழுஉயர்நிலைப் பள்ளியாக உயர்ந்தது. அப்போது 21 ஆசிரியர்களையும், 460 மாணவர்களையும் கொண்ட உயர் நிலைப் பள்ளியாக மிளிர்ந்தது.

ஊருக்குக் கிழக்கே புதுக்கோட்டை நெடுஞ்சாலைக்கு அண்மையில், பல ருக்கு உரிமையாக இருந்து வந்த 11



www.npnagarathar.com

ஏக்கர் நிலத்தைப் பொருள் கொடுத்து வாங்கியும், பலருக்கு மாற்றாக வேறு நிலங்கள் வாங்கிக்கொடுத்தும் பள்ளியின் கட்டடத்துக்கு இடத்தைத் தாளாளர் அவர்கள் உருவாக்கினார்கள். பள்ளிக்கு எதிர்ப்பக்கத்திலும்8 ஏக்கர் நிலத்தையும் வாங்கிச் சேர்த்தார்கள்.

தொடக்கத்தில் பசுமடத்தில் பள்ளி வசதிகள் குறைவான நிலையில் இயங்கி வந்தது என்றாலும் தேர்ச்சியில் சிறந்து ஒளிர்ந்தது. திரு. கு. ராம. கும. அவர்கள் வலிவும் பொலிவும் நல்வசதியும் கொண்ட கட்டடத்தைக் கட்ட எண்ணினார்கள். 1960-ஆம் ஆண்டில் 1,00,000 ரூபாய் செலவில் பள்ளிக்கட்டடம் கட்ட திட்டமிட்டார்கள். அவர்களே முன்நின்று கட்டடத்தை 1,25,000 ரூபாய் செலவில் கட்டித் திறப்பு விழாவையும் சீரும், சிறப்புமாக 9—3—1969 அன்று நடத்தி மகிழ்ந்தார்கள். வசதிமிக்க அறைகள் அனைத்துப் பொருள்களும் கொண்ட ஆய்வுக்கூடம், தலைசிறந்த நூலகம் ஆகியன பள்ளிக்குப் பெருமை சேர்க்கின்றன.

வினைதீர்க்கும் வினாயகருக்கு பள்ளியின் நுழைவாயிலில் கோவில் அமைத்து அச்செல்வவிநாயகர் ஆலயத்திற்கு 7—2—1968இல் கும்பாபிடேகமும் செய்து மகிழ்ந்தார்கள். பள்ளியின் வளர்ச்சியே தம் வாழ்வின் நோக்கமெனக் கொண்டு நன்றாற்றி வந்தார்கள்.

மீண்டும் வகுப்புகள் இட வசதிக்காக தன் இறுதிக்காலத்தில் ரூ. 1,00,000 செலவில் துணைக்கட்டிடம் ஒன்றை கட்டி பள்ளியை விரிவு படுத்தியுள்ளார்கள். ரூ. 50,000 செலவில் அறிவியல் கூடம் ஒன்றையும் அமைத்துள்ளார்கள்.

தந்தையைப் போன்றே கல்விப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட பள்ளிச் செயலர் திரு. கு. இராமநாதன் பி. எஸ்ஸி. (விவசாயம்) அவர்கள், பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கி இப்பகுதி மாணாக்கர்களின் இடர்களைய எண்ணினார்கள். 25,000/- ரூபாயை நிதி வைப்பீடாக வைத்து 22—3-1988அன்று மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தினார்கள். இடப் பற்றாக் குறையை நீக்கும் வண்ணம் மேலும் மூன்று கட்டடங்களைக் கட்டிக்கொடுத்து வள்ளல் குமரப்பச்செட்டியார் வளாகத்தை உருவாக்கி பள்ளியின் வளர்ச்சிக்கு உதவிபுரிந்து வருகிறார்கள். தற்போது, பள்ளியில் 37 ஆசிரியர்களும், 7 அலுவலர்களும், சிறப்புடன் பணியாற்றி வருகின்றனர். 1400 மாணவர்கள் நன்முறையில் பயின்று வருகின்றனர். பள்ளி, துவக்க காலத்திலிருந்தே பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கு அதிக மாணவர்களை அனுப்பி அதிக தேர்ச்சி விழுக்காட்டினைப் பெறும் பள்ளியாக மாவட்டத்தில் முதலிடம் பெற்று வருகின்றது. அதே போன்று மேல் நிலைக் கல்வி தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே பன்னிரெண்டாம் வகுப்பு அரசுத் தேர்விலும் மாவட்ட அளவில் அதிக தேர்ச்சி விழுக்காட்டினைப்பெற்றுத் தொடர்ந்து முதலிடம் பெற்று வருகின்றது.

இப்பள்ளியின் செயற்குழுவிற்கு தலைவராக திரு. எல். சோமு செட்டியார்



www.npnagarathar.com

அவர்களும், செயலராக திரு. கு. இராமநாதன் பி. எஸ்ஸி. (விவசாயம்) அவர்களும் உறுப்பினர்களாக திரு. பெரி. இராமநாதன் செட்டியார் அவர்களும், திரு. பெரி. மாணிக்கம் செட்டியார் அவர்களும், திருமதி.கும. ஏகம்மை ஆச்சி அவர்களும் திருமதி. சோம· ஏகம்மை ஆச்சி அவர்களும், திருமதி இராம. வள்ளிக்கண்ணு அவர்களும் பொறுப்பேற்று இப்பள்ளிக்கு மேன் மேலும் பெருமை சேர்க்க அயராது உழைத்து வருகிறார்கள். அவ்வப் போது பள்ளியின் செயல்பாடு குறித்தும், வளர்ச்சி குறித்தும் தக்க ஆலோசனைகள் வழங்கி பள்ளியின் வளர்ச்சிக்கு உறுதுணையாகத் திகழ்கின்றனர். பள்ளியின் வளர்ச்சி பற்றியே நாள் தோறும் சிந்தித்து வரும் பள்ளிச் செயலரின் சிறப்புமிக்க பணிகளால் பள்ளி ஆல்போல் தழைத்து வளர்ந்து வருகின்றது.

பள்ளியின் வளாச்சிக்கு நற்சாந்து பட்டிநகரத்தார்களும், அப்பகுதி மக்களும் பெரும் உற்சாகத்தைத் தந்து வருகிறார்கள்.

---

| வ.எ | தலங்கள் | இறைவன்பெயர் | இறைவியின்பெயர் |
|---|---|---|---|
| 1. | இரணியூர்க்கோவில் | ஆட்கொண்டநாதர் | சிவபுரந்தேவி |
| 2. | இலுப்பைக்குடிக்கோவில் | தான்தோன்றியீசர் | சவுந்தரநாயகி |
| 3. | இளையாத்தன்குடி | கைலாசநாதர் | நித்தியகல்யாணி |
| 4. | சூரைக்குடிக்கோவில் | தேசிகநாதர் | ஆவுடைநாயகி |
| 5. | நேமம்கோவில் | செயங்கொண்ட சோழேசர் | சவுந்தரநாயகி |
| 6. | பிள்ளையார்பட்டிக் கோவில் | கற்பகவிநாயகர் | |
| | | திருவீசர் | சிவகாமமல்லி |
| | | மருதீசர் | வாடாமலர் மங்கை |
| 7. | மாற்றூர்க்கோவில் | ஐந்நூற்றீசர் | பெரியநாயகி |
| 8. | வைரவன்கோவில் | வளரொளிநாதர் | வடிவுடையம்மை |
| 9. | வேலன்குடிக்கோவில் | கண்டீசுவரர் | காமாட்சியம்மை |

---



www.npnagarathar.com

# குடமுழுக்கு வரலாறு

[ குழுத்தலைவர் நன்றியுரை ]

பெரி. அழகப்ப செட்டியார்

அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வர் கோவில் நகரக் கோவில்களுக்குச் சமமாக அழகான அமைப்புடன் நமது முன்னோர்களால் கட்டப்பட்ட பெரியகோவில். பன்னி ரெண்டு ஆண்டுகட்கு ஒரு முறை மலர் கின்ற குறிஞ்சி மலர் போல பத்தொன் பது ஆண்டு கட்குப் பிறகு கோவிலைப் புதுப்பித்துக் குடமுழுக் காட்டு நிகழ்த்த வேண்டும் என்பதை முதல் நோக்கமா கக் கொண்டே இத்திருப்பணி துவக்கப் பட்டது. அதன்பிறகு கோவில் வாயி லில் கொலு வீற்றிருக்கும் வினாயகப் பெருமானுக்கு கோயில் எழுப்புதல், வாயிலின் மறுபுறத்தே பாலசுப்ரமணியப் பிரானுக்கு ஒரு சிறு ஆலயம் அமைத்தல் சிதை வடைந்திருக்கும் சின்ன ஊருணிக் குக்கரை எழுப்பித் தூய்மை செய்தல் ஆகிய கிளைப்பணிகள் சேர்ந்து கொண் டன.

நன்னீராட்டு விழா முதல் கூட்டத்தி லேயேகோபுரங்களை நன்கொடையாகப் புதுப்பித்துத் தருவதாகப் பலர் என்னை ஊக்குவித்தார்கள். அத்துடன் கோவிலில் உள்ள வேலைகள் அனைத்தையும் ஒவ்வொருவராக நன்கொடையாகச் செய்து தருவதாக தானாக முன் வந்து என்னை உற்சாகப் படுத்தினார்கள். மலர் வெளியீடு மூலம் ஊரணி கீழ்க்கரை கட்டிமுடித்து நன்னீராட்டுவிழா நடத்த வேண்டுமென்ற அனைவரின் விருப்பப்படி கட்டி முடித்திருக்கிறது.

மலர்க்குழு தலைவர் திரு. சிவ சிவனடியான் அவர்களின் அயராதமுயற் சியாலும், செயலாளர். ஏ. முத்துராமன் அவர்களின் தீவிர உற்சாகத்தினாலும் பதிப்பாசியர் எல். சோமு அவர்களின் சீரிய பதிப்புப் பணியினாலும் டாக்டர். எஸ். மெய்யப்பன் அவர்கள் எங்கள் சொந்தம் கருதித் தானாக முன்வந்து பெரும் சிலவை ஏற்று நன்கொடையாக மலரை அழகாக அச்சடித்துத் தந்ததா லும், மலர்க்குழு அங்கத்தினர்கள் அளவு கடந்த உற்சாகத்துடன் சிலவில்லாமல் வசூலித்துத் தந்ததாலும் கோவிலின் முன்பாக திருமண மண்டபம் கட்டுவ தாக நகரத்தார்கள் முடிவு செய்து தை மாதம் 4 ஆம் தேதி தச்சு செய்து வேலை கள் துவங்க விருக்கிறது.

நன்னீராட்டு விழாத் தலைவராக என்னை அன்புடன் தேர்ந்தெடுத்து கிடைத்ததற்கரிய வாய்ப்பினைத் தந்த தற்கு நகரத்தார்களுக்கு என் நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்னீராட்டு விழா சம்பந்தமான பணியினைச் செவ்வனே நடத்தித் தந்த



www.npnagarathar.com

உபதலைவர், செயலர், பொருளாளர் பொதுக்குழு, யாகசாலை, மஹாபிஷேகம், பிராமண போஜனம், பாதுகாப்பு, மராமத்து, இளைஞர் குழு உறுப்பினர் களனைவர்களுக்கும் என்னை உற்சாகப் படுத்தி முழுப் பொறுப்பினையும் ஏற்று நடத்தித் தந்த நகரத்தார்களுக்கும் ஆலயம் அழகுடன் திகழ தங்களது உழைப்பினைக் காணிக்கையாக்கிய பணியாளர்களுக்கும் என் நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னை இத்திருப்பணிக்கு ஆட்படுத்திக் கொண்ட எல்லாம் வல்ல சின்ன ஊரணி வினாயகப் பெருமானின் திருவருளை நினைந்து போற்றி வழிபடுகின்றேன். எம்பெருமான் அருளால் இம் மண்ணும் மக்களும் வையமும் இனிதே வாழ்வதாகுக!

---

## 32 அறங்களுள் முதன்மையான அறங்கள்

1. ஓதுபவர்க்கு உணவு
2. பசுவுக்குப் புல்
3. சிறையிலுள்ளோர்க்குச் சோறு
4. இரவலர்க்கு உதவி
5. சிறுவர்க்குத் தின்பண்டம் நல்கல்
6. அநாதைகளுக்குச் சோறு
7. மகவு வளர்த்தல்
8. நோய்க்கு மருந்தளித்தல்
9. பிறர்துயர் காத்தல்
10. தண்ணீர்ப் பந்தல் அமைத்தல்
11. திருமடம் கட்டுதல்
12. குளம் வெட்டுதல்
13. சோலைகள் அமைத்தல்
14. ஆவுரிஞ்சு தறி நடுதல்
15. விலங்கிற்கு உணவிடுதல்

---



www.npnagarathar.com

125

**பிரமோதூத வருஷம் தை மாதம் 22 ஆம் தேதி (4—2—1991) திங்கள்கிழமை நடந்த நன்னீராட்டு விழாவில் நன்கொடையாளர்**

| புதுப்பித்தல் | நன்கொடையாளர் |
|---|---|
| 1. பிள்ளையார் கோபுரம் | பெ.ராம.வெ. ராம. அழகப்ப செட்டியார் |
| 2. சுவாமி கோபுரம் | கும.மு.கி.மு. கிருஷ்ணப்ப செட்டியார் |
| 3. அம்பாள் கோபுரம் | பெரி.அழ. ருக்மணி ஆச்சி நினைவாக அழ. பெரியகருப்பன். |
| 4. சோமாஸ்கந்தர் கோபுரம் | பெ.ந.சித. கணபதி செட்டியார் |
| 5. சுப்ரமணியர் கோபுரம் | சி.நா. சிவனடியான் செட்டியார் |
| 6. மஹாலெட்சுமி கோபுரம் | பெரி.சுப.கி. ரகுபதி சுப்ரமணியன் B.E. (Hons) M.Sc. Canada. |
| 7. பைரவர் கோபுரம் | வீர.மு. குடும்பத்தார்கள் |
| 8. பள்ளியறை கோபுரம் | பெரி.பெ.பெரி குடும்பத்தார்கள் |
| 9. சுவாமிசன்னதி ராஜகோபுரம் | அள.கு.ராம. முருகப்ப செட்டியார் |
| 10. அம்பாள் சன்னதி ராஜகோபுரம் | பெ.ந.சித.கண. சிதம்பரம் செட்டியார் |
| 11. சண்டிகேஸ்வரர் கோபுரம் | அ.வீர. அண்ணாமலை செட்டியார் |
| 12. நடராஜர் விமானம் | ந.மெ. உமையாள் ஆச்சி நினைவாக ந.மெ. குடும்பத்தார்கள் |
| 13. குடவரை பிள்ளையார்கோவில் | சா.வீர. அ.சுப. அண்ணாமலை செட்டியார். |
| 14. பாலசுப்ரமணியர் கோவில் | பெரி.சுப.கி. ரகுபதி சுப்ரமணியன் B.E. (Hons) M.Sc. (Canada) |
| 15. சுவாமி சன்னதி சாலஹாரம் | லெ.பெரி. குடும்பத்தார்கள் |
| 16. அம்மன் சன்னதி சாலஹாரம் | கு.ராம.கும. ராமனாதன்செட்டியார் |
| 17. சுவாமி சன்னதி முன்மண்டபம் | பெ.ராம. குடும்பத்தார்கள் |
| 18. அம்மன் சன்னதி முன்மண்டபம் | கும. கமலம் ஆச்சி |



www.npnagarathar.com

| புதுப்பித்தல் | நன்கொடையாளர் |
|---|---|
| 19. அலங்கார முன்மண்டபம் | கும.பெரி.ந.மு. குடும்பத்தார்கள் |
| 20. மணி மண்டபம் | முத்துக்குமார்&கோ. புதுக்கோட்டை |
| 21. சுவாமி சன்னதிமுன் ரிஷபாரூடர் | மெ.ப.ராம. பழனியப்பசெட்டியார் |
| 22. அம்மன் சன்னதி முன்கஜலக்ஷ்மி | பழ.ராம.மகள், சாத்தம்மை |
| 23. உள் திருமதில் சிற்பங்கள் | லெ.அரு. லெக்ஷ்மணன் செட்டியார் |
| 24. வெளி திருமதில் சிற்பங்கள் | பெரி.லெ. மெய்யப்பன் A.M.N. A.C II |
| 25. அஷ்டபந்தனமருந்து சாத்துதல் | Dr.M. அண்ணாமலைசெட்டியார் M.D.<br>அரு. நாகராஜன் செட்டியார். |
| 26. சுவாமி மூலஸ்தானசுவர் கிரானைட் பதித்தல் | அ.மு.கும. ராமனாதன் செட்டியார் |
| 27. அம்மன் மூலஸ்தான சுவர் கிரானைட் பதித்தல் | மெ.கா.மு.மெ. முத்துராமன் செட்டியார் |
| 28. சுப்ரமணியர் மூலஸ்தான சுவர் மார்பிள் பதித்தல் | பழ.பெரி. பழனியப்ப செட்டியார் |
| 29. கொடிமரம்முன் நியான்சன் விளக்கு. | கி. சாத்தம்மை கிருட்டிணப்பன் |
| 30. சுவாமி சன்னதி ராஜகோபுரம்மேல் சோடியம் விளக்கு | மு.கும.மகள். அலமேலு ஆச்சி நினைவாக மு.கும.மு. குடும்பத்தார்கள் |
| 31. மைக்குடன் ஆம்பிளிபையர்செட் | ந.மு.அ.நமு. மங்கை ஆச்சி |
| 32. வாகனங்கள் புதுப்பித்தல். | வெ.வ.ரெ. ரெங்கநாதன் செட்டியார் |

நச்சாந்துப்பட்டி நகரத்தார்கள்

---



www.npnagarathar.com

# பூச்சொரிதல்

S.P.L. பழனியப்பன்

அன்பர் தொழும் சோலைமலை ஐயன்
பதம்பணிவோர்க்கு
இன்ப மெலாம் நல்கும் இனிதே

பள்ளத்தூருக்கு 2 கிலோ அருகில் செட்டிநாடு ரெயில்வே நிலையத்துக்கு சமீபத்தில் கொத்தரி என்ற ஊரில் ஸ்ரீசோலை ஆண்டவர் கோவில் அமைந் திருக்கிறது.

கோவில் அமைப்பு மிக எளிமை யாகவும் கவர்ச்சியாகவும் இருக்கும். அருகில் அழகான ஊருணியும் அதைச் சுற்றி தென்னை மரங்களும் நிழல் தரும் பழ மரங்களும் நிறைந்து பெரிய சோலையாக காட்சி அளிக்கின்றன. மனதுக்கு அமைதியாகவும் குளிர்ச்சியு மான சூழ்நிலையில் அமைந்து இருக்கும் அற்புதமான இடம். அருகில் தங்குவதற்கு மடங்களும் கட்டியுள்ளார்கள்.

ஸ்ரீசோலை ஆண்டவருக்கு அனந்த யோக சாஸ்தா என்ற பெயரும் உண்டு. ஒவ்வொரு தமிழ் ஆண்டும் முதல் தேதி யன்று பூச் சொரியல் விழா சிறப்பாக நடக்கும். 4 மைல் சுற்றுப்புறத்தில் உள்ள சுமார் 20 கிராமங்களில் இருந்து பல விதமான வர்ண மலர்கள் தேர்களில் அலங்காரம் செய்து மேள தாளத்துடன் மக்கள் கொண்டு வந்து மகிழ்ச்சியாக சுவாமிக்கு புஷ்பம் சொரிவார்கள். பலர் வேண்டுதலுக்காகப் பால் குடம் எடுத்து வருவார்கள். பாட்டு, ஆட்டம் மின் விளக்கு, அலங்காரங்கள் மிக மகிழ்ச்சி யாக இருக்கும்.

சீர்மேவும் சோலைமலை ஐயனார் தம்
திருவடியை தினம் நினைத்தால்
செல்வஞ் சேரும்
பார் புகழப் பாக்கியமும் பண்பூஞ்
சேரும்
பாவமது பறந்து புண்ணியம்
மிகவும் சேரும்
ஏர்மேவும் வாழ்வு மிகும் இன்பஞ் சேரும்
இருதயத்தில் இணைபிரியா ஞானஞ்
சேரும்
கார்மேகம் பொழிந்து பயிர் மிகுந்து
சேரும்
கவின் சோலை ஆண்டவரைக்
கருத்தில் வைப்போம்

தமிழ் ஆண்டின் முதல் நாள் கடவுள் சிந்தனையாகவே இருப்பதுவும் அந்த ஆண்டு பூராவும் எடுத்த காரியங்கள் சிறப்பாக முடியும்.

நற்சாந்துப் பட்டியிலிருந்து 22 கி.மீ. துலைவில் உள்ள ஸ்ரீசோலை ஆண்ட வருக்கு, மலரால் பூச்சொரியும்



www.npnagarathar.com

எண்ணம், முதன் முதலில், 1945 ஆம் ஆண்டு திரு. பெரி. மெ. கரு. ரெங்க நாதன் செட்டியார் அவர்களுக்குத் தோன்றியது.

அதைத் தன்னால் நிறைவேற்ற முடியுமா என்ற ஐயம் மனதில் இருந்து வந்தது. அது குறித்து பலரும் ஊக்கம் தரவே, சமையல் மேஸ்திரியும் உடன் ஒத்துழைப்பு தர சம்மதிக்கவே எண்ணம் செயலானது.

ஆதி முதலில் இரண்டு சைக்கிள்களை ஒன்று சேர்த்து கட்டி, மலர்வண்டி தயார் செய்தே இப்பூச் சொரியல் துவங்கியது.

அது தொடர்ந்து, சிறிது சிறிதாக நற்சாந்துப் பட்டி மக்கள் ஆர்வம் காட்ட அது பெருவிழாவாகச் சிறப்படைந்தது.

ஆரம்ப காலங்களில் திரு ரெங்க நாதன் செட்டியாரவர்கள் சுற்றுப்புற கிராமங்களில் தானேசென்று நெல் அறுவடை காலங்களில் களத்தில் நெல் சேகரித்து அதை விற்று மலர் வாங்கவும் தப்பு தாரட்டை, கொம்பு செலவுக்கும்' விளக்கு வகை செலவுக்கும், உணவுவகை உடன் செல்லும் செலவுக்கும் உபயோகப் படுத்தினார்கள்

திரு ரெங்கநாதன் செட்டியாரவர் களும் ஒரு சிறிய தேர் செய்து தன் முதுகில் வெள்ளி கொக்கிமாட்டி அந்த தேரை 22 கிலோ தூரம் இழுத்துச் சென்றார்கள். அலகில் வேல் குத்தி உடல் முழுவதும் 1000 சிறிய வேல் குத்தி பல ஆண்டுகள் பால் குடம் எடுத்துச்சென்றி ருக்கிறார்கள். அதைப் பார்த்தவர்கள் மெய் சிலிர்த்துப்போகும். ஆண்டுக்கு 6மாதம் இதே வேலையாகப் பணி செய் வார்கள். பார்த்தால் கேட்டால் ஆனந்தமாக இருக்கும். அவரை ஸ்ரீ சோலை ஆண்டவராகவே மதித்து அனவரும் கும்பிட்டு திருநீறு வாங்கு வார்கள். எல்லாக் கவலைகளும் பிணியும் வை. ரெ. அவர்களுக்கு உடல் முழு தும் வெள்ளைத் தோல் இருந்தது நாளா வட்டத்தில் பூர்ணமாக மாறி ஆரோக்கியமாக இருந்தார்கள்.

15ஆவது ஆண்டில் பூ கொண்டுபோக மலர் ரதம் வேண்டு மென்றார்கள். நச்சாந்துப் பட்டி நகரத்தார் சார்பாக திரு பழ. இராம. சிவசாமி செட்டியார வர்கள் நிதி சேர்த்து பள்ளத்தூர் மர ஆசாரியை வைத்து அற்புதமான ரதம் செய்தார்கள். நச்சாந்துப்பட்டி நகர மக்களுக்கு ஆர்வம் வந்தது. எல்லோரும் மிக உற்சாகமாக ஒத்துழைத்தார்கள். திரு ரெ. அவர்களும் ஒத்தாசைக்கு வீர. மு. சுப்பையா செட்டியார் மற்றும் அண்ணாமலை செட்டியார் நாட்டார் அனைவரும் ஒத்துழைப்புகள் தந்தார்கள் 3 ஆண்டுகள் கழித்து 5 நகரத்தார். நிதிக்குழு அமைத்து சிறப்பாகக் கொண் டாடினார்கள்.

நிதிக் குழுவினர்:

1. பெரி. மெ. கரு. ரெங்கநாதன் செட்டியார்
2. வீர. மு. சுப்பையா செட்டியார்
3. பழ. சி. ராம. பழனியப்ப செட்டியார்
4. பெரி. ராம. மாணிக்கம் செட்டியார்
5. குழ.சுப. அண்ணாமலை செட்டியார்



www.npnagarathar.com

6. வீ. மு. வீர. முத்துகருப்பன் செட்டியார்

7. பெ. ராம. ராம. பெ. ராமநாதன் செட்டியார்

ஆண்டாண்டு சித்திரையில்—முதல் நாள் மேளதாள விமரிசையாய் புஷ்ப வகை விதவிதமாகப் பல விருதுடனே அன்பர் பலர் சூழ்ந்துவர-சோலை மலை ஆண்டவர்க்குப் பூச்சொரிந்து அருள் பெறுவார்.

நிதிக்குழு நம்மூர் மக்கள் தொழில் செய்யும் இடங்களில் நிதி வசூல் செய்து மலர் விழாவைச் சிறப்பாக நடத்தி கிறார்கள். பிரதிவருடமும் சித்திரை மாதம் முதல்தேதி மாலை 4 மணி சுமாருக்கு சிவன் கோவிலில் சிதம்பரேஸ் வரர் சிவகாமி அம்பாளுக்கு அர்ச்சனை செய்து பால்குடம் எடுப்பவர்களுக்கு மாலை போட்டு நகரத்தார் நாட்டார் ஆண், பெண் அனைவரும் மலர்த் தட்டு எடுத்து உள்பிரகாரம் வந்து சின்ன ஊரணி பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்து பால்குடம் வைத்து சிதறு தேங்காய் 5 உடைத்து பள்ளிக்கூட பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்து பிறகு ரதத்தில் மலர் கூடை தட்டுகளை வைத்து தீபாராதனை காட்டி திரு லெஷ்மணன் செட்டியார் அவர்கள் பண்ணை மாடு ரதத்தில் பூட்டி மேள தாளத்துடன் புறப்படும். கம்பு விளை· யாட்டு, மற்ற ஆட்டங்களும் நடக்கும்

வருஷப் பிறப்பன்று மதுரா பேங்க் தண்ணீர் பந்தல் சிறப்பாக நச்சாந்துப் பட்டி பாலர் பள்ளிக்கூடத்தில் கும. பெரி. சேதுச்செட்டியார் மேற்பார்வை யில் நடக்கிறது. மேலும் பெரிய ஊரணி, ந. புதூர். நெய்க்குணம், திரு மயம் வழி நெடுக எல்லாக் கிராமங் களிலும் தண்ணீர்ப் பந்தல் நடக்கிறது. நெய்க்கு ணத்தில் சிறப்பாக தியாக ராஜன் செட்டியார் குடும்பத்தினர் தண்ணீர்ப் பந்தல் நடத்துகிறார்கள். நேமத்தான் பட்டியில் திரு சடையப்ப செட்டியாரவர்கள் நடந்து வரும் அனை வருக்கும் பலகாரம், காப்பி இரவு 8 மணிக்கு எல்லோருக்கும் இல்லை என்று சொல்லாமல் திருப்தியாக உபசாரத் துடன் கொடுக்கிறார்கள். இரவு 12 மணிக்கு மலரை பால் காவடியை ஸ்ரீசோலை ஆண்டவருக்கு சேர்த்து அபிஷேகம், அர்ச்சனை செய்து பிரசாதம் பெற்று இரவு 1 மணிக்கு அன்னதானம் அளித்து அனைவரும் ஊர் வந்து சேரு வோம், அநேக வண்டிகளில், கார்களில், சைகிள்களில், பஸ்ஸில், ரயிலில் மக்கள் வந்து செல்வார்கள். முக்கியமாக ராம நாதன் செட்டியார் மேல் நிலைப்பள்ளி மாணவர்கள் ஆசிரியர்கள் நிறைய வருவார்கள். மறுநாள் காலைஸ்ரீசோலை ஆண்டவருக்கு பால், இளநீர், பஞ்சா மிர்த அபிஷேகம் செய்து பிரசாதத்துடன் ஊர் வந்து அனைவருக்கும் கொடுப் போம். போகும் வழியில் கிராம மக்கள் நெல், கோழி, இளநீர் சாமிக்குக்கொடுப் பார்கள். அவைகளையும் வண்டியில் வாங்கி கோவிலில் சேர்த்து விடுவோம்.

சென்ற 25 ஆண்டுகளாக இந்த நிதிக்கு குழு செயல் பட்டு வருகிறது. இதற்குப் பெரிதும் காரணமாக இருந்த



www.npnagarathar.com

130

திரு. ரெ. அவர்கள் திரு. மா. அவர்கள் திரு. சுப. அவர்களை என்றும் மறக்க முடியாது. இந்த 47ஆவது ஆண்டுமுதல் இளைஞர்கள் பணி துவங்குகின்றனர். மிகவும் சிறப்பாக நடந்துவரும்.

மலர் ரதம் நிற்பற்கு பழைய கட்டிடம் பழுதாகி விட்டதால் 1/9 Bயில் உள்ள பழைய ரதக் கொட்டகையைப் பிரித்து புது ரதக் கொட்டகை 7.9.1984 இல் கட்டி முடித்தோம்.

| | |
|---|---|
| பழைய ரதக் கொட்டகை சாமான் விற்றது | ரூ. 3250 |
| மலேசியா வசூல் | ரூ. 4000 |
| உள்ளூர் வசூல் | ரூ. 2650 |
| பெ.ராம.லெ. குடும்பத்தினர் | ரூ. 1500 |
| பழ.சி.ராம.பழ. | ரூ. 6000 |
| வீர.மு.சுப. | ரூ. 5000 |

ஆக ரூ. 22.400 வசூல் செய்து 14 அடி அகலம் 32 அடி நீளம் 14 அடி உயரம் உள்ள 448 சதுர அடி தார்சு கட்டிடம் ரூ 22400 க்குக் கட்டி முடித்தோம்.

பக்தர்களைப் பாது காக்கும்
சோலையாண்டவா
பதம் பணிந்தேன் அருள் புரிவாய்
சோலையாண்டவா
வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!

---

முற்பவத்தில் யான்புரிந்த தீவினைகள்
முழுதகற்றும் முகத்தில் னானை.
அற்பசுகத் தெனை அழுத்தா ஐயங்கரனை,
பிற்பவமும் அகற்றும் கோவை,
சொற்பழுது புரியாத வணிகர்குலம்
தினம்வணங்கும் துணைத்தா ளானை
கற்பகத்தின் பிடியகற்றும் கற்பகமாம்
விநாயகனைக் கருத்துள் வைப்போம்.

— கோவிலூர் ஆண்டவர்

யாவர்க்குமாம் இறைவற் கொருபச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே.

— திருமூலர்



www.npnagarathar.com

# வேல் உண்டு வினை இல்லை

**சுகி. சிவம்**

'வேல்' ... முருகன் கையில் உள்ள கருவியா? கலையழகு மிக்க ஆபரணமா? கொலை செய்யும் ஆயுதமா? நிலைபேறு நல்க வல்ல ஆண்டவனேதானா?

பொதுவாக, தமிழர்கள் வாள்,வேல் இரண்டு கருவிகளையும் பெரியதாகப் போற்றி, வில்லை அடுத்த நிலையில், போற்றினர். எனவே வீர வழிபாடாகிய முருக வழிபாட்டில் வேல் இடம் பெற்றது.

மலைக் கடவுளாகிய முருக வழிபாட்டில், மலை வாழ்மக்களின் காப்புக் கருவியாகிய வேல் இடம் பெற்றதில் வியப்பில்லை! காப்பது தானே கடவுள், ஆனால் மத யானை போன்ற விலங்குகளிடமிருந்து மனிதனைக்காத்த கற்காலக்கருவி யொன்றை இக்கால மக்களும் பூசிப்பது இழிவாகாதா?

வேலுக்கு வேறு பொருள் உண்டு. வெல்லுவது வேல். வெற்றியின் சின்னம் அது. வேல் எப்படி வெல்லும்? வேலுக்கு அறிவு என்று ஒரு பொருள் உண்டு. ''அறிவுற்று'' என்ற செய்தியைச் சமண காப்பியமாகிய சீவக சிந்தாமணி 'வேல் பெற்று' என்று கூறுகிறது.

அறிவுதான் கடைசியில் வெல்லும். எனவே அறிவின் அடையாளம் வேல் அறிவு ஆழமாக, புத்திக் கூர்மையாக, பரந்த பல தெரிந்து அகலமாக இருக்க வேண்டும் வேல் ஆழம், அகலம், கூர்மை என்ற மூன்றும் உடையது.

'அறிவு' ஒரு கருவியாகுமா? என்று சிலர் கேட்கலாம். "அறிவு அற்றம் காக்கும் கருவி'' என்பது திருவள்ளுவ மறை. அழிவிலிருந்து மனிதனைக் காக்கும் கருவி அறிவு என்கிறார். என்ன பொருத்தம்.

விலங்குகள், எதிரிகள் மூலம் மனிதனுக்கு நேரும் அழிவிலிருந்து காப்பாற்றிய இரும்பு வேல் போல், தன் பொறி புலன்களாகிய விலங்குகள், ஆசை மதயானைகள் போன்ற எதிரிகளிடமிருந்து அறிவு காப்பதால் அறிவே வேல். வேலே அறிவு. அது அற்றம் காக்கும் கருவி.

பிறவி தோறும் செய்த செயல்கள், எண்ணங்கள் வினைப்பயனாக வருகின்றன. அந்தவினையை அறிவு ஒன்றுதான் அழிக்கும். பாவபுண்ணியமான வினைகளை மெய்ஞ்ஞானம் ஒன்று தான் அழிக்க இயலும்.

அதனால் தான் வேல் உண்டுவினையில்லை என்றனர். வினைத் தொகுப்பை நல்லறிவு வாலறிவு துணை கொண்டு



www.npnagarathar.com

மட்டுமே அழிக்க முடியும். அதுகருதியே அறியாமை மாயையாகிய தாரகா சுரனையும், அறியாமை உருவாகிய ஆணவம் என்னும் சூரபன்மனையும், வேல் அழித்தது என்பது வரலாறு, மாயை, ஆணவம் அழிந்தால் பிறவி இன்றி போகிறது. கர்மவினை தானே அழிகிறது.

ஞானம் என்பது புருவ மத்தியில் தியானம் செய்வதால் கிட்டும் என்பது பெரியோர் அனுபவம். நாசியின் இரு புறமும் செல்லும் இடகலை, பிங்கலை காற்றை ஒடுக்கி புருவ மத்தியில் செலுத்தி சுழிமுனை நாடியில் நிறுத்தும் போது தவம், சித்தி, சமாதி கைகூடு கிறது. பிறவிவினை அழிகிறது.

முருகன் வலப்பக்கம் வள்ளி. இச்சா சக்தி. இடப்பக்கம் தெய்வானை. கிரியா சக்தி. வேல் மத்தியல். அதுவே ஞான சக்தி மூச்சை ஒடுக்கி, இருபுறமும் சீராக்கி, புருவமத்தியில் உணர்வு லயித்தால் (வேலாகிய ஞானசக்தி வெளிப்பட்டால்) பிறவித் துயருக்குக் காரணமான வினை அழிகிறது.

வேல் உண்டு வினை இல்லை! இதுகருதியே ஒருகாலத்தில்வெளிப்பகை வெல்லும் வேல் வணங்கப் பட்டது போல் உட்பகை வெல்லும் ஞானவேல் இன்று வணங்கப்படுகிறது. மேலே கடவுளாக வணங்கப்படும் வேற்கோட்டங்கள் இருந்திருக்கின்றன.

உயர்திணை மனிதர்க்கு, ஞான வேல், ரத்ன வேல், வேலாயுதம் என்று பெயர்கள் சூட்டப் படுவதே வேலின் புகழை விளக்கும். ஆயுதமா? ஆபரணமா? ஆண்டவனே தானா? என்பதற்கு வேலாயுதம் என்ற பெயரே விடை தரும்.

---

சிறந்த அறிஞர்கள் — அறிவு நலந்தரும் உணவையே உண்கின்றனர்.

நன்கு கற்றவர்கள் — உடல் நலத்துக்கான உணவையே உண்கின்றனர்.

ஓரளவு கற்ற பொதுவானவர்கள் — உடல் வலிவுக்கான உணவையே உண்கின்றனர்.

கல்லாதவர்களும் சிறிதே அறிவுள்ளவர்களும் — உடல் தேவைக்கான எந்த உணவையும் உண்கின்றனர்.

கீழான அறிவுள்ளவர்கள் — பசிக்காகவே உண்கின்றனர்.

அதனினும் கீழானவர்கள் — ஆசையாகவே உண்கின்றனர்.

விலங்குகளும், பறவைகளும் — உண்பதே உயிரியக்கமாகக் கொண்டன.



www.npnagarathar.com

# தமிழ் வளர்த்த நகரத்தார் பெருமக்கள்

டாக்டர். ச. மெய்யப்பன்
இணைப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

நூற்றுக்குமேற்பட்ட நகரத்தார்கள் கவிஞராய் பேராசிரியராய் பெரும் புலவராய் இதழ்ஆசிரியராய் பதிப்பாளராய் துணைவேந்தராய்த் திகழ்ந்துள்ளனர். எழுவரைத் தேர்ந்ததின் நோக்கம் மறக்கப்பட்ட இவர்களை இளைஞர்கட்கு அறிமுகம் செய்வது. சாதனைகள் பல புரிந்த சான்றோர்கள் பேரேட்டில் சில ஏடுகளே இவை. தோன்றிய துறைகளில் முத்திரை பதித்தோர். சமூக ஒளிவிளக்குகள். தனித்தன்மை உடையவர்கள். பயன்பட வாழ்ந்த பெருமக்கள். தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெற்ற ஏழுவள்ளல்களைப் போன்ற எழுவர் பற்றிச் சுருக்கமாகக் கூறுவதே கட்டுரையின் நோக்கம். விடுபட்டவர்கள் பற்றி விரிவான என் நூலில் விளக்குவேன்.

## சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா

### 1883 – 1956

செட்டிநாட்டு ராஜாராம் மோகன் ராய் என அறிஞர்களால் அழைக்கப் பெறுபவர். குமரன் இதழின் ஆசிரியர். அமராவதிபுதூரில் 1938 இல் மகளிர் இல்லம் கண்ட பெருமுயற்சியாளர். சொல்லும் செயலும் ஒத்த வாழ்வினர். இந்து மத அபிமான சங்கம் நிறுவியவர்களில் தலைமைச் சிறப்புடையவர்.

தொண்டுள்ளம் கொண்ட இப் பெருமகனார் தேசிய இயக்கத்திற்குப் பெரும்பணி ஆற்றியுள்ளார். பெரியாரின் சீர்திருத்த இயக்கங்கள் செட்டிநாட்டில் பரவ வகை செய்தவர் கல்வியாளராய் அறிஞராய், சிந்தனையாளராய்த் திகழ்ந்த இவர்கள் செட்டிநாட்டின் வளர்ச்சிக்குச் செய்த பணிகள் பலவாகும். கம்பராமாயணத்திற்குச் செம்பதிப்புகளைக் கொணரக் விழைந்தவர். பல பாடபேதங்களை உறுதி. செய்தவர். கம்பன் பாடல்களில் மிகச் சிறந்தவற்றைத் தொகுத்து இராம காதை என்னும் பெயரில் வெளியிட்டவர். இவர் ஒரு தொகுப்பியல் வல்லுனர் என்பதை இராமாகதை கட்டியம் கூறுகிறது. மாறிவரும் சமூகவியல்புக்கு ஏற்றவாறு நகரத்தார் சமூகம் மாற்றம் பெறவேண்டும் என விடுதலைக்கு முன்னரே எடுத்துரைத்த வீரத்திருமகனார். தெளிந்த சிந்தனையும் செறிந்த அறிவும் அமைய உரையாற்றுவதில் வல்லவர். இதழ்



www.npnagarathar.com

ஆசிரியராய், புலமையாளராய், சிறந்த சொற்பொழிவாளராய், சீர்திருத்த முன்னோடியாய், செயல்திறன் மிக்க வராய், கம்பன் ஆய்வாளராய், கடமை தவறாக் கண்ணியராய், சீலத்தால் சிறந்த புண்ணியராய் விளங்கினார். இவர்கள் அரும்பாடு பட்டுத் தோற்று வித்த இடம்தான் இன்று சாரதாசேவா சிரமம்என்னும் பயிற்சிப் பள்ளி,தொழிற் களமாய், மகளிர் பாசறையாக விளங்கு கிறது.

## தமிழ்க் கடல் ராயசொ.

## (1898 - 1974)

ஊழியன் இதழின் ஆசிரியர்-நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் மிக்கவர். தூய உடையினர். பெருமித வாழ்வினர். கம்பனும் சிவனும், வில்லியும் சிவனும் என்னும் பெரு நூல்களின் ஆசிரியர். நாட்டு விடுதலைக்காகச் சிறை சென்ற செம்மல். அமராவதி புதூரில் இவரது இல்லத்திற்குக் காந்தி அடிகள் வருகை தந்துள்ளார். பாரதியால் போற்றிப் பாராட்டப்பட்ட இந்து மதாபிமான சங்கநிறுவனர்களில் ஒருவர். நினை வாற்றலில் தன்னிகரற்றவர். பாடல் பெற்ற தலங்கள் அனைத்திற்கும் சீவி சீட்டி வெங்கடாசலம் செட்டியாருடன் மகிழுந்தில் சென்று மகிழ்ந்தவர். தான் பெற்ற இறை அனுபவ இன்பத்தை திருத்தலப்பயணம் என்னும் சிறந்த நூலில் விளக்கியுள்ளார். காந்தி பிள்ளைத்தமிழ், காந்தி வெண்பா முதலிய பலநூல்களில் அண்ணல் காந்தி அடிகளைப்பற்றிக் கவிபாடிப்பெருமை சேர்த்துள்ளார். அவை அனைத்தையும் காந்திக் கவிதைகள் என்னும்தலைப்பில் தொகுத்துள்ளார். அந்நூலுக்கு மூதறி ஞர் வ.சு.ப. மாணிக்கனார் அரிய ஆராய்ச்சி முன்னுரையை வழங்கியுள் ளார். அதில் தமிழ்க்கடலின் புலமை ஆழத்தையும், ஆழ்ந்த கல்வி நலத்தை யும், பழந்தமிழ் நூல்பயிற்சியையும், யாப்பு நலங்களையும் திறனாய்ந்து தெளிந்து போற்றியுள்ளார்.

இவர்தம் இலக்கியப் பொழிவு தனித் தன்மையது.பண்டிதமணி போல் நயங் கள் கூறுவதில் வல்லவர். ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியாரைப் போல பாடலைத் துய்த்துக் கேட் போரைத் துய்க்கும்படி விளக்குவதில் தனிப்பாணியைக் கையாண்டார். இவர் பாட்டினைப் பல்காலும் சொல்லுகிற பாங்கிலே கேட்போர் நெஞ்சில் அவை பசுமரத்தாணி போலப் பதிந்துவிடும், சைவப் பணியில் சிறந்த இவரை சிவம் பெருக்கும் சீலர் என அன்பர்கள் அழைப்பார்கள். இவர் பதிப்பித்த திருவிளையாடற் புராணச் செம்பதிப்பு இவரது பதிப்பாற்றலுக்குச் சான்றாக அமைவது.திருமுறைகளில் இருந்து இவர் தேர்ந்தெடுத்துத் தொகுத்த பாடல் வகுத்த அடிக்குறிப்புகள் விளக்கக்குறிப்பு கள் அளித்த முறை கல்லார்க்கும் கற்றோர்க்கும் எல்லார்க்கும் இன்பம் பயப்பவை.புலமை வீறும் காந்திய வாழ் வும் இவருக்குப் பேரும் புகழும் தந்தன. ராயசொ.சொ முருகப்பா,சா.கணேசன் மூவரும் நகரத்தார்குல மும்மணிகள். தமிழைக்காப்பதிலும் பரப்புவதிலும் தமிழ் அறிஞர்களைப் போற்றியதிலும்



www.npnagarathar.com

இவர்கள் ஆற்றிய பணிகள் அளவிடற் கரியன.தொகுப்பு ஆசிரியராய், நூலாசிரியராய், குறிப்புரை ஆசிரியராய், பதிப்பாசிரியராய், கவிஞராய் பன்முகநலன்கள் பெற்று விளங்கிய ராய.சொ சைவமும், தமிழும் காந்தியமும் தமிழ் நாட்டில் செழிக்கச் செய்த பெருமகனார் ஆவர். புலவர் போற்றும் புலவராய் பெரும்செல்வர்கள் போற்றும் புலவராய் நாடு மதிக்கும் சான்றோராய்த் திகழ்ந்தார்.

## சா. கணேசன்

**(1908 – 1982)**

கம்பன் கழகத்தை நிறுவியவர். கணேசன் என்ற இயற்பெயரைக் கம்பன் அடிப்பொடி என மாற்றிக் கொண்டவர். ஆண்டுதோறும் கம்பன் விழாவை மிகச் சிறந்த முறையில் நடத்திப் புகழ் பெற்றார். குறித்த நாளில் குறித்த நேரத்தில் விழாவை நடத்துவது இவரது சிறப்பு இயல்பு.

மிகச்சிறந்த தலைப்புகளில், அறிஞர்களைத் தேர்ந்து சொற்பொழிவிற்கு ஏற்பாடு செய்வார். கம்பன் விழாப் பட்டிமன்றங்கள் நாடறிந்தவை; தனிச் சிறப்புடையவை. கருத்துச்செறிவு மிக்க நாகரிகமான பட்டிமன்றங்கள். எக்காரணம் கொண்டும்தரக் குறைவு தலைக்காட்டாது. பட்டிமன்றங்களில் புதிய புதிய உத்திகளைக் கையாண்டு அவற்றிற்கு வலிவும் பொலிவும் சேர்த்தவர். வழக்காடு மன்ற எளியமுறையினைத் தேர்ந்தெடுத்து இலக்கியப் பொழிவுகளில் நுண்ணாய்வு (நுட்பம்) விளங்கச் செய்தவர். இவரால் நடத்தப்படும் வழக்காடு மன்றங்கள், பட்டி மன்றங்கள் வெறும் பொழுது போக்குகள் அல்ல.

ஐம்பது ஆண்டுகளாகக் கம்பன் கழகத்தைக்கட்டிக் காத்த பெருமை இவரைச் சேரும். இவரது நன்முயற்சியால் நாற்பதுக்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் தமிழ்நாடு எங்கும் தோன்றியுள்ளன. கம்பராமாயணக் கல்வி சிறக்க, பரவ, இலக்கிய நுகர்ச்சி செழிக்க கம்பன் கழகங்கள் ஆற்றிய பணி தனி ஆய்வுக்கு உரியன. ஆண்டுதோறும் 50க்கு மேற்பட்ட சொற்பொழிவாளர்களும், 100க்கு மேற்பட்ட வெளியூர் சுவைஞர்களும்கலந்து உரையாடி மகிழும் பெரும் இலக்கிய விழா. செட்டிநாட்டில் சொற்பொழிவாளர்களையும் கவிஞர் அணிகளையும் தோற்றுவித்த பெருமை இவரைச்சாரும். கவிஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் கம்பன் கழகம் கொடுக்கும் மதிப்பும் மரியாதையும் வேறு எங்கும் காணமுடியாது. கம்பராமாயண ஆய்வுகளுள், கம்பராமாயணச் செம்பதிப்புகளுள் அண்ணாமலைப்பல்கலை கழகம் சென்னைக் கம்பன் கழகப் பதிப்புகள்வெளிவர உறுதுணையாக அமைந்தவர். நாடெங்கிலும் கம்பன் விழா சிறப்பாக நடைபெறுவதற்குத் தொண்டர்களை, இலக்கிய அன்பர்களை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும்.தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் கம்பன் அலை வீசுவதற்கு இவரே மூலகாரணம். இலக்கிய மறுமலர்ச்சி



www.npnagarathar.com

136

இயக்கங்களில் இவரது பங்களிப்பு மிகுதியும் உண்டு.

அழகப்பா கல்லூரி ஆட்சிக்குழு உறுப்பினராக அமைந்து தொடக்க நாள்முதல் இவர் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன.

இவரது செயல் திறமை உணர்ந்த அறிஞர் அண்ணா 1968 இல் நடந்த 2ஆவது உலகத்தமிழ் மாநாட்டில் பொருட்காட்சியையும் திருவிழாப் பொறுப்பினையும் இவரிடம் ஒப்படைத்தார்.

செட்டிநாட்டில் தேசிய எழுச்சிற்கு வித்திட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர். விடுதலைப் போரில் வீரம் மிக்க வகையில் தொண்டாற்றினார். சிறைப்பட்டார். சிறையில் கம்ப ராமாயணம் கற்பித்தார்.

சுதந்திரப்போராட்டக் காலத்தில் இருந்து சட்டை போடாது வாழ்ந்தார். மொழி, பண்பாடு, நாகரிகம்பற்றி பல ஆய்வுக் கட்டுரைகளையும் சில நூல்களையும் எழுதியுள்ளார். சிறந்த கல்வெட்டு ஆராய்ச்சியாளராகவும் விளங்கினார். இலக்கியவாதியாக தேசிய வாதியாகத் திகழ்ந்தார். இவர் சமகாலத்தில் வாழ்ந்த அனைத்துத் தரப்பினராலும் மதிக்கப்பட்டார். தலைமைப்பண்புகளை உடையவர், நேரம் தவறாதவர், கண்ணியம்மிக்கவர், கடமைஉணர்வினர், காலம்உணர்ந்தவர், கண்டிப்பானவர், செயல்திறம்மிக்கசெம்மல்.

## பதிப்பாளர் திலகம் வை. கோவிந்தன்

புதுக்கோட்டை மாட்டம் ராயவரத்தில் 1912இல் பிறந்தார். இவர் குடும்பம் கல்விக்குடும்பம். கற்றோரைப் போற்றும் குடும்பம். சமூக உணர்வு மிக்க குடும்பம். பர்மாவில் பெருந்தொழில் செய்து செல்வம் கொழித்த குடும்பம்.

வை. கோவிந்தன் தமிழ்ப் பத்திரிகை உலகின் முன்னோடி. **சக்தி** என்னும் திங்கள் இதழைத் தொடங்கினார். புகழ் பெற்ற டைம்ஸ் இதழைப் பால தமிழில் மாத இதழை நடத்திய பெருமை இவரையே சாரும். தாள், அச்சு, அமைப்பு முதலியவற்றை மேல் நாட்டு இதழ்களுக்கு நிகராக அமைத்தார். பல்துறைச் செய்திகளை இதழில் வெளியிட்டார். ஒவ்வொருதுறையிலும் சிறந்து விளங்கிய அறிஞர் பெருமக்களின் கட்டுரைகளை வெளியிட்டார், உயரிய நாளில் இதழை வெளியிடுவது இவரதுஇயல்பு. இதழில் புதுமைகள் பல புகுத்தினார். வண்ணப்படங்களை வெளியிட்டார். இதழியல் துறைக்கு இவர் பங்களிப்பு மிகப் பெரியது. முதல் தரமான ஒரு செவ்விதழை நடத்திப் பேரும் புகழும் பெற்றார். சக்தி வை. கோவிந்தன் என எல்லோராலும் அழைக்கப்பெற்றார். பெண்களுக்கு என **மங்கை** எனும் இதழைத் தொடங்கினார். மாதந்தோறும் வெளிவரும் புத்தக இதழையும் சிறந்த முறையில் நடத்திக் காட்டினார். சிவர்களுக்கென **அணில்** இதழைச் சிறப்பாக நடத்தினார். இவரிடம் பயின்றவர்கள் தாம் தமிழ்



www.npnagarathar.com

வாணன், அழ. வள்ளியப்பா. அச்சு வசதிகள் பல நிலைகளில் வளர்ந்து இருந்த போதிலும் கருவிகள் சிறந்திருந்த போதிலும் சக்தி பத்திரிக் கையின் மிக உயர்ந்த தரத்தை இன்றைய பத்திரிக்கைகள் எட்டமுடிய வில்லை. இதற்குக் காரணம் வை கோவிந்தன் அளவு முனைப்பு, உழைப்பு யாரிடமும் இன்மையே.

சக்தி காரியாலயம் என்னும் பெயரில் மிகச்சிறந்த பதிப்பகத்தை நடத்தினார். சாமிநாத சர்மா, சுத்தானந்தபாரதி, இராஜாஜி,ஏ.கே. செட்டியார்,திரு வி.க. போன்ற பெருமக்களின் புத்தகங்களை வெளியிட்டார். பென்குவின், பெலிகன் போன்ற புத்தக வெளியீட்டினைச் செய்த பெருமையர். தமிழ்ப் புத்தக உலகில் இவர் ஆற்றிய பணிகள் தனி ஆய்வுக்குரியன. காந்திய நெறியில் வாழ்ந்தார். பலரை எழுத்துத் துறைக்கு அறிமுகப்படுத்தினார். பலரைப் புத்தகத் உலகிற்கு கொணர்ந்தார். பாரதியார் கவிதைகளை மலிவு விலையிட்டு மலிவுப் பதிப்பில்ஒரு புரட்சியை உருவாக்கி னார். பலதுறைகளில் மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டு மொழிக்குச் செழுமைசேர்த்தார். பத்திரிக்கை உலகமும், புத்தக உலகமும் இவருக்கு மிகவும் கடமைபட்டுள்ளன. இன்று புத்தக உலகில் பலர் வெற்றிக்கொடி நாட்டுவதற்கு அன்று வித்திட்ட பெருமகனார் வை. கோவிந்தனார்.

## தமிழ்வாணன்

**1926 – 1977**

தேவகோட்டையில் பிறந்தவர். இயற்பெயர் இராமனாதன். சக்தி வை, கோவிந்தன் அவர்கள் நடத்திய அணில் சிறுவர் இதழின் ஆசிரியராகச் சென்னையில் பணியைத் தொடங்கி னார். 1947இல் கல்கண்டு இதழின் ஆசிரியர் ஆனார் 19777இல் இயற்கை எய்தினார். 30 ஆண்டுகளும் கல்கண்டில் 32 பக்கங்களும் தாம் ஒருவரே எழுதி னார்.

தமிழில் மிகச்சிறந்த துப்பறியும் நாவல்களைப் படைத்தார். சங்கர்லால் என்னும் கதாபாத்திரத்தை உருவாக்கி உலவவிட்டார். நாவலிலும் நல்ல தமிழ் நடையைக் கையாண்டார்.

கேள்வி பதில் பகுதியைத் தமிழ் இதழில் தொடங்கிச் சிறப்பாக நடத்திய பெருமை இவரையே சாரும். கேள்வி களுக்கு இவர் தரும் பதில் அழுத்த மாகவும் நகைச்சுவையாவும் கிண்டலாக வும் அமையும்.

சுயமுன்னேற்ற வரிசை நூல்கள் பல எழுதிஇளைஞர்களுக்கு வழிகாட்டினார். இவருடைய எழுத்துக்களை விரும்பிப் படித்து முன்னேறிய இளைஞர்கள் பலர். தொப்பியும் கருப்புக் கண்ணாடி யும்அணிந்து சிறந்த உடை உடுத்தி நடையுடை பாவனைகளால் வித்தியாச மாக விளங்கி இளைஞர்களின் மனத்தைக் கவர்ந்தார். இவருடைய கதைகளையும் கட்டுரைகளையும் படிக்க லட்சக்கணக்கான வாசகர்கள் உருவா



www.npnagarathar.com

னார்கள். உளவியல் அடிப்படையில் தனிமனிதன் நிறைகுறைகளை விளக்கி எழுதுவதில் வல்லவர். மனோதத்துவ அடிப்படையில் மனிதர்களின் தனி முன்னேற்றத்திற்குப் பல நல்ல நூல் களைப் படைத்துள்ளார். முன்னேற்ற வரிசை நூல்களுக்கு இவர் இடும் தலைப்பு மிகவும் கவர்ச்சியாக இருக்கும். சிறிய சிறிய தொடர் எழுதுவது இவர் இயல்பு. பத்திகளைப் பிரித்து உள் தலைப்புகளைக் கொடுத்துப் புதிய தொடர்களை அமைத்து தமிழ்க் கட்டுரை இலக்கியத்திற்கு வலிமை சேர்த்தவர். 100க்கு மேற்பட்ட நூல் களை எழுதித் தமிழ் நடையை எளிமைப் படுத்தினார். துறைதோறும் சாதனை செய்த தமிழ்ப்பெருமக்களைத் தம் இதழ் மூலம் தொடர்ந்துத் தமிழ் நாட்டிற்கு அறிமுகப்படுத்தினார். நல்ல தமிழ் அறிஞர்களை நாடறியச் செய் தார்.

சக்திவாய்ந்த எழுத்தாளராக திகழ்ந்த இவர் பல நல்ல நூல்களை எழுதி உள்ளார். சிறந்த விமர்சகராக விளங்கிய இவர் தன் காலத்தில் வாழ்ந்த தலைவர்களையும் நிகழ்ச்சிகளையும் கூரிய சொற்களால் விமரிசித்துள்ளார். இவர் விமரிசிக்காத பொருளே இல்லை.

சிறந்த பத்திரிக்கையாசிரியரான இவர் கல்கண்டில் பல புதுமைகளைப் புகுத்தினார். சிறந்த இதழாசிரியராகத் திகழ்ந்து இதழியல் வளர்ச்சியில் புதிய சகாப்தத்தைப் படைத்தார். இவரைப் பின்பற்றி பலர் இதழ்களை நடத்து கிறார்கள். எந்தச் செய்தியையும் சுவை யாக எழுதுவது இவருக்குக் கைவந்த கலை. செய்திகள் தருவது, அறிவு வளர்ச்சிக்கு வழிவகுப்பது, பொழுது போக்கு ஆகிய மூன்று வகைகளிலும் கல்கண்டு இதழ் வார இதழ்களில் வெற்றிக்கொடி நாட்டியது. எதிலும் புதுமைசெய்து புதுமையாக வெளியிடு வதில் முதல்வரிசையர். உலகநிகழ்ச்சி களைத் துணுக்குச் செய்திகளாக சுவை யுடன் தருவதில் இவருக்கு நிகர் இலர். தமிழ் நூல்கள் விற்பனை உலகில் இவரது நூல்கள் புரட்சி செய்து விட்டன. எம். ஜி. ஆரு க்கு 'மக்கள் திலகம்' என்ற பட்டத்தை வழங்கியவர்.

பலதுறைப் பயிற்சிமிக்க இவர் தொடாத துறை இல்லை. 60,80 களில் தமிழ் எழுத்தாளர்களில் செல்வமும் செல்வாக்கும் பேரும் பெருமையும் பெற்றுத் திகழ்ந்தவர். தன் எழுத்துக் களை வெளியிடுவதற்கென்றே தம் மனைவி பெயரில் மணிமேகலைப் பிரசுரம் என்று தனக்கெனச் சொந்தப் பிரசுரத்தைத் தொடங்கி வெற்றி பெற்றார். இவரது மக்கள் மணி மேகலைப் பிரசுரத்தை பலர் வியக்கும் வகையில் பொருள் சுரக்கும் அமுதசுரபி யாக வளர்த்துள்ளனர். தான் அமைத்துக் கொண்ட தமிழ்வாணன் என்னும் பெயருக்கு ஏற்ப தமிழால் வாழ்ந் வளம் பெற்றார்.

எழுத்தாளர்,
இதழாசிரியர்,
நூலாசிரியர்,
விமர்சகர்,
பலதுறை அறிஞர்.



www.npnagarathar.com

## உலகம் சுற்றிய தமிழன்

( 1911 — 1983 )

கோடி தொகுத்து வழங்கிய வள்ளல் அழகப்பரும். பல்லாயிரம் நூல்களைத் தொகுத்துக் காத்த ரோஜாமுத்தை யாவும் தோன்றிய கோட்டையூரில் ஏ.கே. செட்டியார் தோன்றினார். 50 ஆண்டுகளுக்கு முன்னே உலகைப் பல முறை வலம் வந்தவர். விடுதலைக்கு முன் தன் சொந்த முயற்சியில் உலகைச் சுற்றியவர்.

சுற்றுப்பயணங்களில் தாம் கண்ட வற்றையும் கேட்டவற்றையும் துய்த்த வற்றையும், பசுந்தமிழில் அழகுடன் எழுதியவர். அவருக்கென வாய்ந்த நடை மிக எளிய நடை. அதனினும் எளிமையாக யாரும் எழுத இயலாது. பறவைகள் பறந்து செல்வதுபோல எதனையும் தெளிவாக எழுதுவது இவர் இயல்பு. கருத்துக்களை ஓவியமாக்கி விடுவார். சுருங்கச் சொல்லி விளக்கி விடுவது இவருக்குக் கைவந்தகலை· எதனையும் விரித்து எழுதமாட்டார். சிலசொல்லில் விளக்கும் திறன் இவரது தனிச்சிறப்பு அறிவாற்றலையும் அனுப வத்தையும் அடிப்படையாகக் கொண் டவை இவர் நூல்கள்.

இலக்கிய வரலாற்றாசிரியர்கள் இவரைப் **பயண இலக்கியத்தின் தந்தை** எனப் பாராட்டுவர். இன்று பயண இலக்கியத்தில் பல நூறு நூல்கள் எழுதப்பட்டு இருந்தாலும் ஏ.கே.செட்டி யார் தலைமையும் தாய்மையும் பெறுகிறார்கள்.

உலகம் முழுதும் சுற்றிய தமிழர், தமது அனுபவத்தை 200 பக்க அளவிலே கொடுப்பது என்பது இவர் ஒருவராலே முடியும். இவர் எழுத்தில் மெல்லிய நகைச் சுவை இழையோடும். நாடுகளைப் பற்றி எழுதும்போது மக்களையும் நிகழ்ச்சிகளையும் வாசகர் உள்ளத்தில் பதித்துவிடுவார். இவர் புனைந்த பயண ஓவியங்கள் வாசகர்களை வெளிநாடு செல்லத் தூண்டுவன.

செய்திகளைக் குவியல்களாகத் தொகுக்கமாட்டார். பட்டியல் இட்டுக் காட்ட மாட்டார். கட்டுரைகள் அகவொழுங்கு பெற்று சிந்தையில் தங்கும் சீரிய கட்டுரையாக அமைந்து விடும். தமிழ்நாட்டைப்பற்றி இவர் எழுதும் எழுத்துக்கள் தமிழ் மக்களுக்கே புதுமையாக இருக்கும். இந்திய நாட்டைப்பற்றி இவர் சொல்லும் செய்தி இந்தியர்களுக்கே வியப்பைத் தரும். தனது பயணங்களை மிகச் சிறந்த நூல்களாக எழுதித் தமிழில் பயண இலக்கியத்தைச் செழுமை செய்த வகை யில் சிறந்த நூலாசிரியராக விளங்கு கிறார்.

சுமார் 40ஆண்டுகள் தன் தனி முயற்சி யில் **குமரிமலர்** என்னும் திங்கள் இதழை நடத்தினார். அறிஞர்களின் முதல்தரமான கட்டுரைகளைக் கொண்டு குமரிமலர் என்னும் பெயருக்கு ஏற்ப அது என்றும் இளமையோடு தமிழ் மணம் பரப்பிற்று. அது என்றும் வாடாத மலராகத் திகழ்கிறது.

100-150 ஆண்டுகளுக்கு முந்திய பழம் பத்திரிக்கைகளில் வெளிவந்த மிக



www.npnagarathar.com

நல்ல செய்திகளை மறுபதிப்புச் செய்து சென்ற காலத்தின் பெருமையை வெளிக்கொணர்வதில் இவர் மிகுந்த கவனம் காட்டியவர். பாரதி, வ.வே.சு முதலியோரின் சிறந்த கட்டுரைகளைத் தமது இதழில் தொடர்ந்து அச்சிடுவார். அவை தமிழ்ப் புதையலாய் அமைந்து விடும்.

குமரி மலரில் இவர் தொகுத்து வெளியிட்ட பொன்மொழிகள் - சிந்தனைகள் கொய்த மலர் எனினும் பெருநூலாய் 800 பக்க அளவில் அறிஞர்களின் கருத்துக்கருவூலமாய்த் திகழ்கின்றன.

100 ஆண்டுகளாக (1860-1960) வெளி, வந்த பயணக்கட்டுரைகளை 'தமிழ்நாடு என்னும் பெயரில் தொகுத்துள்ளார். 'புண்ணியவான் காந்தி' என்னும் நூல் சுதேசமித்திரத்னிலிருந்து இவர் தொகுத்த கட்டுரைகள், காந்தியடிகளைப்பற்றிய மிக விரிவான வரலாறாக அமைன்றன.

தமிழர் சிந்தனைச் செழிப்பின் வளர்ச்சியையும் அது பதிவு செய்கிறது. தமிழ் உரைநடை வளர்ச்சியை இவரது இரு பெருநூல்களும் விளக்கிக் காட்டுகின்றன.

ஆட்டன்பரோ காந்தியடிகளின் வாழ்க்கையைத் திரைப்படமாக எடுத்தார். உலகப்புகழ்பெற்றார். பெரும் புகழ் குவித்தார். 1940 களிலே முதன் முதலில் காந்தியடிகளின் வாழ்க்கையைத் திரைப்படமாக்கிய பெருமை நம் ஏ.கே. செட்டியாரையே சேரும், அவர் படமெடுத்துப் பெரும் பொருள் குவித்தார். இவர் பெரும் பொருள் இழந்தார்.

தனது உலக அனுபவங்களைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், சுழற்கழகங்களிலும், அரிமா சங்கங்களிலும் பேசுவார். 20 அல்லது 30 மணித்துளிகளுக்கு மேல் வளர்த்தமாட்டார். இவர் எழுத்தும் பேச்சும் சுருங்கிய அளவின, ஆனால் பயன் மிக்கன.

பழகுதற்கு இனிய பண்பாளர். எளிய வாழ்வினர். எல்லோரும் விரும்பும் இயல்பினர். மனிதநேயம் மிக்கவர். 1983இல் காலமானார்.

கரிய திருமேனி-நெடிய உருவம் - பெரிய தலை-தூய வெள்ளை உடை. யாரையும் கொள்ளை கொள்ளும் பிள்ளைச் சிரிப்பு - யாரையும் புண்படுத்தாத நகைச்சுவை இவையே ஏ.கே.செட்டியார்.

பயணக்கலை வல்லுநர்

நூலாசிரியர்

இதழாசிரியர்

பதிப்பாசிரியர்

பதிப்பாளர்

எனப் பன்முக நலன்களைப் பெற்றுத் திகழ்ந்தவர், இவர்விட்ட பணியைச் சோமலெ' தொடர்ந்தது தமிழ் பெற்ற பேறு.



www.npnagarathar.com

## சோமலெ

**(1921 — 1986)**

தேவர் திருமகள் மாவட்டம் நெற்குப்பையில் தோன்றியவர். சோம. லெட்சுமணன், என்பது இவரது இயற் பெயர்.

**மாவட்டவரிசை** என்னும் தொடரில் தமிழ் நாட்டின் 16 மாவட்டங்களைப் பற்றி முதல் முதலில் எழுதியவர். மாவட்டத்தின் அமைப்பு, மக்கள் தொகை, பெருமக்கள், சாதிகள், தட்ப வெப்பம், காடுமலை, ஆறு, ஊர் நிறுவனங்கள், அமைப்புகள், நினைவுச் சின்னங்கள், பழக்கவழக்கங்கள் பழமொழிகள், சுற்றுலா மையங்கள் முதலியவை பற்றிய அனைத்துச் செய்தி களையும் வகுத்தும் தொகுத்தும் மாவட்டச் செய்திகளைத் எழுதினார். கருத்துக்கருவூலங்களாக வரலாற்றுப் பேழைகளாக அவை திகழ்கின்றன.

பின்னர் எழுந்த மாவட்ட வரிசைகளுக்கு இவை மூல நூல்கள். ஒரு பல்கலைக்கழகம் செய்ய வேண்டியதை இவரே தனிமனிதராகச் செய்து முடித்தவர். இடப்பெயராய்வு, மக்கள் பெயர் ஆய்வு, பேச்சுவழக்கு முதலியஆய்வுகளுக்கு இவை அமுத சுரபியாக அமைந்துள்ளன. தக்க சான்றுகளுடன் நூலை அமைத்துள்ளார். நூலின் பின் இணைப்புகள் தனி நூலாக விரியும் அளவிற்கு மூலக்கூறுகள் உடையன.

**செட்டிநாடும்செந்தமிழும்** 800பக்க அளவில் இவர் எழுதிய மிகப்பெரிய நூல். விரிவான இந்நூலில் செட்டி நாட்டின் தமிழ்ப் பெரு மக்கள்-தமிழறிஞர்கள்-பேராசிரியர்கள்-கவிஞர் கள்-எழுத்தாளர்கள்- தொண்டர்கள் - பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளைக் கொண்டது அவர்தம் சிந்தனைகளையும் பணிகளையும் சாதனைகளையும் மதிப் பீடு செய்துள்ளார்.20ஆம் நூற்றாண்டுத் தமிழ் வளர்ச்சிக்கு நகரத்தார் செய்த பணியை நுண்ஆய்வு செய்துள்ளார். கபிலர் முதல் கண்ணதாசன் வரை, தொல்காப்பியனார் முதல் வ.சுப. மாணிக்கனார் வரை 'உ.வே.சா' முதல் தமிழ் அண்ணல் வரை தமிழ் வளர்த்த சான்றோர்களின் சாதனைகளைப் பட்டியல் இட்டுக் காட்டியுள்ளார். இனி ஒருவர் எழுதவொண்ணாத வகையில் அனைத்தையும் எழுதிவிட்டார். இனி வருவன அடிக்குறிப்புக்களே. நகரத் தாரின் தமிழ்ப்பணி இந்நூலில் கல்வெட் டாக்கப்படுகிறது. செட்டிநாட்டு நூலகங் கள், செட்டிநாட்டுப் பதிப்பகங்கள் தமிழ் நிறுவனங்கள் பற்றிய கலைக் களஞ்சியமாகத் திகழ்கிறது.

இந்தத் தலைமுறையில் எழுதப் பெற்ற அரிய நூல்களில் இதுவும் ஒன்று. தமிழுக்கு உழைக்கும் - உழைத்த ஒவ் வொருவரும் தம் பெயரை இந்நூலில் தேடுகின்றனர். விடுபட்டவர்கள் வருந்து கின்றனர்.

இந்நூலின் அமைப்பும் பகுப்பும், செய்திகளுடைய அணிவகுப்பும் ஆசிரியர் கையாளும் உத்திகளும் இந் நூலுக்கு வலிமை சேர்க்கின்றன. ஒரு சிறிய சமூகத்தின் தமிழ்ப்பணி என்ற



www.npnagarathar.com

142

அளவில் அமையாமல் ஒரு மொழிக்கு உழைத்தவர்களின் பெருமைபேசும் பேரேட்டாகத்திகழ்கிறது.

நாட்டுப்புற இயல் ஆய்வாளராகத் திகழ்ந்தவர். தாலாட்டு, ஒப்பாரி, தொகுத்துள்ளார். மாவட்ட வரிசை நூல்களின் பழமொழிகளைத் தொகுத்துள்ளார். மரபும் பண்பாடும் என்னும் பெருநூலை எழுதியுள்ளார். தமிழ் நாட்டுப்புற இயல் கழகத்தின் செயலாளராகவும் திகழ்ந்துள்ளார். தமிழ் நாட்டுப் பழங்குடி மக்களைப்பற்றியும் ஆராய்ந்துள்ளார்.

பயண இலக்கிய ஆக்கத்தில் புதுமையைப் புகுத்தியவர். உலகைப் பலமுறை சுற்றியவர் ஆதலால் கண்ட அனுபவத்தை ஒப்பிட்டு ஆய்வார். புள்ளிவிவரங்களைத் தருவார். செய்திகளை மிகைப்படுத்தாமல் துல்லியமாக எழுதுவார். அடுத்து என்ன படிக்க வேண்டும் என வாசகர் ஆவலைத் தூண்டும் படியாகச் செய்திகளைத் தொகுப்பார்.

தொடக்கத்தில் பயண நூல்களை எழுதிய இவர் பின்னர் சமூகவியல் ஆய்வாளராக வளர்ந்துவிட்டார். கும்பாபிஷேக மலர்களை உருவாக்குவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர். கோயில்கள் குடமுழுக்கு மலர்கள் இவர்தம் தொகுப்பியல் புலமைக்குக் கட்டியம் கூறுவன. பெரிய அளவில் மிகுதியான பக்கங்களில் தேவையான செய்திகள் மட்டும் தொகுத்துள்ள திறம் போற்றுதற்குரியது.

கோயிற்கலை, புராணவரலாறு, சிற்பங்கள், செப்புப்படிவங்கள், அணிகலங்கள் திருவிழாக்கள், தேர் தெப்பக்குளம், கல்வெட்டுக்கள், வரலாறு இலக்கியங்கள், கோபுரங்கள், பற்றிய செய்திகளுடம் வரைபடங்களுடனும் கோயில்வளர்ந்த வரலாற்றைத் தொகுத்து, குடமுழுக்கு மலர்களை வெளியிட்டு. மலர் வெளியீட்டில் புதுயுகம் படைத்தவர்.

எண்ணிஎண்ணித்தொகுக்கப் பெருந்திட்டம் வகுப்பார்.

நகரத்தார் பெருமையை நாடறியச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர். செட்டிநாடும் தமிழும் அயல்மாநிலங்களில் தமிழ், அயல்நாட்டில் தமிழர் எனத் தமிழாய்வுக்குப் பல நூல் அளித்துள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பொதுமக்கள் தொடர்பு அலுவலராகப் பணியாற்றி, வெள்ளிவிழா ஆண்டில் பல்கலைக்கழகத்தின் பெருமையை உலகறியச் செய்தவர். பல்கலைக்கழக ஆவணங்களைத்தொகுத்து நிகழ்ச்சிகளை வகைப்படுத்தி வரலாற்றை உருவாக்கினார்.

செய்திகளைத் தொகுப்பதும், பதிவுசெய்வதும், ஆவணங்களை உருவாக்குவதும், காப்பதும், அச்சிட்டுப் பரப்புவதும் இவர் வாழ்க்கைப் பணி இவர் சிறந்த விமர்சகர், அஞ்சாது கருத்துக்களை எடுத்துரைப்பார். எப்போதும் சிந்தித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருப்பவர். பெருந்



www.npnagarathar.com

143

திட்டங்களை மூலம்பெரு நூல்கள் இயற்றிப் பெருபுகழ் பெற்றார்.

பண்டிதமணி,நாச்சிமுத்துக்கவுண்டர், சர்தார் வேதரத்தினம் முதலிய பெரு மக்களின் வாழ்க்கை வரலாறுகளை மிக விரிவாகஎழுதியுள்ளார். இவர்கள்பற்றிய செய்திகளைச் சேகரித்து பலரைப் பேட்டிகண்டு உண்மை வரலாற்றை எழுதிப் பலரும் அவர்தம் பெருமையை உணரச்செய்தவர். ஊர்சுற்றுவதும், நாடுகாண்பதும், பெருமக்களைச்சந்திப் தும், வரலாறு தொகுப்பதும், வாழ்வுப் பணியாக இவருக்கு அமைந்துவிட்டன.

50களில் இவர் எழுதிய வளரும் தமிழ் என்னும் நூல் இன்று வளர்ந் தோங்கிய தமிழ் ஆராய்ச்சிக்கு அடிப் படையாக அமைந்துள்ளது. தனித் தமிழ், அறிவியல்தமிழ், பேச்சுத்தமிழ், பத்திரிக்கைத்தமிழ், கல்வெட்டுத்தமிழ் ஆய்வுகள் அனைத்திற்கும் அடிப்படை மூலக்கூறுகளைக் கொண்டது.

எழுத்தாளர், பயண இலக்கிய மன்னர், நாட்டுப்புற இயல் அறிஞர், சமூக இயல்வல்லுநர், தொகுப்பியல் பேரறிஞர், மாவட்டநூல்கள் ஆசிரியர் எனப் பன்முக நலன்களைப் பெற்ற இவர் ஒரு நிறுவனமாகத் திகழ்ந்தார். நல்லன தொகுப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். எதனையும் கூர்ந்து நோக் கும் இயல்பினர். பயண நூல்களை மக்கள் விரும்பிப்படிக்கும் பழக்கத்தை உண்டாக்கியவர்.

---

## உயர்வுக்கு உறுதுணையாகும் மூன்று திறன்கள்

1. உடல் திறன்
2. உள்ளத்திறன்
3. அறிவுத்திறன்

## முத்தித்தலம் ஆறு

1. திருவாரூர் — பிறக்க முத்தி.
2. தில்லை — தெரிசிக்க முத்தி.
3. திருவண்ணாமலை — நினைக்க முத்தி.
4. காசி — இறக்க முத்தி.
5. மதுரை — சொல்ல முத்தி.
6. அவினாசி — கேட்க முத்தி.



www.npnagarathar.com

# நகரக்கோவில் இறைவன் இறைவியர்

டாக்டர். அர. சிங்காரவடிவேலன்,
தமிழ்ப் பேராசிரியர்,
சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி,
தேவகோட்டை.

---

**காப்பு - மரகதவிநாயகர்**

ஒன்பான் நகரத்தார் ஓங்கு திருக்கோவில்
முன்பார்க்க வீற்றிருக்கும் மூர்த்திகளை—வெண்பாவாம்
மாலையிட்டுப் போற்ற மரகதப் பிள்ளாய் நீ
கோலை எடுத்துக் கொடு

**முருகப்பெருமான்**

மாவின் கனியை மறுத்ததனால் பெற்றோர்மேல்
மேவும் சினப்படியில் மேலேறிக்—கூவும்
மயில்மீது ஊர்ந்தவனே! மாம்பழமே! பெற்றோர்
ஒயிலை உரைக்க உதவு

**தோற்றுவாய்**

எல்லாம் சிவமே; இயக்கும் உமையைத்தான்
வல்ல துணையாய் வகுத்துள்ளார்—பல்லூர்க்குத்
தக்க பெயரிட்டுத் தாபித்த தெய்வங்கள்
துக்கம் தவிர்க்கும் துணை.

**இளையாற்றங்குடி - கயிலாசநாதர்-நித்திய கல்யாணி**

இளையாமல் தங்குடியை எந்நாளும் காக்க
மலையாக நம்பும் மனத்தில்—நிலையாய்க்
கயிலாச நாதருடன் கல்யாணி அம்பாள்
ஒயிலாக நிற்பாள் உவந்து

**மாற்றூர்க்கோவில்-ஐந்நூற்றீசர்-பெரியநாயகி**

ஆயிரத்தில் பாதியவர்; ஐந்நூற்றார்; மாபெரிய
நாயகியார் அன்னாரின் மாதேவி—போயினிமேல்
வேற்றூரில் சுற்றி வினையைப் பெருக்காமல்
மாற்றூர்க்கே செல்வீர் மகிழ்ந்து



www.npnagarathar.com

**வயிரவன் கோவில் - வளரொளிநாதர் வடிவுடையம்மை**

வளரொளியார் வார்க்க வடிவுடையாள் தாங்கத்
தளர்வின்றி வாழ்கின்ற தக்கோர்—உலகில்
வயிரம் கொழிக்க வளரினத்தார் தம்முள்
வயிரவன் கோவில் வகை

**இரணியூர் - ஆட்கொண்டநாதர் - சிவபுரந்தேவி**

ஆட்கொண்ட நாதருடன் அம்பாள் சிவபுரத்தாள்
பாக்கொண்டு நித்தம் பணிவோரைக்— காக்கத்
தரணியிலே வந்துறையும் தக்கதிருக் கோவில்
இரணியூர் என்றே இயம்பு

**பிள்ளையார்பட்டி - திருவீசர் - சிவகாமவல்லி**
**மருதீசர் - வாடாமலர்மங்கை**

திருவீசர்; தேவி சிவகாம வல்லி
மருதீசர் என்போமேல் வாடா மலர்மங்கை
என்று பெயரிரண்டை ஏற்றவரைப் பிள்ளையார்
கன்றுவளர் பட்டியிலே காண்

**நேமங்கோவில் - ஜெயங்கொண்ட சோழீசர் சவுந்தரநாயகி**

ஐயன் ஜெயங்கொண்டார் அம்மை சவுந்தரத்தைப்
பையச் சிரித்தே பயம்கொண்டார்—வையத்தார்
சேமம் தினம்கண்டார் செல்வம் கொழிக்கின்றார்
நேமந் தான் கோவில் நெறி.

**இலுப்பைக்குடிக் கோவில் - தான் தோன்றி ஈசர் சவுந்தரநாயகி**

தான்தோன்றி ஈசர் சவுந்தர நாயகியார்
வான்தோய என்றும் வளர்கோயில்—மீன்பாய
ஏடு மலரும் இலுப்பைக் குடி; நாட்டின்
சூடா மணியென்றே சொல்

**சூரைக்குடி - தேசிகநாதர் - ஆவுடையநாயகி**

தேசு திகழ்கின்ற தேசிக நாதருடன்
ஆசி மழைபொழியும் ஆவுடையாள்—நாசியெனப்
பாரை வளர்த்துவரும் பக்தி வளர் கோவில்
சூரைக் குடியைத் தொழு.

**வேலங்குடி - சண்டீசர் - காமாட்சி**

வண்டுவிழிக் காமாட்சி வாழ்வருளும் சண்டீசர்
கொண்டாடும் அன்பர் குலம்காக்கச்—செண்டாகக்
காலமெலாம் தோன்றிக் கருணை தரும்கோயில்
வேலங் குடியாம் விளக்கு.



www.npnagarathar.com

# யாழ் நூல் அரங்கேற்றம்

பெ. ராம. ராம. சித. சிதம்பரம் செட்டியார் நற்சாந்துப்பட்டி ஊரினர், தமிழ்க் காதல் கொண்டவராதலால் எப்பொழுதும் தமிழறிஞர்கள் சூழவே இருப்பார். புலவர்கள் பலருக்குப் புலவராக இருந்த பெருமை கொண்டவர்.

புதுக்கோட்டையில் உள்ள இவரது "இராம நிலையத்தில்" புலவர்கள் பலர் தங்கியிருந்து தமிழாய்வு செய்திருக்கிறார்கள். ஆய்வுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

இராம நிலையத்தின் படிகளை மிதிக்காத புலவர்களே இல்லையென்னும் அளவுக்கு எல்லாப் புலவர்களுடனும் நல்லுறவு கொண்டவர்.

திருக்கொள்ளம்புதூரில் இவர்கள் குடும்பத்தார் பல திருப்பணிகளைச் செய்துள்ளார்கள். கோயில் குடமுழுக்கின்போது சைவப்புலவர்கள் மாநாட்டை நடத்தியதோடு இலக்கியச் சொற்பொழிவுகளும், கவியரங்கங்களும் நடைபெற வழிவகுத்தவர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு இவர்கள் பெரும் பொருள் கொடுத்து ஊக்கம் அளித்திருக்கிறார்கள். இதனை அறிந்த இவரது குடும்பத்தாரும் சங்கத்திற்குப் பொருள் வழங்கத் தூண்டுகோலாகவும், முன்னோடியாகவும் இருந்திருக்கிறார்.

தமிழ் இசைச்சங்கம், மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை, தமிழ்த் தொண்டில் ஈடுபட்டுள்ள இதர மன்றங்களுக்கெல்லாம் பொருள் தந்த அருளாளர்.

இளைஞர் பலர் புலவராகித் தமிழ்ப் பணி செய்ய உதவியவர். பண்டிதமணியின் இனிய நண்பராக இருந்து அவரது அரிய நூல்கள் உரியமுறையில் வெளிவர பொருள் தந்த புகழ் கொண்டவர்.

பண்டிதமணியின் அறுபதாம் அகவை நிறைவு நாளில் அரிய கட்டுரைகள் நிறைந்த மணிமலரைக் கொண்டு வந்தவர்.

கரத்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம்பிள்ளை அவர்களைக் கொண்டு காரைக்காலம்மையார் வரலாற்றை எழுதுவித்துத் தம் தாயாரின் நினைவு மலராக வெளியிட்டவர்.

டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் இயற்றிய "மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி" கவிதை நூல் இவரது பொருள் உதவியாலேயே வெளியிடப்பட்டது.

விபுலானந்த அடிகளிடம் நிறைந்த அன்பு கொண்டவர்கள். சிதம்பரம் செட்டியார் இல்லத்திற்கு அடிக்கடி வந்து தங்கும் அடிகள் இவர்கள் குடும்பத் தெய்வத்தின் மீது "பெருந்தேவபாணி" கவிதை மாலை அணிந்திருக்கிறார்கள்.



www.npnagarathar.com

விபுலானந்தரின் "யாழ்நூல்" இவர்கள் குடும்பத்தார் திருப்பணி செய்த திருக்கொள்ளம்புதூர் தலத்திலேயே அரங்கேற்றம் செய்யப்பட்டது. (6-6-1947) அச்சகச்செலவில் இருந்து அரங்கேற்ற செலவுவரை அத்தனை செலவுகளையும் ஏற்றுக் கொண்டு தமிழ் மொழிக்கு ஒரு சீரிய நூலைப் பதிப்பித்தளித்த பெருமையைப் பெற்றார்கள்.

விபுலானந்த அடிகள் "யாழ்நூலை" இலங்கையில் வட்டவலையில் உள்ள இவருக்குச் சொந்தமான "வுட்ஸ்டாக்" தோட்டத்திலும், புதுக்கோட்டையில் உள்ள இவரது இராம நிலையத்திலும் தங்கிதான் எழுதி முடித்தார்கள்.

இடையில் அடிகளுக்கு நோய் கண்ட போது பெருஞ் செலவு செய்து அனைத்து மருத்துவ உதவிகளும் கிடைக்க வழி செய்தார்கள்.

யாழ்நூலின் படிகளை விற்று பொருளீட்டிக் கொள்ளும் உரிமையை கரந்தைத் தமிழ்ச்சங்கத்திற்கு அளித்தார்கள்

"சைவ சித்தாந்தம்" பற்றி ஆங்கிலத்தில் ஒரு அரிய நூல் வெளிவர வேண்டும் என்று இவர்கள் பெருமுயற்சி செய்து கொண்டிருக்கும் பொழுது அதை முற்றுப் பெறாத ஆசையாக்கி அழைத்துக் கொண்டு விட்டான் இறைவன்.

---

## நல்லமுயற்சியைப் பாராட்டுகிறேன்

**டாக்டர். ச. மெய்யப்பன், எம்.ஏ.**

நற்சாந்துப் பட்டியில் திருக்கோயிலுக்கு குடமுழுக்குவிழா உவகை! உவகை! உவகை! திருக்கோயில் புதுப்பிக்கப் பெறுகிறது. புதுப்பொலிவு பெறுகிறது. நாடும் நகரும் ஊரும் நலம்பெற இறைவன் அருள்புரிகிறார். நல்லெண்ணத்துடன் குடமுழுக்கு விழாக்குழு அமைகிறது. தொண்டுள்ளம் கொண்ட தூயோர் இணைகின்றனர். இறைபணி செய்ய "நான் முந்தி நீ முந்தி"யென நகரத்தார்கள் முன் வந்துள்ளனர். இந்தப் பணியைச் சொந்தப் பணியினும் சிறப்பாகச் செய்து முடித்துள்ளனர். ஒன்றுபட்டால் எதனையும் சாதிக்கலாம் என்பதற்கு இந்தக் குடமுழுக்கு விழா சிறந்த எடுத்துக்காட்டு. ஒவ்வொருவரும் தாமே முன்வந்து திருப்பணியினை மனமுவந்து ஏற்றுக்கொண்டனர். பசிநோக்காது, கண்துஞ்சாது செய்து முடித்தனர். இன்று சிறப்பும் பெறுகின்றனர். ஒத்துழைத்த எல்லாருக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றி. எளியேனாகிய என்னையும் இப்பணியில் ஈடுபடுத்திய நற்சாந்துப் பட்டி நகரத்தார்க்கு என்றும் நன்றியுடையேன். கும்பாபிஷேக விழாச்சிறப்போடு திருமண மண்டபமும் எழுகிறது. ஒரு நல்ல நிகழ்ச்சியோடு இன்னொரு நிகழ்ச்சி, பாராட்டத்தக்க நிகழ்ச்சி. பயன்மிகு சாதனை, பலரும் போற்றும் செயல், நாடறிந்த நல்லவர்களுக்குப் பாராட்டு, முப்பெரும் சாதனைகளைச் செய்த நற்சாந்துப்பட்டி நகரத்தார்களுக்கு என் பாராட்டுக்கள்.

நம் வீடுகட்கு அன்றைக்கு வந்த இலக்குமி என்றைக்கும் நிலைத்திருக்கவும் சென்ற காலத்தைப் போல மீண்டும் சிறப்புப்பெறவும், எல்லா நலன்களும் பெற்றுச் சிறக்கவும், வளம்பல பெறவும் பெருமைகள் பல பெற்று உயரவும் இறையருளை இறைஞ்சுகிறேன். * * *

www.npnagarathar.com

# மஹேஸ்வரர் பூஜை

கும.ந. நல்லகருப்பன் செட்டியார்
கும.பழ. குமரப்பச் செட்டியார்

**நற்சாந்துபட்டி நகரத்தார்களுக்குச் சொந்தமான சிவகாமி அம்பிகை சமேத சிதம்பரேஸ்வரர் திருக்கோவிலில் அக்ஷய வருஷம் ஆடி மாதம் 23 -ம் நாளுக்கு சரியான 8.8.1986 ஆம் தேதியில் நடந்த நகர பழனி ஆண்டவர் மஹேஸ்வரர் பூஜை விவரம்:**

நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் சம்பந்தமான 96 ஊர்களில், இப்பொழுது நகரத்தார்கள் வாசம் செய்து வரும் சுமார் 75 ஊர்களில், சில ஊர்களில் மட்டும், நகரத்தார்கள், நகரப் பூஜையாகவும், பழனி ஆண்டவர் பூஜையாகவும், மஹேஸ்வரர் பூஜையாகவும், பொதுவாகவும், தனித்தனியாகவும் நடத்தி வருகிறார்கள். அப்படி நடந்து வரும் ஊர்களில் நற்சாந்துபட்டி ஒன்று. இவ்வூரில் நகரப் பூஜையாக நடந்து வந்தது. இரண்டாவது மஹாயுத்த சமயம், அரசாங்க கெடுபிடியாலும், ரேஷன் சட்ட திட்டங்களினாலும், பூஜை பல ஊர்களிலும், நற்சாந்துபட்டியிலும் நிறுத்தி வைக்கப்பட்டது. அப்பால், ஒவ்வொரு ஊரிலும் நடத்தப்பட்டு வருகிறது. அதுபோல் நற்சாந்துபட்டியிலும் அக்ஷய வருஷம் ஆடி மாதம் 23 ஆம் தேதி (8.8.86) வெள்ளிக்கிழமை நகர பழனியாண்டவர் மஹேஸ்வரர் பூஜையாகவும், சமபந்தி போஜனமாகவும் சிறப்பாக நடந்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதுடன், பூஜை நடத்திய விவரத்தையும் கீழே தந்திருக்கிறோம்.

நற்சாந்துபட்டி நகரத்தார்கள் சங்க மஹா சபைக் கட்டிடத்தில், நகரத்தார்கள் கூடி, நகர பழனியாண்டவர் மஹேஸ்வரர் பூஜை நடத்துவது சம்பந்தமாகப் பேசி, பூஜை நடத்துவதுபற்றி முடிவுகளை எடுத்தது.

1. பூஜை நடத்துவதற்கு ஆடி மாதம் வெள்ளிக்கிழமைகளில் ஒரு நல்ல நாளாகப் பார்த்து தேதி வைக்கிறது.

2. பூஜைக்கு 4 அல்லது 5 நாள் முன்பாக ஒரு நல்ல நாளில், நல்ல நேரத்தில் அரிசி அளக்க ஆரம்பிக்கிறது. அரிசி அளப்பதும், முதலரிசியாக இலுப்பக் கோவிலில் முதல் புள்ளியாக இருப்பவரின் அரிசியை, அந்த குடும்பத்தில் உள்ள வயதில் மூத்தவர் அளக்கிறது.

3. விநாயகப் பானை வைப்பதும், பூஜைக்கு முதல் நாள் வியாழக்கிழமை இரவு நல்ல நேரத்தில் இலுப்பக்குடிக் கோவில் முதல் புள்ளியாக உள்ளவர்கள் வைக்கிறது.

4. பூஜைக்கு புள்ளி ஒன்றுக்கு புள்ளி வரி ரூ. 16 -ம், புழுங்கல் அரிசி பக்காப்படி 3 -ம் துவரம்பருப்பு பக்காப்படி அரையும், ரப்பர் வாளி அல்லது பெட்டி ஒன்றும் கொடுக்கிறது.

அரைப் புள்ளிக்கு புள்ளி வரி ரூ. 8 -ம் புழுங்கல் அரிசி பக்காப்படி ஒன்றரையும், துவரம்பருப்பு பக்காப்படி கால் படியும் ரப்பர் வாளி அல்லது பெட்டி ஒன்றும் கொடுக்கிறது.

5. பூஜையில் சமபந்தி போஜனம் நடத்துவது. அன்னதான விநியோகம் சகலருக்கும் இலை போட்டு போஜனம்



www.npnagarathar.com

நடத்துவது.

6. பூஜைக்கு மறுநாள் அதாவது சனிக்கிழமை நகரத்தார் குடும்பங்களுக்கு மட்டும் பகல் விருந்தும் இரவு பலகாரமும் நடத்தி, மீதச் சாமான்களை விரும்பி வாங்குபவர்களிடம் கொடுத்து பணம் பெற்றுக் கொள்வது.

7. பூஜை தினத்தன்று புள்ளி ஒன்றுக்கு எடுப்புச் சாப்பாட்டு டோக்கன் ஒன்று அரிசி அளக்கும் சமயம் கொடுக்க வேண்டியது.

8. பூஜை செலவிற்கு, முன் கூட்டிய செலவு தேவைகளுக்கு நகரத்தார் சங்கத்திலும், பற்றாத தொகைக்கு நற்சாந்து பட்டியில் உள்ள இலுப்பக்குடி, வயிரவன் கோவில், இளையாற்றங்குடி, பிள்ளையார் பட்டி, மாத்தூர் ஆக ஐந்து கோவில்காரர்களிடமிருந்தும், சமபங்குத் தொகையாக பெற்றுக் கொண்டு ஈவுப்படி திரும்பப் பெற்றுக் கொள்கிறது.

9. பூஜையில் மீதமான சாமான்ளைப் பெற்றுக் கொண்டு தருவதாக ஒப்புக் கொண்ட நன்கொடைத் தொகையை ஒரு மாத காலத்திற்குள் வசூல் செய்து கொள்வது.

10. பூஜை வேலைகள் பார்ப்பதற்கும், பொது நிர்வாகத்திற்கும், கோவிலுக்கு ஒரு பிரதிநிதி வீதம் ஐந்த பேர்கள் கொண்ட தலைமைக் குழு ஒன்று தேர்ந்தெடுப்பது. நடப்பு வருஷத்தில் கும.ந.மெ. நல்லகருப்பன் செட்டியார் தலைவராகவும் வீ.அ.மு. அண்ணாமலை செட்டியார் காரிய தரிசியாகவும், கும.மா. மாணிக்கம் செட்டியார் பொக்கிஷ தாராகவும், குழ.சுப. குழந்தைவேலன் என்ற அண்ணாமலை செட்டியாரும், கா.ப.ராம. மாணிக்கம் செட்டியாரும் அங்கத்தினர்களாக இருந்து காரியங்களைச் சிறப்பாகச் செய்தார்கள். இந்தக் குழு பொறுப்பில் கீழ்கண்ட வேலைகள் ஒப்படைக்கப்படுகிறது.

அ) பொது நிர்வாகம்.

ஆ) இடம் தயார்செய்து கொட்டகை போடுகிறது.

இ) எல்க்டிரிக் லைட், பெட்ரோமாக்ஸ் லைட்டுகளுக்கு ஏற்பாடு செய்கிறது.

ஈ) மைக்கிற்கு ஏற்பாடு செய்கிறது.

உ) புஷ்பம் வருவிப்பது

ஊ) கோவில், படைப்பு, பூஜை சம்பந்தமான சகல வேலைகளும் பார்க்கிறது.

எ) பந்தோபஸ்துக்கு ஏற்பாடு செய்கிறது.

11. தலைமைக் குழுவிற்கு அநுசரணையாக, ஐந்து கோவில் நகரத்தார்களும், ஐந்து கமிட்டியாக அமைத்துக் கொண்டு அடியிற் கண்டபடி வேலைகளைப் பார்க்கிறது.

அ A கமிட்டி (வயிரவன் கோவில்)

பாத்திரங்கள், நாற்காலிகள், இதர சாமான்கள் சேகரிப்பதும், திருப்பிக் கொடுப்பதும், விறகு சேர்ப்பது.

ஆ) B கமிட்டி (பிள்ளையார்பட்டி கோவில்)

பலசரக்கு சாமான்கள் வாங்குவது.

பால், தயிர் ஆர்டர் செய்வது.

உக்கிராணம் பார்ப்பது.

இ) C கமிட்டி (மாத்தூர் கோவில்)

காய்கறிகள் வாங்குவது.



www.npnagarathar.com

எடுப்புச் சாப்பாடு கொடுப்பது.

தண்ணீர் பந்தல் நடத்துவது.

ஈ) D கமிட்டி (இலுப்பக்குடி கோவில்)

மீதச் சாமான்கள் ஜாபிதா தயார் செய்வது.

மேற்படி சாமான்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நபர்களைத் தேர்ந்தெடுப்பது.

அதற்குண்டான தொகையை அன்று வசூலிப்பது.

உ) E கமிட்டி (இளையாற்றங்குடி கோவில்)

சமையல் மானேஜ்மெண்ட்.

சமையல் மற்றும் இதர வேலைகளுக்கு ஆட்கள் சேகரிப்பது.

ஊ) பொது

சகல நகரத்தார்களும் பூஜைக்கு முதல் நாள் காய்கறிகள் நறுக்குவது, மறுநாள் சாப்பாடு பரிமாறுவது.

12. நகரத்தார் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய சகல வரி பாக்கிகளையும், பாக்கி உள்ளவர்களிடம் பூராவும் வசூலித்துக் கொண்டுதான் அந்தப் புள்ளிகளின் அரிசியை அளப்பது.

13. நடப்பு வருஷத்தில் நடந்த பூஜையின் விவரத்தை பின் சந்ததியாரின் உபயோகத்திற்கு உதவியாக நகரத்தார் சங்கத்தில் எழுதி வைப்பது.

## நற்சாந்துபட்டி "ஸ்ரீ சண்முகவிலாச கலாசாலை"

சின்னப் பள்ளிக்கூடம்

திரு. L. சோமு

இப்பள்ளிக் கூடம் தற்சமயம் இரண்டு கட்டிடங்களில் இயங்குகிறது. 1. தென்புற ஊரணிக் கரையில் அமைந்திருக்கும் எழில்மிகு கட்டிடம், 2. சிவன் கோவிலுக்கு எதிர்புறம் உள்ள கட்டிடம்.

ஊரணியின் தென்கரையில் உள்ள கட்டிடம். உயர்திரு. பெ. ராம. லெட்சுமணன் செட்டியார் அவர்களால் 1980 -ல் சுமார் ஒரு லட்ச ரூபாய் செலவில் ஒரே ஆண்டில் கட்டப் பெற்றது ஆகும். இக் கட்டிடம் மதுரையை சேர்ந்த திரு. ரெங்கநாதன் B. Arc. அவர்களால் வடிவமைக்கப்பட்டு மதுரை தேவசீதா டிரேடர்ஸ் நிறுவனத்தாரால் வேலைகள் மேற்கொள்ளப்பட்டது. இக்கட்டிடம் குளத்திற்கு அருகில் அமைந்து இருப்பதால் இதன் பவுண்டேசன்களில் தனிகவனம் செலுத்தப்பட்டு இருக்கிறது.

சிவன் கோவிலுக்கு எதிரில் அமைந்து இருக்கும் கட்டிடம் 1959 ஆம் ஆண்டு பெரி. பெ. பெரியகருப்பன் செட்டியார் அவர்களால் தனது சகோதரியான திருமதி. கல்யானி ஆச்சி அவர்களின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டதாகும். பின்னர் இக்குடும்பத்தினரால் 1990 ஆம் ஆண்டு ரூபாய். இருபதாயிரம் செலவில் அழகுற புதுப்பிக்கப்பட்டது.

ஊரணியின் தென்கரையில் உள்ள கட்டிடத்தில் பொன்னம்பல விநாயகர் எழுந்தருளி இருக்கிறார்.

இந்த இடத்தில்தான் முன்பு நகர



www.npnagarathar.com

151

கூட்டங்கள் நடந்தது. மேலும், தைபூசத்திற்கு நகரத்தார்கள் மலையக்கோவிலுக்கு காவடி செலுத்துவதற்காக முதல் நாள் சர்க்கரைக் காவடிகள் கட்டி வைத்து பூசைகள் செய்து மறுநாள் பூசத்திற்கு புறப்படுவார்கள். கோட்டூர் அம்மன் கோவிலில் செவ்வாய் திருவிழா நடக்கும் காலத்தில், சுந்தர நாயகி அம்மன் நற்சாந்துபட்டிக்கு எழுந்தருளி இருக்கும் போது, இந்தக் கூடத்தில் ஆறாம் திருவிழா மண்டகப்படி நடக்கும்.

புரட்டாசி மாதம், நவராத்திரி உற்சவத்தின்போது, கயிறுகோலாட்டம், கும்மி முதலியன ஆசிரியர்களால் பயிற்றுவித்து இந்த பள்ளிக்கூடத்திலேயே நடைபெறும்.

மகர் நோன்பு தினத்தில் பிள்ளைகளும், பெரியவர்களும் இங்குள்ள பொன்னம்பல விநாயகரை தரிசனம் செய்து அம்பு போடச் செல்வார்கள்.

சமீபத்தில் நடந்த மஹேஸ்வர பூஜையும் இந்த பள்ளிக்கூடத்திலே நடந்தது.

இப்பள்ளி நற்சாந்துபட்டி நகர நற்சான்றோர்களால் 1850 ஆம் ஆண்டு துவக்கப்பெற்றது. அக்காலத்தில் சிவகெங்கை சீமையிலருந்து கோவில்பட்டி கிராமத்தில் வந்து குடியேரிய திருவாளர் லெட்சுமண வாத்தியார் மக்கள், சுப்பிரமணியவாத்தியார், குமார சாமி வாத்தியார் மேற்பார்வையில் கல்விக்கூடங்கள் சிறப்பாக நடைபெற்று வந்தது.

பின்னர் குமாரசாமி வாத்தியார் அவர்களின் சுவிகாரப் புத்திரன் சுப்பிரமணிய வாத்தியார் மேற்பார்வையிலும், 1915 மாப்பிள்ளை வாத்தியார் என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட முத்துச்சாமி வாத்தியார் இப்பள்ளிக் கூடத்தை மிகச் சிறப்பாக நடத்தினார்கள்.

இக்குடும்பத்தவர்களிடம் கல்வி பயிலாத நகரத்தார் பெருமக்களே இவ்வூரில் கிடையாது என்ற அளவிற்கு இக்குடும்பம் சிறப்படைந்திருக்கிறது.

பின்னர் இப்பள்ளியை, ராம.வயி. சுப. பல்லடம் சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் சிலகாலமும், 1944 நமது நகர ஊராட்சி மன்றம் சிலகாலமும் குமாரசாமி வாத்தியார் சிலகாலமும் நிர்வகித்து வந்திருக்கிறார்கள்.

தற்போது திரு.பெரி. இராமநாதன் செட்டியார் அவர்கள் இப்பள்ளி செயலராக இருந்து மிக நல்லமுறையில் நிர்வகித்து வருகிறார்கள். தற்சமயம் திரு. **V.** கிருஷ்ணன் **M.A., B. Ed.,** தலைமை ஆசிரியவர்களாகவும் மற்றும் ஆசிரியப் பெருமக்களும் உடனிருந்து சீரும் சிறப்புமாக கல்விப் பணியில் சிறந்து விளங்குகின்றது.



www.npnagarathar.com

# செட்டி நாட்டுத் திருமணப் பாடல்கள்

(பேராசிரியர் டாக்டர். மெ.சுந்தரனார்,
வேந்தன் பட்டி, புதுக்கொட்டை மாவட்டம்)

செந்தமிழ் மணம் கமழ்வது செட்டிநாட்டு மண். பாட்டிற்கும் பணியாரத்திற்கும் பெயர் பெற்ற இந்த மண்ணில் தோன்றிய மங்கள மடந்தையர் ஆடிப்பாடி ஆயிரக்கணக்கான நாட்டுப்புறப் பாடல்களை நாட்டுக்கு வழங்கியுள்ளார்கள். வள்ளல்கள் போல் அவர்கள் வாரி வழங்கியுள்ள வண்ணத் தமிழ்ப் பாடல்கள் அவர்களின் வாய் வண்ணம் காட்டுவன. இராமருக்குக் கைவண்ணம் போல் நடன மகளிருக்குக் கால்வண்ணம் போல, செட்டி நாட்டு ஆச்சிமாருக்கு வாய்வண்ணம் வாய்த்த கலை. அது இயற்கை அன்னை ஈந்த இயற்கைக் கலை.

பாடுங் கலையில் கைவந்த கலையரசியராகிய ஆச்சிமார், கண்ணகி மரபினர் என்ற வரலாற்று ஆராய்ச்சி ஒன்று உண்டு. இது ஆச்சிகளைப் பற்றிய ஆராய்ச்சி அன்று. ஆனால் ஆச்சிகள் அருந்தமிழ் மொழிக்கு மாட்சி சேர்க்கும் இலக்கியக் காட்சிகள் பலவற்றை ஈந்துள்ளார்கள்.

அந்தக் கண்ணைவிட்ட கலாக் காட்சிகளில் ஒன்றுதான் இந்தத் திருமணப் பாடல். இந்த மணப் பாடலைப் பாடும்போது, நாமே மாப்பிள்ளை பெண்ணாக மாறிவிடுகிறோம். அந்த அளவிற்கு நேருக்கு நேர் நம்மை நிறுத்துகிறது. நேரிழையார் பாடிய இந்தப் பாட்டு பண்பாட்டின் தலைப்பாட்டாம். இந்தப் பாட்டைப் பாடி ஆடி மகிழ்வோம். ஆம். ஆடல் பாடலுக்குரிய அருந்தமிழ்த் திருமணப் பாட்டு இது. தமிழ் இனப்பாட்டு. தமிழர் திருமணப் பாட்டு. தமிழர் கலைவண்ணம் விளக்கும் காவியப் பாட்டு. ஓவியப்பாட்டு.

## திருமணத்திற்குப் பெற்றோர் இசைவு

பொறிச்ச பொற்கறியாம் பொன்னெறைஞ்ச தட்டுவமாம்

சேர்ந்த பொறிக்கறியாம் சபை நெறைஞ்ச தட்டுவமாம்

பொண்ணுக்கு அப்பச்சி புண்ணியவா சம்மதிச்சு

மாப்பிள்ளைக்கு அப்பச்சி மகராசா சம்மதிச்சு

பொண்ணுக்கு ஆத்தா பொற்கொடியா சம்மதிச்சு

மாப்பிள்ளைக்கு ஆத்தா மயிலனையா சம்மதிச்சு

ஆணோடே பொண்பெத்த ஐயாக்க சம்மதிச்சு

பொண்ணோடே ஆண் பெத்த புண்ணியவா சம்மதிச்சு

நெய்யோடெ சோறு நெரவியுண்ண சம்மதிச்சு

பாலோடெ சோறு பருகியுண்ண சம்மதிச்சு



www.npnagarathar.com

அங்குள்ளார் இங்குள்ளார் ஐவேரும் சம்மதிச்சு

இங்குள்ளார் அங்குள்ளார் இருவேரும் சம்மதிச்சு

## தாலிக்குப் பொன் கொடுத்தல் (உறுதி செய்தல்)

வட்டோடு ஓடச்சு மணல்போல் உமிபரப்பி

புது ஓடு ஓடச்சு பொறிப்போல் தணல் வளர்த்து

தட்டான் அழச்சு தாலிக்குப் பொன் கொடுத்து

## திருப்பூட்ட வருதல் (தாலி கட்ட வருதல்)

வட்ட மரவையிலே பட்டும் அடிச்சி வச்சி

காரேம் குழலாளுக்குக் களுத்திரு எடுத்துவச்சு

தாமமே முடியாளுக்குத் தாலி எடுத்துவச்சு

பொற்கொடியா தானுக்கும் பொட்டு எடுத்துவச்சு

பசுங்கிளியா தானுக்கும் பட்டு எடுத்துவச்சு

சேனைதளம் பூட்டித் திருப்பூட்ட வாராக

நாகசனம் கூட்டி நாள் குறிக்க வாராக

சிய்யாளி கூட்டி சிங்காதனத்தோடே திருப்பூட்ட வாராக

## தாலி காட்டல் (தாலியைத் தொட்டு வாழ்த்தல்)

வந்த நகரத்தார் வாழ்ந்திருக்க வேணுமின்னு

மாங்கல்யம் தொட்டனைச்சு

## திருப்பூட்டுதல் ( தாலி கட்டுதல்)

கொட்டுடா நாகசுரம் கோரை வரிஞ்சுகட்ட

தட்டுடா நாகசுரம் தாலி திருப்பூட்ட

## ஊர் ஆலாத்தி (குதிரை ஏறுதல்)

அண்டாத தண்ணியிலே ஆனை குளிப்பாட்டி

கொள்ளாத தண்ணியிலே குதிரை குளிப்பாட்டி

குதிரை கொம்பெறம்பப் பொன் பூட்டி

நெற்றிக் கழகா நேரே ஒரு பொட்டுமிட்டு

நெற்றிக் கழகா நேரே ஒரு ராமமிட்டு



www.npnagarathar.com

வீசிவரும் காலுக்கு வீரச்சிலம்பணிஞ்சு

நடந்துவரும் காலுக்கு நாக சிலம்பணிஞ்சு

ரத்தினக் கம்பளம் தான் விரிச்சு

அடிச்சு முழக்கி ஆனந்தக் குமாரனை ஆனையிலே தூக்கிவச்சு

கொட்டி முழக்கி கொத்தார் குழலானை குதிரை மேல் தூக்கிவச்சு

## பெண் எடுக்கிக் காட்டல்

வண்ணத் தடுக்கெடுத்து மதிமுகத்தை தான் மறச்சு

பொண்ணுக்குத் தம்பி பூ எறியக் கூப்பிடுங்க

மாப்பிள்ளைக்கு மைத்துனர் மலரெறியக் கூப்பிடுங்க

மாடத்தே நிற்கும் மயிலை அழச்சாங்க

கூடத்தே நிற்கும் குயிலை அழச்சாங்க

## மாப்பிள்ளையைப் பெண்வீட்டு மகளிர் கேலி செய்தல்

பாருடி பாருடி பச்ச முகப் பாண்டியரை

ஏறிட்டும் பாருடி ஏகாந்த கிட்ணரை

அண்ணாந்தும் பாருடி ஆகாசக் கிட்ணரை

அண்ணாந்தும் பாருடி அயோத்தி ராமரை

## மாப்பிள்ளை மணவறைக்கு வருதல்

குதிரை விட்டுக் கீழ்குதிச்சுக் கோட்டையிலே உள்நுழைஞ்சு

கொத்தார் குழலானும் கோட்டையுமே வந்திறங்கி

## மணவறை அழகு செய்தல்

வட்ட மணை போட்டு ரெட்டப் பிரம்பேற்றி

நீள மணை போட்டு ரெண்டருகே புள்ளி குத்தி

அரிசிமாக் கொண்டு அளவுடனே கோலமிட்டு

நெல்லுமாக் கொண்டு நிறமுடனே கோலமிட்டு

## மணை இருத்தல்

மன்னர் வலதுபுறம் மனையாட்டி தென்புறமா

பெருமாள் வலதுபுறம் பெண்டாட்டி தென்புறா



www.npnagarathar.com

மோளம் எதிராக முளைப்பாரி முன்னாக

நாகம் எதிராக நகரத்தார் முன்னாக

அம்மி எதிராக அரசாணி முன்னாக

பாப்பான் எதிராக பால்பானை முன்னாக

மாப்பிள்ளையும் பொண்ணும் மணையிருந்தா ஓவியமா

சுண்டுவிரல் பிடிச்சுச் சுற்றி வந்தார் ஓவியமா

பாம்புவிரல் பிடிச்சுச் பக்கம் வந்தார் ஓவியமா

## மனத்தகத்தே மனைவி

வல்லுவப் பையை வச்சு மறந்தாலும்

வண்டார் குழலாளை வச்சு மறவாதே

துருநூத்துப் பையைத் தொட்டு மறந்தாலும்

சுந்தரப் பூ முடியைத் தொட்டு மறவாதே

## வாழ்த்து

ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி

மூங்கில் போல் அன்ன சுற்றம் முடிசூடி வாழ்ந்திருப்பார்



www.npnagarathar.com

# நற்சாந்துபட்டி கிளை நூலகம்

அ. லெட்சுமணன்

"கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது முதுமொழி. இன்று "நூலகமில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது புதுமொழி. நூல்களே மனிதனை முழுமையான மனிதனாக மாற்றுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. இவ்வகையில் அனைத்துத் தரப்பு மக்களின் அறிவுப்பசியினைப் போக்குவதற்காக ஊருக்கு ஒரு நூலகம் அரசினரால் அமைக்கப் பெற்று வருகிறது.

நற்சாந்துபட்டியில் 1964 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15 ஆம் நாள் நூலகம் சிறப்புடன் துவக்கி வைக்கப்பட்டது. ஏறத்தாழ 200 உறுப்பினர்களைக் கொண்டு 1000 -க்கு மேற்பட்ட நூல்களைக் கொண்டு இந்நூலகம் துவங்கியது. இன்றையத் தினம் ஆல் போல் தழைத்து 515 உறுப்பினர்களையும் 5321 நூல்களையும் தன்னகத்தே கொண்டு இயங்கி வருகிறது.

நூலகத்திற்கென்று புதிய கட்டடம் கட்ட காலிமனை இலவசமாகப் பெற வேண்டும் என்று தமிழக அரசு கோரிய போது இவ்வூர் நகரத்தார் பெருமக்களின் நன்முயற்சியின் விளைவாக ஊராட்சி மன்றம் 5 செண்ட் காலிமனை இடத்தை நன்கொடையாகத் தந்துள்ளது. அவ்விடத்தில் அரசால் புதிய கட்டடம் மிக விரைவில் பொலிவுடன் தோன்ற உள்ளது.

தமிழக அரசின் தற்போதைய ஆணையின்படி நூலகத்திற்குப் புரவலர்களைச் சேர்க்கும் பணி தீவிரப்படுத்தப் பட்டுள்ளது. அவ்வாணையின்படி 5 புரவலர்களாக திரு.கு. இராமநாதன் B.Sc., (Agri) அவர்களும், திரு.கே. இரகுபதி சுப்பிரமணியன் B.E., ( Hons) M.S., (Canada) அவர்களும், திருமதி. லெ.பெரி. அடைக்கம்மை ஆச்சி அவர்களும், திரு.அ. முத்துராமன் General Manager, Sri Saradha Mills, Coimbatore அவர்களும், திரு.பெரி.பெ.பெரி. மாணிக்கம் B.E., அவர்களும் புரவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் நகரத்தார் பெருமக்களில் பலரும் புரவலராக நியமனம் செய்யப்பட உள்ளார்கள். நூலகத்திற்கு நன்கொடையாகப் பொருள்களைப் பெற்றுத்தரும் திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் நான்காயிரம் ரூபாய் மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

வாரந்தோறும் வெள்ளிக்கிழமையும் மாதந்தோறும் இரண்டாம் சனிக்கிழமையும் நூலகத்திற்கு விடுமுறை நாட்களாகும். காலை 9.00 மணிமுதல் 12.30 மணிவரையிலும், மாலை 3.00 மணிமுதல் 6.30 மணிவரையிலும் இயங்கும் இந்நூலகம் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஆண்டுதோறும் உறுப்பினர் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வருவது இதனை உறுதிப்படுத்தும்.

நற்சாந்துபட்டி மற்றும் இதனைச் சார்ந்துள்ள பல கிராமங்களில் வசிக்கின்ற பலதரப்பட்ட மக்கள் தங்கள் ஓய்வு நேரத்தினை பயனுள்ள வழியில் கழிக்க இந்நூலகம் பெரிதும் பயன்படுகிறது. நூலகரின் கனிவான உபசரிப்பும், அன்பாகப் பழகும் முறையும் நூலகத்தில் பொதுமக்களின் வருகை உயர்வுக்குக் காரணங்களாகத் திகழ்கின்றன.

அரசு உயர் அதிகாரிகளாலும், நூலகத்துறை அலுவலர்களாலும் மாவட்டத்தில் உள்ள மிகச் சிறந்த நூலகங்களில் நற்சாந்துபட்டி நூலகமும் ஒன்று என்ற பாராட்டினைப் பெற்று பெருமையுடன் இந்நூலகம் இயங்கி வருகிறது.



www.npnagarathar.com

157

சிவமயம்

# கோவில் வரலாறு

## மெ.ப.ராம.பழ. இராமநாதன் செட்டியார் பரம்பரை அறங்காவலர் குழு

### தன வைசியர்கள் ஆகிய நாட்டுக்கோட்டை நகரத்தார் பெருமக்கள்,

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்."

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாய்மொழிக்கு ஏற்ப எங்கெங்குச் சென்றாலும் அங்கெல்லாம் தரும கைங்கரியங்களை மிகுதியாகச் செய்து, 'காவேரி நீர் அன்ன பல்லோர்க்குப் பயன் நல்கி' நமது தமிழ்ப் பண்பாட்டையும், இந்து சமயத்தையும், வளர்த்தும், போற்றியும் வந்திருக்கிறார்கள். அதுபோல் செட்டி நாட்டு ஊர்கள் அனைத்திலும் அழகான திருக்கோவில்களையும் எழுப்பி, மிக உன்னதமுறையில் நல்ல நிர்வாகத்தையும் செய்து வந்திருக்கிறார்கள். அவற்றுள் நற்சாந்துபட்டி சிவகாமி அம்மாள் உடனாய சிதம்பரேஸ்வரர் திருக்கோவிலும் ஒன்றாகும்.

கி.பி. 1883 -ம் ஆண்டு வாக்கில் இவ்வூரைச் சேர்ந்த வங்காளம் காடப்பச் செட்டியார், மெ.ப. குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், மெ.ப. பழனியப்பச் செட்டியார் அவர்கள் கல்கத்தாவில் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் செய்து வந்தார்கள். அது சமயம் காசியிலிருந்து, சிவலிங்கம் கொண்டு வந்து, சொந்த ஊராகிய நற்சாந்து பட்டியில், சிவன் கோயில் இல்லாத குறையை நீக்க வேண்டி, மற்ற நகரத்தார்கள் மூவருடன் சேர்ந்து, சிறிய ஓட்டுக்கூடம் கட்டி அதில் ஸ்தாபனம் செய்து பூஜித்து வந்தார்கள். பிறகு 190 3 -ம் ஆண்டில் நற்சாந்துபட்டி நகரத்தார்களிடம் பொதுவில் ஏற்றுக் கொண்டு நடத்திவரக் கேட்டுக் கொண்டதன்படி, நகரத்தார்களும் அன்புடன் ஒப்புக்கொண்டு நடத்தி வந்தார்கள். 1903 ஆம் ஆண்டில் நற்சாந்துபட்டி நகரத்தார்களிடம் பொதுவில் ஏற்றுக்கொண்டு நடத்திவரக் கேட்டுக் கொண்டதன்படி, நகரத்தார்களும் அன்புடன் ஒப்புக்கொண்டு நடத்தி வந்தார்கள். 1910 ஆம் ஆண்டில் நகரத்தார்கள் கோவிலைப் பெரிதாகக் கட்டத் தீர்மானித்து 13 முறை ஆஸ்தி வரிகள் போட்டு இந்த அழகான சிவன் கோவிலைக் கட்டி முடித்தார்கள். இப்பகுதியில் இது ஒரு பெரிய திருக்கோவிலாகும். திருக்குட நன்னீராட்டு முதன் முதலாக 23.5.1928 -ல் சிறப்பாக நடைபெற்றது. இத்திருப்பணி பெரும் பொருட் செலவில், என்றும் பழுதில்லா முறையில் செய்யப்பெற்றது என்பது குறிப்பிடத் தக்கதாகும். தொடர்ந்து தினமும் ஆறு கால பூஜையும் நடந்து வருகிறது.

பூஜாகாரியங்கள் நன்கு நடைபெற்று வரும் பொருட்டு நற்சாந்துபட்டி நகரத்தார்கள் தங்களின் நன்கொடையின் மூலம் நற்சாந்துபட்டி அருகில் உள்ள சித்திரன் வயல் கிராமத்தில் நன்செய் நிலம் 19 ஏக்கரை திருக்கோவிலுக்காக வாங்கியிருக்கிறார்கள்.

திருக்கோவில் நிர்வாகத்தை, நகரத்தார்கள் பரம்பரையில், ஏழுகரைக்காரர்க



www.npnagarathar.com

158

ளும் ஆளுக்கொரு வருடம் தர்மகர்த்தா வாக இருந்து நடத்தி வந்திருக்கிறார்கள். அதில் தற்சமயம் ஐந்துகரைக்காரர்கள் மட்டும், அதாவது ந.க. எண். 27986/73. நாள் 3.1.74 உத்திரவு பிரகாரம் 1. நா. சிவனடியான் செட்டியார் 2. வீ. அமு. அண்ணாமலை செட்டியார் 3. மெ.ப.ராம. பழ. பழநியப்ப செட்டியார் 4. மு.சுப. சுப்பையா செட்டியார் 5. பெரி.ராம.பெரிய கருப்பஞ்செட்டியார் ஆகிய ஐவரையும் பரம்பரை அறங்காவலர்களாகத் திருச்சி இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் அவர்கள் நியமித்துள் ளார்கள். அதன்படி 3,4,5 அறங்காவலர்கள் வாரிசுகளான 3. பழ. இராமநாதன் 4. சுப. முத்துக்கருப்பன் 5. பெரி. ராம. ராம சாமி ஆகியவர்கள் சேர்க்கப்பட்டு ஐவரும் வருடத்திற்கு ஒருவராக, நடப்பு காரியக்கா ரராக இருந்து வருகிறார்கள். அதன்படி நான் கடந்த மே மாதம் முதல் காரி யக் காரராகப் பொறுப்பேற்று நடத்தி வருகிறேன். கோவில் பராமரிப்பு செல விற்கு நகரத்தார் ட்ரஸ்ட்லிருந்து பொரு ளுதவி செய்து வருகிறார்கள். அடிக்கடி நகரத்தார் கூட்டங்கள்கூடி, செயல்முறை யும், வளர்ச்சியும் பற்றிக் கலந்துபேசி நல்ல முடிவுக்கு வருகிறார்கள். அதன் படி காரியங்கள் செயலாக்கப் பெறுகி றது. இரண்டாவது கும்பாபிஷேகம் 1972 ஆம் ஆண்டு நடைபெற்றது.

தற்சமயம் இத்திருக்கோவிலின் திருக் குட நன்னீராட்டிலும், நகரத்தார்களும், இளைஞர்களும் காட்டிவரும் ஆர்வமும் செயலும் நம் ஊருக்கே பெரும் வளர்ச்சி யையும், செல்வத்தையும் தரும். விழாக் காலங்களிலும் மற்றும் தினசரி பூஜைக ளுக்கும் நம் ஆச்சிமார்கள் காட்டும் பக் திநெறி நம் ஊர் வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாய் இருந்து வருகிறது.

### விழாக்கால உபயதாரர்கள்:-

1. விநாயக சதுர்த்தி உபயம்:

பிள்ளையார்பட்டி கோவில் முரு.வெ. லெட்சுமணன் செட்டியார் அவர்கள்.

2. கந்த சஷ்டி உபயம்:

இளையாற்றங்குடி கோவில் பெரும ருதூர் உடையார் பிரிவு பெரியகருப்பன் செட்டியார் மனைவி வடுவாத்தாள் ஆச்சி அவர்கள்

3. ஆனித்தரிசனம் உபயம்:

இளையாற்றங்குடி கோவில் பெரி. அரு.ராம. இராமநாதன் செட்டியார் மனைவி சிட்டாள் ஆச்சி அவர்கள்

4. திருப்பள்ளி எழுச்சி உபயம்:

பிள்ளையார்பட்டி கோயில் ஆ. இரா மநாதன் செட்டியார் அவர்கள்

5. முதல் சோமவாரம் உபயம்:

கும.பெரி. குடும்பத்தினர்

இரண்டாம் சோமவார உபயம்:

மெ.ப.ராம. மெ.மெ. குடும்பத்தினர்

மூன்றாம் சோமவார உபயம்:

ஆ.வெ. ஆண்டியப்ப செட்டியார் மனைவி மீனாட்சி ஆச்சி அவர்கள்

நான்காம் சோமவார உபயம்:

பெ.ராம. குடும்பத்தினர்

6. நவராத்திரி எட்டாம் நாள் சிவ பூசை அலங்காரம்:

பெரி.லெ. மாணிக்கம் செட்டியார்



www.npnagarathar.com

நவராத்திரி ஒன்பதாம் நாள் சரஸ்வதி பூஜை அலங்காரம்:

ஆ.பெரி. லெட்சுமணன் செட்டியார் அவர்கள்

7. திருக்கார்த்திகை உபயம்:

கும.ந. குடும்பத்தினர்.

8. ஆருத்ரா தரிசன உபயம்:

கும.பெரி.மு. பெரி.மு குடும்பத்தினர்.

9. சிவராத்திரி உபயம்:

கும.மு. குடும்பத்தினர்.

10. அன்னாபிசேக உபயம்:

பழ.சி. ராமனாதன் செட்டியார், சிவனடியான் செட்டியார், பழனியப்பன் செட்டியார்.

11. மாட்டுப் பொங்கல் அன்று நந்தி அபிஷேகம் சந்தனக்காப்பு உபயம்:

கு.ராம. ஏகம்மை ஆச்சி

பெ.ராம.ராம.லெ. வள்ளியம்மை ஆச்சி

## திருக்கோவிலுக்கு முன்பு நன்கொடை அளித்தவர்கள் விவரம்

1. சுவாமி சன்னதி முன் மண்டபம்: பெ.ராம. குடும்பத்தார்.

2. அம்பாள் சன்னதி முன் மண்டபம்: கும. கமலம் ஆச்சி அவர்கள்.

3. அலங்காரக் கொட்டகை முன் மண்டபம்: கும.பெரி.ந.மு. குடும்பத்தினர்.

4. கோவில் உள்கேணி மோட்டார் பம்ப்செட் உபயம்: பெ.ராம.லெ.ராம. கணபதி செட்டியார் அவர்கள்

5. கோவில் வெளிப்பிரகாரக் கேணி, மோட்டார் பம்ப்செட் & நந்தவனம் உபயம்:

பழ.சி.ராம. ராமனாதன் செட்டியார், பழ.சி.ராம. சிவனடியான் செட்டியார், பழ.சி.ராம. பழனியப்பன்

6. நடராஜர் சன்னதி கொலாப்சிபிள் கேட் உபயம்: ந.மெ. மகள் உமையாள்ஆச்சி

7. எலக்ட்ரிக் லைட் உபயம்: குழ. சுப்பிரமணியன் செட்டியார் மனைவி லெட்சுமி ஆச்சி.



www.npnagarathar.com

160

சிவமயம்

## நற்சாந்துபட்டி அருள்மிகு சிதம்பரேஸ்வரர் சிவகாமி அம்பாள் தனிப் பெருந் திருக்கோவில்

# சிவகாமி அம்பிகை 108 போற்றி

பழ. இராமனாதன்
அறங்காவலர்குழு

அருட் பெருஞ்ஜோதி தனிப்பெருந் தேவி போற்றி
ஆனந்த களிப்பே அன்னை சிவகாமியே! போற்றி
இனியன நல்கும் இறைவியே! போற்றி
ஈகையின் நேசியே இணையிலா தேவியே! போற்றி
உத்தமர்க் குதவிடு உலகமா தேவியே! போற்றி
ஊழ்வினை அகற்றும் உத்தம தேவியே! போற்றி
எண்ணுவார்க் கெண்ணுவ ஏந்திடு தாயே! போற்றி
ஏரொளித் திருவே!பேரொளி உருவே! போற்றி
ஐம்பூதம் தம்மையும் ஆண்டிடும் அரசியே! போற்றி
ஒப்பிலா னெனவே உலகழை முதலே! போற்றி
ஓவியக் காவிய ஒப்பிலா தெய்வமே! போற்றி
ஔவைத் தமிழே! அருட்சிவ காமியே! போற்றி
அஃகையும் ஆண்டருள் தமிழோய்! போற்றி
கருணா மனத்தி! சுகுணா தனத்தி போற்றி
காலை மாலை தோன்று திருவே! போற்றி
கிள்ளு பிறையே முடிகொள் இறையே! போற்றி
கீதா மேதா மாதவன் பிறப்பே! போற்றி
குங்குமத் திலகி! கொந்தள அழகி!! போற்றி
கூடா வினையே குறைகோ மகளே! போற்றி
கெங்கைச் சடையன் பாகப் பிரியை போற்றி
கேடொழி படைச்சி! பீடொளிர் சடைச்சி போற்றி
கயிலை உலாசி! வைகறை விலாசி!! போற்றி
கொல்லான் புலாலே மறுத்தானே புகழ்வி போற்றி
கோணா நெறியார்க் குதவுமா காளி! போற்றி
கௌமார குலத்தி! கல்யாண வளத்தி!! போற்றி
ஙப்போல் ஒப்பிலா ஒருதனி முதலே! போற்றி
அங்கிங் கெனாத எங்கெங்கு மொளிர்வை! போற்றி
சத்ஜன ரக்ஷக சாமுண்டீஸ்வரியே! போற்றி
சாந்தசௌ பாக்ய சந்தான போக்யை போற்றி
சிதம்பரேஸ்வரர் மகிழ் சிவகாமி அம்பிகை போற்றி
சீதக் களபச் செந்தாமரைப் பதத்தி! போற்றி
சுத்தசன் மார்க்க ஜோதிசிவ சக்தியே! போற்றி



www.npnagarathar.com

சூட்சும ரூபிணி! சுந்தரா பரணி!! போற்றி
செந்தமிழ் வாணி! செந்தாழை வேணி!! போற்றி
சேவிப்பார்க் கிரங்கிடு சேமாபி விருத்தினி!! போற்றி
சைவ சமயக் காரணி! சாரணி!! போற்றி
சொக்கரே போற்றும் சக்கர வர்த்தினி! போற்றி
சோதிச் சடைச்சி! நீதிப் படைச்சி!! போற்றி
சௌபாக்ய சக்தி! சிவபாக்ய சித்தி!! போற்றி
நயம்படை உளத்தி! செயம்புடை களத்தி!! போற்றி
இடம்பர் இடம்பக் கெடும்பொழி கிழத்தி! போற்றி
மணக்கும் கொந்தள மாபார மகிபி! போற்றி
தக்க சங்காரி! சொக்க சிங்காரி!! போற்றி
தாண்டவ மாடிய தண்டாமரைத் தாளி! போற்றி
திங்களி பிறையன் தங்கத் துரைச்சி! போற்றி
திருமலை வாழும் ஜோதித் திருவே! போற்றி
துடுக்கர் துடுக்கை ஒடுக்கிடு துரைச்சி! போற்றி
தூங்கா விளக்கே! விளக்கொளிப் பெருக்கே! போற்றி
தென்பாண்டித் திருவே! திருமறைப் பொருளே! போற்றி
தேவாதி தேவன் மூவா முதல்வி போற்றி
தையல் நாயகி! பைந்தமிழ்த் தாயகி!! போற்றி
தொய்யா ஒயிலி! கையிலை மயிலி!! போற்றி
தோடுடை செவியன் பீடுடைத் தேவி! போற்றி
நற்சாந்துப் புகழ்பொற் றாமரை புண்ணியை போற்றி
நாலீட போற்ற ஏடெதிர் ஏற்றி போற்றி
நித்ய கல்யாணி! வித்வத் சிரோமணி!! போற்றி
நீல கண்டன் கோலப் பிராட்டி போற்றி
நுண்ணிடைத் தேவி! மின்னுடைப் பூவி!! போற்றி
நூலே புகழு கோமள வல்லி போற்றி
நெற்றிக் கண்ணர் பத்தினிப் பெண்ணே போற்றி
நேராள் சீராள் பேரூர் பெரியாள் போற்றி
நைவினை நுணுக்கார்க் கருள்புரி நல்லோய் போற்றி
நொந்தார் வெந்தார் நோவொழி கோவே போற்றி
நோன்பே பூண்டார் மாண்பே காண்பை போற்றி
பலரும் புகழ்ந் தேத்து பரமேச் வரியே! போற்றி
பாலமணியே! கனிக்காய்ப் பரிவை!! போற்றி
பித்தனோ டாடியே பித்தியாய் ஆனோய் போற்றி
பீடுடைப் பிரமாபுர ஆட்டுடைப் பெரியாய் போற்றி
புவனித் துரைச்சி! பொறுப்பாள் துறைச்சி போற்றி
பூமணக் கோதை! பாவாண மேதை!! போற்றி
பெருங்கருணைப் பிராட்டி! தமிழ்ப்பெரு மாட்டி! போற்றி
பேதையர் பாலே மாதயை ஆள்வை! போற்றி



www.npnagarathar.com

பைநாக பூஷணி! மகிஷாசுர நாசினி!! போற்றி
பொய்யாத போஷகி! நையாத ஜீவகி!! போற்றி
75 போறா ஆண்மைப் பொடியரே பொடிப்பை! போற்றி
மஞ்சள் வளத்தி! மாதவ உளத்தி!! போற்றி
மாதேவ தேவி! மண்விண் மகத்வி!! போற்றி
மின்னார் செஞ்சடை மேலவன் பொற்சடை போற்றி
மீனொளிக் கண்ணி! வேத்தாகமப் பொன்னி!! போற்றி
80 முத்தாரக் கழுத்தி! வித்தாரக் கிழத்தி!! போற்றி
மூதுரை புகழும் மேதா விலாசி போற்றி
மெய்யரை என்றும் கைவிடா அம்மே! போற்றி
மேருமலை ராணியே! வேதாகம வாணியே!! போற்றி
மைநாகன் மகளே! பைந்தமிழுன் புகழே!! போற்றி
85 மொய்சு மலர்மணக் கொந்தள சுந்தரி! போற்றி
மோன மாதவ ஞானமா மணி! போற்றி
மௌலி பிறையணி மாதேவன் மாதேவியே! போற்றி
பயங்கர நர்த்தனி! தருமசம் வர்த்தனி!! போற்றி
வரமே தந்தாள் தரமே கொண்டாள் போற்றி
90 இலக்கிய வல்லி! இலட்சிய வில்லி!! போற்றி
வளைகை குலுக்கு வாழ்வாபி மானியே! போற்றி
வாழ்க்கை வளத்தி! வையைக் குலத்தி!! போற்றி
வித்யா பரணி! நித்யா நந்தினி!! போற்றி
வீரமா காளி! ஞானமா தேவி!! போற்றி
95 உல்கர்க் குபகாரி! கலகர்க் கபகாரி !! போற்றி
ஊறெழி பேறே! ஊரொளிர் சீரே!! போற்றி
வெண்டாமரை செந்தாமரை, பொற்றாமரை மும்மகளே! போற்றி
வேழமுகப் பிள்ளை மேலதி பிரியை போற்றி
வையாளி அழகர் வரிசைகொள் ஒய்யாரி போற்றி
100 ஒப்பிலா ஒருமகளே ஒப்பிலாத் திருமகளே! போற்றி
ஓம்சக்தி என்பார்க் காம் சுத்த சக்தியே! போற்றி
ஔவைத் தமிழே! சௌபாக்யப் பொருளே!! போற்றி
"ழ" ப்போற் சிறப்பி! "ங" ப்போல் ஒப்பிலாய் போற்றி
தாழ்வார் தமக்கும் தந்தருள் தழைப்பை! போற்றி
105 வளத்தி! நலத்தி! குணத்தி! மணத்தி! போற்றி
வெள்ளி விமர்சியே! இராஜ ராஜேஸ்வரியே!! போற்றி
அறமும் தமிழும் தாங்கு பெருமாட்டி! போற்றி
108 அனந்தகுண கல்யாண சௌந்தர்யே! சிவகாமி அம்பிகே!! போற்றி போற்றி



www.npnagarathar.com

# நகரத்தார் காவடி வரலாறு

## நெற்குப்பை

### கு.பழ.சு.பழ.சு. பழனியப்ப செட்டியார்

நகரத்தார்களில் 96 ஊர்களில் ஒன்றான புதுக்கோட்டையை அடுத்த தேக்காட்டூர் என்னும் ஊரில் எங்கள் முன்னோர்களில் ஒருவரான நேமங்கோவில் இளநல வகுப்பு குப்பாஞ் செட்டி குமரப்பன் என்பவர் சுமார் 386 ஆண்டுகட்கு முன்பு சுமார் கி.பி. 1600-ஆம் ஆண்டில் உப்பு வியாபாரம் செய்வதற்காக பழனிக்கு குன்றக்குடி வழியாக நடந்து போய் வந்தார். அது சமயம் அவர்கள் பழனியில் தங்கியிருந்த இடத்திற்கு உப்புச் செட்டி மடம் என்று பெயர். அந்த இடம்தான் தற்சமயம் பழனியில் நகரத்தார் அன்னதான மடம் எனப் பெயர் வழங்குகிறது. உப்பு வணிகம் செய்து வந்ததோடு பழனியாண்டவர்க்கு வழிபாடு நடத்தி வந்தார்கள். அதன்பிறகு கலாமடம் ஈசானிய சிவாச்சாரியார் கட்டளைப்படி குப்பாஞ் செட்டி குமரப்பன் வகையில் ஒருவர் நகரத்தார் கட்டளைக் காவடி எடுத்து வரவும் மற்றும் ஏழு கோவில் நகரத்தாரும் குன்றக்குடியிலிருந்து பழனிக்குக் காவடி எடுத்து வரவும் ஆகிய பழக்கங்கள் நடைமுறைக்கு வந்தன. குப்பாஞ் செட்டி நேமம் குமரப்பனுக்கு சமபட்டி என்ற சமுத்திராப்பட்டியில் நத்தலிங்கம் நாயக்கர் வழங்கிய இரண்டு வேலாயுதங்களையும், குமரப்பன் வழி வந்தோர் பழனிக்கு எடுத்துச் சென்று வழிபாடு செய்வது வழக்கமாக இருந்து வருகிறது. நேமங்கோவில் குமரப்பன் பழனித்தலத்திற்கு உப்பு விற்க வந்து வழிபாடு ஆரம்பித்ததை மதித்துப் பழனியில் முதல் விபூதியும், காளாஞ்சியும், பரிவட்டமும் குமரப்பனுக்கு நடக்கட்டும் என ஏழு வகை நகரத்தாரும் ஒரே மனதாகப் பேசி முடிவு செய்தனர். பிறகு தேக்காட்டூரிலிருந்து நாங்கள் நெற்குப்பைக்கு வந்து இருந்து வருவதாகத் தெரிய வருகிறது.

கண்டனூரிலிருந்து குன்றக்குடி வழியாக வந்து பழனி வழிபாட்டில் கலந்து கொள்ளும் கண்டனூர் இரணிக் கோவில் பெ. குட்டையன் செட்டியார் வகையில் முருகனுடைய அருள் ஆடும் காரணத்தாலும் குன்றக்குடியில் பெரிய மருது, சின்ன மருது அரசர்கள் கேட்ட கேள்விக்குத் தகுந்த பதில் சொன்ன காரணத்தாலும் அரசர்கள் பெ: குட்டையன் செட்டியார் வகையினரைப் பாராட்டிச் செங்கோலும், பிரம்பும், முத்தாரமும் பரிசாகக் கொடுத்து சாமியாடி என்ற பெருமையோடு பழனிக்குப் போய் வரும்படி வாழ்த்தினார்கள். சாமியாடிச் செட்டியார் வகையினருக்கு இரண்டாவது மரியாதை கொடுத்து வருகிறது என்று 1766 ஆம் ஆண்டு எழுதப் பெற்ற ஏட்டுச் சுவடி மூலம் தெரிகிறது.

தேவகோட்டை நகரத்தார் நைனப்ப செட்டியார் செய்து வைத்ததும் குன்றக்குடியிலிருந்து வருவதுமான இரத்தின வைர வேலையும் சாமியாடிச் செட்டியார் அவர்கள் பழனிக்கு எடுத்துக் கொண்டு வருவது வழக்கமாக இருந்து வருகிறது.

பழனி நகரத்தார் அன்னதான மடத்துத் திருப்பணி வேலைகளில் மிக்க முயற்சி எடுத்துக் கொண்ட காரைக்குடி வைரவன் கோவில் வேலப்ப செட்டி வைரவனுக்கு மூன்றாவது மரியாதை உரியது என்று 1788 ஆம் ஆண்டு எழுதப் பெற்ற



www.npnagarathar.com

164

ஏட்டுச் சுவடி மூலம் தெரிய வருகிறது. அவர்கள் வழி வந்தவர்கள்தான் தற்ச மயம் அரண்மனைப் பொங்கல் என்ற பெருமை தரும் புனிதப் பெயரோடு பழ னிக்கு குன்றக்குடியிலிருந்து வரும் காவ டியுடன் வருகிறார்கள்.

மேலைச்சிவபுரி, பிள்ளையார்பட்டி வகுப்பு கோவில் வீட்டு முத்தப்பனுக்கு பழனியாண்டவருடைய அருள் வந்த செய் தியும், அதைத் தெரிந்து மகிழ்ந்து அர சர் தொண்டைமான் முத்தப்பர் வீட்டிற்கு வந்து தாம்பூரவேல் கொடுத்து அதையும் பழனிக்கு எடுத்துச் சென்று பூசை வழிபாடு செய்து வரும்படி சொல்லிய காரணத்தால் அரசர் கொடுத்த வேலுக்கு நான்காவது மரியாதை கொடுத்து முத் தப்பர் வழிவந்தவரே அதற்கு உரியவராக இருந்து இன்று மேலைச்சிவபுரி ஆறு. முரு. குடும்பத்தினர் அரசர் கொடுத்த வேலுடன் பழனி சென்று வழிபட்டு வருகின்றனர் என்றும் தெரிய வருகிறது. இங்ஙனம் தெய்வ அருள் பெற்ற நகரத் தார் நான்கு வகையினர் வழி வந்தோ ரும் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி மூங்கில் போல் சுற்றம் முசியா மல் மரகத கணபதி துணையால் வாழ்ந் திருப்பார்களாகவும் என ஏட்டுச் சுவடி மூலம் தெரிய வருகின்றது.

கலாமடம் ஈசானிய சிவாச்சாரியார் கட்டளைப்படி வழக்கமான வழித்தடங்க ளில் பழனிக்குச் சென்று வருகின் றோம். இந்த விவரங்கள் என் தந்தை யார் கு.பழ.சு.பழ. சுப்பிரமணியன் செட் டியார் அவர்கள் 1961 ஆம் ஆண்டில் வெளியிட்ட நகரத்தார் அறப்பட்டையங் கள் என்ற நூலிலும் விவரமாக எழுதப் பெற்றிருக்கிறது.

கண்டனூர் சாமியாடிச் செட்டியார் அவர்கள் வாக்கு அருள் வாக்காகும். அவர் கள் சொன்னது நடக்கும். பெரும்பாலும் அவர்களுடைய வாக்கைப் பெருமையோ டும் மரியாதையோடும் பின்பற்றி வரு கிறோம். அவர்களிடம் சோதனையாகக் கேள்விகள் கேட்கக் கூடாது. அவ்விதம் கேட்பது கேட்பவர்களுக்கு சோதனையா கவே நடக்கும். இவ்விதம் அருள்வாக்கும் முருகன் அருளோடும் பெரும் புகழ் பெற்று வரும் சாமியாடி செட்டியார் அவர்களுக்கு இப்போது முதல் காளாஞ்சி மரியாதை சிறப்பாக நடந்து வருகிறது.

என் சிறிய தாயார் மகன் மகிபாலன் பட்டி சி.ராம. நாகப்பன் ஏழாண்டுகளாக மகிபாலன் பட்டியிலிருந்து சுமார் 150 பக்தர்களுடன் தானும் நடந்து சென்று பழனி பாத யாத்திரையை பொறுப்போடு நடத்தி வருவது எனக்கு மிகவும் பெருமையையும் மகிழ்வையும் தருகிறது. உடம்பில் தெம்புள்ள வரையும் காலில் வலுவுள்ள வரையும் மனமகிழ முருகனை நினைந்து தொடர்ந்து பாத யாத்திரை நடத்தியும் நடந்தும் வரவி ரும்பிய அன்பரை பழனியாண்டவர் தன் இன்னருளால் தம்பி சி.ராம. நாகப்பனை வாழ்த்துகிறேன்.



www.npnagarathar.com

# குறிக்கோள் வேண்டும்!

மு. வை. அரவிந்தன்

திருநாவுக்கரசர், தம் வாழ்நாள் முழுவதும் தமிழகமெங்கும் உள்ள பலவேறு சிவத்தலங்களுக்கும் சென்று, அங்கே இருக்கும் சிவபெருமானை நினைந்து கசிந்துருகிப் பக்திப் பாடல்களைப் பாடியருளிய சிவனருட் செல்வர்; தமிழோடு இசை பாடல் மறந்தறியா அருளாளர்.

அத்தகைய இயல்புடைய அவர், சோழ நாட்டில் உள்ள திருக்கொண்டீச்சரம் என்னும் சைவத் திருத்தலத்தை நாடி வருகின்றார்.

அந்த ஊர், பச்சைப் பசேல் என்று காட்சி தரும் செந்நெல் வயல்களின் நடுவில் உள்ளது. வயல்களிலும், வாய்க்கால்களிலும், நீர் நிறைந்து இருக்கிறது. நீரில் கெண்டை மீன்கள் மகிழ்சியாக உலவிக் கொண்டிருக்கின்றன; இங்குமங்கும் ஓடி மகிழ்கின்றன; துள்ளிவிளையாடுகின்றன.

இந்த இனிய காட்சியைக் கண்டு மகிழ்ந்த திருநாவுக்கரசர் சிந்திக்கத் தொடங்குகின்றார். அவரது சிந்தனையில், பின்வரும் கருத்துகள் மலர்கின்றன.

"நீரில் வாழும் கெண்டை மீன்கள், எந்தக் கவலையும் இன்றி, ஓடியாடித் துள்ளித் திரிந்து கொண்டு இருக்கின்றன. இவற்றிற்கு எந்த எண்ணமும் இல்லை! குறிக்கோள் எதுவும் இல்லை! இந்த மீன்களைப் போலவே, மக்களில் பலர் வாழ்ந்து வருகின்றனர்! அவர்கள் எந்தக் கவலையும் இன்றி, எந்த சிந்தனையும் இன்றி, எந்தக் குறிக்கோளும் இன்றி வாழ்கின்றனர். உண்டு களித்து உறங்கித் தம் வாழ்நாளை அவர்கள் வீணாக்குகின்றனர். குறிக்கோள் இல்லாத வாழ்வும் ஒரு வாழ்வா?

இவ்வாறு எண்ணிக் கொண்டே திருநாவுக்கரசர் ஊருக்குள் நுழைகின்றார். சிவன் கோவிலை நாடிச் சென்று, இறைவன் முன்னால் நின்று தம் கைகளைக் கூப்பித் தொழுகின்றார். அவரை அறியாமலேயே அவரது கண்களிலிருந்து கண்ணீர் பெருகுகின்றது. அவரது வாயிலிருந்து பின்வரும் பாடல் இசையுடன் வெளிப்படுகின்றது:

பாலனாய்க் கழிந்த நாளும்,
பனிமலர்க் கோதை மார்பின்
மேலனாய்க் கழிந்த நாளும்,
மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும்
குறிக்கோள் இலாது கெட்டேன்!
சேல்உலாம் பழன வேலித்
திருக்கொண்டீச் சரத்து ளானே!

இந்தப் பாடல் கற்பவர் உள்ளத்தைக் கவரும் தன்மை உடையதாகும். இது பக்திப் பாடல்களிலேயே தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இதில் திருநாவுக்கரசர், உலக மக்களின் இயல்பைத் தம்மீது ஏற்றிக் கொண்டு - குறிக்கோள் இல்லாமல் வாழும் மக்களில் ஒருவராகத் தம்மை தாழ்த்திக் கொண்டு, உலக மக்களுக்காக இரக்கம் கொண்டு மிகச் சிறந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

## மூன்று நிலைகள்

மனித வாழ்வு மூன்று முக்கியமான பருவங்களை உடையதாகும். முதலாவது குழந்தைப் பருவம். இரண்டாவது வாலி



www.npnagarathar.com

பப் பருவம். மூன்றவது கிழப் பருவம்.

இந்த மூன்று பருவங்களையும் உடைய மனிதனின் நிலைகளைத் திரு நாவுக்கரசர் இலக்கிய நயத்தோடு குறிப் பிடுகின்றார்.

பாலன் -குழந்தைப் பருவம்

பனிமலர்க் கோதை மார்பின் மேலன் குளிர்ந்த மலர்களைச் சூடும் கூந்த லையுடைய மகளிரொடு கூடி வாழ்கின்ற வாலிபப் பருவம்.

மெலிவொடு மூப்பு வந்த மேலன் -தளர்ச்சியும் முதுமையும் அடைந்து கோலூன்றி நடக்கின்ற கிழப்பருவம்.

என்று விளக்கம் கொள்ளும் வகை யில் கவிதைச் சுவையுடன் கூறுகின்றார்.

பட்டினத்தாரின் பாகுபாடு

மேலே குறிப்பிட்ட மூன்று வேறு பருவங்களையும் மூன்று சங்குகளோடு தொடர்புப் படுத்தி பட்டினத்தார், பின்வ ரும் அழகான பாடலைப் பாடியுள்ளார்.

“முதற்சங்கு அமுது ஊட்டும்!
மொய் குழலார் தம்மை,
நடுச் சங்கம் நல்விலங்கு
பூட்டும்! -கடைச் சங்கம்,
ஆம்போது அது ஊதும்!
அம்மட்டோ? இம்மட்டோ?
நாம்பூமி வாழ்ந்த நலம்!”

“முதற்சங்கு, பிள்ளைப் பருவத்தில் பாலூட்டுகிறது. இரண்டாம் சங்கு திரு மணத்தின் போது ஒலித்து, மனைவியை நம்முடன் சேர்க்கிறது. மூன்றாம் சங்கு, கிழப் பருவத்தின் முடிவில் மரணச் சங்காக ஒலிக்கிறது” என்ற கருத்தைக் கூறுகின்றது, பட்டினத்தார் பாடல்.

பட்டினத்தாருக்கு முன்பே, திருநா வுக்கரசர் மனித வாழ்வின் மூன்று பருவங் களையும் நினைத்துப் பார்த்து நீதியை உணர்த்தியுள்ளார்.

குறிக்கோள் உடைய வாழ்க்கை

உலகில் மனிதனாய்ப் பிறந்த ஒவ் வொருவருக்கும், வாழ்வில் ஏதேனும் ஒரு சிறந்த குறிக்கோள் இருக்க வேண் டும். வாழ்நாளில் ஒர் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்ற கருத்தை நெஞ்சத்தில் பதியவைத்துக் கொண்டு, அதையே குறியாகக் கொண்டு, அதனை அடைவதற்காக இடைவிடாமல் முயற்சி செய்வது ‘குறிக்கோள் உடைய வாழ்க்கை.’

இக்கருத்தையே திருநாவுக்கரசர் மிக நயமாகப் பின்வருமாறு கூறுகின்றார்:

“மனிதனுக்கு இயற்கையாய் அமைந்த மூன்று பருவங்களிலும் குறிக் கோள் இருக்க வேண்டும். முதற் பருவ மாகிய பிள்ளைப் பருவத்திலேயே குறிக் கோள் இருக்க வேண்டும். ஒருவேளை அந்தப் பருவம் குறிக்கோள் எதுவும் இல் லாமல் கழிந்து விடுமாயின் அடுத்த பருவமாகிய வாலிபப் பருவத்திலேனும் குறிக்கோள் அமைய வேண்டும். அது வும் வீணாய்க் கழியுமாயின் மூன்றாம் பருவமாகிய கிழப் பருவத்திலேனும் குறிக் கோள் ஏற்பட வேண்டும்.

மனிதன் வாழ்வில் மூன்று பருவங்க ளும் குறிக்கோள் எதுவும் இன்றி கழிந்து விடுமாயின், அவனுடைய வாழ்க்கை வீணான வாழ்க்கை தானே! பயனற்ற வாழ்க்கை தானே?”

இவ்வாறெல்லாம் எண்ணிப் பார்த்த திருநாவுக்கரசர் மேலே உள்ள பாடலின் கருத்தைத் தம்மீது ஏற்றி வெளியிட்டுள் ளார்.



www.npnagarathar.com

அந்தப் பாடலில் 'கழிந்த நாளும்' என்ற சொற்கள் மூன்று முறை இடம் பெற்று அவலச் சுவையைப் படிப்படியாக மிகுதிப் படுத்திக் கொண்டே போகின்றது.

'குறிக்கோள் இலாது கெட்டேன்' என்ற அடியில் நிரம்பியுள்ள துன்பச் சுவை, இமயச் சிகரத்தின் உச்சிக்குப் போய் விடுகிறது!

நெஞ்சில் நிரம்பி வழியும் துன்பச் சுவை, "திருக் கொண்டீச் சரத்துளானே!" என்று இறைவனிடம் முறையிடும்போது கண்ணீராக மாறி வெளிப்படுகின்றது.

பக்தி இலக்கிய உலகிலேயே இந் தப் பாடல், தனித் தன்மை வாய்ந்தது; கற்பவர் எவரையும் சிந்திக்க வைத்துக் கலங்கச் செய்யும் தன்மை உடையது.

இந்தப் பாடலைப் படிக்கும் தோறும், "வாழ்க்கைக்கு உயர்ந்த குறிக்கோள் ஒன்று வேண்டும்! வேண்டும்!!" என்ற எண்ணம் உள்ளத்தில் தோன்றிப் பல முறை எதிரொலிக்கின்றது.

சிவமயம்

# ஸ்ரீ அழகி அப்பத்தாள் படைப்பு

ந. முத்துராமன் B.Sc.,

நகரத்தார் பெருமக்கள் பல்வேறு படைப்புகளை நடத்தி வருகின்றனர். நச்சாந்துபட்டி, பிள்ளையார்பட்டி நகரத்தார் பெருமக்களால் சிறப்புடன் நடத்தப்பட்டு வரும் ஸ்ரீ அழகி அப்பத்தாள் படைப்பு, சிறந்த படைப்புகளில் ஒன்றாகக் கருதப் படுகின்றது. ஸ்ரீ அழகி அப்பத்தாளுக் கென்று ஓர் அழகிய படைப்பு வீடு நச்சாந்துபட்டியில் உள்ளது. பன்னெடுங்காலமாக இப்படைப்பு மிகச் சிறந்த முறையில் நடத்தப்பட்டு வந்தது. ஆயினும் இடையில் முப்பது ஆண்டுகளாக நடத்த இயலாமல் போய்விட்டது. 1973 ஆம் ஆண்டில் இருந்து திரு. சி.லெ. சின்னக்கருப்பன் செட்டியார் அவர்களின் பெருமுயற்சியின் காரணமாக தொடர்ந்து ஆண்டுதோறும் இப்படைப்பு மீண்டும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஆண்டிற்கு ஒரு முறை நடைபெற்ற இப்படைப்பு, 1976 ஆம் ஆண்டில் இருந்து ஈராண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு வருகின்றது.

1973 ஆம் ஆண்டில் இருந்து 1990 ஆம் ஆண்டு வரை 10 படைப்புகள் நடைபெற்றுள்ளன. வழக்கமாக சித்திரை அல்லது வைகாசி மாதத்தில் இப்படைப்பு நடத்தப்படுகிறது. ஸ்ரீ அழகி அப்பத்தாளின் சிலை ஒன்று கோனாபட்டிற்கு அருகில் அமைந்துள்ள ஆலத்துப் பட்டியில் இருக்கும் ஐயனார் கோவிலில் உள்ளது. ஒவ்வோர் ஆண்டும் மாசி சிவ ராத்திரியன்று இவ்வூர் பிள்ளையார்பட்டி பெருநகரத்தார் அனைவரும் ஆலத்துப் பட்டி சென்று உளிவீர சுவாமியையும், ஐயனாரையும் ஸ்ரீ அழகி அப்பத்தாளையும் வழிபட்டு வருவதனை, வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.



www.npnagarathar.com

சிவமயம்

# பேரையூர் திருத் தலமும் பொய்யாத விநாயகர் திருப்பணியும்

சித. நடராஜன்

நற்சாந்துபட்டி நகருக்குப் பெருமையும், சிறப்பும் அளிப்பவை அதனை அடுத்து இயற்கையாகவே அமையப் பெற்றுள்ள பேரையூர் நாகநாத சுவாமி சிவன் கோவிலும் மேற்கில் குடவரைக் கோவிலாக விளங்கும் மலையக்கோவில் மலைய லிங்கேஸ்வரர் ஆலயமும் ஆகும்.

பேரையூர் சிவஸ்தலத்தின் மகிமைக்கு இணையாகத் தென்னகத்தில் மற்றும் ஆறு சிவஸ்தலங்களைச் சொல்லலாம். அவையாவன: காஞ்சிபுரம், தில்லையம்பதி, நிசுளை என்படும் அரித்துவார மங்கலம், தேஞ்சொறி பொழில்கள் சூழ்ந்த திருவெல்லம் மற்றும் அவினாசி, எரிச்சி ஆகிய ஆறு தலங்களுமே ஆகும். பேரையூரின்கண் நாகநாதராகக் காட்சி தரும் இறைவனை, ஆதித்யன், பிரம்மன், இந்திரன், இராமன் மற்றும் நாகராசன் ஆகியோர் வழிபட்டு உயர்வடைந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. ஆண்டுதோறும் பங்குனி இறுதி அல்லது சித்திரைத் திங்களில் சுனை நீர் வற்றி வரும்போது குறிப்பிட்ட நாட்களில் சுனை முழக்கம் கேட்கும். அப்போது பதினெட்டு வகையான வாத்யங்களின் இன்னிசையையும் கேட்கலாம். அந்த நாட்களில் நாகராஜா நாகநாதரைப் பூஜை செய்து வழிபடுவதாக கருதப்படுகின்றது. சுனை முழக்கம் கேட்பது இன்றளவும் நடந்துவரும் வியத்தகு நிகழ்ச்சியாகும்.

பிள்ளைப்பேறு வரம் நல்கும் தலங்களில் சிறந்தது இத்தலம். இராகு, கேது கிரகங்களின் தோஷங்களையும், நாகப் பிரதிஷ்டை செய்து நாகநாதரை வழிபடுவதன் மூலம் இங்கு நிவர்த்தி செய்து கொள்ளலாம். மக்கட் பேற்றிற்கும் மற்றும் திருமணத் தடைகள் விலகி மங்கள காரியங்கள் நிகழவும் இராகு கேது கிரகங்களுக்குப் பரிகாரம் செய்வது அவசியமாகும்.

இத்திருக் கோவிலுக்கு நற்சாந்து பட்டி பெ. ராம. குடும்பத்தாரால் செய்து வைக்கப்பட்டுள்ள சித்திர வேலைப்பாடுகள் நிரம்பிய பெரியசுவாமித் தேர் ஒன்றும் அம்மன் தேர் ஒன்றும் இருந்து வருகின்றன. பங்குனித் திருநாள் தேரோட்டத்தன்று அவையிரண்டும் இவர்கள் திருப்பணி அறக் கட்டளைப்படி வருடந்தோறும் அலங்கரிக்கப்பட்டு 'தேர்த்திருவிழா' நடைபெற்று வருகின்றது. இக்கோவிலின் சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்ட பெரிய வடச் சங்கிலிக்கு ஏற்ப இவ்விரு தேர்களும் திரு. பெ. ராம. இராமன் செட்டியார், திரு. பெ. ராம. லெட்சுமணன் செட்டியார் ஆகியோரால் செய்து வைக்கப்பட்டன. இக்கோவிலில் நித்தியப்படி சரவிளக்கு தீபமும், இக்குடும்பத்தாரின் அறக்கட்டளைப் பணிகளில் ஒன்றாக நிதமும் ஏற்றி வைக்கப்பட்டு வருகிறது.

அலைகடலுக்கு நடுவே வாழ்ந்து அமரர்க்கு இடர் செய்து வந்த அசுரன் சூரபத்மனைப் போரில் பொருது வென்ற கந்தப் பெருமானுக்கு முன் தோன்றியதால் மூத்த பிள்ளையார் எனத் திரு



www.npnagarathar.com

169

நாமம் வந்து எய்தப் பெற்ற விநாயகப் பெருமானுக்கு இத்தலத்திற்கு அருகில் ஒரு தனிக்கோவில் வேண்டுமென்ற அவா மிக்கு இருந்தது போலும். எனவே அந்த ஆவல் நிறைவேற இறைவன் அருளால் அந்த எண்ணம் நற்சாந்துபட்டி தனவணிகர்களான பெ. ராம. இராமன் செட்டியார், பெ. ராம. லெட்சுமணன் செட்டியார் ஆகியோர இதயத்தில் கருக்கொண்டது. விநாயகப் பெருமானின் அருளால் அவர்களது வாணிபமும் செழிப்புற்றுப் பெருகியபோது பொய்யாது அருள் பாலித்த விநாயகப் பெருமானுக்குத் தனி ஆலயம் ஒன்று அம்பாள் குளக்கரையில் அவர்களால் எடுக்கப்பெற்று 1928 ஆம் ஆண்டில் குடநீராட்டு விழா நடைபெற்றது. பின்பு இரண்டாவதாக 1956 ஆம் ஆண்டிலும், மூன்றாவதாக 1975 -லும் மேற்படி பொய்யாத விநாயகப் பெருமானின் ஆலயத்திற்கு குட நீராட்டு விழாக்கள் இக்குடும்பத்தாரால் செய்து வைக்கப்பட்டுள்ளன. இங்கு ஆண்டுதோறும் விநாயக சதுர்த்தி விழா பெரும் சிறப்போடும் இன்னிசைக் கச்சேரிகளுடனும் இனிது கொண்டாடப் படுகிறது.

தயையும் கொடையும் பிறவிக் குணம் என்றார் ஔவைப் பெருமாட்டி. பொய்யாத விநாயகருக்கு ஆலயம் கண்டதோடு இருக்கவில்லை இத்தவச் செல்வர்கள். பேரையூர் நாகநாதரின் கோவிலையும் புதுப்பிக்க பேரார்வம் கொண்டனர். ஆனால் இறைவனின் திருவுள்ளக் கிடக்கை வேறு விதமாக இருந்தது. சகோதரர்களின் எண்ணம் ஈடேறவில்லை இவர்களின் திருப்பணி வேலைகள் திசை திருப்பப் பெற்று தஞ்சை மாவட்டம் திருக்கொள்ளம்புதூரின்கண் கோவில் எழுப்ப முடிவாகியது. அதற்குத் தக்க காரணங்களும் உண்டு. திருக்கொள்ளம்புதூர் திருத்தலம் தேவாரம் பாடிய மூவரால் பாடப் பெற்ற ஸ்தலங்களில் ஒன்றாகும். நாவலமே கோலாகக் கொண்டு ஓடம் செலுத்தி வெட்டாற்றின் அக்கரை சேர்ந்த ஞான சம்பந்தப் பிள்ளையாருக்கு இடபாரூடராக இறைவன் காட்சி கொடுத்து ஞானப் பால் வழங்கிய ஸ்தலமாகும்.

இத்திருக்கோவில் முழுமையும் கருங்கல் திருப்பணியாகச் செய்யப் பெற்றது. 1930 ஆம் ஆண்டு துவங்கப் பெற்று சுமார் பன்னிரண்டு இலட்சம் பொருட் செலவில் தனி ஒரு குடும்பத்தாரால் 1937 -ல் கட்டி முடிக்கப் பெற்று 27.6.1937 -ல் குட நீராட்டு விழாக் காணப் பெற்றது. பின்னர் மேற்படி குடும்பத்தினரால் இரண்டாவது குட நீராட்டு விழா 1.7.1979 -ல் செய்து வைக்கப் பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி திருநாளை அடுத்து வரும் தீர்த்தத் திருவிழா, ஓடத் திருவிழா இக்கோவிலின் உற்சவ தினங்களாகும். இந்த மூன்று தினங்களிலும் இத்திருக்கோவிலின் விழாவிற்கு வரும் பக்த கோடிகளுக்கு இவ்வூரில் அமைந்துள்ள பெ. ராம. விடுதியில் விருந்து உபச்சாரமும் பெ. ராம. அறக்கட்டளைப்படி நடத்தப் பெற்று வருகிறது. திருக்கோவிலின் நித்தியப்படி பள்ளியறைக் கட்டளையையும் ஏற்றுக் கொண்டு இவர்கள் சிறப்பாக நடத்தி வருகிறார்கள். இங்குதான் பெ. ராம. ராம. சித. சிதம்பரம் செட்டியாரவர்கள் தமது பெருமுயற்சியால் உயர்திரு. விபுலானந்த அடிகளார் தாம் அரிதில் முயன்று பல காலம் ஆராய்ந்து எழுதிய "யாழ் நூல்" என்னும் ஆய்வு நூலை 20.6.1947 -ல் அரங்கேற்றம் செய்து சிறப்பித்தார்கள்.

பொய்யாத விநாயகப் பெருமானின் திருவருளால் இக்குடும்பத்தினரின் அறத்



www.npnagarathar.com

தொண்டுகள் இத்துடன் நிற்கவில்லை. மேலும் பல அறப்பணிகளைச் செய்யத் தூண்டி நின்றது. மலையக்கோவிலில் பெ. ராம. மடத்தில் சமயக்குரவர் நால்வருக்கும் அவரவர் முக்தி பெற்ற திரு நட்சத்திரங்களில் குருபூஜை செய்து அன்னதானம் அளிக்கப்பட்டு வருகின்றது. மேற்படி ஊர்ச் சிவன் கோவிலில் முதல் சோமவாரமும் நச்சாந்துபட்டி சிவன் கோவிலில் கடைசிச் சோமவார மண்டகப்படியும் செய்யப்பட்டு வருகின்றது. மேலும் தைப் பூசம் ஐந்தாம் மண்டகப்படியும், பேரையூர் நாகநாத சுவாமி கோவில் மாசிமாத சிவன் ராத்திரி மண்டகப்படியும் ஆண்டுதோறும் பெ. ராம. அறக்கட்டளையினரால் நடத்தப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாத பௌர்ணமி நாளன்று நல்லிப்பட்டி கிராமத்தில் கடையக்குடி திருவிழாவிற்கு எழுந்தருளும் திருமயம் பெருமாளுக்கு எதிர் சேவை செய்து சித்ரா பௌர்ணமி மண்டகப்படி நடைபெற்றுவருகின்றது.

திருக்கொண்டம்புதூர், பேரையூர், கோட்டூர், மலையக்கோவில் ஆகிய நான்கு இடங்களிலும் நந்தவனங்கள் பராமரிக்கப்பட்டு இறைவனுக்குப் புஷ்பக் கைங்கர்யமும் நல்ல முறையில் நடந்து வருகிறது.

## ஸ்ரீ அழகி அப்பத்தாள் வழிபாட்டுப் பாடல்கள்

ஞாலமெலா மின்பமுற ஞாயிறொன்று தோன்றுவபோல்
சீலரெல்லாம் போற்றிச் சிறப்பெய்தக் - கோலங்கொள்
நற்சாந்து பட்டிசெய்த நற்றவத்தால் வந்துதித்த
பொற்பழகி யாத்தாளைப் போற்று.

பார்மேவு நற்சாந்து பட்டியுறை யாத்தாள்
பாங்கழகி யப்பத்தாள் பரிந்துநமைக் காப்பாள்
சீர்பேரன் பேத்திகளும் சிறந்திடவே நாளும்
செல்வமுதல் அத்தனையும் செழித்திடவே ஈவாள்
பேர்மேவு பிள்ளையார் பட்டியெனும் பெயரார்
பெருமைமிகு படைப்பதனைப் பிரியமுடன் ஏற்பாள்
ஏர்மேவு தனவணிகர் ஏற்றமுறச் செய்வாள்
என்றென்றும் மகிழ்ந்திடவே எல்லாம் தருவாள்.

(பாடல், மெ.கா.மு.)



www.npnagarathar.com

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலாரும் நகரத்தார் பங்கும்

விராச்சிலையான்

நந்தமிழ்நாட்டில் பெருங்குணத்த கொடையாளர்களை "வள்ளல்கள்" என்றே தொன்றுதொட்டு அழைத்து வருகிறோம். முல்லைச் செடிக்குப் பொற்றேர் ஈந்த பாரி மன்னனையும் கூடப் பாரிவள்ளல் என்றேதான் பகருகிறோம். ஆனால் இராமலிங்க அடிகளை 'வள்ளலார்' என வாய் மணக்க வாழ்த்தி வணங்கி வருகிறோம். இத்தகைய சிறப்பு என்ன என்பது பற்றியும் இவ்வருளாளரிடம் "நாட்டுக் கோட்டை நகரத்தார் பங்கு என்ன" என்பது பற்றியும் ஒரு சிறிது சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

சாதாரணமாக நம் போல் கருவுற்றுப் பிறந்தவர்கள், வருவிக்கவுற்றவர்கள்தான் இராமலிங்கர். கடலூர் விருத்தாசலம் வழியில் உள்ள வடலூரை அடுத்த 'மருதூர்' என்ற ஒரு சிறு கிராமத்தில் தோன்றிய திருவாளர் அண்மையில் உள்ள சைவப் பெரும் கோவிலான சிதம்பரத்திற்கு வழிபாட்டிற்கு (தரிசனத்திற்கு) பெற்றோருடன் குழந்தைப் பருவத்தில் சென்றபோது ஆடல் வல்லானான நடராசப் பெருமானைத் தரிசித்துத் திரை தூக்கி 'ரகசியம்' காட்டப்பெற்றபோது காணற்கரிய முழு முதற்கடவுளின் உண்மையைக் கண்டு மகிழ்ந்ததைப் பின்னர்:-

"தாய்முதலோரோடு சிறிய பருவத்தில் தில்லைத்
தலத்திடையே திரைதூக்கித் தரிசித்தபோது
வேய்வகை மேல்காட்டாதே என்றனக்கே எல்லாம்
வெளியாகக் காட்டிய என் மெய்உறவாம் பொருளே!
காய்வகை இல்லாதுளத்தே கனிந்த நறும் கனியே!
கனவிடத்தும் நனவிடத்தும் எனைப்பிரியாக் களிப்பே!
தூய்வகையோர் போற்ற மணிமன்றில் நடம்புரியும்
சோதி நடத்தரசே! என்சொல்லும் அணிந்தருளே"

4133

எனத் திருவருட்பா அருள் விளக்கமாலையில் பாடியுள்ளதைக் கண்டு நாம் தெளிய வாய்ப்புள்ளது கருவிலே திருவுற்ற கண்ணாளரானதை இன்னும் பன்னூற்றுப் பாக்களில் பார்க்க முடிகிறது

1823 ஆம் ஆண்டுக்கு இவர்கள் மருதூரில் தோன்றினாலும் 1825 முதல் 1858



www.npnagarathar.com

172

வரை சென்னையிலே பள்ளிப் படிப்பில் நாட்டம் செல்லாது இறைவனிடத்தில் கல்வி அனைத்தையும் கற்றதாகப் பாடிக்காட்டுவர்:-

ஓதா துணர்ந்திட ஒளிஅளித் தெனக்கே

ஆதாரமாகிய அருட்பெருஞ்சோதி

(4615/23/24)

என்ற 1596 வரிகள் கொண்ட நிலைமண்டில ஆசிரியப்பாவின் 23, 24 வரிகளிலும் இன்னும் நூற்றுக் கணக்கான பாடல்களிலும் இச்செய்தியைத் தெரிந்து கொள்ளுகிறோம்.

சென்னை வாசத்தில் சாதாரணமாக இருந்த கந்தசாமி கோயில் வழிபாடு நடத்திவந்த காலத்தில் ‘தலமோங்கு’ சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் என்று குடி கொண்ட சண்முகப் பெருமானைப் பின் 31 பாடல்களிலும் மகுடம் வைத்துப் பாடியதிலிருந்து அந்த இடம் “ஓங்கு, ஓங்கு” என ஓங்கிப் பெரியதோர் வணிக இடமாகி அதன் காரணமாகவிருந்த கந்தசாமி கோவில் மிகவளமுடைய கந்த கோட்டமாகிப் பெருகி வருவதை இன்றும் காண முடிகிறது. முருகப்பெருமான் வழிபாடே தொடக்கத்தில் கொண்டு, பிறகு திருவொற்றியூர் சிவ பெருமானை வழிபட்டுப், பக்தி மிகமிக வைணவக் கடவுள், தனிப்பட்ட அம்மன் முதலான தேவிகளையும் பல கடவுள் களையும் பாகுபாடில்லாமல் உள்ளுறை தெய்வம் ஒன்றுதான் எனக் கண்ட முடிவு பல அருட்பாக்களில் காண்கிறோம்.

சென்னையை விட்டு நீங்கும் காரணத்தையும் பின்னர் நேர்ந்த இன்னல்களையும்

தேட்டிலே மிகுந்த சென்னையி லிருந்தால்

சிலுகுறும் என்றுளம் பயந்தே

நாட்டிலே சிறிய ஊர்ப்புறங்களிலே

நண்ணினேன் ஊர்ப்புற மடுத்த

காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க்

களத்திலே திரிந்துற்ற இளைப்பை

ஏட்டிலே எழுதமுடியுமோ! இவைகள்

எந்தை நீ அறிந்தது தானே!

3467

என்ற திரு அருட்பாவால் அறிய முடிகிறது.

சென்னையை விட்டகன்ற பின்னர் 1858 முதல் 1867 வரை வடலூரை அடுத்த



www.npnagarathar.com

173

'கருங்குழி' என்ற சிற்றூரில் வாழ்ந்து கொண்டுதான் வடலூரில் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், சத்திய தருமசாலை நிறுவி அதன்பின்பு 187 0 வரை வடலூரிலேயே சத்திய தருமச்சாலையிலே அமர்ந்து நேரே சங்கம் சாலையை கண் காணித்துச் சங்கம் மூலம் தம் கொள்கைகளை அன்பர்களுக்கு விரித்தும் சாலை மூலம் வந்தவர்களுக்கு உணவுமளித்தும் ஏழைகளுக்கு மூன்று வேளையும் பசிப்பிணி தீர்த்து வந்துள்ளார். கல்விச் சாலை, மருத்துவச்சாலை, யோக சாலை முதலானவைகளுக்குத் திட்டமிட்டுச் செயல்பட்டுள்ளார். எது ஒரு மனிதனுக்குத் தேவையோ அந்த அனைத் தும் உதவ வேண்டுவது தருமசாலையின் குறிக்கோள். வாழ்விற்கு தருமசாலை, ஞான அறிவிற்கு சங்கம் வழிபாட்டுக்குச் சத்திய "ஞானசபை" என்று மூன்று மாபெரிய அமைப்புகள் வடலூரில் ஓங்கி வளர்ந்து வருகின்றன. தம்மை நாடி வந்தோர் அனை வருக்கும் எந்தக் குறையும் இல்லாது தம் அருள்பலத்தால் தீர்த்து வைத்திருப்பது ஏட்டில் அடங்காது "இரக்கமே உயிராக" அடிகள் வாழ்க்கை நடைபெற்றிருக்கிறது. இரக்கத்தையே உயிராகக் கொண்டு பாடிய பாடல்கள் கணக்கில. அவற்றில் ஒரு பாடல்:-

"வருமுயிர் இரக்கம் பற்றியே உலக வழக்கில்
என்மனஞ் சென்றதோறும்
வெருவிநின் அடிக்கே விண்ணப்பித் திருந்தேன்
விண்ணப்பம் செய்கின்றேன் இன்றும்
உருவ!என் உயிர்தான் உயிர் இரக்கம்தான்
ஒன்றதே இரண்டிலை இரக்கம்
ஒருவில் என்உயிர் ஒருவும் என்னுளத்
தொருவனே நின் பதத்தாணை"

என இவ்வாறுள்ளது குறிப்பிடத் தக்கது.

இவ்விதத் தன்மையை மேலை நாட்டு "ஷேக்ஸ்பியர்" என்ற மாபெரும் கவிஞர் இயற்றிய "வெனிஸ்வணிகன்" (Merchart of Venice) என்ற நாவலில் The quality of mercy என்ற பகுதியில் "போர்ஷியா" என்ற நாடகப் பாத்திரத்தின் வாயிலாக விளக்குவர் இதனை மொழி பெயர்த்த யாழ் நூலாசிரியப் பெருந்தகையான சுவாமி விபுலாநந்த அடிகள் "வன்பொறை மருவா மரபினதாகி" எனத் தொடங்கும் அகவலில் (மதங்க சூளாமணி என்ற நூல்" மிக நயமாக) இங்கிதமாக விளக்கி அருள்வர்.

"வேண்டுவன வேண்டுவோர்க்கு ஈவான் கண்டாய்" என ஆண்டவரை மக் களுக்கு அறிமுகப்படுத்தப் பெற்றுள்ள அப்பர் பெருமான் வாக்குபடி தீராத புற்று நோய், (Cancer) தொழுநோய், (Leprosy) முதலான அனைத்து நோய்களையும் தீர்த்துள் ளார். திருமணமாகாதவர்களுக்குத் திருமணம், மக்கட்பேறில்லாதவர்களுக்குப் பேறு, செல்வமற்றவர்களுக்கு வருவாய்ப்பேறு முதலான அனைத்துத் தேவைகளையும் தம்



www.npnagarathar.com

அருள்வளத்தால் அருளியுள்ளார். இந்தப் பேறனைத்தையும் இறைவனிடம் உயிரிரக்கத் தவம் (தாம் இயற்றும் யோகம், பக்தி முதலானவை உயிர்கருணை அடிப்படை யாக கொண்டதாக இருக்கவேண்டும். இது அல்லாத காடுகளில், குகைகளில் உடலை வருத்தி தவம் செய்து சமாதி அமைவது மீண்டும் பிறப்புக்கு வருமென முடிவு கட் டுகிறார்.) பன்னிரண்டாண்டுகள் செய்ததாகச் சொல்லிக் காட்டுவர். மக்களின்பால் உள்ள பெரும் கருணையால் பல உள்ளீடுகளை (ரகசியங்களை) அதாவது இறைவ னைக் காண, அவனை அடைய, அவனாக ஆக, உள்ள தடைகளை வெளிப்படையாகக் காட்டியுள்ளார். உயிரிரக்கத்தின் அடிப்படையாக புலால் உண்ணாமையை வற்புறுத் துகிறார். தாம் கண்ட சத்திய ஞானசபையில், "கொலை புலை தவிர்த்தவர்களே உள்ளே செல்ல வேண்டும்" எனக் கல்வெட்டுப் பதித்திருப்பதால் அந்த ஈடுபாட்டு அடிப்டையை மக்கள் உணர்ந்து நடத்தல் வேண்டுமன்றோ! "உயிர்க் கொலையும் புலைப்புசிப்பும் நீத்தவர்களே" தம் உறவினத்தார் என்பர். "காட்டுத் துறவியாகாமல் நாட்டுத்துறவியாகவே" நம்மிடையே வாழ்ந்த தயவுருவ அருளான தமிழ்மகனாவார் நம் பெருமானார். நாம் (தமிழ்நாடு) செய்தவம்! நம்மிடையே வாழந்து செயற் கரிய செயல்கள் செய்த சீலவுருச் செம்மல். மக்களை நண்பர்களாய் உறவினராய் கண்டுகொண்டு வழிகாட்டியவர் அருள்ஞானியாய் இருந்து கடிதப் போக்குவரத்தும் வைத்திருந்த கருணையாளர். வைத்தியத்தில், கல்வியில், போதனையில் மற்றும் எல் லாக் கலையிலும் வல்லவர் ஞானசபை கட்டிட அமைப்பைக் கண்டு போற்றாத பொறியியலார் (Engineer) யாருமே இல்லை. அனைத்தையும்விடத் தம் உடலை மண் ணுக்கோ, தீயினுக்கோ கொடுக்காது, சுத்த, பிரணவ, ஞான உடலாக (மூவகை சித்தி முத்தேக நிலை) மாற்றி இறைமயமே ஆனவர். "சாகாக் கல்வி" தான் தலைசிறந்த கல்வியாகக் கண்டு அவ்வாறே ஆனார் இதற்கு வழித்துறைகள் திருவருட்பாவிலும், உரைநடையிலும் பலப்பல அகச்சான்றுகள் உள்ளன. உலகப் பெருமானின் தோற்றத் திற்கு அடிப்படை ஒலி ஒளி என்றார். ஒளிதான் எப்பொருளிலும் ஊடுருவுகிறது என்று விளக்குகிறார். ("நாத விந்து கலாதிந மோநம") என்றார். அருணை முனிவர். இப்பெருமானாரின் பல கருத்து மூலங்களை இன்றைய விஞ்ஞானம் ஒப்புகிறது. அனைத்துப் பொருள்களிலும் ஒளி உண்டு எனக் கண்டு இன்றைய செக்கோஸ்லோ வாக்கிய விஞ்ஞான விளக்கமும் தந்து நிழற்படத்துடன் (Photo) வெளியிட்டு விட்டன. அந்தப் படங்களில் அனைத்துப் பொருள்களிலும் ஒளி தென்படுகிறது. ஒளியின் பிரகாசம் கூடுதல் குறைத்தலாக உள்ளதே தவிர ஒளியில்லாத பொருளே இல்லை. ஒலி, ஒளி மிக நுட்பமானது. ஆற்றலுள்ளது. புறச்சான்றாக இடியும் மின்னலும் (Sound & Light) நாம் காண முடிகிறது. அண்ட பிண்ட ஆய்வுபற்றிச் சொன்னது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன் உணர்த்தச் சொல்கிறேன் என ஒரு பாடலில் சொல் வர் வள்ளலார். சூரிய சந்திர அனைத்து ஒளிப் பொருளுக்கும் மூலமாக ஓர் பேரொளி உண்டு என்பர். திருவருட்பாவில் பலப்பலப் பாடல்களின் உள்ளீட்டால் ஒளிதான் எனக் கூறி அந்த ஒளி விளக்கமும் "ஒளி" மயமான நிலையென்று அதி நுட்பமாகக் கூறுவர். 'விரிவஞ்சி விடுத்தாம் அளக்கக் கணக்கில் அடங்கா ஒளிப்பர வெளி' என்றார்.

1981 ஏப்ரல் முதல் நாள் இந்து நாளிதழில் வெளியானது இது. (Hindu 1st April



www.npnagarathar.com

1981) Sydney. A Team of Australian & British Scientists say they have discovered the most known object in the Universe an enormously powerful celestial bundle of light. The four member team said on Tuesday the 'Quassor' is estimated to be eighteen billion light years from the earth and existed long before the solar systen was formed. To reach, a person should have to travel at the speed of light i.e., 2,99,000 K.M. per second for 18 billion years.

1985 ஜூலை 22 ஆம் நாள் இந்தியன் எக்ஸ்பிரஸ் (Indian Express July 22, 1985)

**Super Cluster of Gallaxies**

**Tweseon(Angora) July,21 (APP)**

Astronomers of Kit Peat National Observatory said here on saturday, they have discovered a super cluster of galaxy that was the lorgest known entity in space. The mass of gallaxies spread out a distance of a billion light years said Jack Burnoss of the University of New Mexico. One light year is equal to about 58,78,00,00,00,000 miles. Until now, the largest known super cluster of gallaxies was 700 million light years. Cross Coral University Scientists discovered it in 1982.

இக்கணக்குப்படி (அதாவது இந்து நாளேட்டின் கணக்குப்படி) உள்ள தூரம் விவரம்.

ஒரு மில்லியன் 10 இலட்சம்

ஒரு பில்லியன் 10x100 இலட்சம்

18 பில்லியன் என்பது சூரிய 2,99,000 கிலோமீட்டர்

18x2,99,000 இது ஒரு செகண்ட், இதன் பெருக்கம் 53820000000000

பதினெட்டு பில்லியன் ஆண்டென்பதால் இந்த செகண்ட் கிலோ மீட்டரில் நிமிடத்திற்குக் கொண்டுபோக (மணித்துளி) x 60

இதனை மணியாக்க x 60

இதனை நாளாக்க x 24

இதனை ஆண்டாக்க x 365

எனவே 53820000000000 x60x60x24x365 இதன் பெருந்தொகை 1697267520000000000000 என்றால் இப்பொழுதே மூளை கிறுகிறுக்கிறதன்றோ! இன்னும் என்னென்ன விஞ்ஞானக் கணக்குகள் வெளியாகுமோ? யார் அறிவார்! ஒரு விஞ்ஞானம் "EVER EXPANDING UNIVERSE" எனச் சொல்லுகிறது.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!

பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே!

என வரும் திருவாசகத்துத் திருவெம்பாவை 9 ஒன்பதாம் பாடலின் இரண்டடி



www.npnagarathar.com

176

கள் ஈண்டு கூர்ந்து நோக்கத் தக்கது.

சைவசமய அருளாளர்களான ஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் களான நால்வருக்கும் உடல் விழவில்லை. உடலோடு சென்றடைந்தவர்கள். மணிவா சகர்களின் திருவாசகத் திருவண்டப் பகுதி அகவலில் இந்நிலை (என்னையும் இருப் பதாக்கினன்) என்று சுட்டப்படுகிறது. மணிவாசகரையே ஒரு பாடலில் இராமலிங்க அடிகள் "எப்படி இவ்வாறானீர்கள்" (என்றும் வாழ்கின்ற நிலை) சொல்லுங்கள் என வினவுகிறார். "ஆன்ம நேய ஒருமைப்பாடு", "மரணமில்லாப் பெருவாழ்வு" போன்ற புத்துயிர்ப்புத் தமிழ்ச் சொற்றொடரைத் தமிழுலகிற்குத் தந்தருளிய பெருந்தகை. திரு வருட்பா ஒரு பெருங்கடல் முத்துக் குளிப்போர் முத்து வகைகள் பெறலாம். பிறவிக் கடல் நீந்துவோர் நீந்தலாம் எளிமையான நெஞ்சுருக்கும் தேன்சுவைப் பாடல்கள். இறுதியாக வடலூரைவிட்டு அதற்கடுத்த சிற்றூராகிய மேட்டுக்குப்பம் என்ற இடத் தில் சித்தி வளாக திருமாளிகையில் 1870 முதல் 1874 வரை உறைந்தார்கள். 1823 அக்டோபர் 5 -ல் அவதரித்த இராமலிங்க அடிகள் 1874 ஜனவரி 30 வள்ளலா ராக முத்தேக சித்தி பெற்றார்கள். கடைசிவரையில் மக்களோடு இருந்து சித்தி பெறும் செய்தியை வெளிப்படுத்தி அவ்வாறே ஆனார்கள். தம் கையெழுத்தில் இரா மலிங்கம் என்பதற்கு முன் தந்தை பெயரின் முன்னெழுத்தை மற்றையோர் போல் சுட்டவேயில்லை. "சிதம்பரம் இராமலிங்கம்" என்றே போட்டு வந்தார். தன்னைப் பெற்றவன் உலக ஆடல்வல்லானான "அருட்பெருஞ்ஜோதி நடராசபதி" என்கிறார். உடல் வரக் காரணமான தாய்தந்தையரை உபசாரத் தாய்தந்தை என்று விளக்கம் தருகிறார். சைவ சமயத்தில் பிறந்து சமயம் மதம் கடந்த அருளாளராக விளங்கு கிறார். இராமலிங்கம், சிதம்பர் இராமலிங்கமாகி, இராமலிங்க அடிகளாகி, திருவருட் பிரகாச வள்ளலாராகி, இன்று "வள்ளலார்" என்று சொன்னாலே போதும் என்ற அளவில் வாழ்கிறார். மரணமில்லாப் பெருவாழ்வென்பது ஆன்மாவிற்கு அழிவிலை என்ற பொருளே அல்ல. என்றென்றும் இந்த அழியும் உடலையே அழியா உடலாக மாற்றுவது. சுருங்கச்சொன்னால் அருட்பெருஞ்சோதியே வள்ளலார் கலக்கவில்லை. அருட்பெருஞ்ஜோதி இராமலிங்கரில் கலந்து அருட்பெருஞ்ஜோதி இராமலிங்கராகவே வாழ்ந்துவரச் செய்தது. சேக்கிழார் பெருமான் இறைவனையேதான் "வள்ளலார்" என்ற பெயரில் பெரியபுராணத்தில் சுட்டுகிறார். எனவே அன்று வெளிப்பட்ட "வள்ளலார்" நாமம் இன்று நம் பெருமானார்க்கு வாழ்த்தொலியாகி உண்மையாகிறது.

சாகா கலைபற்றி அவ்வைக் குறள் முழுக்க முழுக்கப் பேசுகிறது. மாதிரிக்கு ஒரு குறள். இது: -

நெற்றிக்கு நேரே நிறைந்த ஒளிகாணில்

முற்று மழியாதுடம்பு

(அதிகாரம் 4 குறள் 8.)

தலைப்பு 2 அங்கியற் பஞ்சு

(நூல் வேப்பேரி பிரம்ம வித்யா சங்கத்தாரால் பி.ஆர் இராமையர் அண்டு கம் பெனியில் 1926 ஆம் ஆண்டு பதிப்பித்தது).



www.npnagarathar.com

177

உலகப் பொதுமறையான பொய்யா மொழியாகிய நம்மறை திருக்குறளில்:-

1. 'நெருநல் உளனொருவன் இன்று இல்லை என்னும்

பெருமை உடைத்து இவ்வுலகு.'

நிலையில்லாமை 6

என்று வருவதையும்-

2. 'கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்

செல்லாது உயிர்உண்ணும் கூற்று.'

கொல்லாமை 6

என்று வருவதையும்-

3. 'கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்

ஆற்றல் தலைப்பட்டவர்க்கு'

தவம் 9

என்று வருவதையும்-

4. 'மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

நிலமிசை நீடு வாழ்வார்.'

கடவுள் வாழ்த்து 3

5. 'பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க

நெறிநின்றார் நீடு வாழ்வார்'

கடவுள் வாழ்த்து 6

என்று வருவதையும் அமைதியாக நடுநிலை நின்று சிந்தித்தால்:-

1. குறள் "யாக்கை நிலையாமையை" எடுத்துக்காட்டி அதை வெல்வதற்கு உபயமாக இறப்பு நீங்க "எமனை" வரவிடாதோட்டவும், 2. தவத்தை உயர்வு செய்து இரக்க சிந்தனையாக (ஜீவகாருண்யமாக) அமைய வேண்டுமென 3. காட்டியும், இவைகளின் பயனாக எடுத்த எடுப்பிலே கடவுள் வாழ்த்தில் (4) (5) இரண்டுமுறை "நீடு வாழ்வான்" முடித்திருப்பதும் அல்லது நீடுவாழ்வதுதான் கடவுள் வாழ்த்திற்கு அடையாளம் என்றும் இதற்கு வழித்துறை (2) (3) என்றும் இவைகளை உன்னி நெறிநிற்க (1) நிலையாமை நெஞ்சில் சுட்டு உணர வேண்டுமெனக் கூறியுள்ளார் எனவே முடிவுக்கு வர முடிகிறது. குறளை இப்படிப் பார்ப்பதற்குக் காரணம் வள்ளற் பெருமானே. "மரணமில்லாப் பெருவாழ்வென்ற உடல் அழியாமைபற்றித் திருக்குறளை ஊன்றிப் பார்க்கவும் என அறிவுறுத்துகிறார்.



www.npnagarathar.com

"நீடு" என்பதற்குக் கால அளவு கிடையாது. தனித்தனிப் பாடல்களில், சிறு நாவல்களில் ஆங்காங்கே எமனை விரட்ட வழிபட்ட பாடல்கள் உள்ளன. ஆசிரியர்கள் காலமும் பெயரும் தெரியாத நிலையில் அவ்வளவு பழமையாகி விட்டன. அவை களில் சங்கர நாயினார் கோவில் கோமதித்தாய் ஈஸ்வரிக்கு ஒரு பாடல் கண்டு மகிழ்வோமாக!

கேடா வரும் நமனைக்

கிட்டவராதே தூரப்

போடா என்றோட்டி உந்தன்

பொற்கமலத்தாள் நிழற்கீழ்

வாடா என அழைத்து

வாழ்வித்தால் அம்ம உனைக்

கூடாதென்றார் தடுப்பார்

கோமதித்தாய் ஈசுவரியே!

(ஆசிரியர் பெயர் தெரியவில்லை)

விருத்தாசலம் வீர சைவ மடத்து ஆதினம் குமார தேவர் நூலான "சுத்த சாதகம்" முழுமையும் உடம்பு அழியாமை பற்றியதே. நூலாசிரியரான குமார தேவர் கல்விமான் மட்டுமல்ல. அருளாளரும் ஆவர். திருமந்திர நூல் அழியாநிலை பேசுகி றது. மூலமாம் பழமை மறைபட்டொழிந்தது கண்டு "வள்ளலார்" இவைகளை எல்லாம் புறத்தே கொண்டுவந்து ஆயிரமாயிரமாகப் பாடி வாழ்ந்து காட்டியவர்.

இப்போதும் வள்ளலாரின் அருட்காட்சியுடன் கற்பூர மணமும் பெற்று, பெருமா னின் ஆணைப்படி ("தயவு நிலை" விளக்குக என்பதே ஆணை) தயாப் பாமாலை பாடி உள்ளவர். 1596 வரி அகவலுரு விளக்கவுரை கண்டுள்ளார். இதன் ஆங் கில மொழியாக்கமும் செய்துள்ளார். அருட்பாவின் பல தலைப்புகளுக்கு அருள் விளக்கவுரை நூல்கள் எழுதியுள்ளவர்கள். உண்மையான பிரம்மச்சாரி. ஆங்கிலம் இண்டர்மீடியட் படிப்பின் நடுவிலே அருள் நோக்கத்தால் ஈர்க்கப் பெற்றுப் படிப்பை நிறுத்தி அருட்பா வழியில் வாழ்வு நடைபெறுகிறது. 30 ஆண்டுகள் வெளியேவரா மல் காடுகளுக்கும் ஓடாமல் வீட்டின் உள்ள சன்மார்க்க உயிரிரக்கப் பணிகளோடு நற்றவமும் இயற்றுகிறார். இயல்பாக வசதியுடைவராகையால் ஒருவருக்கு முகமனுரை பகரத் தேவையில்லாத நிலையில் வாழ்கிறார். அண்மையில் பத்து ஆண்டு காலமாக நூல்வழி வெளிப்படுத்தப்பட்டுப் பல்லோர் போய்வருகிறார்கள். அவர் சொந்த நளபா கமாகவே உணவு. இப்பொழுது அறிஞர் பெருமக்களும் சூழ்ந்து புற உலகில் நல்ல நிலையில் வெளிப்படுத்தி வருகிறார்கள். இவர்களுடைய அனைத்து நூல்களுக்கும் ஒரு "அறக்கட்டளை'' டிரஸ்ட் ஏற்படுத்தி நன்முறையில் நடந்து வருகிறது. இன் றைய சுத்த சன்மார்க்கத்தில் தூய்மையாய் உள்ள மிக அடக்கமான ஞானி. அருட்பா



www.npnagarathar.com

விளக்கங்களுக்கு அவர்களை அணுகலாம். இச்சுத்த சன்மார்க்க ஞானிக்கு 4.12.1990 திண்டுக்கல்லில் திருப்பணி சக்கரவர்த்தி திருமுருக கிருபானந்த சுவாமிகள் தலைமை யில் திண்டுக்கல்லில் அறநெறிச் செம்மல் திரு. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தம் சொந்தச் செலவில் பெரியதோர் "முத்து விழா" தமிழ்நாட்டு சன்மார்க்க சங்கம் சார்பாக நடத்தினார்கள். இவர்கள் முகவரி:-

"அனக தயாநிதி" சுவாமி சரவணாநந்தா

சத்திய ஞானக் கோட்டம்

4, நாகசாமி ஆட்லர் ச்ந்து,

கீழ் ரத வீதி, திண்டுக்கல் 624 001

"திருவருட்பா" நூல் வந்தவைகளில் செம்பதிப்பாக உள்ளது. வடலூர் தவத் திரு ஊரானடிகளின் ஐந்து திருமுறை ஒரு நூல். ஆறாம் திருமுறை ஒரு நூல். உரைநடைப்பகுதி ஒரு தனி நூல். பெரிய எழுத்து. நல்லதாள். நல்ல பைண்டு. பாடல்களுக்கு எண் வரிசை கொடுத்து பதிப்பித்தப் பதிப்பு இது ஒன்றுதான். இந்நூ லின் கணக்குப்படி திருவருட்பா பாடல்கள் 5818. இவைகளில் சேராத சாற்றுக்கவிகள் கொடுத்ததும் மற்றப் பாடல்களும் இந்நூலில் சேர்க்கப் பெற்றுள்ளன. சுவாமிகள் வரலாறென்று வெளியிட்டுள்ளார்கள். தமிழக அரசின் பரிசு பெற்ற நூல் இது. இந் நூல் பதிப்பாசிரியர் தவத்திரு ஊரனார் திருச்சி முனிசிபால்டியில் நகர் நிர்மாணகர் (Town Planning Officer) பணிபுரிந்து தியாகம் செய்து வள்ளலாருக்கு ஆட்பட்டார். இலக் கிய சொற்பொழிவு, சமய சொற்பொழிவு இராமசென்மபூமி வாழ்வு எல்லாவற்றிலும் பெரும் ஈடுபாடு. இதற்கு முன்னர் பலப்பல பதிப்புகள் பலர் வெளியிட்டுள்ளார்கள். எனினும் தற்போது கிடைக்க கூடியதும் தெளிவான பதிப்பும் இது ஒன்றுதான். முன்வந்த நூல்கள் அனைத்தையும் ஆய்ந்து ஒளிரும் பதிப்பு இது. மற்றப்படி சிறு சிறு நூல்களாகத் திரட்டுகளாகவும் பலப்பல பகுதிகளுக்குத் தனியே விளக்கங்களும் பலப்பல ஆசிரியர்கள் எழுதியுள்ளார்கள். வடலூர் வள்ளலாரின் தெய்வ நிலைய பதிப் பாக சுவாமிகளின் 15 96 வரிகள் கொண்ட அகவலுக்கு சுவாமிகளின் அசல் (Original) மூலத்துக்கே போட்டோக் காப்பி எடுத்து விற்பனைக்கு உண்டு. சுவாமிகளின் கையெழுத்து கண்ணில் ஒத்திக்கொண்டு வாசித்து பூசிக்கலாம்.

பிரபல நூல் வெளியீட்டாளரும் அருட்பா சிறுசிறு நூல் வெளியிட்டுப் பெருமை அடைகிறார்கள். "உலக ஒருமைப்பாட்டில் வள்ளலாரும் கோர்பச்சேவும்" என்ற ஒரு கவிதைச் சிறுநூல் திருவைகுந்தம் புலவர் அடியன் மணிவாசகன் எம்.ஏ., பி.எட்., அவர் களால் எழுதப்பெற்று நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டால் 1990 -ல் வெளியிடப் பெற்றது. அமரர் திருமுறைக் கலைஞர் திரு. க. வெள்ளைவாரணனார் திருவருட்பா சிந்தனை நூலாசிரியர்) அணிந்துரை கொண்டது. (கோர்பசேவ் அணு குண்டு உற்பத்தியை நிறுத்தவேண்டும் என்று உலக சமாதானத்தை நாடியவுடன் வள்ளலார் அன்பரான இந்நூல் ஆசிரியர் பாடியது இது).

பொள்ளாச்சி அருட்செல்வர் திரு. நா. மகாலிங்கம் அவர்களின் பெரும் முயற்சி



www.npnagarathar.com

யில் திருவருட்பா பாடல் முழுமைக்கும் பன்னூல் ஆசிரியரும் சைவசித்த வித்தகருமான (அமரர்) உரைவேந்தர் அவ்வை துரைசாமி அய்யா அவர்களைக் கொண்டு விளக்கவுரை எழுதப் பெற்று அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடாக மக்களிடையே அகவிருளை நீக்கி ஒளி காணச் செய்கிறது. சிதம்பர மணிவாசகர் பதிப்பகத்து வெளியீடாக "திருவருட்பா சிந்தனை" என்ற நூல் அண்ணாமலை பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் திரு. டாக்டர். சேதுராமன் B.E., Phd., அவர்கள் தலைமையில் வெளியிட்ட நிகழ்ச்சியில் இந்தக் குடமுழுக்கு மலர் பதிப்பாசிரியரான கோவை மாவட்ட சன்மார்க்க சங்க நிர்வாகத் தலைவர் கவிஞர் திரு. L. சோமு அவர்களும் கலந்து கொண்டு பாராட்டினார்கள். இந்நூலின் ஆசிரியர் அண்ணாமலைப் பல்கலைக் கழக, மதுரை காமராசர் பல்கலைக் கழக, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர், திருமுறைக் கவிஞர் அமரர் க. வெள்ளைவாரணனார். இவர்கள் சைவ சித்தாந்த பன்னிரு திருமுறை விளக்கமும் எழுதி உள்ளமையை சைவ சித்தாந்த உலகமறியும். திருவருட்பா சிந்தனை என்ற இந்நூல், அமரர் மூதறிஞர் மதுரை காமராசர் பல்கலைக் கழக துணை வேந்தர் டாக்டர். வ.சுப. மாணிக்கனாரின் ஆய்வு அணிந்துரை கொண்டது. வாரணனார் எத்தனையோ நூல்கள் எழுதியிருந்தும் இந்நூல் ஒன்றுதான் தமிழக அரசின் பரிசு பெற்றது. அவர்களின் 'இறுதி' நூலும் கூட இது.

அவ்வை துரையனாரின் உரை நூல், பாடல்களுக்குச் சிறந்தவோர் உரையே ஆகும். வாரணனாரின் நூல் திருமுறை ஈடுபாட்டின் அடிப்படையில் ஆர்வமாக வளர்ந்த பெருவிளக்க நூல். இவ்விரு ஆசிரியர்களும் சைவ சித்தாந்தத்தில் மூழ்கிக் குளித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நாடறியும்! இவைகளைத் தவிர ஆங்கிலத்தில் பாண்டிச்சேரி அரவிந்தர் ஆசிரமத்து, ஞானி துளசிராம் அவர்கள் "Arutperunjyothi and deathless body" என்ற இரு பெரிய விளக்கத் தொடர்நூல் எழுதி சென்னைப் பல்கலைக் கழக வெளியீடாக உள்ளது.

இனி இக்கட்டுரையின் இரண்டாம் பகுதியான

"நகரத்தார்களும்"

என்பது பற்றிக் கொஞ்சம் விளக்குவோம்.

வள்ளற் பெருமானுக்குத் தமிழ்நாடெங்கிலும் நகரங்களிலும் பட்டி தொட்டிகளிலும் சங்கங்களும் மன்றங்களும் உள்ளன. தினசரி கூடும் சங்கம், வாரம் ஒருமுறை கூடும் சங்கம், மாதமொருமுறை கூடும் சங்கம் எனத் தத்தம் சூழ்நிலைக்கு ஏற்ப இயங்குகின்றன. ஆண்டுதோறும் விழாக்கள் எடுக்கின்றன. தனிப்பட்டவர்கள் சொந்தமாக சுவாமிகளுக்கு சங்கக் கட்டிடங்களைக் கட்டியும் சபைகள் நிறுவியும் உள்ளார்கள். சங்க அன்பர்கள் கூடியும் சொந்தமாகவும் நிறுவனங்களை (சங்கத்துக்கு) கட்டிக் கொடுத்துள்ளார்கள். திண்டுக்கல்லில் அறநெறிச் செம்மல் எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அருட்பெரும் ஜோதி தயவாலயம் என்ற ஆலையம் கட்டியுள்ளார், அதனுள் தர்மசாலையும் நிறுவியுள்ளார்கள்.



www.npnagarathar.com

மாவட்டங்களிலும் சங்கங்கள் நன்முறையில் இயங்குகின்றன. கர்னாடக மாநிலத்தில் பெங்களூரில் மாடிக் கட்டிடம் ஒன்றும் (இது வழிபாடும் உணவும்) அதற்கெதிரேதியான மண்டபமும் மிக நல்ல முறையில் கட்டி இயங்குகின்றன. பொள்ளாச்சி அருட்செல்வர் திரு. நா. மாஹாலிங்கம் அவர்கள் "இராமலிங்க பணி மன்றம்" என்ற தனி நிறுவனமே வைத்துச் சிறப்புற நடத்துகிறார். மகாத்மா காந்தியடிகளின் விழாவும் வள்ளலார் விழாவும் ஆண்டுதோறும் மிகச் சிறப்பாக நடத்தி வெள்ளிவிழா ஆண்டும் நடந்து முடிந்தது. இந்த அக்டோபரில் அமெரிக்காவில் உள்ள சுவாமி சச்சிதானந்த சுவாமிகளின் தொடர்பினால் அங்கு தாமரைக் கோவிலென உலகப்பொது ஆலையம் (ஜோதி வழிபாடாக) கண்டுள்ளார். வால்காவிலிருந்து கங்கை வரை (Volga to Ganges) என்ற ராகுல் சாங்கிருத்யாயன் வரலாற்று நூல் எழுதியது போல் இவர் வடலூரிலிருந்து வர்ஜீனியா வரை ( From Vadalore to Varginia) ஆலையமே கொண்டு போய்விட்டார். சுவாமிகள் சித்தியான (வள்ளலார்) சித்திவளாக திருமாளிகையை மிக நல்ல முறையில் புதுப்பித்துள்ளார். தைப்பூசத்தில் பெரு விழாவும் இங்கு எடுத்து வருகிறார். திருமுருக கிருபானந்த வாரியாரான திருப்பணி சக்கரவர்த்தி சுவாமிகளை வள்ளலார் ஆட்கொண்டு ஞானசபை திருப்பணியை நிறைவேற்றச் செய்து அப்புண்ணியத்தை அவருக்குக் கொடுத்தார்

அனைத்திந்திய சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க மாநாட்டை ஈரோட்டில் நடத்தச் செய்து அதன் நிர்வாகத் தலைவரான டாக்டர். ராசமாணிக்கத்தையும் சங்க அன்பர்களையும் ஆட்கொண்டார். அனைத்துலக நம் சங்க மாநாட்டை 1989 டிசம்பர் கடைசி நாளிலும் 1990 ஜனவரி முதல் நாளுமான இரண்டு நாட்களும் சென்னை அண்ணா அறிவாலையத்தில் (கலைஞர் திருமண மண்டபம்) நடத்தச் செய்து வடலூர் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தை (உலக மையம்) தெம்பூட்டி ஆண்டார். வள்ளலார் ஆண்டும் வருகிறார். இம்மாநாட்டில் அமெரிக்கா, கனடா, ஆஸ்டிரேலியா, பிரான்ஸ், ஸ்பெயினிலிருந்தும் மேலை நாட்டவர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். பிரம்மஞான சங்கத்துத் தலைவியாரான திருமதி. இராதா பர்னியர் தலைமை தாங்கினார்கள். இம்மாநாட்டில் தமிழக அரசு கல்வி அமைச்சர் மாண்புமிகு க. அன்பழகனார் அவர்களும் இந்து அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.பி.எஸ். கந்தசாமி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். உரைகள் அனைத்துமே ஆங்கில மொழியாகவே அமைந்திருந்தன.

இவ்வளவு தூரம் இவைகளைச் சொன்னதன் காரணம்:-

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஆலையப்பணிகளிலும், அன்னசத்திரம் வைத்தலிலும், கல்விச் சாலைகளில் பணிபுரிவதிலும் தொன்றுதொட்டுப் பெயர் பெற்று வந்தவர்கள். தமிழக கோவில்களிலும் வடக்கே பாடல்பெற்ற தலங்களிலும் செய்த தர்மம் அளவிலடங்கா. வாரணாசியில் (காசி) விசுவநாத பெருமானுக்கு ஆற்றிய தொண்டுகள் திருப்பணிகள் இன்றும் தடையில்லாது நடைபெற்று வருகிறது. இதன் பெருமையை உணர்ந்த முன்னாள் நம் ஜனாதிபதி ராஜேந்திரப்பிரசாத் விசு வேளர் தரிசனத்தில் நாட்டுக்கோட்டை செட்டியார்கள் பெருமையைப் பேசி வாழ்த்தியுள்ளார்கள். முன்னாள் மைசூர் மகாராஜா இந்தக் கட்டளையை பெரும் பணம் பெற்றுக்



www.npnagarathar.com

182

கொண்டு இந்தக் கட்டளையைத் தருக எனக் கேட்டார்கள். நகரத்தார்கள் இணங்கவில்லை. ஆலயப் பணிகளை மன்னர்களுக்கே செய்து வந்துள்ளார்கள். அவர்கள் ஆட்சிக்குப் பிறகு கால வெள்ளத்தில் கோவில்பணிகளை நகரத்தார்களே செய்து ஆங்காங்கு வேத ஆகம பாடசாலைகள் வைத்தும் அன்னசத்திரங்கள் வைத்தும் வந்ததால் இவர்கள் "மன்னர் பின்னவர்" என்ற பெயர்களும் பெற்றுள்ளார்கள். நாட்டுக்கோட்டையார் சம்பந்தமில்லாத எந்தப் பாடல் பெற்ற தலங்களுமே இல்லை. வணிகம் செய்வதில் வரும் லாபத்தில் ஒரு பங்கைத் தாராளமாக தருமம் செய்தனர். கோவில்களுக்கும் நன்றாக அள்ளியள்ளிக் கொடுத்தார்கள். அயல்நாடுகளில் தங்கள் கடைகளுக்கு உள்ள முதல் தொகை, அனுப்பு வரவுகளில் கூடிய தொகை, இலாப தொகைகளுக்கு ஒரு விகிதாச்சாரம் வைத்து ஆண்டுதோறும் தைப்பூசங்களில் "மகமை" என்ற பெயரில் அந்தந்த ஊர்களில் தாங்கள் கட்டிய கோவில்களுக்குப் பணம் ஈந்து வந்தார்கள். பெரும்பாலும் முக்கியமாக எல்லாத் தொலை நாடுகளிலும் பர்மா, சிங்கப்பூர், மலேசியா, செய்கோன், இலங்கை முதலான ஊர்களில் முருகப் பெருமானையே வழிபெற்றார்கள். மற்றக் கடவுளர்களுக்கும் உதவுவார்கள். அந்தந்த நாடுகளில் உள்ள கோவில்கள் மதிப்பும் நகைகள், வெள்ளி ரதங்கள், வாகனங்கள் மதிப்பை நினைத்தால் ஆனந்தக் கண்ணீர் பெருகுகிறது. தங்கமெல்லாம் ஆடகப் பொன் வைரமெல்லாம் பெல்ஜியம் டைமண்ட். இத்தகைய சிறப்பு மிகுந்த நாட்டுக் கோட்டை நகரத்து மணிமகுட தனவைசிய செட்டியார்கள் வள்ளர் பெருமானிடத்துப் பற்றில்லாமைக்கு எவ்வளவு சிந்தித்தாலும் காரணம் அணுவளவு கூட தக்கதாய்த் தெரியவில்லை. (1) சைவ சித்தாந்தத்து வள்ளர் பெருமான் மாறுபாடு கொண்டவர்; (2.) வைதீக சமயத்திலும் அப்படியே (3.) சைவ சித்தாந்த சிகரமான யாழ்ப்பாணத்து ஆறுமுக நர்வலர் பெருமானுக்கும் வள்ளற் பெருமானுக்கும் விஷயமில்லா விஷயமாக நடடைபெற்ற வழக்கில் வள்ளற் பெருமகனார் வெற்றியடைந்ததாலும் (4.) வடலூரில் அபிஷேகங்கள் செய்து வழிபட மூர்த்தி இல்லாததாலும் மறுக்கலாமோ எனச் சிந்தித்து ஆகவேண்டிய நிலை ஏற்படுகிறது.

இப்போது சிதம்பரத்தில் ஆறுமுக நாவலர் பெருமானால் கட்டப் பெற்ற உயர் தர பள்ளி இடத்தையே சன்மார்க்க விழாக்களுக்கு அளித்து வருகிறார்கள். சைவ சமயத்து மாறுபாடு கொண்டவர்களே அல்லர். தொடக்க வழிபாடே முருகப் பெருமான்தான். ஈற்றில் "ஜோதியே" என்று ஞான சபையில் அவ்வழிபாடு கொண்டார். பசி தீர்த்தலே, "முதல் முதல் உள்ள உயிர்கருணை" என்று தரும சாலை வைத்தவர். மடம் என்றும் அதற்கு அதிபதிகள் என்றும் அதற்கு வாரிசு வைக்காமல் வழிதுறைகள் காட்டி "சங்கம்" ஏற்படுத்தி சத்திசாரமான ஒருவருக்கொருவர் உதவி ஐயங்கள் தீர்த்து உணவு கட்டுப்பாடு நெறி வைத்து தாம்தாமே சொந்தக் காலில் நின்று தவமியற்றி மரணமில்லா பெருவாழ்வு பெறவேண்டும் என்றார். இதெல்லாம் சைவ சமயத்திற்கு முரணா. சைவ சமயாச்சாரியர்கள் கூறிய நுணுக்கமான அருளுரைகள் செயற்படாது குழிதோன்டிப் புதைக்கப்பட்டதும் "ஜோதியை" சொல்லாமல் எந்த அருளாளர்கள் விட்டார்கள். "இப்படியன், இந்நிறத்தன், இவ்வணைத்தன்' என்றெழுதி காட்டொணாதே" என்று அப்பர் பெருமான் திருவாய் மலரவில்லையா? அடி முடி தேடித் தோல்வியுற்றதை வற்புறுத்துவது சிவ சமய நூல்கள்தானே!



www.npnagarathar.com

அண்மையில் தானே திருவண்ணாமலை கார்த்திகை தீபம் நடந்தேறியுள்ளது. வள்ளற் பெருமானின் திருவருட்பாவுக்கு சைவ சித்தாந்த பெரும் புலவர் உரை வேந்தர் உரை எழுதியதும் திருமுறைக் கலைஞர் பக்தர் சைவ சித்தாந்தி தொடக்கத்தில் ஆவுடையார் கோவிலில் பணி செய்து அங்குள்ள அரிமனம் அ.அ்ரு. அண்ணாமலை அய்யாவின் (நகரத்தார்) திருவாசக மடத்தில் அவர்கள் ஆதரவில் படித்து பின்பு பெரும்பெரும் பதவிகள் வகித்த வித்வான் கா. வெள்ளைவாரணனாரே ஈடுபாட்டுடன் சைவ சமய ஆசிரியர்களின் நூலிலிருந்து எடுத்துக் காட்டி திருவாசக ஒப்பீட்டை வலியுறுத்தி திருவருட்பா சிந்தனை என்ற பெரும் நூலையும் ஈடுபாட்டுடன் (ஊதியம் எதிர் பார்ப்பின்றி) இயற்றியுள்ளார்கள். சாதி சமயத்தை சைவ சமய ஆசிரியர்கள் குறை கூறவில்லையா?

“உவலை சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம் என்றும்

சாத்திரம் பேசும் சழக்கர்காள்

கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்”

என்றெல்லாம் சைவத்திருமுறைகள்தானே சாற்றுகின்றன. ஐந்து, பத்தாக முன்னைய நூல்கள் சொன்னதை ஆயிரம், பதினாயிரமாக வள்ளலார் சொல்கிறார் அவ்வளவுதான். மக்கள் உய்ய வேண்டி கருணை மிகுதியால் சாற்றியதேயன்றி வேறொரு காரணம் யாதுமே இல்லை.

நகரத்தார் பெருமக்களில் தெய்வாதீனமாக வள்ளர் பெருமானிடம் சிலர் ஈர்க்கப் பெற்றுள்ளதையும் சொல்லாமல் இருக்கப்படாதன்றோ!

(1) கடியாபட்டி என்ற இராமச்சந்திரபுரம் (புதுக்கோட்டை மாவட்டம்) தீ.நா.மு. முத்தையா செட்டியாராவார்கள். திவான்பகதூர் என்று புதுக்கோட்டை அரசினால் ( அப்போது ஸ்டேட்டாக இருந்த காலம்) பட்டமும், ஜகத்குரு காஞ்சி காம கோடி பீடாதிபதி இப்போதுள்ள மூவர்களில் பெரியவாள் அவர்களால் “தரும பூஷணம்” எனப்பட்டமும் பெற்றவர்கள் 1924 ஆம் ஆண்டு திருவருட்பா ஆறு திருமுறைகளையும் அச்சிட்டு ஆயிரம் பிரதிகள் (அப்போதைய விலை ரூபாய் பத்து. இன்றைய ஆறு திருமுறைகளும் இரு நூறு ரூபாய் விலையாகின்றன) இனாமாக வழங்கினார்கள்.

2 மேற்படி மாவட்டம் அரிமளம், மாத்தூர் கோவில் அரும்பாக்கூர் பிரிவினரான இராம.பழ. பழனியப்ப செட்டியார் அவர்கள் மகள் “தெய்வானை” என்பார் மேற்படி ஊர் மேற்படி கோவில் கருப்பூர் பிரிவான சி.சுப்பிரமணியன் செட்டியார் அவர்களுக்கு வாழ்க்கைப்பட்டு மணவாளன் காலம் சென்ற பிறகு மிக உத்தமியாக தெய்வப்பற்றுதலாக வாழ்ந்து வள்ளர் பெருமானால் ஈர்க்கப் பெற்று வடலூர் வந்து உறைந்து வாழ்ந்து 1935 பவ கிரி ஐப்பசி மாதம் 27 -ல் சமாதியடைந்துள்ளார்கள் இவர்கள் உள்ளவரை சாதுக்கள் உபசாரமும் அன்னசத்திர கைங்கரியமும் நடத்தி வந்துள்ளார்கள். இங்கு ( வடலூரில்) தர்ம சாலைக்கு எதிரில் ஒரு கட்டிடமும் அவர்களுக்கு சொந்தமாய் உள்ளது. இவ்வம்மையாரிடம் (தெய்வானை ஆச்சி) அன்பு பூண்ட அரிமளம் சீ.லெ.செ. லெட்சுமனஞ் செட்டியார் அவர்கள் அம்மையாருக்கு வேண்டுவன



www.npnagarathar.com

புரிந்து உதவியுள்ளதாகவும், அம்மையாருக்கு பிற்காலமும் விஷேச காலங்களில் இங்கு (வடலூர்) வந்து தர்ம கைங்கர்யத்தைத் தொடந்து வந்ததாகவும் தெரிகிறது. நக ரத்தார்களுக்கு அயல்நாடு தொழில் துறைகள் குறைந்து போனபடியாலும் வரவரப் பின்வாரிசுகள் தத்தம் வாழ்க்கையை உள் நாட்டிலே தொழில் புரிந்தோ உத்தியோகத் திற்குச் சென்றோ நடத்த வேண்டி உள்ளதாலும், அத்தர்ம கைங்கர்யம் அவர்களால் நடைபெறவில்லை. ஆனால், தைப்பூச காலத்தில் பிற மாவட்டத்தாரால் அன்னதானம் செய்துவர இடத்தை (கட்டிடத்தை) உதவி வருகிறார்கள்.

3. கடியாப்பட்டியில் வைரவன் கோவிலில் பிள்ளையார்பட்டி வகுப்பில் சித.பழ. முத்துப் பழனியப்ப செட்டியார் அவர்களுக்கு மகளாய்த் தோன்றி நேமத்தான்பட்டி இரணிக்கோவில் நா.அரு.சித. சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கு வாழ்க்கைப்பட்டுப் பிறகு வள்ளற் பெருமானால் ஈர்க்கப் பெற்று வடலூரிலேயே கடைசிக் காலமாக வேண்டுமென்ற மனவுறுதியோடு 10 ஆண்டுகள் வாழ்ந்து நாள் தவறாது சாலை சபையைத் தரிசித்து பிறகு வடலூரிலேயே 10.02.1989 காலை வசந்த பஞ்சமி ரேவதி விண்மீனில் 7.45 மணிக்கு உயிரடக்கமாகி அன்றே சமாதி செய்யும் போது தவத்திரு ஊரனடிகள், தவத்திரு துறவி கந்த சாமியார், தெய்வநிலையை அறங்காவலர் குழுத் தலைவர் Ex. MLA தங்கராசு அவர்கள் போன்ற பெரியோர்கள் எல்லோரும் வந்திருந்து சிறப்பாகப் பெருமை செய்து நகரத்தார் பெண்மணியின் பக்தி, சிறப்பு, தெய்வநிலை யத்துக்குச் செய்த தர்ம கைங்கரியத்தைப் பற்றிப் பேசி அனுதாபம் தெரிவித்துப் பாராட்டினார்கள். பின்னர் 20.02.1989 அதிகாலை சமாதியில் தவத்திரு ஊரனடிகள் தலைமையில் அகவற்பாவை வழிபாடு நடந்து அன்று பகல் 10 .00 மணிக்கு ஞான சபை வீதியில் உள்ள வடலூர் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் (உலக மையம்) நிறுவனத்தில் நினைவுக் கூட்டம் தவத்திரு மேற்படி அடிகளார் தலைமையில் நடந்து பகல் உணவும் நடத்தப் பெற்றது. இவர்களுடைய சமாதி வழிபாட்டிற்குத் திருப்பணி சக்கரவர்த்தி திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் எழுதியனுப்பிய இரங்கற்பா:-

பல்லாண்டு வாழ்ந்து பல அறங்கள் செய்து மகிழ்

கல்யாணி அம்மையெனும் காரிகையே நல்யோகக்

கந்தனடி சேர்ந்தாய் கருணைபொழி நின்முகத்தை

எந்நாள் காண்பேன் இனி

இவ்வம்மையாரின் சரித்திர சுருக்கத்தை ஊரனடிகளார் தாம் நடத்தி வரும் "சன் மார்க்க விவேக விருத்தி" என்ற திங்களிதழ் 01.04.1989 -ல் பாகம் 47 முதல் 53 முடிய "சன்மார்க்க திலகவதியார் கல்யாணி ஆச்சியார்" என்ற தலைப்பில் எழு தியுள்ளார்கள். தம் அத்தையின் நினைவாக உயிரோடு இருக்கும்போது உதவியும் பிற்பட்டும் நினைவுக் கூட்டத்திலும் இவர்கள் நினைவாக ரூ. 1101/- திருவருட்பா திருமுறைகள் அச்சிட்டு வெளிவர நன்கொடை அளித்தவர் சிதம்பரம் வாகீசாகர் மணிவாசகர் நூலகத்துப் பதிப்பாசிரியரும் அண்ணாமலைப் பல்கலைக் கழக தமிழ்த்



www.npnagarathar.com

துறை இணைப் பேராசிரியருமான டாக்டர் எஸ். மெய்யப்பன் எம்.ஏ., பிஎச்டி., ஆவார். மேற்கூறியதிலிருந்து நகரத்தார்களில் ஈடுபாடுள்ள இந்தக் கட்டுரை தாங்கி வரும் குடமுழுக்கு மலர் பதிப்பாசிரியர் நற்சாந்துப்பட்டி இலுப்பைக்குடிக் கோவில் L.சோமு அவர்கள் கோவை மாவட்ட சன்மார்க்க சங்கத்தின் தலைவர் இவர்களின் நல்முயற்சி யாலும், சிறப்புமிகு உழைப்பாலும், பெரும் நிதி சேர்த்து, தானும் ஈந்து நெய்வேலி விருத்தாசலம் "கருணை இல்லம்" என்று பெரியதோர் கட்டிடம் சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் எழுப்பப் பெற்று தைப்பூசத்தில் அன்னதானம் நடைபெற்று வரு கிறது. (இந்தக் கட்டிடம் உருவாகக் காரணமாய் இன்றும் உழைத்து வரும் மேற்படி சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. டி. ராமலிங்கம் அவர்களையும் காலஞ் சென்ற பொருளாளர் கந்தசாமி அவர்களையும் நினைவு கூறாமல் இருக்க முடியவில்லை).

(5) தேவக்கோட்டை வைரவங்கோவில் சுப அண்ணாமலை அவர்கள் வள்ளற் பெருமானைப் பற்றி ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றார். மதுரைத் தியாகராயர் கல்லூரியின் முதல்வர் சைவ சமய தீட்சையில் நிர்வாண தீட்சை பெற்றவர். ஆச்சா ரிய தீட்சை பெற முழுமையும் முறையான தகுதியுள்ளவர். ஆனால் பெறவில்லை. மேலே

மேற்கண்ட நகரத்தார்கள் தவிர.

பட்டி தொட்டிகள், நகரங்கள், மாநிலங்கள் எங்களிடம் கொண்டாடும் சன்மார்க்க சங்கங்களிலும் கூட நகரத்தார் பெயர் பார்ப்பது அரிதாக உள்ளது.

எனவே இக்குறையை நீக்க நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகம் முன் வந்து வள்ளற் பெருமானின் அருள் வாழ்த்துப் பெற வேண்டியதை முதன்மையாக நினைத்தே இக்கட்டுரை எழுதப் பெறுகிறது.

வள்ளற் பெருமான் நிறுவிய தர்ம சாலைத் திருப்பணி நடந்து கொண்டிருக் கிறது தக்க பொருளுதவி தனித்தனியாகவோ நகரத்தார் பேரிலோ செய்யலாம். மேலும் நகரத்தார் பேரால் நிரந்தரமாக வடலூரில் தர்ம கைங்கரியம் தொடங்க லாம். திருவருட்பா, ஜாதி சமயம், மதம் கடந்ததாக இருந்தபோதிலும் வடலூரில் ஒவ்வொரு சமூகத்தாரும், ஒவ்வொரு மாவட்டச் சங்கத்தாரும் தர்ம கைங்கரியம் செய்வதுபோல் நகரத்தார் சமூகமும் செய்ய வழியுண்டு. நகரத்தார் சமூகம் இதில் பிற்பட்டு நிற்கிறார்கள் என்ற சொல்லை மாற்ற இது ஒரு நல்ல தருணம் எனச் சொல்லி மலர் பதிப்பாசிரியர் கவிஞர் எல். சோமு அவர்களை இதற்குப் பிள்ளையார் சுழி போட்டுத் திருச்சிற்றம்பலமெழுதி அருட்பெருஞ் ஜோதி அருட்பெ ருஞ் ஜோதி தனிப்பெரும் கருணை அருட்பெருஞ் ஜோதி எனச் சொல்லி அவர்த் தாழ் பணிகிறேன். ஒரு குடும்பத்தில் மனையாள்தான் சிறப்பு. மனைவி என்றுதான் சொல்கிறோம். அவர் இல்லத்தை ஆள்பவள் "இல்லாள்" என்றே மரபே தொடருகிறது. அதுபோல் வட மொழியிலும் கிரஹலட்சுமி என்று வழங்குகிறோம். கிரஹலட்சு மணன் எனச் சொல்வதில்லை. அதுபோல் நண்பர் கவிஞர் சோமு அவர்களின் மனைவி திருமதி ஏகம்மையான குணவதி (ஏகன் அனேகன் என்று சிவபுராணத் தில் மணிவாசகப் பெருந்தகை சொல்வதைப் போல் ஏகமாகவும் அனேகமாகவும்



www.npnagarathar.com

ஒத்துழைத்து) இக்கைங்கரியத்தில் ஒத்துழைத்து வைரவன் கோவில் பிறந்தமையால் (வைரவன் கோவில் சிவ பெருமானும் வளரொளி நாதரானபடியாலும் பேசும், பாடும், தெய்வம் அதே ஒளிதான் வளர்ந்து அருட்பெருஞ் ஜோதியாயிற்று என்ற ஒருமைப் பாட்டில்) வைரவைரமாகக் குவித்து செல்வமலைப் பெருகி வாழவும், சமூகம் சிறக்கவும் குடமுழுக்காடி மகிழும் பெருமானின் திருவடிபற்றி நெஞ்சிருத்தி சென்னி தாங்கி (சாஷ்டாங்க, அஷ்டாங்க, நமஸ்காரங்கள்) மெய்யார பாராட்டிப் படித்துப் படித்து எழுந்துயெழுந்து வணங்குகிறேன்.

தில்லை நடராஜ பெருமான்தான் இறுதியாக வள்ளற் பெருமான் வழிபட்ட சைவத் திருக்கோவில். இந்த சிவகாமி சுந்தரியுடனாய சிதம்பரேஸ்வரர்தான் ஞான சபையில் எழுந்தருளியிருக்கும் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் என்பார் வள்ளலார். வடலூர் வடதிசைக்கே வந்துவிடும்படியும் அங்குமிங்கும் (சிதம்பரத்திலும் நடன மாடலாம்) என்கிறார். அதுபோல் இப்போது குடமுழுக்காடுகிறார். நற்சாந்துப்பட்டி சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள சுவாமி அம்பாள் திருநாமமும் “ஒன்றாக சிவகாம சுந்தரி உடனாய சிதம்பரேஸ்வரர்” எனத் தெரிந்து பெரிதும் மகிழ்ந்து முன்னைய குடமுழுக்காக 12 ஆண்டுகள் (இராகுகள் 12 தான் ஜாதகங்களில்). எனவே எல்லா கிரகங்களும் எல்லா ராகுகளும் அனுகூலமாகவே உள்ளமையால் நகரத்தார்களுக்கும் ஷேமம் மேலும் மேலும் உண்டாகி எல்லா உயிர்களும் இன்புற வேண்டி “இராமஜென்ம பூமி” சமூகமாகச் சமயப்பிணக்கொழிந்து நாடெல்லாம் இன்புறவேண்டி வள்ளற் பெருமான் பாடியருளிய:-

திருவிளங்க சிவயோக சித்தியெலாம் விளங்கச்

சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத்

தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம்பலத்தே

திருக்கூத்து விளங்க ஒளிசிறந்த திருவிளக்கே!

உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க

உலகமெலாம் விளங்க் அருளுதவு பெரும்தாயாம்

மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க

வயங்குமணி பொதுவிளங்க வளர்ந்த சிவக்கொழுந்தே!

திருவருட்பா ஆறாம் திருமுறை தொடக்கப்பாடல் வரிசை

என்ற இப்பாடலால் இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாங்கே!

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



www.npnagarathar.com

சிவமயம்

# இயற்பகையார் நகரத்தார் ஆவாரா?

புலவர் மணி சித்தாந்த வித்தகர், முருபழ. இரத்தினம் செட்டியார் அவர்கள்

அறுபான் மும்மை நாயன்மார்களுள் இயற்பகையார், காரைக்கால் அம்மையார், அமர் நீதி நாயனார், கலிக்கம்ப நாயனார், மூர்த்தி நாயனார் ஆகிய ஐவரும் நகரத்தார் மரபினைச் சார்ந்தவர்கள் என நாம் நெடுங்காலமாகச் சொல்லி வருகிறோம். இவர்களை "வணிகர்" எனச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுவதால் நகரத்தார்களாகவே இருக்கவேண்டும் எனப் பலர் கருதுகின்றனர். இக்கருத்தினை மறுப்பவர்களும் பலர் உண்டு. வணிகரில் பல்வேறு வகையினர் இருப்பதால் இவர்கள் நகரத்தார்கள் தாம் எனச் சொல்வதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லையென மறுப்பாளர்கள் கூறுகின்றனர்.

வணிகர் என்னும் அளவில் ஒருவரை நகரத்தார் மரபைச் சார்ந்தவர்தாம் எனச் சொல்லமுடியாது. ஆனால் இயற்பகை நாயனார், காரைக்கால் அம்மையார் ஆகிய இருவரைப் பொறுத்த வரையில் அவர்கள் நகரத்தார் மரபைச் சார்ந்தவர்கள்தாம் எனக் கருதுவதற்குப் பெரிய புராணத்தில் சில குறிப்புகள் காணப்படுகின்றன. ஏனைய மூன்று நாயன்மார்களுடைய வரலாற்றில் இத்தகைய சான்றுகள் இல்லை. இயற்கை நாயனார் வரலாற்றில் காணப்படும் குறிப்புகளை ஆராயும் முன்னர் அவர் வரலாற்றை நாம் முழுமையாகத் தெரிந்து கொள்ளவேண்டும்.

இயற்பகையார் பூம்புகார் எனப்படும் காவிரிப் பூம்பட்டினத்தில் பிறந்தார். பெருஞ் செல்வம் மிக்க வணிகராக அவர் விளங்கினார். சிவனடியார்கள் எதைக் கேட்டாலும் கொடுப்பது என்னும் விரதத்தை மேற்கொண்டிருந்தார். இத்தகைய விரதத்தை மேற்கொள்வதற்கு இறைவனிடத்தே அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கவேண்டும். "எல்லாம் அவன் செயல்" என்னும் துணிவிருந்தால் தான் ஒருவர் இத்தகைய விரத்தை மேற்கொள்ளமுடியும்.

நம்மைப் போன்றவர்கள் சாதாரண முறையில்தான் பக்தி செலுத்த முடியும். நமக்கு நோய் வந்தால், "எல்லாம் அவன் செயல்" என நாம் இருந்து விடுவதில்லை. இறைவனையும் வணங்கிக் கொண்டு, மருந்துவமும் பார்க்கவே செய்வோம். "கண் இமைப்பது முதற்கொண்டு அவனால்தான் நடக்கிறது" என எண்ணி எல்லாப் பொறுப்பையும் அவனிடம் விட்டு விட்டு நம்மால் வாளா இருக்கமுடியாது.

நாயன்மார்கள், "எல்லாம் அவன் செயல் என" எண்ணியிருந்ததால்தான் வருகின்ற "அடியார் உண்மையானவரா? அவர்கேட்பது பொருத்தமான ஒன்றா?" என ஆராய்வதில்லை. "இறைவன்தான் அவர்களை நம்மிடம் அனுப்பி இருக்கிறான்" என்றும், இறைவன் செயலால்தான் அவர்கள் தம்மிடம் ஒன்றைக் கேட்கிறார்கள் என்றும் முழுமையாக நம்பி அவர்கள் செயல்பட்டிருக்கிறார்கள். இதனால்தான் அவர்கள் "நாயன்மார்கள்" என அழைக்கப்பட்டனர். இல்லையேல் சாதாரண பக்தர்களாகவே அவர்கள் கருதப்பட்டிருப்பார்கள்.

இல்லையே என்னாத இயற்பகை



www.npnagarathar.com

யார் அடியவர்கள் எதைக் கேட்டாலும், அது இறைவன் திருவுள்ளம் எனக் கொண்டு அவர்களுக்கு அனைத்தையும் வழங்கி வந்திருக்கிறார்.

இயற்பகையாரின் உறுதிப்பாட்டையும், அசைக்க முடியாத இறை நம்பிக்கையையும், உலகிற்கு வெளிப்படுத்த இறைவன் திருவுளம் கொண்டான். ஒரு வேதியச் சிவனடியாராக வடிவம் கொண்டு அவரிடம் வந்தான். நாம் கேட்கின்ற ஒன்றை உம்மால் தரமுடியுமா? என்று இயற்பகையாரை நோக்கி அச்சிவனடியார் வேடத்தில் வந்த இறைவன் வினவினார். “சிவனடியார் எதைக் கேட்டாலும் அது என்னிடம் இருக்குமானால் கொடுப்பேன்” என்று அவர் பதிலளித்தார்.

“காதல் உன் மனைவியை வேண்டி வந்தேன்” எனச் சிவவேதியர் அஞ்சாது கூறினார். “வேண்டி வந்தேன்” என்னும் தொடரைச் சேக்கிழார் மிக நுட்பமாகப் பயன்படுத்தி இருக்கிறார். “மனைவியை விரும்பி வந்தேன்” என்பதுதான் அந்தத் தொடரின் பொருள். ஆனால் “வேண்டி வந்தேன்” என்று சொல்லும் பொழுது, ‘உன் மனைவிக்கு முக்தி கொடுப்பான் வேண்டி’ வந்தேன் என்றும், “இச்செயலை உன் மனைவி பொறுத்துக் கொள்ள வேண்டி வந்தேன்” என்றும் அத்தொடர் உட்பொருள் பயப்பதைக் காணலாம்.

வேதியர் இவ்வாறு கேட்டதும் நாயனார் “என்னிடத்தில் உள்ளதைக் கேட்டீர்களே” என மகிழ்ச்சி அடைந்தார். உடனே உள்ளே சென்று மனைவியாரிடம் “உன்னை இச்சிவனடியாருக்கு வழங்கி விட்டேன்” எனக் கூறினார். கேட்டதும் மனைவியார் திகைத்து நின்றார். அப்புறம் “கணவன் சொற்படி நடப்பதுதான் கற்புடைமை” எனத் தெளிந்து “நீங்கள் விரும்பிய வண்ணம் செய்யுங்கள்” எனத் தெரிவித்தார். நாயனார் மனைவியாரை அழைத்துக் கொண்டு வந்து சிவனடியாரிடத்தே விடுத்தார்.

சிவனடியார் அம்மையாரிடம் எதுவும் பேசாமல், நாயனாரை நோக்கி, “இந்த ஊர் எல்லை கடக்கும் வரையில் நீர் துணையாக வரவேண்டும்” என வேண்டினார். “இது என் கடமை” என விடை அளித்த நாயனார் உள்ளே சென்று போர்க் கோலம் பூண்டு, ஆயுதங்களுடன் வெளியே வந்தார். சிவனடியாரும், அம்மையாரும், நாயனாரும் ஊர் எல்லையைக் கடந்து செல்லத் தொடங்கினார்கள்.

நாயனாரின் சுற்றத்தார்கள் இத்தகவலை அறிந்ததும் பெருஞ் சினம் கொண்டார்கள். பங்காலிகளாகிய அவர்கள், “இச்செயல் தங்கள் குலத்துக்குத் தீராப் பழியை விளைவிக்கும்” எனக் கருதி மூவரையும் வந்து இடை மறித்தார்கள். “இயற்பகையே! நீ ஒரு பித்தன்” என வைதார்கள். மனைவியாரின் சுற்றத்தாரும், அதாவது சம்பந்தப்புறத்தைச் சேர்ந்தவர்களும், “இது குலப்பழி” எனக் கருதி வந்து மறித்தார்கள். நாயனார் அவர்கள் அனைவரோடும் போர் செய்து அவர்களை வெட்டி வீழ்த்தினார். சுற்றத்தார் அனைவரும் தங்கள் உயிரை இழந்தார்கள். துணைக்கு வந்த வேறு குலத்தவர் தாம் ஓடினார்கள். ஆனால் இரு தரப்புச் சுற்றத்தார்களும் ஓடாமல் போரிட்டு மாண்டார்கள். இதன் பின் நாயனார் சிவனடியாரையும் அம்மையாரையும் அழைத்துக்கொண்டு மேலும் நடந்து சென்றார். “இனிப் பயம் இல்லை” எனச் சொன்ன சிவனடியார் “நீவிர் இனித் திரும்பிச் செல்லலாம்” என நாயன்மாரிடம் கூறினார். நாயனார் சிவனடியாரை வணங்கி விட்டு, உடனே அவ்விடத்தை



www.npnagarathar.com

விட்டு மீண்டார். திரும்பிப் பார்க்காமலே அவர் சென்றது இறைவனாகிய சிவன டியாருக்கு வியப்பை அளித்தது.

ஒரு சமயம் நான் மலேசியாவில் என் நண்பருடன் காரில் சென்றேன். அப்பொ ழுது ஒரு வீதியில் இருந்த வீடுகளைக் காட்டி "இவை எல்லாம் எங்கள் வீடுகள்" என்று நண்பர் சொன்னார். "என்ன வாடகை வருகிறது?" என்று கேட்டேன். "இப்பொழுது என்ன வாடகை என்பது தெரியவில்லை. மூன்றாண்டுகளுக்கு முன் இவற்றை விற்றுவிட்டோம்" என்று நண் பர் பதிலளித்தார். விற்று விட்ட வீடு களைக்கூட நண்பர் "தம் வீடு" என் றுதான் நினைவு கூர்ந்தார். ஆனால் நாயனாரோ, மனைவியையே ஒருவரிடம் வழங்கிவிட்டு எந்த நினைவும் இன்றித் திரும்பிப் பார்க்காமலே சென்றிருக்கிறார். இதனைச் சேக்கிழார் மிக அருமையாகப் பின் வருமாறு சொல்கிறார்.

"செய்வதற்கறிய செய்கை செய்த நற்றொண்டர் போக, மைதிகழ் கண்டன் எண்தோள் மறையவன் மகிழ்ந்து நோக் கிப் பொய்தரும் உள்ளம் இல்லான் பார்க் கிலன் போனான்" என்று "மெய்தரு சிந்தையாரை மீளவும் அழைக்கலுற்றான்."

"பார்க்கிலன் 'போனான்" என்பது ஒரு நயம். நாயனார் சிறிது தூரம்தான் சென்றிருப்பார். அதற்குள் இறைவன் "இயற்பகை முனிவா ஓலம்; செயற்கரிய செயல் செய்த தீரனே ஓலம்" என்று சப் தமிட்டு அழைத்தார். நாம் இறைவனை நோக்கித்தான் "காப்பாற்ற வேண்டும்" என்று ஓலமிடுவோம். ஆனால் இங் கேயோ நாயனாரை நோக்கி இறைவன் ஓலமிடுகிறான். தான் செய்த செயற்கு வருந்தி ஓலமிடுவது போல அது தோற் றமளிக்கிறது.

நாயனார் "யாரோ வந்து மறிககி றார்" எனக் கருதி, மிக விரைவாக ஓடி வந்து பார்த்தார். சிவனடியாராக வந்த இறைவனைக் காணேம். அம்மையார் மட்டும் நின்று கொண்டிருந்தார். அப் பொழுது விசும்பில் இறைவன் உமாதே வியாரோடு ரிஷப வாகனத்தில் இருந்து காட்சி கொடுத்தார். "சொல்லுதறியேன் வாழி" என நாயனார் தொழுது வீழ்ந் தார். இறைவன் "நீ உன் மனைவியோடு சிவலோகத்தில் வாழ்வாயாக" என அருள் புரிந்து, உமா தேவியரோடு மறைந்து விட் டார். வானவர்கள் பூமாரி பொழிந்தார் கள். நாயனாரும் அவர்தம் மனைவியாரும் சிவலோகத்திற்குச் சென்று இனிது வாழ்ந் தார்கள். நாயனாரை எதிர்த்து மாண்ட சுற்றத்தார் அனைவரும் சுவர்க்கலோகம் சென்றார்கள். இவ்வாறு இயற்பகை நாய னார் வரலாற்றைச் சேக்கிழார் நிறைவு செய்கிறார்.

"எல்லாம் அவன் செயல்" என்று நம் புகின்ற நாயனார் வந்த சிவனடியாரைப் பொய்யர் எனக் கருதமுடியாது. அப்படிக் கருதினால் "எல்லாம் அவன் செயல்" என்னும் நம்பிக்கை அடிபட்டுப் போகும். நாயனார் வந்தவர் யார் என்னும் ஆராய்ச் சியில் ஈடுபட்டால் அவர் நாயனாராக விளங்க முடியாது. "எதைக் கேட்டா லும் கொடுப்பது என்னும் விரதத்தை" அவர் மேற்கொண்டிருந்தார். மனைவி யைக் கேட்டதும் "இல்லை என்று மறுத் தால்" அவர் எடுத்துக் கொண்ட விரதம் சிதறுண்டு போகும். இந்த நிலையில் நாயனார் மனைவியைக் கொடுக்க உடன் பட்டதில் எவ்விதத் தவறும் இல்லை. நாய னாருடைய மன உறுதியை உலகிற்குக் காட்டுவதற்குத்தான் இறைவன் வந்தான். நாயனார் மறுத்துச் சொன்னால் அவர் உறுதியற்றவர் என்றாகிவிடும். செயல்



www.npnagarathar.com

நியாயமானதா என்பது பற்றி நாயன்மார்கள் கவலைப்படுவதில்லை. இறைவன் செயலால்தான் எல்லாம் நடைபெறுகிறது என்பது அவர்கள் கொள்கை. ஆதலால் அவர்கள் உள்ளத்தில் இந்த எண்ணம் எழுவதற்கு இடமில்லை. நம்முடைய நிலை வேறு. நாம் இறைவன் செயலில் முழு நம்பிக்கை இல்லாதவர்களாக இருப்பதால் ஆராய்ச்சி செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். இறைவன் பேரில் முழு நம்பிக்கை ஏற்பட்டு விட்டால் நம்மைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இறைவனைச் சார்ந்து விடுகிறது. இறைவன் நாயனாரிடத்தில் நடந்து கொண்ட முறையை இவ்விடத்தில் நாம் கவனிக்க வேண்டும்.

நாடக மாத்திரையாகத்தான் இறைவன் இச்செலைச் செய்திருக்கிறான். நாயனார் மனைவியிடத்தே அவனுக்கு எந்த விருப்பும் இல்லை. நாயனார் மனைவியை அவன் தோய்வில்லை. நாயனாரைக் கூட அழைத்துக் கொண்டு சென்றானே யன்றி நாயனார் இல்லாமல் ஒருகணம் கூட அவன் அம்மையாரிடம் தனித்து நிற்கவில்லை. ஒருகணம் நாயனார் பிரிந்ததும் ஓலமிட்டு அழைத்திருக்கிறார். அம்மையார் கற்புக்கு எந்தப் பங்கமும் ஏற்படாமல் இறைவன் மிகவும் தூய்மையாக நடந்து கொண்டிருக்கிறார்.

நாயனார், இறைவனுக்காக எதையும் செய்வார் என்பதைக் காட்டுவது தான் இவ்வரலாற்றின் நோக்கமாகும். நாடக மாத்திரையாகச் செய்த இந்தச் செயலைக் குற்றம் போலக் கருதிப் பேசுவது பெருந்தவறாகும். இயற்பகையாரின் தியாக உணர்வை நாம் சிந்தித்தால் தான் இந்தச் செயலின் அருமை புலனாகும். மேற்கண்ட வரலாற்றை உள்ளத்தில் இருத்திக் கொண்டு, இயற்பகையார், நகரத்தார் மரபைச் சார்ந்தவரா என்பதை ஆராய்வோம்.

இயற்பகையாரைச் சேக்கிழார் பெருமான் அடியில் வருமாறு அறிமுகப்படுத்துகிறார்:-

“நலம் சிறந்தது வளம்புகார் நகரம்;
அக் குலப்பதி குடிமுதல் வணிகர் அளவில்
செல்வத்து வளமையின் அமைந்தார்”

இந்த அடிகளை, நாம் சிந்தித்தால் இயற்பகையார், நகரத்தாரே என்னும் முடிவிற்கும் வரலாம். பூம்புகார் நகரம் எனப்படும் காவிரிப் பூம்பட்டினத்தில்தான் நகரத்தார்கள் அந்தக் காலத்தில் வசித்தார்கள். வேறுவகை வணிகர்களும் அந்நகரத்தில் இருந்திருக்கலாம். ஆனால் “அக்குலப் பதிக்கு குடிமுதல் வணிகர்” என்பது நகரத்தாரைத் தான் குறிக்கும். நகரத்தார்கள் தாம் பூம்புகாரில் குடிமுதல் வணிகர்களாகப் போற்றப்பட்டிருக்கிறார்கள். “மன்னர் பின்னோர்” எனச் சிலப்பதிகாரம் அவர்களைப்பற்றிப் பேசுகிறது. சோழ அரசர்களுக்கு முடிசூடும் உரிமை பெற்றவர்களாக, அவர்கள் இருந்ததால் “குடிமுதல் வணிகர்கள்” என அவர்கள் சூடப்பட்டிருக்கிறார்கள். சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் தகப்பன் பெரும் கொடையாளனாக விளங்கி இருக்கிறான். பூம்புகாரில் வாழ்ந்த வேறு வணிகர்களுக்கு, இத்தகைய சிறப்பு இல்லை. நகரத்தார்கள் குடிமுதல் வணிகர்களாக பூம்புகாரில் இருந்தார்கள் என்பதை, நகரத்தார்கள் சரித்திரமும், கல்வெட்டுக்களும் பறைசாற்றுகின்றன. இயற்பகை நாயனார், பூம்புகார் குடிமுதல் வணிகர் என்பதோடு, பெரும் அளவில் செல்வமும் வாய்க்கப் பெற்றிருந்தார் எனச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். ஏனை வணிகர் குலத்தினர்க்குப் பூம்புகாரில், அக்காலத்தில் குடிமுதல் உரிமை



www.npnagarathar.com

யும், அளவிலாச் செல்வமும் இல்லாமையால், நகரத்தார் குலத்தையே, சேக்கிழார் வாக்கு சுட்டுகிறது எனக் கொள்வதில் தவறில்லை. வழிவழி அறமே புரிந்திடும் நலத்தினராக, நகரத்தார் மரபு அக்காலத்தில் விளங்கினமையால் தான், "இல்லையே" என்னாது வழங்கும் இயல்புடைய இயற்பகையார் அக்குலத்தில் அவதரிக்க இறையருள் புரிந்திருக்கிறது.

பூம்புகாரில் நகரத்தார்கள் மிகுந்த சிவபக்தி உடையவர்களாக இருந்திருக்கிறார்கள். அம்மரபில் வந்தமையால்தான் இயற்பகையாருக்கும் சிவபக்தி இயல்பாகவே அமைந்திருக்கிறது.

பூம்புகாரில் நகரத்தார்கள் மிகுந்த கட்டுப்பாடான வாழ்க்கை நடத்தி இருக்கிறார்கள். ஒரு குடும்பத்திற்கு அவமானம் வந்தால், அவர்கள் எல்லாருக்கும் அவமானம் வந்ததெனக் கருதிச் செயல்பட்டிருக்கிறார்கள். நகரத்தார்களுள் ஆண் வர்கத்தைச் சேர்ந்தவர்களைப் "பங்காளிகள்" என்று அழைப்பது வழக்கம். பெண் வர்கத்தைச் சார்ந்தவர்களைச் "சம்பந்தபுறம்" என்று சொல்வார்கள். "பங்காளிகள் உணர்ச்சி" நகரத்தார்களிடம் தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கிறது. ஒரு பங்காளிக்காக மற்ற பங்காளிகள் அனைவரும் சேர்ந்து போராடுவது அவர்கள் வழக்கமாகும். குலத்திற்கு பழிவராமல் காப்பதில், அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்திருக்கிறார்கள். "நமக்குள்ளே குற்றமிருந்தாலும் சரிப்படுத்திக் கொள்ளலாம். அடுத்தவன் கேலி செய்ய நாம் இடமளிக்கக் கூடாது" என்பது அவர்கள் கொள்கை. இயற்பகை நாயனார் மனைவியைச் சிவன்டியார்க்கு அளித்ததும், பங்காளிகள் அனைவரும் ஒன்று திரண்டு, தம் குலத்திற்குப் பழி வந்து விட்டதென்று கருதிச் சிவனடியாரைச் சூழ்ந்து கொண்டு எதிர்க்கிறார்கள். அப்பொழுது அவர்கள் இயற்பகையாரை நோக்கி "ஒன்னார் நகையையும் நாணாய்" எனக் கூறுகிறார்கள். "அடுத்தவன் கேலி செய்வதைப்பற்றி நீ கவலைப்படாமல் இருக்கிறாயே" என்பது இதன் பொருள். இது நகரத்தார் குலப்பேச்சாகும். சிவனடியாரை வந்து மறித்ததும் இயற்பகையார் அவர்கள் அனைவரையும் வெட்டிக் கொன்றிருக்கிறார். பங்காளிகள் குலப் பெருமையைக் காப்பாற்றுவதற்காக உயிர் விட்டிருக்கிறார்கள். சம்பந்தப்புறத்தாரும் இவ்வாறே குலப்பெருமையைக் காப்பதற்காக வந்து போராடி உயிர் விட்டிருககிறார்கள். இதிலிருந்து அவர்கள் அனைவரும் நகரத்தார்களே என்பது புலனாகிறது.

அக்காலத்தில், ஒருமுறை அரசன் மீனாட்சி என்ற ஏழு வயது நகரத்தார் குலப் பெண்ணை எடுத்துச் சென்றிருக்கிறான். நகரத்தார்கள் போய் கேட்டதும் திருப்பி விடுதலை செய்திருக்கிறான். அப்போது அமைச்சர்கள் மற்றவர் எடுத்துச் சென்ற பெண்ணை நகரத்தார்கள் சிரச்சேதம் செய்து விடுவார்கள் என அரசனிடம் தெரிவித்திருக்கிறார்கள். அரசன் பயந்து போய் நகரத்தார்களை அழைத்து இந்தப் பெண்ணைச் சிரச்சேதம் செய்வீர்களேயானால், ஒருதலைக்கு ஒன்பது தலை வாங்குவேன் என்று அச்சுறுத்தி இருக்கிறான். நகரத்தார்கள் பெண்ணை அழைத்துக் கொண்டு வந்து சிரச்சேதம் செய்துவிட்டுத் தங்களுக்குள் கூட்டம் கூடி, அரசனுக்குத் தலை கொடுப்பதற்காக ஆட்களைத்தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். எட்டுப் பேர் தலை கொடுப்பதற்கு முன் வந்தார்கள். ஒரு தலைக்கு ஆள் கிடைக்கவில்லை. அப்பொழுது "இளையாற்றங்குடி ஒக்கூர்" பிரிவைச் சேர்ந்த ஒருவர் தான் தலை கொடுப்பதாக ஒப்புக் கொண்டி



www.npnagarathar.com

192

ருக்கிறார். கூடுதலாக ஒரு தலை கொடுக்க வந்த ஒக்கூராருக்கு நகரக்கோவில்களில் இப்பொழுதும் தனி மரியாதை உண்டு. ஒன்பது பேரும் அரசன் முன்னிலையில் போய் நின்றார்கள். "ஒன்பது தலையையும் வாங்கிக்கொள்" என்று அவனிடம் சொன்னார்கள். அரசன் திகைத்துப் போனான். குல மானத்திற்காக நகரத்தார்கள் எதுவும் செய்வார்கள் என்பதை அரசன் அறிந்து, அவர்களை மன்னித்து விடுதலை செய்து விட்டான். இந்த நிகழ்ச்சியிலிருந்து நகரத்தார்க்குக் "குல மான உணர்ச்சி" எவ்வளவு உண்டென்பது புலனாகும். இதனால் "குலத்துக்குப் பழி வந்துவிட்டது என்று கருதிய இயற்பகை நாயனாரின் சுற்றத்தார்கள் எதிர்த்துப் போராடி உயிர் விட்டிருக்கிறார்கள். நகரத்தாரின் மான உணர்ச்சிக்கு இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டாக விளங்குவதால் இயற்பகையாரைச் சார்ந்த சுற்றத்தார்கள் நகரத்தார்களே என்னும் முடிவுக்கு நாம் வர வேண்டி இருக்கிறது. குலமான உணர்ச்சிக்காக உயிர்விடுவதும் ஒரு புண்ணியம் என்பதால்தான், இறந்து போன சுற்றத்தார்கள் சுவர்க்கலோகம் சென்றார்கள் எனச் சேக்கிழார் கூறுகிறார்.

இயற்பகையாருக்கு இவ்வளவு போர்க்குணம் எவ்வாறு ஏற்பட்டது என வினவலாம். ஒரு மதயானை ஒரு கிழ வேதியரை விரட்டியது. கோவலன் அந்த மதயானையைப் போரிட்டு அடக்கி அந்த வேதியரைக் காப்பாற்றியிருக்கிறான். இளங்கோ "கடக் களிறு அடக்கிய கருணை மறவ" என இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார். எனவே அக்கால நகரத்தார்களுக்குப் போர்க் குணம் இயல்பாகவே அமைந்திருந்தது என்பது தெளிவாகிறது.

முடிவாக, இயற்பகையார் பூம்புகார் நகரத்து குடிமுதல் வணிகராக இருந்ததாலும் அளவில் செல்வம் உடையவராக விளங்கியமையாலும் அவர் வரலாற்றில் பங்காளிகள் குல மான உணர்ச்சிக்காகப் போரிட்டு மடிந்திருப்பதாலும் அவர் நகரத்தார் மரபைச் சார்ந்தவரே எனச் சொல்வது பொருத்தமேயாகும்.

மூர்த்தி நாயனார், கலிக்கம்ப நாயனார், அமர்நீதி நாயனார் ஆகியோரது வரலாற்றில் இவ்வளவு வலிமையான சான்றுகள் இல்லை. இப்பொழுதும் காவிரிப் பூம்பட்டினத்தில் "நகரத்தார் விடுதி" இருக்கிறது. ஆண்டுதோறும் பட்டினத்தார் விழா கொண்டாடுகிறார்கள். அண்மைக் கால வரை இயற்பகயார் விழாவும் அங்கே நடைபெறுகிறது. இத்தகைய விழாக்களை ஏனைய வணிகர் குலத்தினர் கொண்டாடவில்லை. காவிரிப் பூம்பட்டினத்து மக்கள் நகரத்தார்களைக் கண்டால்"நீங்கள் இம்மண்ணிற்கு உரியவர்கள்" எனச் சொல்லிப் பூரிக்கிறார்கள். பிற குல வணிக மக்களைக் கண்டு அவர்கள் அவ்வாறு சொல்வதில்லை. வேந்தன் பட்டியில் நகரத்தார் குல அன்பர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு இயற்பகைச் செட்டியார் என்றே அவரது தந்தையார் பெயரிட்டிருக்கிறார். வேறு குல வணிகர் குடும்பங்களில் "இயற்பகையார்" என்ற பெயர் இல்லை.

பெரிய புராண அகச் சான்றுகளோடு இப்புறச் சான்றுகளையும் சேர்த்துப் பார்த்தால் இயற்பகையார் நம்மவரே என்று கருதுவதில் எந்தத் தவறும் இல்லை என்பது புலனாகும்.



www.npnagarathar.com

193

# மலையக்கோவில்

குமட திருப்பதி

தமிழகத்தின் வரலாற்றில் மிகவும் முக்கியமானதொரு இடம் பெற்றிருக்கும் நற்சாந்துப்பட்டி அருகில் மலையக்கோவில் (திருமயம் தாலுக்காவில்) புதுக்கோட்டையிலிருந்து 12 கல் தொலைவில் உள்ளது. நாட்டார்களும், நகரத்தார்களும் நிறைந்து வாழ்கின்ற கோவில் இது. இங்குள்ள குன்றின் கிழக்குப் பகுதியில் ஒரு சதுரமான குகைக் கோவில் காணப் படுகிறது. இதனுள் ஒரு லிங்கம் உள்ளது. இக்குகையின் வாயிற்படி அருகே பல்லவர் கட்டிடக் கலையின் பாணியில் கொடிக்கருக்கு வேலைப்பாடுகள் அமைந்துள்ளன. இக்குகைக் கோவிலின் முன்னால் கட்டப் பட்டுள்ள (தற்போது சிதைந்த நிலையில் உள்ளவை) அர்த்த மண்டபமும் பிற்காலத்தில் கட்டப்பட்டவையாகும்.

இக்குகையில் ஒரு வலம்புரி கணபதியும், ஒரு நந்தியும் காணப்படுகின்றன. (பல்லவர் கால கணபதியின் தும்பிக்கை வலதுபக்கமாகச் சுழன்றிருக்கும்) இங்குப் பல்லவ கிரந்தம் மற்றும் தமிழ் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று காணப்படுகிறது. பல்லவ கிரந்த எழுத்தில் "பரிவாதினி" என்று பொறிக்கப்பட்டுள்ளது. பரிவாதினி என்பது ஏழு நாண்களையுடைய ஒரு வகை யாழ் ஆகும். தமிழ்க் கல்வெட்டு எழுத்தில் குணசேனன் என்பவன் ஆக்கிய பரிவாதினி யாழின் தன்மைகளையும், அதில் இசை வாசிக்கும் முறையைப்பற்றியும் கூறப்பட்டுள்ளன. (தமிழ் இலக்கியங்களில் மகர யாழ், பேரியாழ், செங்கோட்டி யாழ், சகேத்தி யாழ் ஆகிய நான்கு யாழ் வகைகள் கூறப்பட்டுள்ளன. ஆனால் பரிவாதினி என்னும் ஏழு நாண்களை உடைய யாழ் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தைச் சீரும், சிறப்புடனும் ஆண்ட 'கலைக் காவலன் குணசேனன்' என்னும் மகேந்திர வர்ம பல்லவனின் கண்டுபிடிப்பாகும். இந்த யாழுக்குரிய "ஏழு சுரங்களின் அமைப்பு, வரிசை முதலியன குடுமியான் மலை மேலக் கோவிலில் உள்ள சங்கீதக் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளன.) 'குணசேனன்' என்று இக்கோவிலில் உள்ள கல்வெட்டு குறிப்பிடுவதால் இக்கோவில் கி.பி. 7 -ம் நூற்றாண்டில் பல்லவ மகேந்திரவர்மன் காலத்தில் கட்டப்பட்டதாகும். தமிழக கலை வரலாற்றை அறிந்து கொள்ள இக்கோவில் பெரிதும் துணைபுரிகிறது என்றால் அது மிகையாகாது.

குன்றின் தென்பகுதியில் மற்றொரு சிவன் குகைக்கோவில் உள்ளது. இதுவும் பல்லவ மகேந்திரவர்மர் காலத்தைச் சேர்ந்ததாகும். கட்டிடக்கலை அமைப்பில் இக்குகைக்கோவில் திருமயம், மற்றும் மலையப்பட்டியில் உள்ள குகைக்கோவில்களை ஒத்திருக்கிறது. மேற்கு திசை நோக்கி இருக்கும் கற்பக்கிரஹம், அதன் முன்னால் நீள்சதுரமான அர்த்த மண்டபம், அர்த்தமண்டபத்தில் இரு தூண்கள் ஆகியன. இக்குகைக் கோவில்களின் சிறப்பு அம்சங்களாகும். அர்த்த மண்டபத்தில் உள்ள தூண்கள் குடுமிப் பகுதியிலும், கீழ்ப் பகுதியிலும், சதுரமாகவும், நடுப்பகுதி எட்டுப்பட்டையாகவும் அமைந்திருப்பதைக் கொண்டு இக்கோவில் பல்லவ மகேந்திரவர்மன் காலத்தில் கட்டப்பட்டது என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது. ஏனெனில் இவ்வ



www.npnagarathar.com

கைத் தூண்கள் தமிழகக் கட்டிடக் கலை வரலாற்றில் மகேந்திரவர்மன் காலத்தில் கட்டப்பட்ட கோவில்களில் மட்டுமே காணப்படுகின்றன.

இங்கு ஒரு நந்தியும், ஒரு வலம்புரி கணபதியும், ஜடாமுனீஸ்வரரும் காணப்படுகின்றன. அரத்த மண்டபத்திற்கு முன்னால் உள்ள மகா மண்டபம் பிற்காலத்தில் கட்டப்பட்டதாகும். முதலாம் ஜடாவர்ம குலசேகர பாணடியன் காலத்துக் கல்வெட்டு ஒன்று இக்குகைக் கோவிலில் குடிகொண்டிருக்கும் வரமுடைய நாயனாருக்குச் சொந்தமான நிலங்களுக்கு வரிச் செலுத்துவது குறித்துக் குறிப்பிடுகிறது. ஆனால் பனையூரில் உள்ள கல்வெட்டொன்று இங்குக் குடி கொண்டிருக்கும் இறைவனைத் திருக்கைலேஸ்வரர் என்று அழைக்கிறது. (ஆனால், இக்கோவிலில் உள்ள கல்வெட்டு வரமுடைய நாயனார் என்று குறிப்பிடுகிறது.) இங்குள்ள அம்மன் கோவில் சோழர் காலத்தில் கட்டப்பட்டதாகும். குன்றின் உச்சியில் குன்று தோராடி வரும் குமரன் சுப்பிரமணியர் ஆலயம் ஒன்று உள்ளது. இக்கோவில் நற்சாந்துப்பட்டி வீ.மு.வீ. வீரப்ப செட்டியார் குடும்பத்தாரால் கட்டப்பெற்றது. பெ. ராம. குடும்பத்தினரால் மலைக்கோவிலுக்குப் படிக்கட்டும் மலைமீது சுனையும் மேற்படியூர் சா.வீர. சாத்தப்ப செட்டியாரால் திருவருட் காளீஸ்வரர் கோவிலும், குளமும் கட்டப்பட்டன.

இக்கோவில் 4 ஏக்கர் 84 சென்டில் அமைந்திருக்கிறது. மலைக்கோவிலைச் சுற்றியுள்ள நிலப்பகுதியைக் கானாட்டார், கோனாட்டார் என்ற இருபகுதியினர் ஆட்சி செய்து வந்தனர். கானாட்டின் தெற்கு எல்லை 'கானாடுகாத்தான்' என்றும், கோனாட்டின் எல்லை 'கோனாப்பட்டு' என்றும் கூறப்படுகிறது. இந்த இருதிறத்தாருக்கும் பகை மூண்டு நற்சாந்துப்பட்டியில் போர் நடந்ததாகவும் பிறகு இருதிறத்தாரும் மலையக் கோவிலில் கூடி ஒரு உடன்பாடு செய்து, அதன்படி மலையக்கோவில் மலையில் இருதிறத்தாரில் யார் முதலில் மலையைக் குடைந்து கோவில் அமைக்கிறாரோ அவரே மேம்பாடுடையவர் என்று முடிவு செய்ததாகவும், அந்த உடன்பாட்டின்படி கோனாட்டார் முதலில் கோவில் அமைத்ததாகவும், கானாட்டார் தோற்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

தற்பொழுது கோனாட்டாரால் குடையப்பட்ட கோவிலில் திருவருட் காளீஸ்வரர் கோவில் அமைக்கப்பட்டு நித்ய வழிபாடு நடந்து வருகிறது. கானாட்டாரால் தோண்டப்பட்டதாகக் கூறப்படும் கோவில் முடிவுறாத நிலையில் இருக்கிறது. இந்தக் கோவிலில் தற்பொழுது எந்தவித வழிபாடும் இல்லை.

## தைப்பூசத் திருவிழா

நற்சாந்துப்பட்டிப் பகுதியில் மலையக்கோவில் தைப்பூசத் திருவிழா சிறப்பான பெருவிழாக்களில் ஒன்றாகும். இவ்விழா சம்பந்தமாக 1893 -ம் ஆண்டு புதுக்கோட்டை தர்பாரால் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி இத்திரு விழாவை நற்சாந்துப்பட்டி நகரத்தாரும், குலமங்கலம் ஊராரும் சேர்ந்து நடத்துவது எனவும், அதற்குத் தேவையுள்ளவைகளை ஆண்டுதோறும் உண்டியல் வருமானத்தைக் கொண்டும், நகரத்தார் நன்கொடைகளைக் கொண்டும் செய்து வருவது என்றும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. அவ்விழாவிற்குரிய ஐந்து மண்டகப்படிகளை நற்சாந்துப்பட்டி நகரத்தார்களே செய்து வருகிறார்கள்.



www.npnagarathar.com

195

பூசத்தன்று, நற்சாந்துப்பட்டி நகரத்தார்களும், விரையாச்சிலை, பனையப்பட்டி குளிபிரை நகரத்தார்களும், இதர நகரத்தார்களும், புத்தாடை அணிந்து, குடும்பம் குடும்பமாக வரும் காட்சி சிறப்புடையதாகும். இங்கு, நகரத்தார் பெருமக்கள் பூசத்தன்று உணவு சமைப்பதும், அதை ஜாதிமத பேதமின்றி அனைவருக்கும் வழங்குவதையும் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். புதிய மணமக்களுக்குப் பழம், தேங்காய் கொடுப்பதும், இளம்பிஞ்சுகளுக்கு முடி இறக்கி தொட்டில் கட்டுவதும் மரபுப் பழக்கமாக இருந்து வருகிறது. பலர் தமக்குரிய மடங்களிலும், மற்றவர் கொட்டகைகள் போட்டும் இத்திருவிழாவை நடத்துவார்கள். இத்தினத்தில் எங்கு பார்த்தாலும் சாரை சாரையாக வண்டிகளும், கார்களும், சைக்கிள்களும் காட்சி அளிக்கும். இப்பகுதி கிராம மக்கள் இங்கு இத்தினத்தில் வருவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். பூசத்தன்று மலையக் கோவிலுக்கு நற்சாந்துபட்டி சுவாமிகள் வாகனங்களில் எழுந்தருளி, மலையக்கோவில், பனையூர் குலமங்கலம் சுவாமிகளுடன் தீர்த்தம் கொடுக்கிறது. நற்சாந்துப்பட்டியிலிருந்து ஆண்டுதோறும் சர்க்கரைக் காவடி செலுத்தப்படுகிறது. அதேபோல் விரையாச்சிலையிலிருந்தும் சர்க்காவடி செலுத்துகிறார்கள். மற்றப் பகுதிகளிலிருந்து பால் குடங்களும் காவடிகளும் வரும். ஒரு சில குடும்பங்களில் மறுநாளும் இருந்து வடித்துப் போடுவார்கள். மறுநாள் நடக்கும் மஞ்சி விரட்டு மிகவும் அருமையாக அமைந்திருக்கும்.



சரித்திர சான்றுமிக்க
மலையக் கோயில் மலைக்கோயில்



செந்தூரான் கண்பட்ட இடமெல்லாம் பொன்படும்.

www.npnagarathar.com

சிவமயம்

# நல்லி அப்பத்தாள் கோவில்

திரு. சோமசுந்தரம் (காரைக்குடி)

நற்சாந்து பட்டி இளையாற்றங்குடி கோவில் பெருமருதுடையார் பிரிவைச் சார்ந்த 65 புள்ளி பங்காளிகள் தொன்று தொட்டு பயபக்தியுடன் கும்பிட்டு வரும் படைப்புக் கோவில் நல்லி அப்பத்தாள் கோவில் ஆகும். இக்கோவிலானது தற்போது குடிதண்ணீர் ஊரணிக்கு அருகில் உள்ளது. இதற்கு முன் தற்போது அடைக்கப்பத்தாள் கோவில் இருக்கும் இடத்திற்கு அருகில் இருந்து சுமார் 67 வருடங்களுக்கு முன் சில காரணங்களால் இட மாற்றம் செய்யப்பட்டது. இக்கோவிலில் பெரிய கருப்பர், சின்ன கருப்பர், சன்னாசி தெய்வம், அடைக்கலங் காத்தாள், நல்லி அப்பத்தாள் ஆகிய தெய்வங்களுக்கு வழிபாடுகள் செய்யப்படுகின்றது.

இக்கோவில் படைப்பு ஒரு திருவிழா போல நடக்கும் படைப்புக்கு மூன்று நாட்களுக்கு முன் புள்ளிகள் எல்லோரும் குடும்பத்தினருடன் குன்னக்குடி அருகிலுள்ள தட்டட்டி, தொரட்டி எனும் ஊருக்குச் சென்று, அங்குள்ள மடங்களில் மறுநாளும் தங்குவதும், சமையல் செய்து சாப்பிடுவதும் வழக்கம். அங்கு உள்ள அய்யனார் கோவிலில் சாத்தய்யனார், பெரிய கருப்பர், சின்ன கருப்பர், நல்லிப்பாட்டி ஆகிய தெய்வங்களுக்கு பூஜை வழிபாடுகள் செய்து பக்கத்துக் கண்மாயில் தீர்த்தம் எடுத்து ஊருக்குக் கொண்டு வந்து படைப்பு வழிபாடு செய்யப்படும். படைப்பின் போது நமது பெண்களே மாவிடித்து, பணியாரம் சுட்டு பங்காளிகளுக்கு சமமாகப் பிரித்துக் கொடுப்பது பழக்கம். படைப்பின் போது கோவலில் நகரத்தார் உட்பட எல்லோருக்கும் சாப்பாடு போடப்படும்.



www.npnagarathar.com

சிவமயம்

அருள்மிகு சேவாத்தாள் துணை

# கருணை மிகு சேவாத்தாள்

## வரலாறும் படைப்பு விபரமும்

தொகுப்பு K. இராமனாதன் B.Sc. (Agri),

உலகம் உய்ய கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் அருள்மிகு ஐயப்பன். தென்பாண்டி மக்கள் ஐயப்பனை அய்யனார் என அழைத்து வழிபாடுகள் செய்து கொண்டாடி மகிழ்வர். அய்யனாரின் திருவருளில் ஐக்கியமாகி அருள் புரிந்து வருகிறார்கள் அன்னை கருணைமிகு சேவாத்தாள் அவர்கள்.

முன் ஒரு காலத்தில் நமது சமூகத்தில் தோன்றியவர்கள் அருள்மிகு சேவாத்தாள் அவர்கள். அவர்கள் திருமணமாகி பேறுகாலத்திற்கு தன் தாய்வீடு வருகிறார்கள். பிரசவம் ஆகிறது. தகப்பனார் தம் மகளையும் பிரசவித்த குழந்தையையும் தீட்டுக்கள் சரிவர முடிவடையும் முன்பாகவே அவசரப்பட்டு சம்பந்தி வீட்டில் கொண்டுபோய்விட அழைத்துக் கொண்டு கழனிவாசல் வயல் வழியாக வரும்போது தன் மகள் தாகம் எடுத்து தண்ணீர் கேட்க தகப்பனார் தன் மகளை கோவில் முகப்பில் இருக்கச் செய்து தண்ணீர் கொண்டுவர கண்மாய்க்கு போய் இருந்த சமயம் மேற்படி பெண்ணாகிய சேவாத்தாள் நடந்து வந்த களைப்பில் அசந்திருக்க மடியிலிருந்த குழந்தை தெய்வ அருளால் தவழ்ந்து ஓடி அய்யனார் சிலை அருகே செல்ல அதுகண்ட தாய் பிரமித்து ஓடிச் சென்று குழந்தையை வாரி அணைக்கும் போது தெய்வ ஒளியில் இருவரும் மறைந்து அய்யனாரிடம் ஐக்கியமாகி விட்டார்கள். தகப்பனார் தண்ணீர் கொண்டு வந்து மகளையும் பிள்ளையையும் காணாமல் "சேவாத்தாள், சேவாத்தாள்" என்று அழைக்க கர்ப்பகிரகத்தில் இருந்து, "நாங்கள் இங்கே இருக்கிறோம்" என்ற ஒலி மட்டும் திரும்பத் திரும்ப கேட்க, ஒலிவந்த திசையில் தகப்பனார் திரும்ப அங்கே அய்யனார் சன்னதியில் தாய் ஒளி வடிவத்தில் காட்சி கொடுத்தார்கள். அதுகண்டு வணங்கி பின் அவர் வீட்டிற்கும், சம்பந்தி வீட்டிற்கும், குடிபடைகளுக்கும் சொல்லி அனுப்ப அனைவரும் வந்து அன்னையை வணங்கினார்கள்.

அருவமாய் மறைந்து தெய்வீக நிலை அடைந்துவிட்ட அந்த தாய்க்கும், சேய்க்கும் உருவ வழிபாடு அவசியம் தேவை என்பதை நன்குணர்ந்த தாய் வீட்டாரும், புகுந்த வீட்டாரும், அவர்களைச் சார்ந்தவர்களும், அதற்குள்ள குடிபடைகளும் கர்ப்பகிரகம் கட்டி வழிபட ஆரம்பித்து பிரதி வருடம் மகா சிவராத்திரிக்கு மறுநாள் கோவிலுக்கு வந்து அபிஷேக ஆராதனை செய்து தொட்டில்கட்டி பொங்கலிட்டு வழிபடுகிறார்கள். இவர்களில் ஒருசாரார் சேவாத்தாள் எனவும் ஒருசாரார் சேவாயாள் எனவும் போற்றி வழிபடுகிறார்கள்.

இந்த வழிபாடு செய்பவர்கள் நற்சாந்துபட்டி கிழச்சீவல்பட்டி, தேவகோட்டை, வெற்றியூர், அரண்மனை சிறுவயல், நடராஜபுரம் மற்றும் பல ஊர்களிலும் இருக்கிறார்கள். நற்சாந்துப்பட்டியில் வயிரவன் கோவில் கழனிவாசலுடையார்



www.npnagarathar.com

நகரத்தார்கள் அருள்மிகு சேவாத்தாளைப் போற்றி வழிபட்டு வருகிறார்கள். இந்த களத்திருடைய அய்யனார் கோவில் பசும் பொன் மாவட்டம் அரண்மனைச் சிறுவயலுக்கு அருகில் கண்மாய்க்கு உள்வாயிலில் கழனிவாசல் வயலுக்கு அருகில் அமைந்துள்ளது.

ஒரு முறை நற்சாந்துபட்டியிலிருந்து வண்டிப் பயணமாக அருள்மிகு களத்திருடைய அய்யனார் கோவில் செல்லுகையில் மத்தியில் ஒரு இரவு தங்கி இருக்கையில் இவர்கள் கொண்டு சென்ற சாமான்கள் அபிஷேக ஆராதனைப் பொருள்கள் திருடு போனதாகவும் மறுநாள் காலையில் பார்த்து இது தகுமா? இதுமுறையா? என அய்யனாரிடம் முறையிட்டு விட்டு மேற்கொண்டு அபிஷேக ஆராதனைக்கு புதிதாக பொருட்களை வாங்கிக் கொண்டு தெய்வமே துணை என்று களத்திருடைய அய்யனார் கோவில் சென்று பொங்கலிட, திருடியவர்களுக்கு கண் ஒளி மங்கி வழித்துணை பிடித்து ஓடோடி கோவிலுக்கு வந்து திருடிய பொருட்களைக் கொடுத்து, வழி தெரியாமல் புலம்பி செய்த தவறை உணர்ந்து, 'தாயே துணை' என நிற்க அவர்களுக்கு பார்வை வந்ததாக முன்னோர்கள் சொல்லத் தெரிய வருகிறது.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு கோவை வாழ் நற்சாந்துபட்டி கும.கும. குமரப்ப செட்டியார் அவர்களின் முயற்சியால் பங்காளிகள் தந்ததை வாங்கிக் கொண்டும் மேற்கொண்டு தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டு கோவிலுக்கு வருபவர்கள் தங்குவதற்கு வசதியாக பெரிய மண்டபம் ஒன்று அரண்மனை சிறுவயல் உடையப்ப செட்டியார் அவர்களின் மேற்பார்வையில் கட்டி முடித்து ஆடி 18 இல் திறப்பு விழா செய்யப்பட்டது. அதுமுதல் ஒவ்வொரு ஆடி 18 லும் பங்காளிகளுடன் சென்று வழிபட்டு வருகிறார்கள். தந்தையுடைய வழிபடு நினைவாக அவருடைய புத்திரன் திரு. கும. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களும் பெருமுயற்சி எடுத்து இன்றும் பங்காளிகளுடன் சென்று வழிபட்டு வருகிறார்கள்.

1972 ஆம் ஆண்டு நற்சாந்துபட்டி வயிரவன் கோவில் கழனிவாசலுடையார் நகரத்தார்கள் அருள்மிகு சேவாத்தாளுக்கு மண்டபம் கட்டியும், பழுதுபார்த்தும் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடத்தி உள்ளார்கள். கோவில் விழாக்களில் குதிரை எடுப்பு சிறப்புடைய ஒன்று.

நற்சாந்துபட்டியில் சுமார் 80 ஆண்டுகளுக்கு முன் நடந்த படைப்பு ஹீன தசையாக வெகுகாலம் படைப்பு நடக்காமல் இருந்தது. 1981 ஆம் ஆண்டு நற்சாந்துபட்டி வயிரவன் கோவில் கழனி வாசலுடையார் நகரத்தார்கள் ஒருமித்து அருள்மிகு சேவாத்தாளை வழிபட ஏற்பாடு செய்ய முயற்சி செய்து வழிமுறைகளும் தொழு முறைகளும் தெரியாமல் இருந்ததால் சேவாத்தாள் கோவில் சென்று விசாரித்ததில் சாமி அழைத்து விபரம் கேட்டுத் தெரிந்துகொள் என்று சொன்னதால் அதை மனமுவந்து ஒத்துக் கொண்டு இளையாற்றங்குடி அங்காளம்மன் மலையாளக் கருப்பராடி திரு. பாட்டையா பூசாரி மூலம் அழைத்து விவரம் கேட்டு அவர்கள் திருவாக்குப்படி பூசாரி நியமனம் செய்தும் ஆனி மாதம் வளர்பிறை செவ்வாய்க் கிழமையில் படைப்பு நடத்துவது என்றும், அதற்கு நற்சாந்துபட்டி வயிரவன் கோவில் கழனிவாசலுடையார் நகரத்தார்கள் நான்கு கரையிலும், கரையில் வயதில் மூத்தவர்கள் கரைக்கு ஒருவர் வீதம் நால்வரும் பூசாரியும் ஆக ஐந்து பேர்களும் படைப்பிற்கு



www.npnagarathar.com

200

முதல் நாள் பங்காளிகள் சூழ களத்தய்யனார் கோவில் சென்று அபிஷேக ஆராதனை செய்து தீர்த்தம் வைத்து தீபாராதனை பார்த்து ஐவரும் தீர்த்த சொம்பை எடுத்துக் கொண்டு நேரடியாக நற்சாந்துபட்டி படைப்பு வீட்டிற்கு வந்து தீர்த்த சொம்பை வைத்து தீபம் பார்த்து வீட்டிற்கு செல்வர் மறுநாள் ஐவரும் குடம் எடுத்துக் கொண்டு பங்காளிகள், பெண்பிள்ளைகள், உறவினர்கள் சூழ மேளதாளத்துடன் பெரிய ஊரணி சென்று தண்ணீர் எடுத்து வந்து மேற்படி ஊரணி பிள்ளையார் கோவிலில் வைத்து தீபாராதனை பார்த்து, படைப்பு வீட்டிற்கு கொண்டு வந்து வைத்து, தீபாராதனை பார்த்து பூசாரியும் அவர் குடும்பத்தாரும் சேர்ந்து தென்புறம் சர்க்கரைப் பொங்கலும் வடபுறம் வெண் பொங்கலும் வைப்பர். கத்தரிக்காய், முருங்கைக்காய், வாழைக்காய் போட்டு கூட்டுக் குழம்பு வைத்து, பருப்பு மசித்து, சுவாமிக்கு தாலி சாத்தி அலங்காரம் செய்து பள்ளயம் போட்டு - புடவை, கால்/மோதிரம் கிழபுற பள்ளயத்திலும் மேல்புற பள்ளயத்தில் வேட்டித் துண்டு வைத்தும் - ஆராதனை செய்து எல்லோருக்கும் தீர்த்த பிரசாதமும், பால், விபூதி, சந்தனம், குங்குமம் கொடுத்து, ஏக பந்தி போட்டு அனைவருக்கும் பள்ளயச் சாதம் வைத்தும் உணவு அளிப்பர்.

மறுநாள் காலையில், ஒரு பொங்கல் வைத்து இளம்படைப்பு படைப்பர். அன்று மதியம் நகர விருந்து வைத்தும் மகிழ்வர். பின் முதலில் பங்காளிகளில் வயதில் மூத்தவர் பூசாரிக்கு காளாஞ்சி கொடுத்து பின் பங்காளிகளும் பெண்பிள்ளைகளும் உட்பட அனைவரும் பூசாரியிடமிருந்து காளாஞ்சி பெற்றுக் கொள்வர்.

இறுதியில் அன்னையைத் துதித்து அன்னையின் அருள் வேண்டி அன்னையின் நாமம் சொல்லி தியானம் செய்து விடை பெருவர்.

இந்த படைப்பு நடந்து வருகிறதிலிருந்து ஊராரும் பங்காளிகளும், பெண்பிள்ளைகளும், மருமகள்கள் மாப்பிள்ளைகளும் செழித்து மேலோங்கி வாழ்ந்து வருகிறார்கள். "அருட் பேராற்றல் சேவாத்தாள் கருணையினால் இரவும் பகலும் எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் எல்லாத் தொழில்களிலும் உறுதுணையாகவும் பாதுகாப்பாகவும், வழி நடத்துவதாகவும் அமைந்து நாம் உடல் நலம் நீள்ஆயுள், நிறை செல்வம், உயர் புகழ், மெய்ஞானம் பெற்று வாழ்வோமாகுக."

## வாழ்க வளமுடன்



www.npnagarathar.com

# மலையக்கோவில் மாண்பு

## பெரிய தம்பையா பிள்ளை

ஒப்பிலா ஒரு தெய்வமாய்
அலகிலா ஆட்டுடையான் "மலை ஐயா" என்றிடும்
அருங் குரல் திசை ஒலிக்க
அன்றின்றெனாதபடி என்றென்றுமே யொளிர்
அருட்பிரானே திரு அருட் காளிச்வரனே!

### சிவ சுனை

கண்ணொளி துலக்கும்
கவிஇருள் விலக்கும்
புண்பொதி மேனி
பொலியுமே நாணி
விண்போ தெழுமுன்
திருநா வலங்கிரித்
தண்புனற் சிவசுனை
தப்பா தாடினே!

### சிவமாமுடி!

தகிக்கும் கோடை
தனிலும் வாடை
சுகித்தே ஊற்று
சுரந்தே ஊட்டு
அகிலத் தோங்கருட்
திருநா வலங்கிரி
மகிமை யுடைசிவ
மாமுடிக் கங்கையே!

### திருவுளத் தரு!

திருவுளந் தெளிதல்
எனுமுறை ஒன்று
நறுந்தமிழ் நாட்டுள்
நாளுமே உண்டு
திருநா வலங்கிரித்
திருவுளத் தருவே
திருவுளத் தெளிந்து
தீர்வரே சிக்கல்!



www.npnagarathar.com

202

மக்கள் தங்கள் எண்ணங்கட்கு ஆலோசனை பெற இவ்வாலயத்தில் திருவுளங் கேட்டுச் செயல்படுவது இன்றும் கண்கூடு.

## உண்நீர்

தனைநாடி வரும் மக்கட்கு உண்நீர் ஊட்டுவிப்பாகத் தேவி திருக்குளம் திகழ்ந்து வந்துள்ளது. இன்று அலம்பல்பட்டுளது.

## தீர்த்தச் சுனை

கண்நோவு கொண்டவர்கள் இச்சுனையில் அதிகாலையில் நீராடி ஒருமண்டலம் கடவுளைச் சேவிப்பின் நோவகன்று மகிழ்வுற்று வந்துளர்.

## கிரிவலம்

தங்கள் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ள கோவிலடி தங்கி 11 நாள், 21 நாள், ஒரு மண்டலம் என நோன்பு பூண்டு, சுனையில் நீராடிக் காலை மாலை மலையைச் சுற்றி வந்து மகப்பேறு முதற்கொண்டு அருள் பெறுவதுண்டு.

## திருவிழா

இன்று பலவித மக்களும் தைப்பூசப் பெருந்திருநாளில் ஒன்றுகூடி வழிபாடுகள் பலப்பல நிகழ்த்தி உளந்தழைப்பிற்படுத்தல். இன்றும் கண்கூடேயாம்.

## அஞ்சலி

அழகுமிகு முத்துக்குமாரவேள் ஆனைமுகன்
அம்பிகை தருமசம் வர்த்தனி
அருட்பெருஞ் செஞ்சடா முனிநாதன் வயிரவன்
அருந்திறல் கருப்பண் ணனும்
இலகுபிற பரிவார மூர்த்தங்கள் தம்மொடு
எண்ணரு வியப்பு ஈயும்
இருகுடை தளிகொள் திருநா வலங்கிரி எனும்
திவ்வியத் தலத் தெழுந்தே
உலகா யதத்தினர் ஒருகோடி இருகோடி
உற்றிடினும் அருள் கோரியே
உத்தம நெறியாளர் யார்? எவர்? என்றருளு
ஒப்பிலா ஒரு தெய்வமாய்

## கிரித்திரு!

காலை மாலை
திருநா வலங்கிரி
கோல நினைவொடு
கும்பிடு பதித்தே
வலமே வந்தே
ஏந்தக் கையே



www.npnagarathar.com

நலமே எய்திடும்
நாடிய சீரே!

## திருக் கட்டளை

தண்டமிழ்ப் புதிகைத்
தலைநான் அமைச்சு
கொண்ட முத்துக்
குமார வேளோன்
பண்டுயர் திருநா
வலங்கிரிப் பதிக்கே
கண்டனன் கட்டளை
காணத்தன் வழிய காலமெலாமே!

## தலத் தருத் திரு!

மாவல நாளே
மணந்தது போலொரு
நாவல் தரும்
நாவலங் கிரியுறும்
பாவல ஔவை
பரித்திருவு மீதோவென
யாவரும் ஐயம்
புடைதிரு புடைத்திடும்!



www.npnagarathar.com

சிவமயம்

# இராமர் பட்டாபிஷேகம்

குமூ. திருப்பதி M.A., B.Ed.,

(கம்பன் செட்டியார் வகையராக் குடும்பத்தினர்கள் படிப்பது)

"எண்ணி எண்ணித் திட்டம் போட்டு எழுதினானோ?

எண்ணாமல் எங்கிருந்தோ கொட்டி னானோ?"

என்று கவிச் சக்கரவர்த்தி கம்ப நாடனின் புலமையைப் புகழ்வர் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை அவர்கள். "தமிழர்க்குக் கதி கம்பராமாயணம், திருக்குறள் ஆகிய இரு இலக்கியங்களுமே யாகும்" எனச் சொல்லி மகிழ்வர் சூரிய நாராயண சாஸ்திரியார். இவ்வாறு தமிழர்க்குக் 'கதி' எனச் சொல்லப்பட்ட இவ்விரு இலக்கியங்களுள் ஒன்றான, 'கம்பராமாயணத்தை' நற்சாந்துபட்டி வாழ் நகரத்தார் பெருமக்கள் பலர், தங்கள் குடும்பச் சொத்தாகவே கருதி, போற்றிப் பாதுகாத்து வருகின்றனர்.

அவர்களுள், கம்பன் செட்டியார் வகையறாவைச் சார்ந்த உயர்திரு. குமரப்ப செட்டியார் அவர்களது புதல்வர்கள் உயர்திரு. பெரியகருப்பன் செட்டியார், உயர்திரு. நல்லகருப்பன் செட்டியார், உயர்திரு. முத்துராமன் செட்டியார் ஆகியோரது குடும்பத்தினரால் 116 ஆண்டுகளுக்கு முன் தொடங்கி, கம்பராமாயணம் நடைக்காவியமாக இன்று வரையில் ஆண்டுதோறும் விடாமல் படிக்கப்பட்டு வருகிறது. இந்த கம்பராமாயணம் நடைக்காவியம் 1874 பவ ஆண்டு ஆவணித் திங்கள் 24 ஆம் தேதி கோவில்பட்டி வாழ் உயர்திரு. சுப்பிரமணிய வாத்தியார் அவர்களால் ஓலைச் சுவடியில் எழுதப்பட்டு, பின்னர் அவராலேயே படித்துவருமாறும் ஒழுங்கு செய்யப்பட்டது. இவருக்குப் பின்னர் வாரிசு இன்மையால் இவரது மாப்பிள்ளை உயர் திரு முத்துசாமி வாத்தியார் அவர்களால் படிக்கப்பட்டு வந்தது. வாரிசு இன்மையின், மாப்பிள்ளையால் படிக்கப்பட்டு வந்த சிறப்புக்கருதி முத்துசாமி வாத்தியார் அவர்களை நகரத்தார் பெருமக்கள் "மாப்பிள்ளை வாத்தியார்" என்றே அழைத்து வந்தனர். மாப்பிள்ளை வாத்தியாருக்குப் பிறகு அவரது குமாரர் உயர் திரு. குமாரசாமி வாத்தியார் அவர்களால் இந்த மூன்று வீடுகளிலும் ஆண்டுக்கு ஒருவராக விடாமல் படிக்கப்பட்டு வருகிறது. இம்முறையை நகரத்தார் பெருமக்கள் 'பட்டாபிஷேகம் படித்தல்' என்று சிறப்புடன் அழைத்து வருகிறார்கள்.

இந்தப் 'பட்டாபிஷேகம் படித்தல்' ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதம் முதல் சனிக்கிழமை துவங்கப்பெற்று கடைசி சனிக்கிழமை வரை படிக்கப்பட்டு வருகிறது. துவக்க நாளும் ஒவ்வொரு சனிக்கிழமையும் பெரு விழாக்களாகக் கொண்டாடப்படுவதோடு சீதாராம கல்யாணம், ராமலிங்க பிரதிஷ்டை, பரத்வாஜ விருந்து, கடைசி நாளான பட்டாபிஷேகம் ஆகியனவும் விசேஷமாகக் கொண்டாடப்படுகின்றன. இப்போது பட்டாபிஷேகம் படித்து வரும் குமாரசாமி வாத்தியார் அவர்களுக்கு எண்பது வயது ஆன போதிலும், அவர்கள் இதை ஒரு சிறந்த தொண்டாகக் கருதி விடாமல் படித்து



www.npnagarathar.com

வருகிறார்கள். இவருக்குப் பின் வருபவர்கள் ஓலைச்சுவடிகளைப் படிக்க இயலாது என்பதாலும், இன்னும் பல நூற்றாண்டுகள் இச்சிறந்த தொண்டு நிலைக்க வேண்டும் என்பதாலும் 1985 ஆம் ஆண்டு ஓலைச் சுவடியில் உள்ள நடைக்காவியம் புத்தக வடிவமாக்கப்பட்டது. இந்த சிறந்த தொண்டு இக்குடும்பத்தாரைப்போலவே சாமியாடிச் செட்டியார் குடும்பத்தார், பெ. ராம. குடும்பத்தார் ஆகிய இரு குடும்பத்தாராலும் தனித்தனியே சிறப்புடன் நடத்தப்பட்டு வருகிறது.

நகரத்தார் பெருமக்களில் சில குடும்பத்தினரால் நடத்தப்பட்டு வரும் இச்சிறந்த தொண்டு அவர்களது இலக்கிய ஆர்வத்தையும், இறைப்பற்றையும் வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது. தலைமுறைகள் பல கடந்து நடந்து வரும் இச்சிறந்த தொண்டைப் பார்த்துத்தான் கவிஞர் கண்ணதாசன் அவர்கள்

“காலமெனும் ஆழியிலும்
காற்று மழை ஊழியிலும்
சாகாது கம்பனவன் பாட்டு - அது
தலைமுறைக்கும் எழுதி வைச்ச சீட்டு”

எனப் பாடினார்களோ என எண்ணத் தோன்றுகிறது. காற்று, மழை, ஊழியாலும் தடைபடாது காலம் காலமாக நடந்து வரும் இச்சிறந்த தொண்டையும் அதை நடத்தி வரும் நகரத்தார் குடும்பங்களையும் எம்பெருமான் ஸ்ரீராம சந்திர மூர்த்தியின் தண்ணருள் என்றும் காக்குமாக!



www.npnagarathar.com

# நற்சாந்துபட்டி புள்ளி விபரங்கள்
## (கோவில் வாரியாக)

## இலுப்பக்குடி கோவில் புள்ளி விபரம்

சி.பழ.கரு. சுப்பிரமணியன்
சி.வெ.சி.வெ. ராமநாதன்
ஷை மகன் வெள்ளையப்பன்
ஷை தம்பி. பழனியப்பன்
வெ.சி.அள. சின்னாத்தான்
ஷை மகான் காசி(எ) செல்வமணி
ஷை தம்பி அண்ணாமலை (எ) சம்மந்தம்
வெ.சி.அள. அடைக்கலவன் (எ) சிங்காரம்
சி.வெ.சி. சுப்பிரமணியன்
ஷை மகன் சின்னையா (எ) சோமசுந்தரம்
சி.வெ.லெ.சுப. லெட்சுமணன்
ஷை தம்பி சுப்பிரமணியன் (எ) ஷண்முகம்
ஷை தம்பி சிதம்பரம்
சி.கரு.பழ. கருப்பாத்தான்
ஷை மகன் கருப்பையா
ஷை மகன் பழனியப்பன் (எ) சேது
ஷை தம்பி சுப்பிரமணியன்
சி.கரு.பழ.கரு. குமரப்பன்
வெ.பெரி.நா. பெரியகருப்பன்
ஷை மகன் நாராயணன்
வெ.பெரி.மு.று. முத்துராமன்
ஷை தம்பி பழநியப்பன்
பெரி.பெ.பெரி. முத்துக்கருப்பன்
ஷை மகன் சுப்பையா
நா.க.பெ.நா. பெரியகருப்பன் (எ) மணி
பெரி.நா.லெ.மா.(எ)மா. லெட்சுமணன்
ஷை தம்பி முருகப்பன்
வெ.வயி.று.வயி. இராமநாதன்
வெ.வயி.று. வள்ளியப்பன்
ஷை மகன் வ. ராமநாதன் (எ) ராமு
று.பெரி.வ.று. வள்ளியப்பன்
ஷை தம்பி ராமநாதன்
ஷை தம்பி குமரப்பன்
வெ.று.பழ. சின்ன வள்ளியப்பன்
சி.வ.பழ. வள்ளியப்பன்
பழ.சிவ. அண்ணாமலை
பெ.று.று.று.று. ராமநாதன் (எ) சம்மந்தம்
ஷை மகன் ராமநாதன் (எ) செந்தில்
பெ.று.று.று.று. காசி விஸ்வநாதன்
பெ.று.று.று.லெ. ராமநாதன் (எ) சோம.கணேசன்
பெ.று.று.று.சுப. ராமநாதன்
ஷை தம்பி காசி விஸ்வநாதன்
பெ.று.று.லெ. ராமநாதன் (எ) முத்து
ஷை மகன் ராமநாதன் (எ) கணபதி
ஷை தம்பி லெட்சுமணன்
பெ.று.று.லெ. ராமநாதன்
ஷை மகன் ராமநாதன்
ஷை தம்பி லெட்சுமணன்
பெ.று.று.லெ. சோமசுந்தரம்
ஷை மகன் லெட்சுமணன்
ஷை தம்பி முருகப்பன்
பெ.று.று.சித. ராமநாதன் (எ) கணபதி
ஷை மகன் சிதம்பரம் (எ) காசி
பெ.று.று.சித.லெ.(எ) வில்வநாதன்
ஷை மகன் இளங்கோ (எ) ராமு
பெ.று.று.சித.லெ. (எ) வில்.சிதம்பரம்
ஷை தம்பி நடராஜன்
பெ.று.று.சித.முரு (எ) மணிவாசகம்
ஷை மகன் கணபதிராமன்
பெ.று.று.சித. நடராஜன்
ஷை மகன் ராமநாதன் (எ) அருண்மொழி
பெ.று.லெ.று. ராமநாதன் (எ) கணபதி
ஷை மகன் ராம (எ) சேதுராமன்
ஷை தம்பி லெட்சுமணன்
பெ.று.லெ.று. லெட்சுமணன் (எ) பெருமாள்
ஷை மகன் சேது (எ) ராமநாதன்
ஷை தம்பி வளத்தப்பன் (எ) நடராஜன்
ஷை தம்பி பெரியகருப்பன்
ஷை தம்பி அழகப்பன்
பெரி.சி.று. பழனியப்பன்
ஷை மகன் சொக்கலிங்கம்
அள.கு.று. முருகப்பன்
ஷை மகன் ராமநாதன்
ஷை தம்பி முத்துப் பழனியப்பன்
ஷை தம்பி சுப்பிரமணியன்
வ.முரு. முத்தையா



www.npnagarathar.com

ஷ மகன் முருகப்பன்
சுப.று. முத்துராமன்
கா.பெ.று. பெரிய கருப்பன்
ஷ மகன் ராமநாதன்
ஷ தம்பி முருகப்பன்
பழ.கா. மெய்யப்பன் சுந்தரம்
ஷ மகன் மெய்யப்பன்
ப.மெ. நாகநாதன்
ஷ மகன் சிதம்பரம்
ஷ தம்பி பழனியப்பன்
ஷ தம்பி மீனாட்சிசுந்தரம்
மு.பெரி.பழ. வீரப்பன்
மு.பெரி.பழ. சுப்பிரமணியன்
ஷ மகன் பழனியப்பன்
மு.பெரி.பழ. சுந்தரேசன்
வயி.சுப.கரு. வைரவன்
ஷ மகன் கருப்பையா (எ) சேகர்
ஷ தம்பி சுப்பிரமணியன்
வயி.சுப.கரு. சுப்பிரமணியன்
ஷ தம்பி சொக்கலிங்கம்
ஷ தம்பி வீரப்பன்
மு.வீர.வயி.பழ. வைரவன்
வீர.மு.வீர.வீரப்பன்
வீர.மு.சுப. முத்தையா
ஷ மகன் சின்னக் கருப்பன்
வீர.மு.சுப. அண்ணாமலை
ஷ தம்பி வயிரவன்
குள.கரு.மு. கருப்பாத்தான் (எ) பெருமாள்
ஷ மகன் முத்து
ஷ தம்பி அழகப்பன் (எ) செந்தில்
ஷ தம்பி கருப்பஞ் செட்டி (எ) பஞ்சு
அ.மு.வெ. கருப்பையா
மு.பெரி.வெ.பெரி. வெள்ளையப்பன் (எ) வயிரவன்
ஷ தம்பி அடைக்கலவன்
மு.பெரி.மு. சிவனடியான்
மு.பெரி.மு.சிவ. முத்தையா (எ) சிங்காரம்
மு.பெரி.மு. பெரிய கருப்பன்
முத்.று.முத்தடைக்கப்பன்
ஷ மகன் ராமநாதன்
ஷ தம்பி அருணாசலம் (எ) சம்மந்தம்
ஷ தம்பி சுப்பிரமணியன்
சி.று.வ.று. ராமநாதன்
ஷ மகன் வள்ளியப்பன்
ஷ தம்பி ராஜேந்திரன்
று.சி.வெ..வ. வெள்ளையப்பன்
ஷ மகன் கண்ணன்
ஷ தம்பி சிதம்பரம்
று.சி.வெ.வ. முத்துப்பழனியப்பன்
ஷ மகன் வள்ளியப்பன்
று.சி.வெ.லெ.று. லெட்சுமணன்
று.சி.வெ.லெ. ரெங்கநாதன்
ஷ மகன் லெட்சுமணன்
ஷ தம்பி வெள்ளையப்பன்
வெ.வ. வள்ளியப்பன்
ஷ மகன் சம்பந்தம் (எ) வெள்ளையப்பன்
ஷ தம்பி செந்தில் (எ) சுப்பிரமணியன்
ஷ தம்பி சொக்கலிங்கம்
அ.மு.சு.று. அண்ணாமலை (எ) ஏகப்பன்
சி.பெரி.சி. சின்னையா (எ) சோலையப்பன்
சி.பெரி.சுப. பெரியகருப்பன் (எ) கணேசன்
சி.சுப. சோமசுந்தரம்
பழ.சுப. அடைக்கலவன் (எ) பெருமாள்

***மொத்தப் புள்ளி 138***

## வயிரவன் கோயில் புள்ளி விபரம்

ப.குள.சிவ.நா. சிவனடியான்
ப.குள.சிவ. பழனியப்பன்
ஷ மகன் செந்திவடிவேலன் (எ) சிவனடியான்
பழ.சி.று.சிவ. ராமனாதன்
ஷ மகன் சிங்கார வடிவேலன்
ஷ தம்பி சிவசாமி
ஷ தம்பி இராமநாதன்
பழ.சி.று.சிவ. சிவனடியான்
ஷ மகன் சிவசாமி
பழ.சி.று.சிவ. பழனியப்பன்
ஷ மகன் சிவசாமி
ஷ தம்பி ராமசாமி
ஷ தம்பி மீனாட்சி சுந்தரம்
பழ.கும.பழ. குமரப்பன்
ஷ மகன் பழநியப்பன்
ஷ தம்பி நாராயணன்
ஷ தம்பி ராமசாமி
பழ.பெரி. பழனியப்பன்
ப.குள.குழந்தை வேலன்
ப.குள.குழ. பழனியப்பன்



www.npnagarathar.com

குள.று.குள. குமரப்பன்
ஷி மகன் இராமசாமி
ஷி தம்பி குழந்தைவேலன்
ஷி தம்பி சின்னையா
குள.று.குள. கருப்பையா
குள.கும.குள.கும. வெள்ளையப்பன்
கும.குள. நடராஜன்
ஷி மகன் குளந்தை வேலன் (எ) சுப்பிரமணியன்
ஷி தம்பி அண்ணாமலை
குள.கும.று. குமரப்பன்
ஷி மகன் சொக்கலிங்கம்
குள.கும.சித. குமரப்பன்
ஷி மகன் ஆண்டியப்பன்
ஷி தம்பி குமரப்பன்
ஷி தம்பி முத்துராமன் (எ) சுப்பிரமணியன்
ஷி தம்பி வைரவன்
குள.கும.சித. ராமநாதன்
ஷி தம்பி சிதம்பரம் (எ) நடராஜன்
ஷி மகன் சிதம்பரம் (எ) கணேசன்
குள.கும.கும. சுப்பிரமணியன்
ஷி மகன் நடராஜன்
ஷி தம்பி குமரப்பன் (எ) சிவஞானம்
பெரி.பெ.பெரி. பெரியகருப்பன்
ஷி மகன் பெரியகருப்பன் (எ) ராமநாதன்
ஷி தம்பி மாணிக்கம் (எ) அடைக்கலவன்
ஷி தம்பி ராஜேந்திரன் (எ) லெட்சுமணன்
ஷி தம்பி முத்தையா
கு.று. குமரப்பன்
ஷி மகன் ராமநாதன்
குள.முரு. முருகப்பன்
ஷி மகன் பழநியப்பன்
அ.மு. சிதம்பரம்
று.முரு. ராமநாதன்
ஷி மகன் முருகப்பன்
ஷி தம்பி பழநியப்பன்
று.முரு. செட்டியப்பன்
முரு.அ. முருகப்பன்
ஷி மகன் அண்ணாமலை
கும.அ.பழ. பழநியப்பன்
ஷி மகன் அண்ணாமலை
ஷி மகன் பழநியப்பன்
கும.அ.பழ. ராமநாதன்
ஷி மகன் பழநியப்பன்

ந.சுப.ந. சுப்பிரமணியன்
ந.சு.சுப. பழநியப்பன்
ந.பழ. சுப்பிரமணியன்
ஷி மகன் தெய்வானை சுந்தரம்
குள.ப.சுப. சுப்பிரமணியன் (எ) பெருமாள்
குள.சுப. குழந்தைவேலன் (எ) அண்ணாமலை
ஷி மகன் சுப்பிரமணியன்
ந.மு.ப.சு. பழநியப்பன்
ஷி மகன் சுப்பிரமணியன்
ஷி தம்பி தம்பி குமரப்பன்
பழ.சு.ந. குமரப்பன்
ந.மு.று.சுப. ராமநாதன்
ஷி மகன் வேலாயுதம்
ந.மு.அ.மு.கும. சுப்பையா
ஷி தம்பி சுந்தரம் (எ) முத்தழகப்பன்
ஷி தம்பி இராமநாதன்
ந.மு.அமு.அ. அண்ணாமலை
ஷி தம்பி முத்தழகப்பன்
ஷி தம்பி காசி
ஷி தம்பி தமிழரசு
ந.மு.அ.மு. சிதம்பரம்
ஷி மகன் குமரப்பன் (எ) குமார்
ந.மு.அ.வீர. குமரப்பன்
ஷி மகன் அண்ணாமலை
ஷி தம்பி வீரப்பன் (எ) மணி
ஷி தம்பி சோமசுந்தரம்
ந.மு.அ.வீர. அண்ணாமலை
ஷி மகன் அண்ணாமலை
ஷி தம்பி வீரப்பன்
ஷி தம்பி காசி
ஷி தம்பி முத்தழகப்பன்
ஷி தம்பி சிதம்பரம்
ந.மு.அ.ந. முத்தழகப்பன்
ந.பழ.பசு.பழ. ராமநாதன்
ஷி தம்பி சிங்காரம்
ந.பழ. நல்லகருப்பன்
ஷி மகன் பழநியப்பன் (எ) ராஜேந்திரன்
அ.மு.று.சுப. இராமநாதன்
ஷி மகன் சுப்பையா
ஷி தம்பி ராமநாதன்
ஷி தம்பி கணேசன்
அரு.சுப. அருணாசலம்
முரு.ந.பழ. நாச்சியப்பன்



www.npnagarathar.com

சு.நா.சுப. நாகப்பன்
ஷை தம்பி பழனியப்பன்
அள.மு. வீரப்பன்
ஷை மகன் முத்துக் கருப்பன்

**மொத்தப் புள்ளி 110**

## இளையாத்தங்குடி கோவில் புள்ளி விபரம்

மு.மு.று.சோம. முத்துராமன்
ஷை மகன் சோமசுந்தரம்
ஷை தம்பி முத்துராமன்
வெ.வீர.சித.வீர.சி. வீரப்பன்
ஷை தம்பி சோமசுந்தரம்
அ.வீர. அண்ணாமலை
ஷை மகன் வீரப்பன்
ஷை தம்பி செந்தில் (எ) முருகப்பன்
பழ.பெரி.மு. பெரியகருப்பன்
ஷை தம்பி முத்து வள்ளியப்பன்
ஷை தம்பி பழநியப்பன் (எ) சம்மந்தம்
வீர.சா.சுப.வீர. சுப்பிரமணியன்
ஷை தம்பி சிதம்பரம்
ஷைதம்பி சாத்தப்பன்
சித.கரு. கருப்பாத்தான்
ஷை மகன் சிதம்பரம்
ஷை தம்பி சொக்கலிங்கம்
சா.வீர.அ.வீர. அண்ணாமலை
ஷை மகன் வீரப்பன்
ஷை தம்பி கண்ணப்பன் (எ) ரெங்கனாதன்
சா.வீர.அ.ந. ஆண்டியப்பன்
சா.வீர.அ.சுப. அண்ணாமலை
ஷை மகன் சுப்பையா
ஷை தம்பி கருப்பையா (எ) மோகன்
சா.வீர.அ.சுப. வள்ளியப்பன்
சா.வவீர.அ.சுப.வீர. அன்னபூரணிநாதன்
சா.வீர.அ. சாத்தப்பன்
சா.சித. சாத்தப்பன்
ஷை மகன் சிதம்பரம்
சா.சித. முத்துராமன்
சித.பெரி.வீர. பெரியகருப்பன்
ஷை மகன் உமையாள் சுந்தரம்
சித.பெரி.வீர. சின்னாத்தான்
ஷை மகன் வீரப்பன்
ஷை தம்பி சுப்பிரமணியன்
சித.பெரி.வீர. மீனாட்சி சுந்தரம்
ஷை மகன் வீரப்பன் (எ) சேகர்
வீமு.பசு.வீர.சுப. சிதம்பரம்
வீமு.பசு.வீர.பழ. வீரப்பன்
ஷை மகன் பழநியப்பன்
ஷை தம்பி ராமநாதன்
வீ.மு.பசு.முரு. முருகப்பன்
வீ.அ.மு. அண்ணாமலை
ஷை மகன் முத்துராமன்
வீமு.வீர. முத்துக்கருப்பன்
ஷை மகன் வீரப்பன் (எ) வீரராகவன்
வீமு.சுப.வீர. சுப்பிரமணியன் (எ) மோகன்
வீமு.சுப. முத்துக் கருப்பன்
ஷை மகன் சுப்பிர்மணியன்
ஷை தம்பி கருப்பையா (எ) இராஜேந்திரன்
வீமு.சுப. நாச்சியப்பன்
ஷை மகன் சுப்பிரமணியன்
ஷை தம்பி முத்துராமன்
வீ.மு.மெ. முத்துக்கருப்பன்
வெ.சித.மு.று.மு. ராமநாதன்
ஷை தம்பி சுப்பிரமணியன்.
ஷை தம்பி சிதம்பரம்
ஷை மகன் முத்துராமன்
வெ.சித.மு.று.மு. மாணிக்கம்
ஷை தம்பி கதிரேசன்
வெ.சித.மு.சுப. பெரியகருப்பன்
ஷை மகன் சுப்பிரமணியன்
ஷை தம்பி வீரப்பன்
ஷை தம்பி முத்துராமன்
பெரி.அரு.வெ.லெ. வெங்கடேசன் (எ) கணேசன்
ஷை மகன் வெங்கடாசலம்
பெரி.அரு.வெ. பெரியகருப்பன்
ஷை மகன் வெங்கடாசலம் (எ) செல்வராஜ்
பெரி.அரு. முருகப்பன்
பெரி.லெ.று.லெ. லெட்சுமணன்
ஷை மகன் சிதம்பரம்
ஷை தம்பி சுப்பிரமணியன்
ஷை தம்பி ரெங்கநாதன்
பெரி.லெ.ராம.சுப. மகன் ராமனாதன்
பெரி.லெ.று.குள. ராமநாதன்
பெரி.லெ.று. ராமநாதன்
பெரி.லெ.பெரி. லெட்சுமணன்



www.npnagarathar.com

ஷை மகன் மெய்யப்பன்
ஷை தம்பி கோபால்
பெரி.லெ.பெரி.அ. பெரியகருப்பன் (எ) கணபதி
பெரி.லெ.லெ. லெட்சுமணன்
ஷை மகன் நாச்சியப்பன்
ஷை மகன் லெட்சுமணன்
பெரி.லெ.லெ. தியாகராசன் (எ) சின்னையா
ஷை தம்பி லெட்சுமணன்
ஷை தம்பி வைரவன்
பெரி.லெ. அருணாசலம்
ஷை மகன் லெட்சுமணன்
பெரி.அ.லெ. அடைக்கலவன்
ஷை மகன் லெட்சுமணன்
ஷை தம்பி அடைக்கலவன்
ஷை தம்பி முருகப்பன்
ஷை தம்பி பெரியகருப்பன்
மு.பெரி.சித.பழ. சிதம்பரம்
ஷை மகன் பெரியகருப்பன் (எ) மாணிக்கம்
மு.பெரி.சித.பழ. வள்ளியப்பன்
ஷை தம்பி முத்து
ஷை தம்பி லெட்சுமணன்

***மொத்தப் புள்ளி 98***

## பிள்ளையார்பட்டி கோவில் புள்ளி விபரம்

முரு.மு.பெரி. வள்ளியப்பன்
முரு.லெ.முரு.லெ. முருகப்பன்
முரு.லெ.பெரி.லெ. பெரியகருப்பன்
ஷை தம்பி முத்தையா
ஷை தம்பி லெட்சுமணன்
முரு.லெ.பெரி. குமரப்பன்
ஷை மகன் பெரியகருப்பன் (எ) சம்மந்தம்
ஷை தம்பி வீரப்பன்
ஷை தம்பி லெட்சுமணன் (எ) ரவி
முரு.லெ.று. உமையாள் சுந்தரம்
ஷை மகன் இராமநாதன்
ஷை தம்பி சிதம்பரம்
முரு.நா. நல்லகருப்பன்
ஷை மகன் நாராயணன்
ஷை தம்பி முத்துராமன்
ஆ.மு.ஆ.பெரி. சோலையப்பன் (எ) ஆண்டியப்பன்
ஆ.மு.ஆ. முத்துராமன்

ஷை மகன் பெரியகருப்பன் (எ) பெருமாள்
ஷை தம்பி வெவங்கடேசன்
சி.மு.று.மு.பெரி. முத்துராமன்
ஷை தம்பி சிதம்பரம்
ஷை தம்பி பெரியகருப்பன் (எ) சுகுமார்
மெ.கா.மு.மெ.மு. மெய்யப்பன்
ஷை தம்பி சிதம்பரம்
ஷை தம்பி வீரமணி
ஷை தம்பி காடப்பன் (எ) ராஜு
ஷை தம்பி கிருஷ்ணப்பன்
மெ.மெ. மெய்யப்பன்
மெ.ப.ராம.பழ. இராமநாதன்
ஷை மகன் பழநியப்பன்
ஷை தம்பி ராமநாதன்
மெ.ப.ராம.மெ. இராமநாதன்
ஷை தம்பி பழநியப்பன்
ஷை தம்பி அண்ணாமலை
ஷை தம்பி சீனிவாசன்
கி.மு.கா. மெய்யப்பன்
கும.பெரி.மு.பெரி.மு. பெரியகருப்பன்
கும.பெரி.மு.கும.பெரி. குமரப்பன் (எ) நந்தகுமார்
கும.பெரி.மு.கும. முத்துராமன்
ஷை மகன் குமரப்பன்
ஷை தம்பி பழனியப்பன்
ஷை தம்பி முத்துராமன்
கும.பெரி.மு.கும. மெய்யப்பன்
ஷை மகன் குமரப்பன்
கும.பெரி.மு.பெரி. சேதுராமன்
ஷை மகன் பெரியகருப்பன் (எ) சிங்காரம்
கும.பெரி.மு.பெரி. குமரப்பன்
ஷை தம்பி அருணாசலம்
கும.பெரி.மு.மெ. முத்துராமன்
ஷை மகன் மெய்யப்பன்
ஷை தம்பி வயிரவன்
ஷை தம்பி கதிரேசன்
ஷை தம்பி பெரியகருப்பன்
ஷை தம்பி லெட்சுமணன்
கும.பெரி.மு.மெ. பெரியகருப்பன்
கும.பெரி. அழகப்பன்
ஷை மகன் பெரியகருப்பன்
கும.பெரி.கும.பெரி. மெய்யப்பன்
ஷை தம்பி சாத்தப்பன்
ந.கும. நல்லகருப்பன்



www.npnagarathar.com

ஷ மகன் குமரப்பன்
ஷ மகன் நல்லகருப்பன்
கும.ந.மெ. நல்லகருப்பன்
ஷ மகன் மெய்யப்பன்
கும.ந.மெ. இராமநாதன்
மு.கும.மு. குமரப்பன்
ஷ மகன் முத்துராமன்
ஷ தம்பி வீரப்பன் (எ) கணேசன்
ஷ தம்பி மெய்யப்பன்
ஷ தம்பி கல்யாண சுந்தரம்
மு.கும.மு. அண்ணாமலை
ஷ மகன் முத்துராமன்
ஷ தம்பி குமரப்பன் (எ) சொக்கலிங்கம்
ஷ தம்பி முத்து கல்யாணசுந்தரம்
மு.அரு.மு. நாகராஜன்
ஷ மகன் முத்துராமன் (எ) சுந்தரம்
மு.கி.மு. கிருஷ்ணப்பன்
ஷ மகன் முத்துராமன்
ஷ தம்பி இராமையா
ஷ தம்பி கிருஷ்ணப்பன்
மு.கி.மு. முத்துக்கருப்பன்
மு.கி.மு.மு. ஜெயகோபி (எ) சுப்பிரமணியன்
மு.கி.மு. முத்துராமன்
ஷ மகன் முத்துராமன்
ஷ தம்பி வைரவன்
ஷ தம்பி கிருஷ்ணப்பன்
மு.கி.மு. சுந்தரம்
மு.கி.பழ. கிருஷ்ணப்பன்
ஷ மகன் முத்துக்கிருஷ்ணன்
ஷ தம்பி பழநியப்பன்
ஷ தம்பி முத்துராமன்
ஷ தம்பி சுப்பிரமணியன்.
மு.கி.பழ. சுப்பிரமணியன்
ஷ மகன் பழநியப்பன்
ஷ தம்பி சுவாமிநாதன்
கும.மு.சோம. முருகப்பன்
ராம.வெ.ராமசாமி
சி.ஆ.சி.சி. சின்னக்கருப்பன்
ஷ தம்பி நல்லகருப்பன்
ஷ தம்பி ராமசாமி
சி.ஆ.லெ.சி. லெட்சுமணன்
ஷ தம்பி பழனியப்பன்
ஷ தம்பி ஆண்டியப்பன்
சி.ஆ.லெ. பழனியப்பன்
ஆ.சி.லெ.று. லெட்சுமணன்
ஷ மகன் இராமநாதன் (எ) சுப்பிரமணியன்
ஆ.மெ. ஆண்டியப்பன்
ஷ தம்பி முருகப்பன்
ஆ.மெ.று. மெய்யப்பன்
ஷ மகன் இராமநாதன் (எ) மணி
ஷ தம்பி பழநியப்பன்
ஆ.மெ.ராம. சுப்பிரமணியன்
ஷ தம்பி அடைக்கலவன்
ஷ தம்பி ஆண்டியப்பன்
ஆ.வெ.ஆ. சின்னக்கருப்பன்
ஷ மகன் ஆண்டியப்பன்
ஷ தம்பி பெரியகருப்பன் (எ) சிதம்பரம்
ஆ.வெ.ஆ. பழநியப்பன்
ஷ மகன் சிவப்பிரகாசம் (எ) அடைக்கலவன்
வெ. அ. ஆண்டியப்பன்
ஷ தம்பி சின்னக்கருப்பன் (எ) மெய்யப்பன்
சி.ஆ. ஆண்டியப்பன்
ஷ மகன் சி.ஆ.ஆ.ஆ. ஆண்டியப்பன்
பெரி.சி.பெரி. சின்னக்கருப்பன்
ஷ மகன் பெரியகருப்பன் (எ) சுந்தரம்
பெரி.சி.பெரி. சாத்தப்பன்
ஷ மகன் சோலையப்பன்
ஷ தம்பி வேலு
பெரி.சி.பெரி. ஆண்டியப்பன்
ஷ மகன் பெரியகருப்பன் (எ) செந்தில்
ஷ தம்பி அண்ணாமலை (எ) மோகன்
பெ.ந.கா.ந. பெரியகருப்பன் (எ) காசிவிஸ்வநாதன்
பெ.ந.பெ.வயி. பெரியகருப்பன் (எ) சோலையப்பன்
ஷ தம்பி அண்ணாமலை
பெ.ந.சித. மெய்யப்பன்
பெ.ந.சித. கணேசன்
ஷ மகன் சிதம்பரம்
ஆ.பெரி. ஆண்டியப்பன்
ஷ மகன் பெரியகருப்பன் (எ) நாகராஜன்
ஆ.பெரி. லெட்சுமணன்
ஷ தம்பி சுப்பிரமணியன்
ஷ தம்பி கற்பக கணபதி
பெரி.சுப. ராமநாதன்
ஷ மகன் சுப்பிரமணியன்
பெரி.சுப.மு. வெள்ளையப்பன்
ஷ தம்பி சிதம்பரம்



www.npnagarathar.com

212

பெரி.சுப. கிருஷ்ணப்பன்
ஷி மகன் ரகுபதி சுப்பிரமணியன்
று.சு.வயி.வயி. ராமநாதன்
று.வயி.சு.சுப.வயி.சுப. சுப்பிரமணியன் (எ) சம்மந்தம்
ஷி தம்பி வள்ளியப்பன்
ஷி தம்பி சொக்கலிங்கம்
று.வயி.சு.சுப. ராமசாமி
ஷி மகன் சுந்தரேசன் (எ) சுப்பிரமணியன்
ஷி தம்பி வைரவன்
று.வயி.சுப. சொக்கலிங்கம்
கா.பழ.ஆ.பழ. பழநியப்பன்
று.பி.சுப.பழ. சுப்பிரமணியன்
ஷி தம்பி சொக்கலிங்கம்
ஷி தம்பி வைரவன்

***மொத்தப்புள்ளி 160***

## மாத்தூர் கோவில் புள்ளி விபரம்

கு.பழ.பெரி.று. பெரியகருப்பன்
ஷி மகன் அடைக்கலவன்
ஷி தம்பி ராமசாமி (எ) கனகு
ஷி தம்பி சபாபதி (எ) இராஜேந்திரன்
ஷி தம்பி பழனியப்பன்
கு.பழ.பெரி.லெ.பெரி. லெட்சுமணன்
ஷி தம்பி சிதம்பரம்
ஷி தம்பி திருப்பதி (எ) வெங்கடாசலம்
ஷி தம்பி பெரியகருப்பன் (எ) கணேசன்
கு.பள.கு.று. குப்பாத்தான்
கும.குள.பெரி.பெரி. வள்ளியப்பன் (எ) நாச்சியப்பன்
குள.கும.வெ.குமரப்பன்
ஷி மகன் வெள்ளையப்பன் (எ) மணிவண்ணன்
குள.கும.வெ. இராமநாதன் (எ) சிவசாமி
குள.கும. பெரியகருப்பன்
ஷி மகன் குமரப்பன்
குள.முரு. சுந்தரம் (எ) குமரப்பன்
ஷி மகன் குழந்தைவேலன் (எ) மணிவண்ணன்
குள.முரு. அடைக்கலவன் (எ) சிங்காரம்
முரு.ஆ.முரு. ஆறுமுகம்
ஷி மகன் முருகப்பன்
ஷி தம்பி ஆறுமுகம் (எ) குமார்
ஷி தம்பி சிதம்பரம்
பெரி.கும.பெரி. குமரப்பன்
ஷி மகன் பெரியகருப்பன்
ஷி தம்பி காசி விஸ்வநாதன்
பெரி.கும.பெரி. ஆவுடையப்பன்
ஷி தம்பி இராமநாதன்
மு.வ.கு.பழ.பழ. குமரப்பன்
ஷி மகன் பழனியப்பன் (எ) சிவப்பிரகாசம்
மு.வ.கு.பழ.பழ. கருப்பையா (எ) திருநாவுக்கரசு
ஷி தம்பி இராமனாதன்
ஷி.தம்பி காசி (எ) லெட்சுமணன்
கும.குள.கும. குழந்தைவேலன் (எ) பெருமாள்
குள.கும.சுப. குமரப்பன்
ஷி தம்பி சிவசாமி
கு.பழ.கு. பழநியப்பன்
ஷி தம்பி குப்பாத்தான்
கு.பழ.கு. வெங்கடாசலம்
ஷி தம்பி அண்ணாமலை
கு.சித. குப்பாத்தான்
ஷி மகன் சிதம்பரம்
ஷி தம்பி குப்பாத்தான்
ஷி தம்பி முத்துக்கருப்பன் (எ) சொக்கலிங்கம்
கு.சித.வெள்ளையப்பன்
ஷி மகன் சிதம்பரம்
ஷி தம்பி குப்பாத்தான்
கும.று. குமரப்பன் (எ) மீனாட்சி சுந்தரம்
ஷி மகன் இராமநாதன் (எ) திருப்பதி
கும.று.பழ.பெரி. பழநியப்பன்
ஷி தம்பி இராமநாதன்
கும.ராம.பழ. இராமநாதன்
கி.வீர.பள.வெ. பழநியப்பன்
ஷி தம்பி கிருஷ்ணப்பன்
வெ.நா.சி. நாச்சியப்பன்
கி.அ.வீர. மாணிக்கம்
ஷி மகன் கதிரேசன்
கும.நா. சுந்தரராமன்
ஷி தம்பி லெட்சுமணன்

***மொத்தப்புள்ளி 60***

***நற்சாந்துபட்டியில் ஆகமொத்த புள்ளி விபரம்***

| | |
|---|---|
| இலுப்பக்குடி கோவில் | 138 |
| வயிரவன் கோவில் | 110 |
| இளையாத்தங்குடி கோவில் | 98 |
| பிள்ளையார்பட்டி கோவில் | 160 |
| மாத்தூர் கோவில் | 60 |

***ஆக மொத்தம் 566***



www.npnagarathar.com

# நன்றியுரை

நற்சாந்துபட்டியில் இருக்கும் ஸ்ரீ சிவகாமி அம்பிகை உடனாய சமேத சிதம்பரேசுவரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு விழா மலர் வெளியிடுவதில் எனக்கு ஒரு சிறு பொறுப்பு கிடைத்ததில் பெறுமகிழ்ச்சியடைகின்றேன். அதற்கு முதல் காரணமான எங்கள் ஊர் சின்ன ஊரணிப்பிள்ளையாருக்கு எனக்கு முதற்கண் நன்றியை மலர்க்குழு சார்பாகத் தெரிவித்து வணங்குகின்றேன். பிள்ளையார் கோவிலில் தான் குடமுழுக்கு விழாத்தலைவர் திரு.பெரி. அழகப்பசெட்டியார் இதுபற்றி என்னிடம் தெரிவித்தார்கள். சிறுமலராக வெளியிடலாம் என்று எண்ணிய எங்களுக்கு பெரிதும் ஊக்கமளித்து உற்சாகப்படுத்தி முழுப் பொறுப்பையும் ஏற்று இம்மலரை இவ்வளவு சிறப்பாக வெளியிட, உதவிய மலர்க்குழுத் தலைவர் எனது மாமனார் திரு சிவ. சிவனடியான் செட்டியார் அவர்கள் தனது அனைத்துப் பணிகளையும் ஒதுக்கி இம்மலரை சிறப்புமிக்க வகையில் உருவாக்க உதவினார்கள். அவர்களுக்கும் என் நன்றி! சிரமம் பாராது பலமுறை சென்னைவந்து இனிமையாகப் பேசி இங்கு மலர் உருவாக உதவிசெய்தவர்களுடன் மிகவும் நெருங்கிப் பழகி உற்சாகப்படுத்திய பதிப்பாசிரியர் திரு ட.சோமு அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் கல்யாணமண்டபம் கட்ட வேண்டும் என தெரிவித்தவுடன் முழு உற்சாகத்தோடு இவ்வளவு அதிகமான விளம்பரங்களை வாங்கித்தந்த நற்சாந்துபட்டி நகரப் பெரு மக்களுக்கும், நகரத்தார் வணிகப் பெரு மக்களுக்கும், அனைத்து விளம்பரதாரர் களுக்கும், கட்டுரையாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அனைத்திற்கும் மேலாக குடமுழுக்கு விழாத்தலைவர் திரு பெரி. அழகப்ப செட்டியார் அவர்கள் கேட்டுக் கொண்டதற் காகவும் திரு.சிவ.சிவனடியார் செட்டியார் அவர்களின் நெருங்கிய நட்புக்காகவும் இம்மலரினை மனமுவந்து அன்புடன் இலவசமாக அச்சிட்டுத் தந்த பெரு மதிப்பிற்குரிய என் அண்ணன் பேராசிரியர் டாக்டர். ச.மெய்யப்பன் அவர்களுக்கும், அவர்களின் புதல்வர் திரு.மீனாட்சி சோம சுந்தரத்திற்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். திரு. டாக்டர். ச.மெய்யப்பன் அவர்கள் இம்மலரை இலவசமாக அச்சிட்டுத்தந்ததோடல்லாமல் நிறுவன பணியாளர்களை கடந்த ஒரு மாதமாக இம்மலர் உருவாக ஈடுபடுத்தியது அனைவரின் மனதையும் நெகிழ வைத்தது.

இம்மலர் உருவாக எனக்கு பக்கபலமாக இருந்த மணிவாசகர் பதிப்பகத்தின் மேலாளர் திரு.இரா.குருமூர்த்தி. திரு குருமூர்த்தியின் அரிய முயற்சியினால்தான் இம்மலர் உரிய நேரத்திற்குள் வெளியிடமுடிந்தது. விளம்பரங் களையும் கட்டுரைகளையும் மூன்று நாட்கள் முன்புவரை கொடுத்தாலும் மனங்கோணாமல் அவற்றை உடனுக்குடன் அச்சுக்கு ஏற்றி உதவி செய்தார்.

மற்றும் திரு க.நாராயணன் அவர்கள்; ஒய்வுற்ற காலத்திலும் அம்பத்தூரிலிருந்து சென்னைவந்து ஒவ்வொரு எழுத்தாக பிழை திருத்தி மலரை கூடியவரை பிழையில்லாமல் அச்சிட உதவியாக இருந்தார்.

மேலும் மணிவாசகர் பதிப்பகத்தின் பணியாளர்களான திரு பெரிச்சியப்பன் அவர்கள், திரு நா.முத்துராமன் அவர்கள், திரு அய்யப்பன் அவர்கள் பலவிதங்களில் எனக்கு உதவி செய்தனர். இம்மலரை அச்சிட்ட கணேஷ் பைண்டிஸ் ஒர்க்ஸ் பணியாளர்கள் திரு நா. காசி விசுவநாதன், திரு PL. லெட்சுமணன். அவர்களின் பங்கு பெரிதும் போற்றுதற்குரியது. மேலும் இம்மலரில் அச்சிட்ட போட்டோக்களை வரிசைப்படுத்தி சிறப்பாக அச்சிட்ட ஸ்ரீ கைலாஷ் பிரிண்டர்ஸ் மயுரம்பியா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கோவை சிவா கார்ப்பரேஷன் பணியாளர்கள் திரு. S. சொக்கலிங்கம், திரு. C. வைரவன்

www.npnagarathar.com

இருவரும் இரண்டு மாதகாலமாக விளம்பரங்கள் சேகரித்து, கணக்குகளையும் வங்கிக் கணக்குகளையும் நிர்வகித்து திறமையாக செயல்பட்டார்கள். அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இம்மலரின் சில பகுதிகளை அச்சிட்டு உரிய நேரத்தில் கிடைக்க ஏற்பாடு செய்த

திருவாளர்கள்

1) சக்தி பிராசஸ், சென்னை-13

2) கே.பிடி. பிரிண்டர்ஸ், சிதம்பரம்.

3) சந்திரிகா பிரிண்டர்ஸ், சென்னை

4) அழகு பிரிண்டர்ஸ், சென்னை-1

5) அழகு பிரிண்டர்ஸ், மயிலை

6) காம்செட் கிராபிக்ஸ், சென்னை-14

7) அருண் எண்டர்பிரைசஸ், சென்னை

8) கணபதி கிராபிக்ஸ், சென்னை.

ஆகியோருக்கும், இம்மலரின் அட்டையை இவ்வளவு சிறப்பாக உருவாக்கித் தந்த ஓவியக் கலைஞர் திரு. G.K.மூர்த்தி அவர்களுக்கும் முகப்பு அட்டை அச்சிட்ட சுமன் அச்சகத்தார்க்கும் எனது உளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

அ. முத்துராமன்

செயலாளர்.

www.npnagarathar.com



**கோட்டூர் சுந்தரநாயகி அம்மன்**

கோட்டூரில் இருப்பவளாம் எங்கள் முத்துமாரி
குணம்நிறைந்த தாயவளாம் எங்கள் முத்துமாரி



சுற்றம் காத்தருளும் கோட்டூர் அம்மன்
கோயில் வெளிப்புறக்காட்சி

www.npnagarathar.com

# நற்சாந்துபட்டி அடைக்கம்மை அப்பத்தாள் கோவில் படைப்பு

நற்சாந்துபட்டி, வி. லெட்சுமிபுரம், விரையாச்சிலே, பனையப்பட்டி, நேமத்தான்பட்டி, ராமச்சந்திரபுரம், பள்ளத்தூர், புதுப்பட்டி, வேந்தன்பட்டி, குருவிக்கொண்டான்பட்டி ஆகிய பத்து ஊர் இலுப்பக்குடி நகரத்தார்களால் நடத்தப்படும் அடைக்கம்மை அப்பத்தாள் படைப்பானது, பொன்னமராவதியில் நடைபெற்றுவரும் துர்க்கை அம்மன் கோவில் படைப்பிற்கு அடுத்தபடியாக பெரிய படைப்பாக விளங்குகின்றது. இந்தப்படைப்பு வெகுகாலமாக நடைபெற்று இடையில் சில காலம் நடைபெருமல் இருந்து மீண்டும் **1965** வாகில் ஆரம்பித்து தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இதுவரை 11 படைப்புகள் நடைபெற்றுள்ளன.

இரண்டாண்டுக்கு ஒருமுறை ஆடிமாதத்தில் ஒரு நல்ல வெள்ளிக்கிழமை நாளில் இப்படைப்பு நடைபெறும். பத்து ஊர் இலுப்பக்குடி நகரத்தார்களுக்கும் படைப்பில் ஒவ்வோர் வேலே ஒதுக்கப்பட்டு, அதை அவர்கள் செவ்வனே செய்வார்கள். படைப்புக்கு முதல் வாரம் வெள்ளிக்கிழமை ஆலய பூஜை வழிபாட்டுக்காக பத்து ஊர் இலுப்பக்குடி நகரத்தார்களும் துவார் சென்று அங்கு அடைக்கம்மை அப்பத்தாளுக்கு பச்சரிசி பால் பொங்கலிட்டு வழிபட்டுவருவார்கள்.

படைப்பன்று பத்துஊர் இலுப்பக்குடி நகரத்தார் பெண்களும் படைப்பு பணியாரத்திற்கு மாவிடித்து பணியாரம் சுடுவார்கள். பணியாரம் சுட்டு முடிந்ததும் அன்று வெள்ளிக் கிழமை இரவு படைப்பு சிறப்பாக நடைபெறும். படைப்புக்கு அடுத்தநாள் கோவிலுக்கு அன்பளிப்பாக அளித்த பொருட்களே ஏலம் போடுவார்கள். அன்று நகரவிருந்து சிறப்பாக நடத்தி வரும் நகரத்தார்களுக்கு காளாஞ்சி வழங்கிக் கௌரவிப்பார்கள். ஏலம் முடிந்ததும் மறுநாள் பத்துஊர் இலுப்பக்குடி நகரத்தார்களுக்கும் காளாஞ்சி வழங்குவார்கள். பேரன், பேத்திகள், பெண்பிள்ளைகள் அனைவரும் வந்திருந்து படைப்பில் கலந்து கொள்வார்கள். அவர்களுக்கும் காளாஞ்சி வழங்கிக்கௌரவிக்கப்படும். படைப்பு நடைபெறும் மூன்று நாட்களும் பங்காளிகளுக்கு சிறந்த முறையில் விருந்து அளிக்கப்படும். படைப்பு முடிந்த மறுவாரம் வெள்ளிக்கிழமை இளம்படைப்பு என்று நடத்துவார்கள், அன்று படைப்புக்கு வரத்தோதில்லாதவர்களும், மற்றும் அனைவரும் வந்திருந்து அப்பத்தாளே வணங்கி ஆசிபெறுகிருர்கள்.

இப்படைப்புக்கு வி. லெட்சுமிபுரத்தைச் சேர்ந்த 'ப.செ.அ. சேவுகஞ் செட்டியார்' அவர்கள் வகையைச் சேர்ந்தவர்கள் பூசாரியாக இருந்து படைப்பை செவ்வனே சிறப்பாக நடத்துகிருர்கள். அதற்கு நற்சாந்துபட்டி இலுப்பக்குடி நகரத்தார்கள் உறுதுணையாக இருந்து படைப்பு ஏற்பாடுகளே சிறப்பாக செய்து கொடுக்கிருர்கள்.

— மு. சம்பந்தம்

www.npnagarathar.com

## நற்சாந்துபட்டி கற்பக விநாயகப்பெருமானுக்கு திருக்குட நீராட்டு

நற்சாந்துபட்டி சிவன்கோவிலுக்கு பின்புறமுள்ள கும.பெரி.,கும.ந.,கும.மு., ஆகியோர்களுக்கு சொந்தமான நந்தனவனத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற விநாயகர் ஆலயத்திற்கு **27-1-1991** ஞாயிற்றுக்கிழமை காலை வெகு-சிறப்பாக 'கும்பாபிஷேகம்' நடைபெற்றது. அக்குடும்பத்தை சார்ந்தவர்களும் மற்ற ஊர்ப்பெருமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## உமையாள் ஆயாள் படைப்பு

நற்சாந்துபட்டி இளையாத்தங்குடி பெருமருதுடையார் மரபில் சாத்தஞ் செட்டியார் குடும்பத்தாரரால் 1983ம் வருடம் முதல் வருடந்தோறும், சா.வீர.சித. சத்திரத்திலுள்ள உமையாள் ஆயாள் படைப்பு வீட்டில் படைப்பு மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது.

உமையாள் ஆயாள் சாத்தஞ் செட்டியார் குடும்பத்தில் பிறந்து மணம்பெற்று, இளமை நிலையிலேயே வாவரசியாக தெய்வநிலை பெற்றவள். மலையக்கோவிலில் சிலைவடிவில் வழிபாட்டுக்குரியவளாக விளங்குகிறாள். பிறந்த வீட்டிலும், புகுந்த வீட்டிலும், தன்பெயரை சிறப்பு பெயராகக்கொண்டு பல "உமையாள்" களை உருவாக்கிகொண்டு இருக்கிறாள். சாத்தஞ் செட்டியார் குடும்பத்தார்களுக்கும் நற்சார்ந்துபட்டி நகரத்தார் பெருங்குடி மக்களுக்கும் உறு துணையாக தெய்வநிலையில் நின்று துணை செய்கிறாள்.

## சா.வீர.சித. சத்திரம்

நற்சாந்துபட்டி சாத்தஞ் செட்டியார் குடும்பத்தாருக்குச் சொந்தமான சா.வீர.சித. சத்திரம் 1888ம் வருடம் கட்டப்பட்டு மிகச்சிறப்பாக நடந்துவருகிறது.

சா. வீ. சித. சத்திரத்திலிருந்து சாத்தஞ் செட்டியார் குடும்பத்தாரால் ஸ்ரீ சுந்தர நாயகி அம்மாள் திருவிழாவில் சத்தார்ண மண்டகப்படி செய்யப் பெற்றுவருகிறது.

நற்சாந்துபட்டியில் நடக்கும் செவ்வாய் திருவிழா, நகரபூஜை, இதர விழாக்களுக்கும் இதர பொதுத் தேவைகளுக்கும் பெறும் பயன் பெற்றுவருகிறது. சா.வீர.சித. சத்திரத்திலிருந்து தினமும் இரு பிராமணருக்கு போஜனம் செய்து-கொடுத்து சிறப்பித்து வருகிறது.

www.npnagarathar.com

# செட்டி நாடு
## நாட்டுக்கோட்டை நகரத்தார் ஊர்கள்



# KPM ASSOCIATES

5, BASEMENT
CEEBROS ARCADE
1, Third Cross Road,
Kasturiba Nagar
Adyar
Madras - 20

*Phone: 417930*


www.npnagarathar.com

# The Best Things in Life

| | |
|---|---|
| The Best Day | Today. |
| The Greatest Sin | Fear. |
| The Best Gift | Forgiveness. |
| The Greatest need | Common Sense. |
| The Meanest Thing | Jealousy. |
| The Most expensive Indulgence | Hate. |
| The Greatest Trouble maker | Talking too much. |
| The Cleverest man | One who does what he thinks right. |
| The Greatest Teacher | One who makes you want to learn |
| The Worst Bankrupt | The Soul that has last its enthusiasm. |
| The Cheapest, the most Stupid and the easiest thing to do | Finding fault. |
| The best Part of any one's Religion | Gentleness and Cheerfulness. |

www.npnagarathar.com

221


With best compliments from

Phone: Offi: 22220
Res: 26903

# UMA TRADERS

Stockist: MADURA COATS THREADS.

291, P.N. ROAD,

*TIRUPUR - 638 602.*


www.npnagarathar.com

**இந்தியா**
1. தலைநகர் : தில்லி
2. பரப்பளவு : 32,87,263
3. மக்கள் : 68,51,84,692
4. படிப்பறிவு : 36.23
5. வருமானம் : ரூ. 2,355

**1. தமிழ்நாடு**
1. தலைநகர் : சென்னை
2. பரப்பளவு : 1,30,058
3. மக்கள் : 4,84,08,077
4. படிப்பறிவு : 46.76
5. வருமானம் : ரூ. 2,070

**2. கேரளம்**
1. தலைநகர்:திருவனந்தபுரம்
2. பரப்பளவு : 38,863
3. மக்கள் : 2,54,53,680
4. படிப்பறிவு : 70.42
5. வருமானம் : ரூ. 2,196

**3. கர்நாடகம்**
1. தலைநகர் : பங்களூர்
2. பரப்பளவு : 1,91,791
3. மக்கள் : 3,71,35,714
4. படிப்பறிவு : 38.46
5. வருமானம் : ரூ. 2,047

**4. கோவா**
1. தலைநகர் : பனாசி
2. பரப்பளவு : 3,702
3. மக்கள் : 10,07,749
4. படிப்பறிவு : 56.66
5. வருமானம் : ரூ. 3,811

**5. மகாராட்டிரம்**
1. தலைநகர் : பம்பாய்
2. பரப்பளவு : 3,07,690
3. மக்கள் : 6,27,84,171
4. படிப்பறிவு : 47.18
5. வருமானம் : ரூ. 3,232

**6. ஆந்திரப்பிரதேசம்**
1. தலைநகர் : ஐதராபாத்
2. பரப்பளவு : 2,75,068
3. மக்கள் : 5,35,49,673
4. படிப்பறிவு : 29.94
5. வருமானம் : ரூ. 1,996

**7. ஒரிசா**
1. தலைநகர் : புவனேசுவர்
2. பரப்பளவு : 1,55,707
3. மக்கள் : 2,63,70,271
4. படிப்பறிவு : 34.23
5. வருமானம் : ரூ. 1,534

**8. மத்தியப்பிரதேசம்**
1. தலைநகர் : போபால்
2. பரப்பளவு : 4,43,446
3. மக்கள் : 5,21,78,844
4. படிப்பறிவு : 27.87
5. வருமானம் : ரூ. 1,716

**9. குசரத்**
1. தலைநகர்: அகமதாபாத்
2. பரப்பளவு : 1,96,024
3. மக்கள் : 3,40,85,799
4. படிப்பறிவு : 43.70
5. வருமானம் : ரூ. 2,997

**10. இராசத்தான்**
1. தலைநகர் : செய்ப்பூர்
2. பரப்பளவு : 3,42,239
3. மக்கள் : 3,42,61,862
4. படிப்பறிவு : 24.38
5. வருமானம் : ரூ. 1,838

**11. பஞ்சாப்**
1. தலைநகர் : சாந்திகார்
2. பரப்பளவு : 50,362
3. மக்கள் : 1,67,88,915
4. படிப்பறிவு : 40.86
5. வருமானம் : ரூ. 3,835

**12. சம்மு-காசுமீர்**
1. தலைநகர் : சிரிநகர்
2. பரப்பளவு : 2,22,236
3. மக்கள் : 59,87,389
4. படிப்பறிவு : 26.67
5. வருமானம் : ரூ. 2,075

**13. இமாசலப்பிரதேசம்**
1. தலைநகர் : சிம்லா
2. பரப்பளவு : 55,673
3. மக்கள் : 42,80,818
4. படிப்பறிவு : 42.48
5. வருமானம் : ரூ. 2,316

1. தலைநகர் பெயர், 2. பரப்பளவு ச.கி.மீ., 3. மக்கள் 1981 கணக்கு, 4. படிப்பறிவு விழுக்காடு, 5. வருமானம் ரூ. 1984–85 தலைக்கு




**32. தில்லி**

பரப்பளவு : 1483 சகிமீ

மக்கள்: 62,20,406

படிப்பறிவு: 61.54

**31. சாந்திகார்**

பரப்பளவு : 114 சகிமீ

மக்கள்: 4,51,610

படிப்பறிவு: 64.79

**30. தாமண்-தய்யூ**

பரப்பளவு : 112 சகிமீ

மக்கள்: 28,981

படிப்பறிவு: 56.66

**29. தத்ரா நாகர்கவேலி**

பரப்பளவு : 491 சகிமீ

மக்கள்: 3,03,676

படிப்பறிவு: 26.67

**28. இலட்சத்தீவுகள்**

பரப்பளவு : 32 சகிமீ

மக்கள்: 40,249

படிப்பறிவு: 55.07

**27. பாண்டிச்சேரி**

பரப்பளவு : 492 சகிமீ

மக்கள்: 6,04,471

படிப்பறிவு: 55.85

**14. அரியானா**
1. தலைநகர் : சாந்திகார்
2. பரப்பளவு : 44,212
3. மக்கள் : 1,29,22,618
4. படிப்பறிவு : 36.14
5. வருமானம் : ரூ. 3,296

**15. உத்திரப்பிரதேசம்**
1. தலைநகர் : இலக்னோ
2. பரப்பளவு : 2,94,411
3. மக்கள் : 11,08,62,013
4. படிப்பறிவு : 27.16
5. வருமானம் : ரூ. 1,764

**16. பீகார்**
1. தலைநகர் : பாட்னா
2. பரப்பளவு : 1,73,877
3. மக்கள் : 6,99,14,734
4. படிப்பறிவு : 26.20
5. வருமானம் : ரூ. 1,385

**17. சிக்கிம்**
1. தலைநகர் : காங்டோக்
2. பரப்பளவு : 7,096
3. மக்கள் : 3,16,385
4. படிப்பறிவு : 34.05
5. வருமானம் : ரூ. 1,500

**18. வங்காளம்**
1. தலைநகர் : கல்கத்தா
2. பரப்பளவு : 88,752
3. மக்கள் : 5,45,80,647
4. படிப்பறிவு : 40.94
5. வருமானம் : ரூ. 2,485

**19. மேகாலயம்**
1. தலைநகர் : சில்லாங்
2. பரப்பளவு : 22,429
3. மக்கள் : 13,35,819
4. படிப்பறிவு : 34.08
5. வருமானம் : ரூ. 1,727

**26 அந்தமான் ... ர் தீவுகள்**

... வு : 8,249 சகிமீ

... ள்: 1,88,741

படிப்பறிவு: 51.56

**25. திரிபுரா**
1. தலைநகர் : அகர்தலா
2. பரப்பளவு : 10,486
3. மக்கள் : 20,53,658
4. படிப்பறிவு : 42.12
5. வருமானம் :

**24. மிசோராம்**
1. தலைநகர் : அய்சால்
2. பரப்பளவு : 21,081
3. மக்கள் : 4,93,757
4. படிப்பறிவு : 59.88
5. வருமானம் :

**23. மணிப்பூர்**
1. தலைநகர் : இம்பால்
2. பரப்பளவு : 22,327
3. மக்கள் : 14,20,923
4. படிப்பறிவு : 41.35
5. வருமானம் : ரூ. 2,200

**22. நாகாலாந்து**
1. தலைநகர் : கோகிமா
2. பரப்பளவு : 16,579
3. மக்கள் : 7,74,930
4. படிப்பறிவு : 42.57
5. வருமானம் : ரூ. 2,900

**21. அருணாசலப்பிரதேசம்**
1. தலைநகர் : இடாநகர்
2. பரப்பளவு : 83,743
3. மக்கள் : 6,31,839
4. படிப்பறிவு : 28.79
5. வருமானம் : ரூ. 2,160

**20. அசாம்**
1. தலைநகர் : திசுப்பூர்
2. பரப்பளவு : 78,348
3. மக்கள் : 1,98,96,843
4. படிப்பறிவு : 28.72
5. வருமானம் : ரூ. 1,821

www.npnagarathar.com